2669

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1983 பிப்ரவரி 8-தொகுதி XLI எண் 1

**Tuesday 8th February 1983 —Volume XLI No. I**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை ரூ-3-15 காசுகள்)

(Price Rs. 3-15 paise

T. N. L. A. Debates

OFFICIAL REPROT

VOL: XLI NO: 1 and 2

FEB 8 and 9 1983

D
V2l1,31'N83
N83·41·1&2
135479

| | | |
|---|---|---|
| | (ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983. | 49 |
| | (இ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1983. | 50—92 |
| | (ஈ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1983. | 92—113 |
| 6. | அறிவிப்பு— | |
| | பேரவை அலுவல் | 92 |
| 7. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 114 |


---


135979
சென்னை-600 008.

D
V211,31 N83
N83.41.142


# தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## தமிழ்நாடு ஆளுநர்

## திரு சுந்தர்லால் குரானா

*அமைச்சரவையின் உறுப்பினர்கள்:*

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (*முதலமைச்சர்*) —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல். இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (*நிதி அமைச்சர்*) —நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (*மின் துறை அமைச்சர்*) —மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுபாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (*ஊரகத் தொழில் துறை அமைச்சர்*). கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள். பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் [*வருவாய்த்துறை அமைச்சர்*)— வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் [*செய்தி அறநிலையத் துறை அமைச்சர்*] — செய்தி மற்றும் விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக்கழகம், திரை படச்சட்டம். இந்து அறநிலையத்துறை, வனங்கள் சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் [*கல்வி அமைச்சர்*]— தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

## உள்ளடக்கம்.

**8-2-1983**


(i) தமிழ்நாடு அரசு ஆளுநரும் அமைச்சரவையும் i

(ii) Personnel of the Government of Tamil Nadu iii

(iii) தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின்முக்கிய அலுவலர்கள் v

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெயர். பட்டியல் (தொகுதிகள் உட்பட அகரவரிசையில்) xi

| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—40 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள். | 40 |
| **2. தகவல் கோரல்—** | |
| மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலை. | 40—43 |
| **3. உரிமைப் பிரச்சினை—** | |
| ஒரு சட்ட முன்வடிவு ஆய்வுக்குழுவின் ஆய்வில் இருக்கும் போது அதே போன்றுள்ள ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருப்பது. | 43—44 |
| **4. கவன ஈர்ப்புகள்—** | |
| (அ) சரபங்கா நதியின் குறுக்கே பாலம் கட்டுதல். | 44—45 |
| (ஆ) மதுரா கோட்ஸ் சாயப் பட்டறை கழிவுநீர் தாமிரபரணியில் கலத்தல். | 46—49 |
| **5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| (அ) வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1983. | 49 |

2669

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN, (Minister for Electricity, Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries) Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue) Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM, (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agrtculture), Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN, (Minister for Co-operation and Law) Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chi[illegible] and Co-operation.

10. Hon. Thiru P, KULANDAIVELU, (Minister for Local Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

8. மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து [வேளாண்மைத்துறை அமைச்சர்) — வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் [கூட்டுறவு—சட்ட அமைச்சர்] —சட்டம் நீதிமன்றங்கள் சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல் நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச்சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) — தொழிலாளர் வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம். புள்ளிவிவரங்கள் தமிழ்நாடு. குடிநீர்வடிகால் வாரியம் நகரஅமைப்பு. இடவசதிக்கட்டுப்பாடு.

12, மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) —மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்) —வேளாண்மைப் பணி, கூட்டுறவு சங்கங்கள். சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள் ,வஃப்.

14. மாண்புமிகு திரு. க. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)— அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள் நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர்மற்றும் பொதுபணித்துறை அமைச்சர்)-கதர், மது அனுமதிசீட்டு வழங்கல், நீங்கலாக மது விலக்கு பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலகங்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசுஅச்சகம், அச்சு காகிதக்கட்டுபாடு, மலைவாழ்பழங்குடியினர் பிணைத்தொழிலாளர், வேலைவாய்ப்புபயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)— மகளிர் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம் கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் சீர்திருத்த நிர்வாகம்.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statisstics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thru K. RAJA MOHAMMED (Minister for Irrigation – Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) – Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Mintster for Industries )—Large Scale Industries, Mines and Minerals and Textilese.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social welfare including Women and Children Welfare, Animal Husbandary, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Adminitstration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத்தலைவர் ;

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

** மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி. தா. இராசம்பாள்
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி.மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன். பி. எஸ். சி. (ஆழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)
திரு. பெ. பள்ளிக்கொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயாலாளர்)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம். (சார்புச்செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன் பி.ஏ. பி. எல். (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. சி. பாலசுப்பிரமணியன் (தலைமை நிருபர்).

(விவாதப் பதிப்பாளர்.)

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல். எல். பி.

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன் திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9: அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்புத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. அறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20. ஆறுமுகம், திரு. ந. | அரியலூர் |
| 21. அனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. இராச குமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 இராசாம்பாள், திருமதி. கா. | தலைவாசல் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன் திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர். கே.பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். திரு.பி. | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செவ) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 54 கந்தசாமி, திரு.கா.வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணாநகர் |
| 58 கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம். அ. | நன்னிலம் (செ. வ. |
| 65 காளிமுத்து, டாக்டர், கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா.கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே, ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 75 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி, (செ.வ.) |
| 76 குமரி அனந்தன், திரு. | திருவெற்றியூர் |
| 77 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு, ப. | உடுமலைப்பேட்டை. |
| 81 அமிர்தராஜ் திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபால கிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதிசீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத் தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு.வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு.ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீதுதிரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவகாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோண்ம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ.வ |
| 104 | சிவப்பெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு.ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு.ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு.நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம்.எஸ். | போடிநாயக்கனூர் |

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர் (2) |
|---|---|---|
| 1. | அங்குசாமி திரு.ச. | திருவாடானை |
| 2. | அண்ணாதாசன் திரு. எம். | திருவரும்பூர் |
| 3. | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. | அப்பாதுரை, திரு. மு. | ஓட்டப்பிடாரம்(செ.வ) |
| 5. | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8. | அரங்கநாயகம், திரு.செ. | கோவை (மேற்கு) |
| 9: | அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. | அருணகிரி, திரு. இரா. | திருப்புத்தூர் |
| 11. | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 12. | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. | அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14. | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. | ஆண்டித் தேவர், திரு.எஸ். | உசிலம்பட்டி |
| 18. | அறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 20. | ஆறுமுகம், திரு. க. | அரியலூர் |
| 21. | அனூர் ஜெகதீசன், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 22. | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. | இராச குமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 | இராசரத்திளம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. கா. | தலைவாசல் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 | இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 | இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 | இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34 | இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 | இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 36 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 | இராமசுப்பிரமணியன் திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 | இராமலிங்கம், டாக்டர். கே.பி. | இராசிபுரம் |
| 40 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 | இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 | இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 | இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 | ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம். திரு.பி. | அம்பாசமுத்திரம் |
| 46 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செவ) |
| 49 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 | கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 54 | கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு |
| 55 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 | கருணாநிதி, டாக்டர். மு. | அண்ணா நகர் |
| 58 | கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 | கலித்தீர்த்தான், திரு. கோ. | சங்கராபுரம் |
| 63 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 | கமலயரசன், திரு. நன்னிலம். அ. | நன்னிலம் (செ. வ. |
| 65 | காளிமுத்து, டாக்டர், கா. | திருப்பரங்குன்றம் |
| 66 | கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 | கிருஷ்ணசாமி, திரு. கா.கோ. | காங்கேயம் |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 71 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 | கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன் சத்திரம் |
| 75 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி, (செ.வ.) |
| 76 | குமரி அனந்தன், திரு. | திருவெற்றியூர் |
| 77 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 | குழந்தைவேலு, திரு, ப. | உடுமலைப்பேட்டை. |
| 81 | அமிர்தராஜ் திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபால கிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- | --- |
| 85 | கோமதிசீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத் தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு.வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு.ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | ஆரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவகாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (செ.வ |
| 104 | சிவப்பெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு.ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு.ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு.நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. எம்.எஸ். | போடிநாயக்கனூர் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- | --- |
| 118 | சுப்பிரமணியன், திரு.மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | டாக்டர். திரு. செளரிராசன், கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் செ.வ. |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 140 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், ஆர். திரு. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு.பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன் திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன் திரு. கு. ப. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை, சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மலைமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ.) |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 212 | ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம்; திரு.எம்.கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு.என், | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு, எம் | அரக்கோணம் (செ. |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு.பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு.க.வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு.ப . | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு.பி.எம் | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு.ஆ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு.த. | தண்டாரம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு சி.வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சன், திரு.எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு.வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு ஜே. | திருவட்டார் |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்— அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது— அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்



| | தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு.மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராஜன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | டாக்டர். திரு. சௌரிராசன், கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. | திண்டிவனம் |
| 134 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் செ.வ. |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 142 | திருச்சி சௌந்திரராசன், ஆர். திரு. | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு.பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண, பாண்டியன் திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து. திரு. கே. பி, | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. என் எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. எஸ். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன் திரு. கு. ப. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என், ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெய[illegible]ாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மலைமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர். (செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு, இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர் (செ.வ. |
| 208 | ரகுமான்கான், திரு. அ | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி. திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 212 ராம்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 ராஜமாணிக்கம்; திரு.எம்.கே. | முசிறி |
| 214 ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 வரதராஜன், திரு.என். | திண்டுக்கல் |
| 216 விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 விஜயசாரதி, திரு. எம் | அரக்கோணம் (செ. |
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 விஜயராகவன், திரு.பொ. | கிள்ளியூர் |
| 221 விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 வீராணம்பலம், திரு.க.வெ. | மேலூர் |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு.ப. | காஞ்சிபுரம் |
| 225 வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 வெங்கடேசன், திரு.பி.எம் | பேரணமல்லூர் |
| 227 வெள்ளைச்சாமி, திரு.ஆ. | ஆத்தூர் |
| 228 வேணுகோபால், திரு.த. | தண்டாரம்பட்டு |
| 229 வேலப்பன், திரு சி.வி. | கபிலர்மலை |
| 230 ஜகத்ரட்சன், திரு.எஸ். | உத்திரமேரூர் |
| 231 ஜான் வின்செண்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 ஜெயராமன், திரு.வே. ராம. | தேனி |
| 233 ஹாஜா செரீப், திரு.* கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்



**செவ்வாய்க் கிழமை, 1983 பிப்ரவரி 8, தை 26, துந்துபி திருவள்ளுவர் ஆண்டு 2014.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''கடன் அறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை''

நான் மேற்கொண்டுள்ள செயலின் தன்மையை மனத்திற் கொண்டு அதனை முடித்தற்கு ஏற்ற சமயத்தையும் கருத்தில் கொண்டு, இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்துச் சொல்ல வேண்டிய செய்தியை நயமாக எடுத்துரைப்பவனே சிறந்த அதிகாரி ஆவான்.

1. வினாக்கள் விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்,

பைக்காரா மின் திட்டத்தில் செயல்பட்டு வரும்

ஆலோசனைக் குழு.

*வினா எண். 172—திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பைக்காரா மின் திட்டத்தில் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் கொண்ட ஆலோசனைக்குழு செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது அமைக்கப்பட்டது?

(இ) இதுவரையில் எத்தனை கூட்டங்களை நடத்தியுள்ளது?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மின் திட்ட அளவிலும், 1981-ம் ஆண்டு மார்ச் மாதம் கோட்டங்கள் அளவிலும், ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (இ) | 1 மின் திட்ட அளவிலான ஆலோசனைக் குழு கூட்டம் | 5.11-79 |
| | 2 தெற்கு கோட்ட கூட்டம் | 7-8-81 |
| | 3 வடக்கு கோட்ட கூட்டம் | 31-8-81 |
| | 4 கிழக்கு கோட்ட கூட்டம் | 5-11-81 |

[1983 பிப்ரவரி 8

திரு கோவைத்தம்பி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டம் மாதத்திற்கு ஒன்று என்று நடக்கின்ற முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்களா? அதே மாதிரி எல்லா மாவட்டங்களிலும் இப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தைக் கூட்ட அரசு முன் வருமா? பரவலாக தமிழ்நாட்டில் இருக்கின்ற மின் பற்றாக் குறையை இந்தக் குழு கூட்டத்தில் சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு அனுப்ப அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கோட்ட அளவிலே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பது அந்தக் கோட்ட அளவிலே உள்ள அந்த மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்குத் தான். மற்றபடி உற்பத்தி திட்டங்களைப் பொறுத்த அளவில் மாநில அளவில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். மாதந்தோறும் கடைசி திங்கட்கிழமை அன்று அந்தக் கூட்டத்தை கூட்டவேண்டுமென்று மின் வாரியம் உத்தரவிட்டு இருக்கிறது. அந்தக் கடைசி திங்கட்கிழமை அன்று விடுமுறை வருமானால் அடுத்த நாளிலே அந்தக் கூட்டத்தை வைத்துக் கொள்கிறார்கள். இதிலே ஒரு வருந்தத்தக்க தகவல் என்னவென்றால் இந்தக் கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வருவதில்லை என்ற குறைகள் இருக்கின்றன. (குறுக்கீடு). சில இடங்களில் வருகின்றார்கள். பெரும்பாலான இடங்களில் அதிகாரிகள் மட்டும் கூடிக்கூடி கலைய வேண்டியிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டங்களில் முழு அளவில் கலந்துகொண்டு அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக் கூட்டம் ஒவ்வொரு கோட்டத்திலேயும் அமைக்கப்பட்டு இருப்பது உண்மைதான். ஆனால் இந்தக் கூட்டம் முறையாக கூட்டப்படவில்லை என்பதுதான் நான் அறிந்த உண்மை. இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரியாக போவதில்லை என்று இங்கே சொல்லப்பட்டது. அதற்கு முழுமையான காரணம் என்னவென்றால், அந்தக் கூட்டங்களிலே சொல்லக்கூடிய ஆலோசனைகளை ஒரு சிறிதளவாவது ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் இங்கே ஒரு ஏற்பாடு இருந்தால் பரவாயில்லை. நாம் சொல்வதை ஏற்றுக்கொள்வதில்லை, அதனாற் அங்கே போய் எந்தப் பயனும் இல்லை என்று நினைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோட்ட மின்வாரிய அதிகாரிகள் அளவிலே தீர்க்க வேண்டியவைகளை அவர்களே தீர்க்கலாம்; அவர்களுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட பிரச்னைகளைப் பொறுத்த வரையில் மேலே வரவேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் கோட்ட அளவில் அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமானாலும் நாங்கள் கொடுக்கத் தயார். ஆனால் இந்தக் கோட்ட அளவிலே நடைபெறுகின்ற அந்தக் கூட்டங்கள் நல்ல முறையிலே நடைபெறவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், அங்கே கூடுகின்ற கூட்டத்தில் நாங்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகளைப் பரிசீலனை செய்து அடுத்த கூட்டம் தொடங்குவதற்கு முன்னால் பதில் உரைகள் தந்து எங்களுக்கு மதிப்பளித்து வருகிறார்கள். அந்த ஆலோசனைக் கூட்டத்திலே சொல்லப்பட்ட பல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கூட்டத்திலே 2 உறுப்பினர்கள், அதாவது கன்ஸ்யூமர்ஸ் சார்பாக—தொழிற்சாலையைச் சேர்ந்த ஒருவரும் காமர்ஸ் காம்ப்ளக்ஸ் போன்ற நிறுவனங்களைச் சார்ந்த ஒருவரும்—பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் குழு போடப்பட்டதன் முக்கிய நோக்கமே ஊராட்சி தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் இல்லாத சூழ்நிலையில் ஆங்காங்கே உள்ள கிராமங்களில் தெருவிளக்கு எரிவது இல்லை. அல்லது மின்சாரம் சரியாக வருவது இல்லை போன்ற நிலைமைகள் இருக்கலாம். ஏனென்றால் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நிலைமைகள் வேறாக இருக்கலாம் என்பதால் ஆங்காங்கே உள்ள டிவிஷனல் இன்ஜினீயர்களை வைத்து அந்த மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். அதற்கு உறுதுணையாக மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் அதிகாரிகள் காரியம் ஆற்றவேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டது. ஆகவே, அதில் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களையோ அல்லது வணிக நிறுவனத்தைச் சார்ந்தவர்களையோ சேர்த்தால், பின்னர் அதில் பல்வேறு வகையான மக்களுக்கு இடம் கொடுக்கவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். அதற்குப் பிறகு அது ஒரு எம். எல். ஏ-க்கள் அடங்கிய குழுவாக இருக்காது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இப்போதுள்ள மின்சார நெருக்கடி சூழ்நிலையில் மக்கள் பிரதிநிதிகள் அலுவலர்களோடு விவாதித்து முடிவுகளை எடுப்பது என்பது சிறப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் இதிலே சில நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன. அந்தக் குழு தொடர்ச்சியாக சிறப்பாக, சீராக

நடைபெறவில்லை என்ற குறை உண்மை. அங்கே நடைபெறும் கூட்டங்களைப் பற்றி தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு ரிக்கார்டுகள் அனுப்பி, அதை வைத்து அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வது என்ற முறையில் இருந்தால், அந்த ஆலோசனைக் குழு கூட்டங்கள் வெற்றிகரமாக இருக்கும். அந்த வகையில் அதை நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வெற்றிகரமாக நடத்தவேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு மேல்மட்ட அதிகாரிகளின் துணை தேவை என்றாலும் மேல்மட்ட அதிகாரிகளின் துணை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். எந்தெந்தத் தேதியில் குழுக் கூட்டம் நடைபெற்றது, யார் யார் அதிலே கலந்து கொண்டார்கள், யார் யார் கலந்துகொள்ளவில்லை என்ற விவரங்களை கையிலே வைத்துக்கொண்டுதான் நான்பேசுகிறேன். நம்முடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதற்குத்தான் குறிப்பிட்டேன். சில இடங்களில் நடைபெறுகிற கூட்டங்களில் பெரும்பாலான நேரங்களில் அதிலே மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வது இல்லை.

கொல்லிமலையிலுள்ள குக்கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம்.

* வினா எண். 173—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சேலம் மாவட்டம் கொல்லிமலையில் உள்ள 253 குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) கொல்லிமலையிலுள்ள 253 குக்கிராமங்களில் ஐந்து குக்கிராமங்களுக்கு மட்டும் தான் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவற்றின் விவரம் பின்வருமாறு:—

(1) செம்மேடு, (2) வசலூர்பட்டி, (3) சோளக்காடு, (4) சேலூர் கஸ்பா, (5) சோளக்காட்டுப்பட்டி.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, மீதியுள்ள 250 குக்கிராமங்களுக்கும் எப்போது மின் வசதி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது? அல்லது மின் வசதி அளிக்க ரூரல் எலக்டிரிபிகேஷன் கார்ப்பரேஷனிடம் கடன் வாங்கி அந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்புத் தர அரசு முயற்சிக்குமா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, போக்குவரத்து, சாலைவசதி இன்மையாலும், கம்பித் தொடர்களைக் காடுகளின் வழியாக இழுத்துச் செல்வதற்கு இந்திய அரசின் ஒப்புதல் தேவைப்படுவதாலும், அதிலே பெரிய காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அண்மையில் இது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டு, வேறு மாற்றுத் திட்டத்தின் மூலம் அமல்படுத்தலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். மலைக் காடுகளிலுள்ள சிற்றூர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க நெடுந்தூரம் கம்பித் தொடர்கள் இழுத்துச் செல்வதற்கு மாறாக அங்கேயே டீசல் செட்டை அரசாங்கமே வாங்கிவைத்து அதன் மூலம் அந்த மின் வசதியை அவர்களுக்குத் தரலாமா என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, புதிதாக ஜெனரேட்டர் பொருத்தி மின் வசதி அளிக்கும் திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜெனரேட்டருக்கு ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளுமா அல்லது அங்கேயுள்ள பஞ்சாயத்து ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசே ஏற்றுக்கொள்ளும்.

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள மின் திட்டங்கள்

* குறுகிய கால வினா எண். 2—மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மைய அரசின் அனுமதிக்காக மாநில அரசு அனுப்பியுள்ள அனல், புனல் மின் திட்டங்களின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

புனல் மின் திட்டங்கள்—

| | | |
|---|---|---|
| 1 | பைக்காரா இறுதி நிலை நீர் மின் திட்டம். | 110 மெ. வா. |
| 2 | சிறுவாணி சிறிய நீர் மின் திட்டம் | 3 மெ. வா. |

அனல் மின் திட்டங்கள்—

| | | |
|---|---|---|
| 1 | வட சென்னை அனல் மின் திட்டம் | 1050 மெ. வா. |
| 2 | மேட்டூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் | 420 மெ. வா. |
| 3 | தூத்துக்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம் | 710 மெ. வா. |

திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, இதற்கென்று ஆகும் செலவுக் கணக்கு என்ன? வெளிநாட்டினர் யாரேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன்வந்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அனல் மின் திட்டங்களைப் பொறுத்த வரையில், நாம் நெய்வேலி 3-வது சுரங்கத்திற்கும் சேர்த்து அனல் மின் திட்டத்திற்காகும் செலவைக் கணக்கிடுகிறபோது, நமக்கு 2298 கோடி ரூபாய் செலவாகும். ஆகவே, இந்தத் திட்டத்திலேயே அதற்கான பணிகளை ஆரம்பித்தால்தான் வருகின்ற 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இடம்பெறுகிற பலன் நமக்குக் கிடைக்கும். ஆனால் கிட்டத்தட்ட 2300 கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசே நிதி ஒதுக்கம் செய்து செலவிடுவது என்பது கடினம். இது குறித்து இந்திய அரசோடு பேசும்போது வெளிநாட்டுக் கடன் அல்லது வெளிநாட்டு உதவி அளித்து இந்த நிதிஉதவியைப் பெற்று நமக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசு பல்வேறு மாநிலங்களிலே இதைப்போல வெளிநாட்டு உதவியோடு கூடிய மின்சார உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. மேலும் நிறைவேற்ற இருக்கிறது. அதைப் போன்று வட சென்னை அனல் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற வெளி நாட்டு உதவி வேண்டுமென்று மத்திய அரசில் இருக்கிற மின்சார அமைச்சரைப் பார்த்துச் சொல்லியிருக்கிறோம்; நிதி அமைச்சரையும் பார்த்து சொல்லியிருக்கிறோம்.

திரு. ஆர். மணிமாறன்: தலைவரவர்களே, கோவை மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்திருக்கிற பகுதி. ஆகவே, கோவையில் இதைப்போன்று அனல் மின்சாரத் திட்டம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? அப்படிப்பட்ட உத்தேசம் இருக்கிறதென்றால், அனுமதிக்காக எவ்வளவு நாள் அரசு காத்துக்கொண்டிருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கோவையில் இத்தகைய ஒரு திட்டத்தை ஆரம்பிக்கின்ற உத்தேசம் எதுவும் தற்போது இல்லை. ஆனால் இராமகுண்டம் அனல் மின்சாரத் திட்டத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் பங்கு பொங்களூருக்கு வந்து, அந்தப் பகுதியிலிருந்து சேலம், உடுமலைப்பேட்டைப் பகுதிக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அது ஒரு அனல் மின்சாரத் திட்டம்தான்.



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, எவ்வளவு ரூபாய்க்கு மேலுள்ள திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதிபெறவேண்டியிருக்கிறது? அந்தத் தொகை எந்த நிதி ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது? அதை உயர்த்த வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் வரையிலுள்ள திட்டத்தை மாநில அரசே செய்யலாம்; அதாவது மாநில அரசின் மின்சார வாரியம் செய்யலாம். அதற்கு மேலுள்ள ரூபாய் பெறுமானத் திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. 1948—ல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படும் போது இந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. மின்சார அமைச்சர்கள் மாநாட்டிலேகூட நாங்கள் குறிப்பிடும்போது 10 கோடி ரூபாய் அளவு வரையிலான திட்டங்களை மாநில அரசே அனுமதிக்கக்கூடிய அதிகாரத்தைத் தரவேண்டுமென்று அங்கே வற்புறுத்தியிருக்கிறோம். அந்த அதிகாரத்தை எல்லா மாநில அரசுகளுக்கும் கொடுத்தால் சிறு சிறு மின்சாரம் திட்டங்கள்-மைக்ரோ ஹைடல் பவர் திட்டங்கள்—என்று சொல்கிறார்களே, அந்தத் திட்டங்களை மாநில அரசு திட்டமிட்டுச் செய்ய வசதியாக இருக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்கனவே நெய்வேலியிலே மின்சார நிலையம் அமைக்க அனுமதி கோரியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அந்த அனுமதியைக் கேட்கும் அதே நேரத்தில் நெய்வேலி சுரங்கத்தை வெட்ட மாநில அரசுக்கு எந்தவிதமான ராயல்டியும் கொடுக்கவில்லை. அந்த ராயல்டி மூலமாக தமிழக அரசுக்கு ஒரு கணிசமான தொகை கிடைக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, மைய அரசு மாநில அரசுக்கு அந்த ராயல்டி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே, நெய்வேலி திட்டம் வந்தால் போதும் என்றுகருதிக் கொண்டிருந்த மாநில அரசு மைய அரசிடம் ராயல்டி கேட்கவில்லை. அதற்கான நிலத்தைக் கூட எந்த அளவுக்கு குறைந்த மதிப்பில் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைந்து அந்த நேரத்தில் கொடுத்தார்கள். அவர்கள் எடுக்கிற லாபத்திலும் நாம் பங்கு கேட்கவில்லை. இப்போது நமக்கு வேண்டியதெல்லாம் அங்கே உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் முழுவதையும் கொடுத்தால் போதும்; ராயல்டி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

* வினா எண். 174— திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்; மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிதாக நடப்பட்டுள்ள மரங்கள் எத்தனை?

தமிழ்நாட்டில் புதிதாக நடப்பட்டுள்ள செடிகளின் எண்ணிக்கை

(ஆ) ஆதனை பராமரிக்கச் செய்துள்ள ஏற்பாடுகள் யாவை

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1981–82 ஆம் ஆண்டில் 31–3-1982 வரை வனத்துறை மற்றும் வனத்தோட்டக் கழகத்தில் நடப்பட்ட செடிகளின் எண்ணிக்கை 746 இலட்சமாகும் 1982-83 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய நடப்பட்ட செடிகள் 661 இலட்சமாகும்.

(ஆ) பல்வேறு திட்டங்களில் காடுகளில் நடப்பட்டுள்ள கன்றுகளை பராமரிக்கத் தோட்டக் காவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். சமூகநலக் காடுகள் திட்டத்தில் ஏரிக்கரை, கால் வாய்க்கரை சாலை ஓரங்களில் நடப்பட்டுள்ள கன்றுகளைப் பாது காக்க தோட்டக் காவலர்களும், சில கிராமங்களில் சமூக நலக் காட்டு வேலையாட்களும் ஆங்காங்கே நியமிக்கப்பட்டு அவர்கள் பாதுகாக்கும் வேலையைச் செய்து வருகின்றனர்.

திரு. பா. புஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களை நடுகின்ற இந்தப் பணிகளிலே காட்டு இலாகாவினர் எந்த இடத்திலே வேண்டுமானாலும் நட்டுவிடு கிறார்கள். குறிப்பாக மாநகராட்சி பிளாட்பாரங்களிலே உள்ள சிலாப்புகளை உடைத்து விட்டு அங்கே புதிதாகச் செடிகளை நட்டு விடுகிறார்கள். இதனால் போக்குவரத்து இடைஞ்சலாகிறது. எப்படி என்றால், பக்கத்தில் உள்ள சிலாப்புகளும் உடைப் பட்டிருப்பதால். பொது மக்கள் அங்கே நடக்க முடியாமல் பாதையை விட்டு நடக்க வேண்டியிருக்கிறது. அதே மாதிரி அணைக்கட்டுப் பகுதிகளிலே குறிப்பாக என்னுடைய தொகுதியிலே பூங்காடு தட்டான்குளம் என்ற இடங்களிலே பாலாற்றின் ஓரங்களிலே மரங்களை நட்டிருக்கிறார்கள். இதனால் பாசனம் கூடப் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட இடங்களில் எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில் மரங்களை நடவேண்டும் என்கிற உத்தரவை அரசு வனத்துறைக்கு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடைப்பாதைகளில் செடிகளை நடுவது, மரங்களை நடுவது என்று சொல்லி சென்னை மாநகராட்சியைக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். மாநகராட்சியின் பிளாட்பாரங்களில் வனத்துறை அந்தப் பணிகளை செய்யவில்லை. அதை மாநகராட்சி தான் செய்துக் கொண்டிருக் கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மாநகராட்சியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

அடுத்து, ஆற்றங்கரைகளிலே அதன் ஓரங்களிலே மரங்களை நடுகின்ற நிலைமைகளைப் பற்றி முன்னாலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களே. ஒரு துணைக் கேள்வி போட்டு அதற்கு நான் விரிவாக பதில் அளித்திருக்கிறேன். ஆற்றங்கரைகளின் ஓரங்களிலே நடவேண்டும் என்பது சமுதாய வனவளர்ச்சி திட்டத்திலே ஒரு பகுதி. ஆனால் அது பாசனத்திற்கு இடையூறாக இருக்குமேயானல், அந்த இடத்திலே உடனடியாக அந்தப் பணிகளை நிறுத்த ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன்;; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிப்பகுதிகளிலேயும், தரிசாக இருக்கிற நிலங்களிலேயும் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள், அங்கே புதிதாக நடப்பட்டுள்ள செடிகளைக்கூட அப்புறப்படுத்தி விடுகிறார்கள். அதனால் அந்தச் செடிகள் அங்கே என்ன நோக்கத்திற்காக பயிரிடப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் போய் விடுகிறது. எனவே, அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு தான் நான் முன்பே விரிவாகவும் விளக்கமாகவும் இந்த அவையில் பதில் சொல்லியிருக்கிறேன் அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி, சமுதாய காடு வளர்ப்பு திட்டத்தை மிக நல்லமுறையில் இத்தகைய இடங்களில் ஆரம்பித்து, அவை மக்களுக்குப் பயன்படச்செய்ய வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை அரசு கண்டிப்பாக மேற்கொண்டு வருகிறது.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன இலாகாவினர் கண்மாய்களிலேயெல்லாம் இந்தத் திட்டத்தின் கீழ் செடிகளை நட்டுள்ளனர். அப்படி நடுகின்ற போது அங்கே பல ஆண்டுகளாக பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் இந்த மரங்களை நடும் பணிகளை செய்ய உத்தரவிட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் கேட்ட கேள்விக்கு எதிர்மாறான கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு அன்பழகன் அவர்கள் கேட்டது ,இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி, அங்கே மரங்கள் பயிர் செய்யப்படுமா என்று கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் அப்படி ஆக்கிரமிப்பு செய்பவர்களுக்கு ஆதரவு தர அரசு முன்வருமா என்று கேட்கிறார்கள்.

ஏரிகளிலேயும், கண்மாய்களிலேயும் உள்ள பகுதிகளை ஆக்கிரமித்து அவைகளில் ஆக்கிரமிப்பு செய்து, வேளாண்மை செய்து வருகிறவர்கள். ஆகவே அரசு அதனை தடுப்பதிலே தான் தன்னுடைய கவனத்தைச் செலுத்தும்.

திரு. எம். சின்னசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை தவறியதற்குக் காரணம் மரங்களை அதிகமாக வெட்டிவிடுவதுதான் என்று முன்பே இங்கே சொல்லப் பட்டது. இதனால் ஒரு மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு கோடி மரங்களை வைக்க வேண்டும் என்கிற ஒரு திட்டத்தை அரசு மேற்கொண்டு அதற்கு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு தமிழகத்திலே இவ்வளவு மரங்களை நடவேண்டும் என்கிற திட்டம் இடப்பட்டுதான் மரங்கள் நடப்படுகின்றன. 1981–82லே 570 லட்சம். அதாவது 5 கோடியே 70 இலட்சம் மரங்கள் நடப்பட வேண்டும் என்பது திட்டம். ஆனால், அதையும் தாண்டி 7 கோடியே 64 இலட்சம் செடிகள் நடப்பட்டன. 1982–83லேயிலிருந்து 883 இலட்சம் செடிகள் நடப்பட வேண்டும் என்பது திட்டம். டிசம்பர் முடிய 661 இலட்சம் செடிகள் நடப்பட்டுள்ளன.

மதுரையில் வானொலி நிலையம் அமைக்கும் திட்டம்

*வினா எண். 175—திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் ரேடியோ நிலையம் அமைக்க மாநில அரசு மைய அரசைக் கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) மதுரையில் வானொலி நிலையம் அமைக்க வேண்டும் என்ற மாநில அரசின் கோரிக்கையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டு அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, தொடர்புடைய வானொலி நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது வானொலித் துறை பொறியாளர்கள் வானொலி நிலையம் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

(முற்பகல் 9.20)

திரு.வேடந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தப் பணி எப்போது முடியும். விரைவாக இதை அமைக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 1968 ஆம் ஆண்டிலே எழுப்பப்பட்ட கோரிக்கை. இப்போது 1982-ஆம் ஆண்டிலே தான் அவர்கள் திட்டத்தை ஏற்றுக்கொண்டு நம்மிடத்திலே இடத்தையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆக மிக விரைவிலே முடிந்து மதுரையிலே வானொலி நிலையம் விரைவாக வரவேண்டும் என்று மத்திய



அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். அவர்களும் அவர்களுடைய கட்டு மானப் பணிகளைத் தீவிரப்படுத்துவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, மதுரையில் துவக்கப்பட இருக்கும் புதிய வானொலி நிலையம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ரிலே செய்கின்ற நிலையங்கள் போல் செயல்படுமா அல்லது தனித்து செயல்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மதுரையிலே அமைகின்ற வானொலி நிலையம் தனியாக இயங்கு கின்ற வானொலி நிலையமாக இருக்கும்.

முதுமலைக் காட்டில் வனவிலங்குகளைக் விருத்தி செய்வதற்கான திட்டம்

*வினா எண். 176— திரு. சி.கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறைஅமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் முதுமலைக் காட்டில் வனவிலங்குகள் (சிறுத்தை, புலி) போன்ற இனத்தை விருத்தி செய்யத் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 351 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முதுமலை வனவிலங்கு உய்விடத்தில் 63.88 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாக அறிவிப்பது குறித்தும் உய்விடத்தில் மையப்பகுதியை புலி ஒதுக்கப்பகுதியாகவும் இதைச் சுற்றியுள்ள மீதமுள்ள பகுதிகளை வனவிலங்குகள், கால்நடைகள் மேய்ச்சல் வன சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற காரியங் களுக்குப் பயன்படுத்தும் வகையிலும் திட்டம் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சி. கணேசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனம் கேரள மாநிலம் மற்றும் கர்நாடக மாநிலம் ஆகியவற்றின் எல்லைக் கோடுகளுக்குள்ளே இருப்பதன் காரணத்தால் இந்த வனவிலங்குகள் எல்லா மாநிலங்களிலும் அட்டெண்டன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கும். எனவே இந்த நிலைமையைப் போக்குகின்ற வகையிலே அவற்றை நம்முடைய மாநிலத்திற்குள்ளேயே விருத்தி செய்வதற்காக ஆங்காங்கே இருக்கின்ற வனவிலங்குகளை எல்லாம் எடுத்து நம்முடைய தமிழக எல்லைக்குள்ளே இருக்கின்ற வனங்களிலே அதாவது வால்பாறை, வள்ளிமலை போன்ற இடங்களில் விட்டு அவற்றை மேலும் விருத்தி செய்யக் கூடிய திட்டம் ஏதாவது அரசிடம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனவிலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாது. அது இயற்கையாக ஒரு எல்லையிலே இருந்து இன்னொரு எல்லைக்கு குறிப்பிட்டக்

காலங்களிலே சென்று உலவி வருகின்ற பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அவற்றைக் கணக்கெடுகின்ற முறை என்பது அவைகளை எல்லாம் சேர்த்து வைத்து கணக்கெடுப்ப தில்லை. ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆட்களை ஆங்காங்கே நியமித்து ஒரே நேரத்தில் அவர்களுடைய கண்களில் தட்டுப்படுகின்ற வகையில் தான் கணக்கெடுகிறோம். ஆகவே வேறு மாநில எல்லைக்குள்ளே சென்றால் அவற்றைக் கணக்கெடுப்பது என்பது அதற்குள்ளே வராது. மேலும் இப்படிப் பட்ட வனவிலங்குகளின். சரணாலயங்களை. உய்விடங்களை தமிழக அரசு 7இடங்களிலே இப்போது விரிவுபடுத்தி அபூர்வமாக இருக்கக்கூடிய அந்த விலங்குகளையும் பறவைகளையும் பாது காப்பதற்கும் விருத்தி செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

திரு.சி. கணேசன்; தலைவரவர்களே. நம்முடையதமிழகத்தைச் சேர்ந்த கிராஸ்ஹில்ஸ், டாப் ஹில்ஸ் போன்ற பகுதிகளிலே மிகவும் சிறிய அளவுள்ள யானைகள் தான் வாழ்கின்றன. அந்த இனத்தினை மற்ற முதுமலைக் காடுகளில் வாழ்வது போன்ற பெரிய யானைகளாக ஆக்குகின்ற வகையிலே அவற்றின் இன விருத்தியினை அதிகப்படுத்துவதற்குரிய நோக்கம் ஏதாவது அரசினிடத்தில் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராஸ் ஹில்ஸ் என்று அழைக்கப் படுகின்ற அந்த வனப்பகுதி இப்போது ஆனைமலை வனவிலங்கு சரணாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றபகுதிக்குள்ளே அமைந்திருக் கின்றது. அங்கே இருக்கின்ற யானைகளை மேலும் வளர்ப் பதற்கும் பாதுகாப்பதற்கும் அந்த இடத்தினை ஒரு நேஷனல் பார்க் என்று அறிவிக்க வேண்டும் என்ற வகையில் சட்டமியற்ற வேண்டும் என்ற வேண்டுகோள் இப்போது வனவிலங்கு ஆராய்ச்சி நிபுணர்களிடத்திலிருந்து அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றது. அந்தக் கருத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.மு.அரங்கநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி, முதுமலைக் காடுகளில் உள்ள யானைகள் அந்த சுற்று வட்டாரப் பகுதிகளுக்குள்ளே வந்து அங்கே உள்ள மக்களுக்கும், பயிர்களுக்கும் சேதத்தை விளைவித்து வருகின்றது எனவே அவற்றைப் பிரித்து மற்றொரு பிரிவாக ஆக்கி குன்னூர் போன்ற பகுதிகளில் ஒரு சரணாலயத்தை அமைக்கஅரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே' இப்போதுள்ள பிரச்னையெல்லாம் யானைகளால் மக்களுக்கு ஏற்படுகிற துன்பத்தை விட மக்களால் யானைகளுக்கு ஏற்படுகிற துன்பம் தான் அதிகமாயிருக்கிறது என்ற புகார் வந்து கொண் டிருக்கிறது. அதைத் தடுப்பதற்காகத்தான் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.





திரு.கே.உச்சி: முதுமலைக் காடுகளில் வசிக்கும் யானைகள் புலிகள் மற்றும் மனிதர்களின் நடமாட்டத்தால் அவைகள் வெளியேறுகின்றன என்றுஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானல் அதற்கு மாற்று திட்டம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: வனவிலங்கு ஆராய்ச்சி யாளர்கள் முதுமலைப் பகுதி ஒரு மிகச் சிறந்த வனவிலங்கு காப்பகமாக இருக்கிறது என்றும்,அதைப் பாதுகாப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்றும் ஆகவே, அங்கே மனித நடமாட்டத்தை மிகப் பெரிய அளவில் குறைக்க வேண்டும் என்றும் அவர்கள் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கியிருக் கிறார்கள். மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இயற்கையாகவே அங்கே அமைந்துவிட்ட சில கிராமங்கள் அந்தப் பகுதிகளுக்குள்ளே இப்போது இருக்கின்றன. அவர்களை யெல்லாம் வெளியேற்றுவது என்பது அல்லது அந்த மக்களுக்கு வேறு இடங்கள் தருவது என்பது மிகப் பெரிய நிர்வாகப்பிரச்னை இருக்கிறது. அவைகளையெல்லாம் மனதில் வைத்து அதிககவனம் செலுத்தப்படுகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கா. நல்லப்பான்: மொத்தமுள்ள 32¼ சதுர கிலோ மீட்டரில் இந்த வனவிலங்குக்காக 63 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள குறிப்பிட்டார்கள் அப்படி ஒதுக்கப்பட்ட இடத்தில் கூட மனிதர்கள் அல்லது கால்நடைகள் செல்வதற்கு இடம் கொடுக்காமல் போர்ட் மாட்டி அங்கே செல்லக் கூடிய உயிர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அந்த விடையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். 321 சதுர கிலோ மீட்டர் என்பது முதுமலை வனவிலங்கு உய்விடம். அது முழுவதும் பாதுகாக்கப்பட்ட இடமாகும். நான் அளித்த பதிலில் 63.88 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு மையப் பகுதியை புலிகள் வாழ்வதற்கு என்று தனியாக ஒதுக்குகிற இடத்தை மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம். அது புலிகள் வாழ்கிற பகுதி என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது போல் அது மற்ற விலங்குகள் நடமாற்றத்திற்கு ஆபத்து விளைவிக்கிற பகுதி என்று பொருள். அந்தப் பகுதியில் மாத்திரம் யாருமே செல்லாக, அதே நேரத்தில் புலிகளுக்கு சில தீனி வேண்டும். அதற்கென்று சில மிருகங்கள் அங்கே உருவாக்கப்பட வேண்டும். அப்படி புலிகளுக்கு தீனியாக இருக்கிற அந்த மிருகங்களுக்கு உணவு வேண்டும். அதற்கு பயிர்கள் வளர்க்கப்பட வேண்டும்- இப்படிப்பட்ட ஒரு இயற்கையான சூழ்நிலையை அமைப்பதற்கு 63.88 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள அந்தப் பகுதியை மட்டும் புலிகள் வாழ்கிற இடமாக மாற்றுவது என்று தீர்மானித்து மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம், அப்படி மாற்றினால் அந்தப் பகுதிக்குள் எந்த நடமாட்டமும் இல்லாமல் கட்டுப்படுத்தப்படும்.

(ஆ) வரும் ஆண்டில் எத்தனை சாலைகள் போடப்பட்ட உள்ளன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) 1980-81-ல் 14 சாலைகளும், 1981-82 ல் 17 சாலைகளும் போடப் பட்டுள்ளன.

(ஆ) முந்திய ஆண்டுகளில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு முடிக்கப்பெறாமல் நடப்பு ஆண்டில் (1982-83) முடிக்கப்பட விருக்கிற சாலைகள் 14.

மேலும் நடப்பு ஆண்டில் ரூ. 194.50 இலட்சம் செலவில் புதிதாக 12 சாலைப் பணிகளை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

திரு எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புச் சாலைகள் போடுவதற்கு சர்க்கரை ஆலைகளிடமிருந்து எவ்வளவு பணம் வசூலிக்கப்படுகிறது? அரசு அதிலே எவ்வளவு பணம் போடுகிறது? என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 5 என்ற விகிதத்தில் ஆலைகளிட மிருந்து வசூலிக்கப்படுகிறது.

திரு எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் போடும் பணியை நெடுஞ் சாலைத் துறை மேற்கொள்கிறதா? அல்லது அதற்கென்று தனித் துறை இருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை ஏற்றுக் கொள்கிறது.

திரு த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்பு ஆலைகள் செஸ் பணத்தை சாலைகள் போடுவதற்கு முழுமையாக செலவழிக்கப்படுகிறதா? அல்லது வேறு வகையிலே செலவிடப்படுகிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, பெரும்பகுதி கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்; ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே பங்கு மூலதனம் போடுதல் ஆகியவற்றிற்கு செலவிடப்படுகிறது.

திரு இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கு 14 சாலைகள் போடு வதற்கு ரூ. 144.5 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 14 சாலைகளுடைய விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அது நீண்ட பட்டியல். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேண்டுமானால் தருகிறேன். அல்லது அவையின் முன் வைக்க முயற்சி செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைமுன் வைத்து விடுங்கள்.

அதிக மகசூல் தரும் வாழை இரகம்

வினா எண் 177— திரு. இரா. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அதிக மகசூல் வாழை எந்தெந்த மாவட்டங்களில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது?

(ஆ) ரொபஸ்டா என்ற வகைக்கு பின்னர் கண்ட அதிக மகசூல் வாழை எது?

(இ) ஏற்றுமதி மூலம் அரசிற்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் மதுரை மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) குள்ள வாழை என்ற இரகம் அதிக மகசூல் கண்ட வாழையாகும்.

(இ) தமிழகம் பழங்கள் உற்பத்தியில் தன்னிறைவு பெறவில்லை. எனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதில்லை.

திரு. இல. பலராமன்: இந்த 'ரொபஸ்டா', என்ற வகை வாழையை அதிகமாக நோய் தாக்குகிறது. பாஸ்டர் நோய் அழுகல் நோய் அதிகமாகத் தாக்கப்படுவதால் இதை அதிகமாக பயிரிடமுடியாத ஒருசூழ்நிலை விவசாயிகள் மத்தியில் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதைத் தடுப்பதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை என்பது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அது பற்றி எந்த புகாரும் வரவில்லை: நோய் தாக்குதலிருந்து பாதுகாக்க நிச்சயமாக துறை நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: அமைச்சர் அவர்கள் தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் அதிக மகசூல் தரும் வாழையை அறிமுகப் படுத்தி உள்ளதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் அவ்வாறு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வாழைக்காக எவ்வளவு பணம் இந்த ஆண்டு நம் அரசு செலவழித்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 350 ஹெக்டேரில் ரொபஸ்டா வாழை பயிரிடப்படுவதாகத் தகவல் இருக்கிறது. பணத்தைப் பற்றிய தகவல் இல்லை.

திரு இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசாங்கம் அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்கிறது. அது எந்த வகையில் பயன்படுத்தப்படுகிறது? வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள





மத்திய அரசு ஆராய்ச்சி நிலையம், மாநில அரசாங்கத்திற்கு எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கிறது இதிலே மாநில அரசாங்கத்தின் பங்கென்ன என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கான விடையிலேயே இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். வாழை உற்பத்தி தமிழகத்தைப் பொறுத்த வரை தன்னிறைவு பெறவில்லை. நாம் உற்பத்தி செய்வதில் கொஞ்சம் பக்கத்து மாநிலங்களுக்கு அனுப்புகிறோம்; அதே போல் அங்கிருந்தும் அதே அளவுக்கு நமக்கு இங்கே வருகின்றன. ஆகவே, ஏற்றுமதி செய்யக்கூடிய பிரச்னைக்கு இடமில்லை. ஆராய்ச்சி நிலையங்களைப் பொறுத்த அளவில், மத்திய ஆராய்ச்சி நிலையத்தோடு, மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து செயல்படுகின்றது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம் வேளாண்மை துறையில் சிறந்த மாவட்டங்களாக இருக்கின்றன. ஆகவே, அதிகமான மகசூலைக் கொடுக்கக்கூடிய வாழையை அறிமுகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா? நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே( முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய ரகங்களைக் கண்டுபிடித்து, நமமுடைய தேவையை ஈடுகட்ட முயற்சி செய்கின்ற இந்த நெருக்கடி நேரத்தில். மதுரை மாவட்டம், திண்டுக்கல் பகுதியில் இருக்கக் கூடிய பல்லாயிரக் கணக்கான ஏக்கர்களில் சிறுமலை என்று சொல்லக்கூடிய, அதிக ருசியான வாழை, முடிக்கொத்து நோயால் கடந்த 4, 5 ஆண்டுகளாக பாதிக்கப்பட்டு, முழுவதும் அழிந்து விட்டதாகச் சொல்லுகிறார்களே, அதை மீண்டும் அபிவிருத்தி செய்து கொண்டு வருவதற்கு நமது அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, முடிக்கொத்து நோயினால் பாதிக்கப்பட்ட வாழையைப் பாது காக்க நாம் மாற்று மருந்து இன்னும் கண்டுபிடிக்கவில்லை. ஆகவே, அதை ஒட்டு மொத்தமாக அழிப்பதைத் தவிர, வேறு வழியில்லை. வேறுவகையான நோயால் பாதிக்கப்பட்டால், அதற்கு பாதுகாப்பு அளிக்கப்படும். முடிகொத்து நோய்க்கு தக்க மாற்று மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ஆராய்ச்சிக் கழகங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 1980, 1981 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட சாலைகள்.

*வினா எண். 178—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் Roads formed from Sugarcane Cess Fund) 1980, 1981 ஆம் ஆண்டில் எத்தனை சாலைகள் அமைக்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சாலை வசதி இல்லாமல் இருந்தால் இந்த கரும்பு ஆலைத் திட்டத்திலிருந்து போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் இந்த சாலை போடுவதன் நோக்கமே கரும்பு உற்பத்தியாளர்கள் அந்த பகுதியிலுள்ள ஆலைக்கு கரும்பை எடுத்துச்செல்வதற்காகத்தான். அதைத்தவிர வேறு வகையில் இதைப் பயன்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் பயிராகும் மிளகாய்

*வினா எண். 179—திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களில் அதிகமாக கிணற்றுப் பாசனங்களில் பயிராகும் மிளகாய்வத்தல் விலை குறைந்து விட்டது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிளகாய் வற்றல் விலை கொடுத்து வாங்குகிறவர்கள் கிலோ 15 ரூபாய் என்று வாங்குகிறார்கள். விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவரும்போது கிலோ 5 ரூபாய் 6 ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு கிடைப்பது இல்லை. ஆகவே இதை கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் போன்ற நம்முடைய கூட்டுறவு அமைப்புகள் அல்லது கூட்டுறவு பெடரேஷன் மூலமாக நேரடியாக மொத்தமாக நியாயமான விலை கொடுத்து கொள் முதல் செய்து வரும் பூராவும் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? மேற்கொண்டு சிலோன் போன்ற நாடுகளுக்கு முன்னால் ஏற்றுமதி செய்வதன் மூலமாக நல்ல விலை விவசாயிகளுக்கு கிடைத்தது. இப்போது அந்த மாதிரி ஏற்றுமதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு விற்பனை நிலையம், நுகர் பொருள் வாணிபக்கழகம், கூட்டுறவு இயக்கங்கள், ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் இவைகள் மூலமாகத்தான் பெரும்பாலும் இப்போது மிளகாய் வற்றல் கொள்முதல் செய்து அதன் மூலமாக விவசாயிகளுக்கு ஒரு கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை அரசு உருவாக்கி வருகிறது. அந்த முயற்சி தொடர்ந்து நிச்சயமாக நடைபெறும். ஏற்றுமதி என்பது நமது தேவை, விளைச்சல் இவைகளை கருத்தில் கொண்டு நாம் கவனிக்க வேண்டும்.





தானிப்பாடிகிராமத்திலுள்ள மேல்நிர்த் தேக்கத்தொட்டி.

*வினா எண் 180—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தானிப்பாடி கிராமத்தில் மேநீர்த் தேக்கத் தொட்டி இருந்தும் அந்த கிராமத்திற்கு 6 மாத காலம் குடிதண்ணீர் கிடைப்பதும் மற்ற ஆறு மாத காலம் குடிதண்ணீர் இல்லாமல் சுமார் 6, 8 ஆண்டுகளாக இருந்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தானிப்பாடி கிராமத்திற்கு ஒன்பது குடிநீர் கிணறுகள் உள்ளன. அவற்றுள் 6 குடிநீர் கிணறுகள் வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் பாறை துளைக்கும் கருவி மூலம் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு மேநீர்த் தேக்கத் தொட்டி கிணறும் ஒரு தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டி கிணறும் உள்ளன. இக்கிணறுகளையும் தற்பொழுது வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பாறை துளைக்கும் கருவி மூலம் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிட காலனியில் ஒரு குழாய் கிணறும் கிராமத்தில் ஒரு குழாய் கிணறும் கைப்பம்புகளுடன் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், பேருந்து நிலையத்தின் அருகில் ஒரு புதிய குழாய் கிணறும், மாரியம்மன் கோவிலுக்கு அருகில் ஒரு குழாய் கிணறும், போந்தை ரோட்டில் ஒரு குழாய் கிணறும் ஆக மூன்று ஆழ் துளை குழாய் கிணறுகள் கைப்பம்புகளுடன் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் பல கிணறுகளை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பாறை துளைக்கும் கருவி மூலம் ஆழப்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். தானிப்பாடி கிராமத்தில் சுமார் 10 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அந்த கிராமத்தில் இன்றுகூட குடிப்பதற்கு குடிதண்ணீர் இல்லாமல் வெளியிலேயிருந்து தண்ணீர் கொண்டுவந்து குடம் 20 பைசா வீதம் அங்குள்ள மக்களுக்கு கொடுக்கிறார்கள். இந்த நிலையை போக்குவதற்கு சாத்தனூர் அணையிலிருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பகுதியிலே குடிநீரை விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலை இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது

1983 பிப்ரவரி 8]

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சுகர்கேன் செஸ் மூலம் போடப்படுகின்ற ரோடுகள் அநேகமாக சுகர் பாக்ட்ரிஸ் இருக்கின்ற இடங்களிலேதான் போடப் படுகின்றன. குறிப்பாக, சமயநல்லூர் தேசிய கூட்டுறவு ஆலையை சுற்றித்தான் அதிகமாகப் போடுகிறார்கள். ஆனால், இந்த ஆலைக்கு கரும்பு அதிகமாக இராமநாதபுர மாவட்டத்தில் திருப்புவனம் பகுதிகளிலிருந்துதான் வருகிறது. எங்கிருந்து கரும்பு அனுப்புகிறார்களோ, அந்த பகுதிகளிலும் ரோடுகள் போடும் திட்டத்தை விஸ்தரிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலிருந்து, திருப்புவனம் வரை தேசிய நெடுஞ் சாலை இருக்கிறது; அரசின் நெடுஞ்சாலையும் இருக்கிறது. போட்டிருக்கின்ற ரோடிலேயே மறுபடியும் போடவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ரோடுகள் அமைப்பதற்கு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் சர்க்கரை ஆலைக்கு, குளித்தலை கிராமத்திலிருந்து பெங்களூர் மெயின் சாலையை இணைப்பதற்கான திட்டம் இதில் அடங்கியிருக்கிறதா? இல்லை என்றால் புதிதாக அதை சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய முழு தகவல் இல்லை. இதில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிற சாலைகளைப்பற்றிய குறிப்பு களை அவையில் வைத்திருக்கிறேன்.

**திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லைக்குட்பட்டு ஏதாவது ஒரு சாலை எடுக்கப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகளுக்குள்ளே இந்த மதுராந்தகம் சர்க்கரை ஆலைப் பகுதியும் அடங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவைதம்பி:** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பேரூர் தொகுதி, தொண்டாமுத்தூர், கோவை தாலுக்கா ஆகிய பகுதிகளிலிருந்து கேரளாவிலுள்ள சித்தூரில் இருக்கிற சுகர் பேக்டரிக்கு பல்லாயிரக்கணக்கான டன் கரும்பு களை விவசாயிகள் அனுப்புகிறார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டுகளாக கிடைக்கப்பெற்ற செஸ்ஸிலிருந்து அந்தப் பகுதிக்கு ரோடு போடவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அந்த பணத்தை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியனுக்கு அமைச்சர் அவர்கள் தந்து ரோடு போட ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

தாமரைக்குளம் இராசாபுரம் இடையே பொருந்தலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 182—திரு என். பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பழனி வட்டம் தாமரைக்குளம் இராசாபுரம் இடையே செல்லும் பொருந்தலாற்றில் மேம்பாலம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணி அங்கீகரிக்கப் பட்ட எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும், இப்பணியை 'மாநில சாலைகள்' திட்டத்தின் கீழ் பாகம்—2, 1983—84 ஆண்டில் சேர்ப்பிக்க அரசின் நிதி வளம், பணியின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப் படலாம்.

திரு என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி வட்டம், தாமரைக்குளம்இராசாபுரம் இரண்டு சிறிய ஊர்களுக்கு இடையே செல்லக்கூடிய பெரிய ஆறு இருப்பதால் மழை காலங்களில் மக்கள் ஒரு வாரம் 15 நாட்கள் சாமான்கள் வாங்கக்கூட வெளியே போக முடியாத நிலை இருக்கிறது. இது சம்பந்தமாக 1980 ஆம் ஆண்டே 23 லட்சம் ரூபாய் எஸ்டிமேட் போட்டு அரசாங்கத்திற்கு வந்து பார்ட் 2 ஸ்கீமிலே சேர்க்கப்பட்டது, பின்னாலே அது எப்படி பின்னுக்குத் தள்ளப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மதிப்பீடு ரூ. 23 லட்சம் அல்ல, ரூ. 33 லட்சம். அது பின்னுக்கு தள்ளப்படவில்லை, இப்போது அதே நிலையிலேயே தான் இருக்கிறது. ஆகவே, பரிசீலனை செய்து எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலம் மிக முக்கியமான பாலம். இதற்காகவே ஒரு கமிட்டி அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கூட பல மனுக்கள் வந்திருக் கின்றன. இந்த ஆண்டு பட்ஜெட்டிலேயே இதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தைக் கருதித் தான் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா அல்லது இன்னும் கொஞ்சம் தள்ளிப்போடலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.



திருப்பூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 183— திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருப்பூர் பேருந்து நிலையத்தை விரிவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ரூ. 36.00 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பூர் நகராட்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்யும் திட்டத்திற்கு அரசு 2–12–1982ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவத் அவர்களே, இந்த விரிவாக்கத் திட்டத்தின் வாயிலாக எவ்வளவு பேருந்துகள் நிற்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன? எவ்வளவு கடைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக 26 பேருந்துகள் நிற்பதற்கும், 33 கடைகள் கட்டுவதற்கும் இந்தத் திட்டம்.

திரு. ஆர் மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டாவது விரிவாக்கத் திட்டம். மூன்றாவது விரிவாக்கத் திட்டத்திற்கான தாக்கீதுகளை நகராட்சி மன்றம் அரசிற்கு அனுப்பி உள்ளதா? இதற்காக அரசு எவ்வளவு தொகை செலவிட உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்டத்திற்கு ரூபாய் 36 லட்சம்; மூன்றாவது கட்டத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 42 லட்சம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டம்.

* வினா எண் 184— திரு. இரா. தாமரைக்கனி: திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. சு. திரு வேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

ஒரு செய்தியாக இருக்கிறது. உண்மைபூர்வமாக இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சாத்தனூர் அணையிலிருந்து அந்தப் பகுதிக்கு தண்ணீர் எடுத்து வருகிற திட்டம் பற்றி என்னிடத்திலே குறிப்புகள் இல்லை. ஆனால் கண்டிப்பாக பரிசீலனை செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–40.)

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 20 பைசாவுக்குக் குடிநீர் வாங்குவது பற்றிய தகவல் வரவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் இன்றைக்குக்கூட அவர்கள் அந்தத் தகவலைத் தெரிந்துக் கொள்ளலாம். இருந்தாலும் அந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக நகராட்சிகளிலே வண்டிகள் வைத்து தண்ணீர் சப்ளை செய்யப்படுவதுபோல் அந்தக் கிராமத்திற்கும் வண்டிகள் வைத்து தண்ணீர் வழங்குவதற்கு ஒன்றியத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்க அமைச்சர் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஊராட்சி ஒன்றியங் களைப் பொறுத்தவரையில் வண்டிகள் வைத்து தண்ணீரை விநியோகிக்கிற முறையைக் கடைப்பிடிக்க முடியாது. காரணம் நம்மிடம் அதற்குப் பணம் இல்லை. நாம் ஏற்கெனவே தன்னிறைவுத் திட்டம், இன்னும் பல்வேறு திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, வண்டிகள் வைத்து தண்ணீர் விநியோகம் செய்வது என்ற நிலைமை ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, தானிப்பாடி என்ற கிராமம் தண்டராம்பட்டு ஒன்றியத்திலேதான் அடங்கி யிருக்கிறது. அங்கே தன்னிறைவுத் திட்டமும் நடக்கிறது. அந்த ஒன்றியத்திலே பெரிய கிராமமாக இருக்கின்ற அந்த இடத்திலே குடிநீர்த் திட்டம் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லையா? அப்படிச் சேர்க்கப்படாததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கிராமங்கள் அனைத்திலும் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. ஆனால் பேரூராட்சியாக இருந்தால் தனியாக திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டு 146 பேரூராட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அதிகமாக எடுக்க இருக்கிறோம். பேரூராட்சியாக இருந்தால் அது தன்னிறைவுத் திட்டத்திலே வரும்.



தன்னிறைவுத் திட்டப் பணிகள் குறித்த செய்திப்படம்.

*வினா எண் 181—திரு எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தன்னிறைவுத் திட்டப் பணிகள் பற்றி அரசு செய்திப்படம் தயாரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அப்படம் தமிழகம் முழுவதும் திரை யிடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தன்னிறைவு திட்டப் பணிகள் பற்றிய செய்திப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இச்செய்திப்படம் தமிழகமெங்கும் திரையிடப் பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டப் பணிகள் பற்றி செய்திப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தப்படம் எவ்வளவு செலவில் தயாரிக்கப்பட்டிருக்கிறது? எங்கெங்கே தமிழகத்திலே திரை யிடப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: இந்தப் படத்தினுடைய மொத்த நீளமே 144 மீட்டர் ஆகும். இந்தப் படத்தைத் தயாரிக்க 13 ஆயிரம் ரூபாயும் இந்திய அரசு திரைப்படப் பிரிவின் மூலமாக வெளியிட 109 படிகள் எடுக்க 30,372 ரூபாயும் ஆக மொத்தம் 43,372 ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்ட வேலைகள் சம்பந்தமாக செய்திப் படங்கள் தயாரித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித் தார்கள். அந்தச் செய்திப் படத்தைத் தயாரித்தபோது எந்த எந்த இடங்களில் நடைபெற்ற பணிகளை படத்தில் எடுத்திருக் கிறார்கள்? எந்த மாவட்டம், எந்தத் தொகுதி என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எல்லாத் தொகுதிகளையும் அந்தப் படத்திலே கொண்டுவந்துவிட முடியாது. நாம் எடுத்து இருக்கிற படத்தின் நீளமே 144 மீட்டர்கள் தான். ஆகவே பக்கத்திலே இருக்கின்ற செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள் போன்ற பல்வேறு மாவட்டங் களிலே அந்தச் செய்திப் படங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இப்பொருள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ பல்கலைக் கழக மைய அலுவலகம் அமைய இருப்பது நெரிசல் மிகுந்த சென்னையில் இல்லாமல், இயற்கை அழகு கொஞ்சும் மதுரையில் அமைக்கப்படுமா? இது போன்ற மருத்துவப் பல்கலைக் கழகம் இந்தியாவில் வேறு எங்காவது உள்ளதா? இதனால் ஏற்படும் நன்மை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூன்று கேள்விகளை கேட்டிருக்கிறார்கள். சென்னையில் 130 ஏக்கர் இதற்காக நல்வாழ்வுத் துறை கல்வி இலாக்காவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அடையார் பக்கத்தில் 'டெக்னாலஜி காம்பஸ்' என்ற இடத்தில் 130 ஏக்கர் இருக்கிறது. அந்த இடத்தை நாம் பயன்படுத்தலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படுமானால் அந்த இடத்தை நாம் பயன்படுத்தலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். இதுபோன்று வேறு எங்காவது இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. என்ன பயன் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கான ஒரு குறிப்பை படித்து விடுகிறேன்.

The establishment of Medical University is necessary to further the development of medical education courses to keep pace with the latest development in the medical field and it is quite justified on the analogy of Perarignar Anna University of Technology. என்று குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய நல்வாழ்வுத் துறை இலாக்காவிலே, கல்வித் துறையிலே மிக வேகமாக நாம் அடைந்து வருகிற முன்னேற்றத்தை நல்லவகையில் பயன்படுத்த வேண்டுமென்றால் இப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் தேவையென்று நிபுணர்கள் குழு ஏற்கெனவே நமக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ பல்கலைக் கழகம் அமைப்பது சம்பந்தமாக நிபுணர்களின் குழு அமைக்கப்பட்டிருக்கிறதா? அதில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்? நிபுணர்கள் குழு அமைக்கப்பட வேண்டியதை பற்றிய இறுதி முடிவுகளை எடுத்து அரசிற்கு அறிவிக்கப்பட்டதா என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபுணர்களுடைய குழு நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஜி.ஓ.எம்.எஸ். நம்பர் 1566, ஹெல்த் டிபார்ட்மெண்ட், 30—7—82 நாளிட்ட உத்தரவில் நாம் நிபுணர்கள் குழு அமைத்து டாக்டர் ஏ. வேணுகோபால், சேர்மென், டாக்டர் பி. ராமமூர்த்தி, டாக்டர் எம். நடராஜன், டாக்டர் எஸ். காமேஸ்வரன் ஆகியோர் உறுப்பினர்களாக, டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் மெம்பர் செகரட்டரியாக கொண்டு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு பணியாற்றி வருகிறது. இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாக ஒரு அறிக்கை டெம்பரரியாக, ஒரு இண்டரீம் ரிப்போர்ட் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

(முற்பகல் 9-50)

திரு பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை தமிழ்நாட்டிலே நாம் அமைப்பதனால நம்முடைய அரசுக்கு ஆரம்பச் செலவு எவ்வுளவு ஆகும்? அல்லது, ஆண்டுதோறும் அதற்காகும் செலவு எவ்வளவு? நம்முடைய மாநிலத்தில், 20 படுக்கைகள் கொண்ட இடங்களில் 60 படுக்கைகள் வைக்க வசதி வாய்ப்பில்லாத நேரத்திலே, * * என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, * * ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்குப் போய்ப் பார்க்க வேண்டும். கிராமச் சுகாதாரத்தைப் பொறுத்த வரையிலே, நம்முடைய மாநிலத்திலே மிகச் செம்மையாக நடைபெற்று வருகிறது. நம்முடைய இலட்சியம் எல்லாம், படுக்கைகள் இன்னும் நிறைய தேவை என்பதுதான். என்றாலுங்கூட, நாம் மிக நல்லமுறையில் செம்மையாக நடத்துகிறோம் என்று மற்றவர்கள் பாராட்டுகிறார்கள். அது உண்மையாகவும் இருக்கலாம், உண்மையில்லாமலும் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், பல்கலைக் கழகம் உருவாக்கப்படுமானால்—நான் திட்டவட்டமாகச் சொல்லுவதற்கில்லை—அப்பொழுது அதற்கு ஆகக்கூடிய செலவு, அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிற காரணத்தால் சொல்கிறேன். In case such a University is to be started, the recurring expenditure will be Rs. 1.11 crores and non-recurring expenditure will be Rs. 5.60 crores.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு 130 ஏக்கர் நிலம் அடையாறுக்குப் பக்கத்தில் பார்த்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக மட்டும் இதுதே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1983 பிப்ரவரி 8

ஆரம்பிப்பதை விட. நமது அரசு தலைநகரத்தைக் கூட தமிழகத்தின் மத்திய பகுதியான திருச்சியிலே வைக்க வேண்டுமென்று கருத்து சொல்லிக் கொண்டிருக்கும்போது, இந்தப் பல்கலைக் கழகத்தைக் கூட, மத்திய பகுதியான மதுரையில் வைத்தால், நிலத்திற்கு நாம் ஏற்பாடு செய்து கொடுக்க முடியும் என்பதை அமைச்சருக்குச் சொல்லிவிட்டு, கன்னியாகுமரி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கான்வாசிங் நேரம் அல்ல, கேள்வி நேரம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : புதிய பல்கலைக் கழகம் மதுரையல் வைக்கப்படுமா? அரசினுடைய கொள்கையே, மத்திய பகுதிக்குத் தலைநகரம் மாற்றப்பட வேண்டுமென்று இருக்கும் போது, இதையும் மத்திய பகுதியான மதுரையில் வைக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்பொழுது இடத்தைப் பொறுத்தவரை, உறுதியாக எந்தப் பகுதியும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. அப்படி ஒரு கருத்து இருக்கிறது என்றுதான் சொன்னேன். எந்த இடத்திலே வைக்கலாம் என்பது கூட டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்சிலே வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற கருத்தைக்கூட, அந்தக் குழு கவனிக்கும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 185, திரு. டி. இராசரத்தினம், மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள்......

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கொடுத்தவர் எனக்கு இரண்டு கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும். அதைத் தாங்கள் மறுக்கக் கூடாது. அது எங்கள் உரிமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் உரிமையை மறுக்கவில்லை. நீங்கள்தான் * என்று சொன்ன முதல் ஆள். ஆகவே, நீங்கள் வேறு கேள்வி கேட்க என்ன இருக்கிறது? * என்று சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என உத்தரவிடுகிறேன்.

ஆவடியில் அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் திட்டம்.

* வினா எண் 185—திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1983 பிப்ரவரி 8]

(அ) செங்கற்பட்டு மாவட்டம் ஆவடி நகரியத்தில் ஐம்பது படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஆவடியில் புதிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுவதற்காக 18 ஏக்கர் காலி நிலம் ஒன்றை ஆர்ஜிதம் செய்ய, செங்கை மாவட்ட மருத்துவ அலுவலர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மேற்படி இடம் கட்டிடம் கட்ட ஏதுவானதா என்பது பற்றி மண் பரிசோதனை செய்யப் பட்டு வருகிறது.

(இ) மேற்கண்ட நிலத்தின் மண் பரிசோதனை முடிவு இன்னும் தெளிவாகவில்லை. இவ்விவரம் கிடைக்கப்பெற்றதும் மருத்துவமனை கட்டுவதற்கான திட்டமும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு அரசு பரிசீலனை செய்யும்.

இலவச மருத்துவ வசதி பெறுவதற்கான வருமான
வரம்பை உயர்த்தும் திட்டம்.

* வினா எண் 186—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெறுவதற்கான வருமான வரம்பை உயர்த்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, பெரும்பாலான அரசு மருத்துவமனைகளில் சாதாரண வருவாய் உள்ள ஏழைகள் அனுமதிக்கப்படும் நேரத்தில் ஒருவருக்கும் மருந்து முறையாகக் கிடைப்பதில்லை என்ற பெரிய புகார் இருக்கிறது. உதாரணமாக, ஜெனரல் ஹாஸ்பிடலில் எந்தவிதமான மருந்துகளும்....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மானியக் கோரிக்கையில் இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லலாம். அதற்குப் பதில் சொல்வது சரியாக இருக்கும். குறிப்பிட்ட இந்த மூலக் கேள்விக்குத் தொடர்புடைய குறைபாடுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பார்களேயானால் அதற்குப் பதில் சொல்லலாம். ஒட்டுமொத்தமாகக் குற்றச்சாட்டைச் சுமத்தினால் அது பெரிய விவாதம் ஆகிவிடும்.

...க்கு அனுமதி கொடுத்தால் நான் தயாராகவும் இருக்கிறேன். ஆகவே, பேரவைத் தலைவரவர்கள் இதற்கு ஒரு கட் லைன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத துணைக் கேள்விகளைக் கேட்கக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம்: இருக்கின்ற குறைகளைக் கூடச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறைகள் சொல்லும் நேரமல்ல இது.

## New Airports in Tamil Nadu

* Q.No. 187—THIRU S RAJARAMAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) the details of the places suggested by the State Government to the Civil Aviation Ministry of the Government of India for opening of new Airports in this State; and

(b) The reasons for suggesting these places

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) சேலம், தூத்துக்குடி.

(ஆ) தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மட்டும் விமான நிலையங்கள் அமைந்துள்ளன, சேலம்—சென்னைக்கும் இடையிலும், தூத்துக்குடி சென்னைக்கும் இடையிலும் தொழில் வளர்ச்சி, சுற்றுலா பயணிகள் வளர்ச்சி வியாபாரிகளில் போக்குவரத்து வளர்ச்சி பெருகி வருவதால் சேலத்திற்கும், தூத்துக்குடிக்கும் விமானப் போக்குவரத்து அவசியம் என்று கருதப்படுகிறது. மேட்டூர் தொழிற்பேட்டை செல்வதென்றாலும் சேலம் நகரம் வழியாகத்தான் செல்ல வேண்டியுள்ளது. சேலம் எஃகு தொழிற்சாலையும் வளர்ந்து வருகிறது. தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும் தூத்துக்குடி—கொழும்புக்கும் இடையே கப்பல் போக்குவரத்து நடத்த கருத்து பரிசீலனையில் உள்ளது. மிகப் பெரிய உரத் தொழிற்சாலையான 'ஸ்பிக்' கடின நீர் சுத்தப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் தூத்துக்குடி கார இரசாயன உற்பத்தி தொழிற்சாலையும் தூத்துக்குடியில் அமைந்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, சேலத்திலும், தூத்துக்குடியிலும் அமைக்க வேண்டுமென்ற நமது கோரிக்கை நியாயமானது. இது எப்பொழுது வலியுறுத்தப்பட்டது? மத்திய அரசாங்கத்திடமிருந்து எப்பொழுது பதில் வந்தது? இது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று கூற முடியுமா?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி வருகிறது, கடிதம் எழுதியிருக்கிறது. இதைவிட மிக அவசரமான திட்டங்களெல்லாம் இருக்கின்ற காரணத்தினாலே ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ள முடியாது என்ற முறையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து பதில் வந்தது. மீண்டும் ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கடிதம் எழுதி, முன்னாள் மத்திய நிதியமைச்சரவர்களுக்கு, கட்டாயம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்கு நான் கூறிய கருத்துக்களை உள்ளடக்கிய கடிதம் எழுதப்பட்டது. இந்தத் திட்டத்தில் சேர்க்க முடியுமா என்று ஆய்வு நடத்த வேண்டுமென்று திட்டக் குழு அமைச்சருக்கு அந்தக் கடிதத்தைப் பரிந்துரை செய்திருப்பதாக நமக்குப் பதில் வந்திருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் விமான நிலையம் ஏற்படுத்தப் போவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. தஞ்சைக்கு மாநிலத் தலைநகரை மாற்றலாம் என்ற யோசனையும் இருப்பதால் தஞ்சையில் புதிய விமான நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த இரண்டு விமான நிலையங்களும் மிகவும் முக்கியமானது என்று நாம் சொல்லியும்கூட மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்குச் சாதகமான பதில் வருவதாக ஒன்றும் தெரியவில்லை. அப்படியிருக்கும்பொழுது, இன்னும் சிலயிடங்களில் முடியுமா என்று பார்க்க வேண்டும். இந்த இரண்டும் நிறைவேறிய பிறகு மற்ற இடங்களைப்பற்றி நிச்சயமாகக் கவனிக்கலாம்.

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிகளுக்கு இலவசமாக பால் வழங்கும் திட்டம்.

*வினா எண் 188—திரு. ரா. கிருஷ்ணன் மற்றும் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் பேருந்துகளில் பயணிகளுக்கு இலவசமாக பால் வழங்கும் திட்டத்தின் மூலம் 1981-1982 ஆண்டில் ஆன செலவு எவ்வளவு?

(ஆ) தரமான பால் வழங்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ரூபாய் 2,82,600 (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து அறுநூறு). 15-7-82 முதல் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஆண்டில் கிட்டத்தட்ட இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. கொடுத்த பாலோ தண்ணீர்ப் பால். அதனால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதா? இதை முறைப்படுத்தி பால் வழங்கு துறை மூலமாக, பால் உற்பத்தித் துறை மூலமாக இந்தப் பாலை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் கைவிடப்பட்ட பிறகு, கொடுக்கப்பட்ட பாலே தண்ணீர்ப் பால் என்று சொல்கிறார்கள். ஏற்கனவே சொல்லியிருந்தால் நடவடிக்கையாவது எடுத்திருக்கலாம். நல்ல பாலாகத் தான் அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருந்தோம். ஆனால் பஸ்ஸுக்குள் வரும்பொழுது எப்படியோ தண்ணீர்ப்பாலாக மாறி இருக்கலாம். ஆகவே, இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் இந்தத் திட்டத்தையே நாம் கைவிட்டு விட்டோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் பதில் சொல்லும் பொழுது பால் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றியைச் சொல்லி, மீண்டும் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

புதிதாக விடப்பட்டுள்ள நகர்ப்புற பேருந்துகள்

*வினா எண் 189—திரு. கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக விடப்பட்ட நகர்புற பேருந்துகளால் அதே கழகத்தை சேர்ந்த மற்ற புறநகர் பேருந்துகளின் வருவாய் பாதிக்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதற்கான சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பொதுமக்களின் வேண்டுகோளின்படி அவர்களுடைய நன்மையைக் கருதியே நகர்புற பேருந்துகள் புதிதாக விடப்பட்டுள்ளன. அப்பேருந்துகளினால் அக்கழகத்தைச் சார்ந்த புறநகர் பேருந்துகளின் வருவாய் அதிகமாக பாதிக்கப்படாத வகையில் அதைப் பரிசீலனை செய்து அதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து வருகின்றோம்.



(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் டவுன்பஸ்கள் விடுவது நமது அரசு ஏழைகளுக்கு வசதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான். சில இடங்களில் தனியார் துறையைச் சேர்ந்த உரிமையாளர்கள் நகரப் பேருந்துகளாக விடுகின்ற வண்டிகளுக்கு வேரியேஷன் போட்டு, நீட்டிப்புத் தந்திருப்பதன் காரணமாக அரசுக்கு இழப்பு ஏற்படுவது தெரியுமா? அந்த இழப்பை தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நீட்டிப்பு கொடுக்கிறதோ அல்லது வெட்டிக் கொடுக்கிறதோ எதுவாக இருந்தாலும் பொதுமக்கள் நன்மையைக் கருதிதான் கொடுக்கப்படுகிறதே தவிர, லாபநோக்கத்திற்காகவோ அல்லது தனிப்பட்ட நபருக்காகவோ இதை செய்வதில்லை. எனவே அது பொதுமக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்தால் செய்யப்படும். அதன் மூலமாக பொதுமக்களுக்கு இடையூறு வருமானால் அதைச் செய்வதற்கு அரசாங்கம் எந்த நேரத்திலும் அனுமதித்ததில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகள் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம், இந்த நகரப் பேருந்துகள் அரசாங்கத்தின் சார்பிலே விட்ட உடனே, அந்தப் பகுதியிலே செல்லுகின்ற தனியார் பேருந்துகள் தாங்கள் ஓட்டுகின்ற ரூட் பஸ்களுக்கும் இந்த நகரப் பேருந்துகளின் கட்டணத்திற்கு ஏதுவாக குறைத்துவிடுகிறார்கள். அதனால்தான் அரசுக்கு நட்டம் ஏற்படுகிறது. அப்படி நட்டம் ஏற்பட்டாலும், இதனால் பொதுமக்கள் லாபம் அடைகிறார்கள். எனவே இதைக் கருத்திலே கொண்டு அதிகமான அளவில் நகரப் பேருந்துகளை விட அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதை எல்லாம் கருத்திலே கொண்டுதான் அதிகமான நகரப் பேருந்துகளை அரசாங்கம் விட்டுக் கொண்டே இருக்கிறது.

திரு.ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, போக்குவரத்து வசதிக்காக பஸ்கள் விடுவது சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில நேரங்களிலே, கழகங்களில் நிர்வாகத்தினரை அணுகி பலவற்றைக் கேட்டால், அன்எக்கனாமிக்கல் ரூட், எனவே விட முடியாது என்று பல இடங்களில் மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பிரச்சினை சம்பந்தமாக போக்குவரத்தை லாபகரமாக நடத்துவதற்கும், பொதுமக்கள் வசதியைக் கணக்கில் கொண்டு நல்ல முறையில் செயலாற்றுவதற்காகவும் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு அட்வைசரி கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருந்தது, அதேபோல இப்போது ஒரு அட்வைசரிக் கமிட்டியை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கூடுதலாக பேருந்து கேட்கிற இடங்களிலே மட்டும்தான் இது லாபம் வருகிறதா இல்லையா என்று கணக்குப்போட்டு சொல்லி இருப்பார்கள். பஸ்களே இல்லாத பகுதிகளில் பஸ்களை விட வேண்டும் என்று சொல்லுகிறபோது எவ்வளவு நட்டம் ஏற்பட்டாலும அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டு இதைச் செய்து கொண்டிருக்கிறது. மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளையோ, அமைச்சர்களோ நேரில் சந்தித்து பிரச்சினையைக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் இதற்கென்று தனியாக ஒரு குழு தேவையா என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை 25 கி.மீ. வரை விடவேண்டும் என்று ஏற்கனவே இருந்த சட்டத்தினை மாற்றி 30 கி.மீ, வரை நீட்டிக்கலாம் என்று அரசு மாற்றி ஓராண்டுக்கு மேல் ஆகிறது. இன்னும் பல தடங்களில் இந்த 30 கி.மீ. நீட்டிக்கப்படாமல் இருக்கிற காரணத்தினால், முறையாக கிடைக்க வேண்டிய வருமானம் பாதிக்கப் பட்டுள்ளது என்ற காரணத்தால் குறிப்பிட்ட தேதிக்குள், அதாவது 31—3—1983 ஆம் தேதிக்குள் இந்த 30 கி.மீ. தூரம் வரை எல்லா நகரப் பேருந்துகளும் நீட்டிக்க வேண்டும் என்ற உத்தரவை நிறைவேற்ற அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது போட்ட உத்தரவின்படி 30 கிலோ மீட்டருக்கு மேல் போகக்கூடாது என்றுதான் இருக்கிறது 30 கி.மீ. வரை ஓட்டியாக வேண்டும் என்றில்லை. அப்படிக் கட்டாயப்படுத்தவும் முடியாது. 30 கி.மீ. என்றிருந்தபோதும் 15 கி.மீ. 20 கி. மீட்டர்கள்தான் ஓடிக்கொண்டிருந்தது. ஏற்கனவே 25 கி.மீ, என்று நிர்ணயிக்கப்பட்டபோதும் 15 கி.மீ. 20 கி.மீ. ஓடிக்கொண்டிருந்தது. எனவே தேவைகளைப் பொருத்துத்தான் நீட்டித் தருவார்கள். தேவைகள் என்னென்ன இருக்கின்றது என்று சொல்வார்களானால் நிச்சயமாக அவைகளை நீட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கி. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களைச் சேர்ந்த போக்குவரத்துக் கழகங்களிலே டைமிங் காம்ப்படிஷன் நடக்கின்றபோதுதான், போட்டி மனப்பான்மையோடு நேரங்களைப் போடுவதாலும், ஒரு சில நிமிடங்களுக்குள்ளாக அடுத்தடுத்து வண்டிகள் விடுவதன் காரணமாகவும் வசூல் பாதிக்கப்படுகிறது. எனவே போக்குவரத்துக் கழகங்களுக்குள்ளாக இருக்கின்ற இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ 2 ஆண்டுகளுக்கு அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமைகளைச் சொல்கிறார்கள். இப்போது அந்த நிலைமைகள் மாற்றப்பட்டு, இப்போது போட்டி மனப்பான்மை குறைக்கப்பட்டு ஓரளவிற்கு நல்ல முறையிலே இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆனால் போக்குவரத்து கழகத்திற்கு லாபம் வரவேண்டுமானால் நிச்சயமாக அந்த போட்டி மனப்பான்மை நல்லது என்றுகூட நான் கருதுகிறேன்.

திரு. எ. இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது சொன்னார்கள். 30 கிலோ மீட்டருக்குள் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் நெருக்கடியாக அவதிப்படுகின்ற பெருநகரங்களிலே 30 கிலோ மீட்டருக்கு உள்ளே இருந்தாலும் வருங்காலத்திலாவது கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு உண்டா? பொதுமக்களுக்கு நன்மை தருவதிலே என்ன ஆட்சேபணை இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி பேரவைத் தலைவர் அவர்களே, யாருக்கும் அந்த ஆட்சேபணை இல்லை நான் ஏற்கனவே சொன்னேன், எங்கெங்கே அவசியம் இருக்கிறதோ, அங்கே எல்லாம் கட்டாயம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் காரணத்தால்தான் இன்றையதினம் அரசாங்கப் பேருந்துகள் 4,000த்திலிருந்து 8,100-க்கு உயர்ந்திருக்கிறது, எனவே நகரப் பேருந்துகளை 30 கி. மீ. வரை ஓட்ட வேண்டுமென்று சட்டம் இல்லை என்றாலும், தேவை இருக்கிறது என்று சொன்னால். 30 கி. மீ. வரை நீட்டிக்கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அரசு கால்நடைப் பண்ணைகளில் கன்றுகள் வளர்க்கும் திட்டம்.

வினா எண். 190: டாக்டர் கே. பி. இராமலிங்கம் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கால்நடைப் பண்ணைகளில் கால்நடை வளர்க்கும் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்தி சினைக்கிடேரிகளை சிறு விவசாயிகளுக்கு நியாய விலையில் தரும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை இடங்களில் கால்நடைப் பண்ணைகள் புதியதாக துவங்கப்படும்?

[1983 பிப்ரவரி 8

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) தற்போது புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை புதிதாக வேறு இடங்களில் துவங்கும் உத்தேசம் தற்போது இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத்தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழக அரசு இந்த இரண்டுப் பண்ணைகளில் மட்டும் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவ தாகச் சொல்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு வங்கிகளின் உதவியோடு சிறு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும், சிறு விவசாயிகளின் மேம் பாட்டுத் திட்டத்தின் கீழும் சுமார் 70 ஆயிரம் மாடுகளுக்கு கடன் உதவி அளிக்கப்படுகிறது. ஆகவே குறைந்த பட்சம் ஆண்டு ஒன்றுக்கு 70 ஆயிரம் மாடுகளை உற்பத்தி செய்து உருவாக்குவதற்காக ஒரு மிகப் பெரிய திட்டம் ஒன்றினை மாவட்ட அளவில் அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே' நிதி நிலை அடிப்படையில் மாவட்டந் தோறும் கால்நடைப் பண்ணைகளை அரசு அமைக்கும் உத்தேசம் இப்போது இல்லை.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு பரிசீலித்து எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் போன்ற மாவட்டங் களில் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அலுவலர்கள் மற்றைய பொருள்கள் எல்லாம் வாங்கி இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. நிதிநிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். ஆகவே நிதி நிலைமை நமக்கு ஒத்து வந்தால் இந்தத் திட்டத்தை எல்லாப் பண்ணைகளிலும் அமைக்கும் உத்தேசத்தை அரசு மேற்கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இந்த சினைக் கிடாரி களைக் சிறிய விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கொடுக்கிற திட்டம் அமுலில் இருப்பதாகச் சொன்னார்கள். இதுவரை 1980-81, மற்றும் 1981-82—ஆம் ஆண்டுகளில் எத்தனைக் கிடாரிக் கன்றுகள் இந்தச் சிறிய விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, 80–81 ஆம் ஆண்டு, 19.72 லட்ச ரூபாய் செலவில், புதுக்கோட்டை மற்றும் உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 4 0 கலப்பினக் கன்றுகளை வாங்கி வளர்த்து அது நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன, இந்த மாவட்டத்திலுள்ள ஏழை விவசாயிகளுக்கு லாப நஷ்டம் இல்லாத அளவில் இந்தத் திட்டத்தின் வாயிலாக 28 மாதங்கள் கால்நடைப் பண்ணைகளில் வளர்த்து அவர்களுக்கு விநியோகம் செய்து கொண்டு வருகிறோம்.

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தொற்றுநோய் தடுப்புப் பணிகளைக் கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்.

வினா எண். 191. திரு. செ. செம்மலை : மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது தொற்று நோய்த் தடுப்புப் பணிகளை கவனிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன?

(முற்பகல் 10. 10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 587 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங் களில் ஒரு சங்கத்திற்கு ஒரு ஆய்வாளர் வீதம் 5 சங்கங்களுக்கு மட்டும் ஆய்வாளர்கள் பணியாற்றி, அங்கத்தினர்களின் ஆடுகளுக்கு தொற்றுநோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார்கள். 39 சங்கங்களில் மூன்று சங்கங்களுக்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் என்ற வீதம் நியமிக்கப்பட்டு தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனித்து வருகிறார். இச்சங்கங்கள் வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவி பெற்றவை. இதர கால்நடை வளர்ப்புச் சங்கங்களில் உள்ள எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா ஆடுகளுக்கும், பொதுவாக எல்லா கூட்டுறவு சங்கங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கும், அவற்றின் அருகாமையிலுள்ள கால்நடை மருந்தகங்கள் மூலம் தொற்று நோய் தடுப்புப் பணிகளை கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொற்று நோயால் திடீரென்று பாதிக்கப் பட்டு கால்நடைகள் இறந்துவிடுவதால், கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன்பெற்று, கால்நடைகளை வாங்கிய கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு பெரிதும் இழப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இந்த நிலையைப் போக்க அனைத்து ஒன்றியங்களிலும் நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்டந்தோறும் நடமாடும் கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக நல்ல முறையில் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. ஒன்றியங்கள் மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் நடமாடும் கால்நடை மருத்துவ மனை அமைக்கப்பட வேண்டுமானால் மிகவும் நிதிசெலவாகும். ஆகவே, நிதிவசதியை கருத்தில் கொண்டு அதற்கேற்றவாறு தான் இவைகளைச் செயல்படுத்த முடியும். அதனால்தான் மாவட்டம் தோறும் அமைக்கப்படும் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சென்று, அந்த ஒன்றியங்களில் உள்ள கால்நடைகளுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளித்து வருகிறது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே' குடும்ப நலத் திட்டங்களுக்கு கிராமந்தோறும் பயிற்சி முகாம் நடத்துவது போல், இதுபோன்ற நோய்த் தடுப்பு முறை பற்றியும் விவசாய சங்க உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு கிராமங்கள்தோறும் பயிற்சி முகாம் நடத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே' மருத்துவர்கள் இப்போது கிராமங்கள் தோறும் ஏழை எளிய விவசாயிகளுக்கு ஆங்காங்கே சென்று பயிற்சி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் பயனாக, சி. ஐ. டி. பி. திட்டங்கள் செயலாகும் மாவட்டங்களில் மட்டும் தான் கூட்டுறவு சங்கங்களுக்கு இதுபோன்ற லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் தனி அலுவலர்களாக போடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே மற்ற சங்கங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, எல்லாச் சங்கங்களுக்கும் இதுபோன்ற உதவியாளர்களை செயலாளர்களாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 587 கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அதிலே, வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 39 ஆடு வளர்ப்புச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 229 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணித்திட்டத்தின் மூலம் 125 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டுஇருக்கின்றன. மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டத்தின்மூலம் 4 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. பழங்குடி மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலம் 3 ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இதர சங்கங்கள் 186 கூட்டுற



சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எல்லா இடங்களிலும் அதற்கான கால்நடை ஆய்வாளர்கள் அமைத்து அவர்கள் செயலாளர்களாக இலவசமாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமானால் நாட்டுமையாக்கப்பட்ட பாங்குகளில் ஒபினியன் வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒபினியன் கொடுத்தால்தான் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்க முடிகிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் பாண்டியன் கிராம பாங்கு ஒபினியன் கொடுக்க மறுப்பதால் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இதைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளை அரசு நிச்சயமாக கவனிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, சில மாடுகளுக்குப் போடுகின்ற சில தடுப்பு ஊசிகளுக்கு பணம் வசூலிக்கப்படுகிறது. அவைகளுக்கும் ஒன்றியங்கள் மூலமாக அரசே மானியம் கொடுத்து தற்போதுள்ள வறட்சி நிலையை கருத்தில் கொண்டு அந்த தடுப்பு ஊசிகளை பணம் வாங்காமல் இலவசமாகப் போடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, உயர்ரக தடுப்பு ஊசிகள் போடுவதற்கு, ஏழை விவசாயிகள் குறுநில விவசாயிகள் ஆகியோரிடமிருந்து கட்டணம் வசூலிக்காமல் இலவசமாகப் போடப்படுகிறது. வசதி படைத்தவர்களாக இருந்தால் அவர்கள் பணம் கொடுத்துத்தான் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

## ஊராட்சித் தேர்தலுக்கு முன் ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைக்கும் திட்டம்.

* குறுகிய கால வினா எண். 3 திரு. என். பழனிவேல் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் ஊராட்சித் தேர்தலுக்கு முன், ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைத்து சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், பழனி ஒன்றியத்திலிருந்து ஆண்டி

பட்டி என்ற ஊரை மடத்து குளத்துடனும், தொப்பம்பட்டி ஒன்றியத்திலிருந்து மஞ்சநாயக்கன்பட்டியை பழனி ஒன்றியத்துடனும் இணைத்து தேர்தல் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு : — (அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கேள்விக்கு இப்போது இடமில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களை ஏற்படுத்திய காலத்தில் ஏதோ அவசரக் காலத்தில் அமைத்திருக்கிறார்கள். பல ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடத்திற்கும் ஊருக்கும் இடையே 35 மைல், 40 மைல் தூரம் இருக்கிறது. ரோடு வசதி இல்லை. இதை எல்லாம் சீர் செய்யக்கூடிய முறையில் எனது தொகுதியில் இருக்கக்கூடிய ஆண்டிப்பட்டி என்ற கிராமத்தை மடத்துக்குளம் ஒன்றியத்துடனும், மஞ்சநாயக்கன்பட்டி என்ற கிராமத்தை பழனி ஒன்றியத்துடனும் பஞ்சாயத்து தேர்தல் வருவதற்குள் இணைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் ஏற்படுத்தப் பட்டது எல்லாம் காங்கிரஸ் காலத்தில் தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்த கிராமங்களை அந்த ஒன்றியங்களில் சேர்த்துக் கொள்வது என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இது காங்கிரஸ் கட்சி காலத்தில் அமைக்கப்பட்டது என்பது உண்மைதான் யாருடைய ஆட்சிக் காலத்தில் செய்திருந்தாலும் இப்போது நமக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊராட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவது பற்றி அறிவிக்கப்பட்டபோது பெண்களுக்கு என்றும், தாழ்ந்தப்பட்ட மக்களுக்கு என்றும் சில ஒதுக்கீடுகளை செய்திருந்தார்கள். அந்த ஒதுக்கீடுகளை மாற்ற வேண்டுமென்று மனுக்கள் வந்தன. அதை மாற்றியமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தேர்தல் பற்றி இப்போது மேல் முறையீடு செய்யப்பட்டு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்ததையும், பெண்களுக்கு தனியாக ஒதுக்கீடு செய்ததையும் சுட்டிக்காட்டி அதை எதிர்த்து இப்போது மேல் முறையீடு செய்திருக்கிறார்கள் அதன் முடிவு தெரிந்த பிறகு தான் இது பற்றி சொல்ல முடியும்.





திரு. என். எஸ். வி. சித்தன் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது ஊராட்சி ஒன்றியங்கள் எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டன என்று சொன்னார்கள். அதன்பிறகு கிட்டத்தட்ட 16 ஆண்டுகள் ஓடி விட்டன. இந்த ஆட்சி வந்தும் 5 ஆண்டுகள் ஆகின்றன. நிர்வாக வசதியை ஒட்டி, எங்கெங்கே இதைப் போன்ற மாற்றங்கள் செய்ய வேண்டுமோ அங்கே அதைச் செய்வதிலே அரசாங்கத்திற்கு என்ன தயக்கம்? இனிமேலாவது நிர்வாக வசதிக்காக இப்படி ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தயக்கம் எதுவும் இல்லை. ஆனால் நாம்தேர்தலை நடத்தத் தயாராக இருந்தோம் என்றால் ஊராட்சிகளையோ அல்லது ஊராட்சி ஒன்றியங்களையோ சீர்திருத்தி அமைக்க முடியாது. ஆகையால் தேர்தலை எப்போது நடத்தலாம் என்று முடிவு செய்துவிட்டால் அதற்குப் பின்னாலே அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபோது தற்போது முடியாது என்று சொன்னார்கள். 65, 70 பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. அப்படி பிரிக்க மாநில அரசு மட்டுமல்லாமல் மத்திய அரசின் அங்கீகாரம் தேவை என்ற நிலை இருக்கிறதா என்பதையும், பிரித்து அமைப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து அமைப்பதினாலே, ஒன்றியங்களை அதிகப்படுத்தினால் நம்முடைய நிதி ஆதாரங்கள் குறைந்து விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஏற்கெனவே 376 ஒன்றியங்கள் இருந்ததை 5, 6 மாதங்களுக்கு முன்னால் மாற்றியமைத்து, கூடுதலாக இரண்டு ஒன்றியங்களை ஏற்படுத்தினோம். ஆனால் இன்றைக்கு கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும். இதைப்போன்ற மற்ற திட்டங்களின் கீழும் மத்திய அரசு கொடுக்கக்கூடிய நிதியை அதிகப்படுத்தவில்லை. அவர்கள் ஏற்கெனவே இருக்கின்ற 376 ஒன்றியங்களுக்கு மட்டும் கொடுக்கிறார்களே தவிர புதிதாக ஏற்படுத்தினால் அதற்கு ஏற்ற நிதிவசதியை மத்திய அரசு கொடுப்பதில்லை. அவர்கள் இருக்கின்ற ஒன்றியங்களை அதிகப்படுத்த வேண்டாம் என்று தாக்கீது அனுப்புகிறார்களே தவிர இருக்கின்ற ஒன்றியங்களை அதிகரிக்க வேண்டுமென்று தாக்கீது அனுப்ப வில்லை. அதனாலே இப்போது இந்த நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 8

[முற்பகல் 10-20]

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களை எல்லாம் பிரிப்பதிலே ஊராட்சி அமைப்பு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் கூட வந்தபிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வருவதற்கு முன்பாகத்தான் அணை கட்ட வேண்டுமே தவிர, வெள்ளம் வந்த பிறகு கட்ட முடியாது. கட்டினாலும் நிற்காது. ஆகவே அந்த அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் எல்லாம் வேண்டாம். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எஸ். சிவராமன் : ஆகவே, முன் எச்சரிக்கையாக பெரிய கிராமங்களையெல்லாம் இரண்டாகப் பிரித்து ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கும் வகையில் உடனடியாக முயற்சி செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலைத்தான் திரும்பவும் சொல்ல வேண்டியதாக இருக்கும். ஆகவே வெள்ளம் வருவதற்கு முன்னால் அணை போட வேண்டும் என்பது சரி தான். ஆனால் தற்போது வெள்ளமே வருவதில்லை. வெள்ளம் வந்தால் மகிழ்ச்சி அடைவோம். வேதனைப் பட மாட்டோம். வெள்ளம் வரவேண்டும் என்றுதான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(1—20) உடுக்குறியிடாத வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் * தனி இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது. பக்கங்கள் 1 முதல் 163 வரையில் காண்க.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்

மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலை

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்றைக்கு வறட்சி காரணமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் மூலமாக எல்லா விதமான உணவுப் பொருள்களும் மக்களுக்கு நல்ல முறையில் கிடைக்கின்றன.

* பார்க்க.—பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.



மக்களுக்குப்போதுமான அளவுவழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் நேற்றைக்கோ அல்லது அதற்கு முன்தினமோ சொல்லியிருந்தாலும்கூட, எனக்கு இன்றைக்கு கிடைத்திருக்கிற தகவலின்படி 25 சதவீதம்தான் அரிசி வழங்குவதாக செய்தி கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து தாங்கள் மட்டும் அல்ல, இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்தி வைப்பு பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு மட்டும் இதில் முன்னுரிமை கொடுத்து அனுமதித்தால், அது மற்றவர்களின் உரிமையை பாதிப்பதாக அமையும்.

(திரு. சோ அழகர்சாமி, திரு கெ. சொக்கலிங்கம், திரு. துரை முருகன், திரு. பாபு ஜனார்த்தனன், திரு. நா. சுந்தரராஜ், திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். எஸ். வி. சித்தன் ஆகியோர் எழுந்து நின்றனர்.)
(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இதில் கவனம் செலுத்தி ஒத்தி வைப்புத் தீர்மானங்களை கொடுத்திருக்கிறார்கள், அதனை எடுத்துக் கொள்ளும் போது பேசிக் கொள்ளலாம். இப்போது அது வராது.......

திரு. என். எஸ். வி. சித்தன்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்காமல் நீங்கள் மறுத்து விடுகிறீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஒத்தி வைப்புத் தீர்மானங்களை காரண காரியம் இல்லாமல் நான் மறுப்பது இல்லை. அதற்கு பதில் வராமல் இருந்திருக்கலாம், லேட்டாக ஆகியிருக்கலாம். வேறு சில நியாயமான காரணங்கள் இருந்தாலொழிய நான் அதனை எடுத்துக் கொள்ள மறுப்பது கிடையாது. (கூச்சல், குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். திரு. சோ. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேரவைத் தலைவர் அவர்கள் கூறும்போது பல பேர்கள் வறட்சி குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள் உண்மைதான். நாங்கள் நிறைய பேர்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவைகள் அனைத்தும் பேரவைத் தலைவர் அவர்களால் மறுக்கப்பட்டு திரும்ப வந்திருக்கின்றன. இன்றைக்கு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலைமை ஏழை எளிய மக்களை மிகவும் பாதித்திருக்கிறது.

[1983 பிப்ரவரி 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வறட்சியைப் பற்றி தனியாக விவாதத்தை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. (கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன்: சார் வறட்சி கடுமையான நிலையில் இருக்கிறது. இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால்....

திரு. கெ. சொக்கலிங்கம்: சார், வடாற்காடு மாவட்டத்தில் மட்டும் அல்ல, செங்கற்பட்டு மாவட்டமும் நேரிடையாக வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லோருமே இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தோம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்ட அலுவல் ஆய்வுக் குழுவிலே 10-2-83 அன்று தனி நபர் தீர்மானம் குறித்து விவாதத்திற்கு வைத்திருக்கிறோம். அன்றைக்கு வேண்டுமானால் வறட்சியைப் பற்றி விவாதித்துக் கொள்ளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கேட்டு கொடுத்திருந்தோம். அதைத் தான் நீங்கள் மறுத்து விட்டீர்களே......

மாண்புமிகு பேரவை தலைவர்: 6 நாட்கள் ஆளுநர் உரையிலே விவாதம் நடந்தது. ஆளுநர் உரையிலே முக்கிய பிரச்னையாக குறிப்பிடப்பட்டிருப்பதே வறட்சியைக் குறித்துத்தான்.... (கூச்சல், குழப்பம்)

திரு. துரை முருகன்: நான் பேசியதற்குத்தான் ½ மணி நேரம் பதில் சொல்லிவிட்டு போய்விட்டார்களே (கூச்சல், குழப்பம்)......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேனும் ஒரு முறையின் வழியாகத்தான் விவாதத்தைக் கொண்டுவர வேண்டும்... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக்குழுவினைக்கூட்டி வேண்டுமானால் ஒருமணி நேர விவாதத்திற்கோ அல்லது ஒரு நாள் விவாதத்திற்கோ அல்லது தனி நபர் தீர்மானத்தை எடுத்துவிட்டு வேண்டுமானா லும் காலையிலும் மாலையிலும் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அதற்கு அலுவல் ஆய்வுக் குழுவினைக் கூட்டி ஒரு முடிவு எடுத்தால் அந்த முடிவின்படி வறட்சி நிலைமையைப் பற்றி இங்கே எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் அதுபற்றிய அறிக்கையினை இங்கே வைக்கச் செய்வி அதன்பேரிலே விவாதிக்கலாம்.



1983 பிப்ரவரி 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழு இன்று கூட்டப்படுகின்றது.

### 3. உரிமைப் பிரச்சினை

பொறுக்குக் குழுவின் ஆய்வில் ஒரு சட்ட முன்வடிவு இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தல்

மாண்புமிகு பேரவை தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. நேற்று பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையில் எழுப்ப என் இசைவை அளிக்கவேண்டுமென்று முன்னறிவிப்புக் கொடுத்து, அதன்விளக்கத்தை அளித்தார். மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்தைக் கேட்டபின் எனது தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறியிருந்தேன்.

ஒரு சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவின் ஆய்வில் இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க அரசுக்கு உரிமை இல்லை என்றும், எனவே அவ்வாறு இன்றியமையாப் பணிகளை ஒழுங்குபடுத்தும் சட்டமுன்வடிவு ஆய்வுக்குழுவின் ஆய்வில் இருக்கும்போது அதே பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச்சட்டம் பிறப்பித்தது அவை உரிமையை மீறிய செயல் என்று மாண்புமிகு திரு. இரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

பேரவை விதி 182 ஐச் சுட்டிக்காட்டி, ஒரு சட்டமுன்வடிவு பொறுக்குக் குழுவின் ஆய்வில் இருக்கும்போது அந்த சட்ட முன்வடிவை ஒட்டி அதே சட்டத்தைக் கொண்டு வரவோ மாற்றங்களோடு கொண்டு வரவோ அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்றும், இந்த விதியை ஒட்டி ஏற்கனவே 1972 ஆம் ஆண்டு இதே போல ஒரு அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்றும், மேலும் ஆய்வுக்குழுவின் முன்னுள்ள சட்டமுன் வடிவிற்கும், பிறப்பிக்கப்பட்டுள்ள அவசரச் சட்டத்தின் பிரிவுகளுக்கும் சில மாற்றங்கள் உள்ளன என்றும், எனவே இதில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்றும் மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, பேரவை விதி 182-ன்படி பேரவை முன் இருக்கும் ஒரு சட்டமுன்வடிவைப் போன்ற ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க உரிமை உண்டு ஆயினும், அம்மாதிரி அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்குங்கால் அதற்கான காரண காரியங்களை விளக்கி பேரவைக்கு ஒரு அறிவிப்பினை வைக்க வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அவசரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் அம்மாதிரி ஒரு அறிக்கை 25-1-1983 அன்றே பேரவைமுன் வைக்கப்பட்டு விட்டது. பேரவையின்

ஆய்வில் இருக்கும் ஒரு சட்ட முன்வடிவின் பிரிவுகளை உள்ளடக்கிய அவசரச் சட்டம் ஒன்றினை இயற்ற அரசுக்கு உரிமை இருக்கும்போது ஆய்வுக் குழுவின் ஆய்வில் இருக்கும் ஒரு சட்டமுன்வடிவை அல்லது அதன் பிரிவுகளைக் கொண்ட ஒரு அவசரச் சட்டத்தை இயற்ற அரசுக்கு உரிமை இல்லை என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள இயலாது.

எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்துள்ள அறிவிப்பில் மேலெழுந்த வாரியாக பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்பதால், அப்பிரச்சனையை பேரவையில் எழுப்ப என் இசைவு மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல.

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலுள்ள சரபங்கா ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணியில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மேற்குறித்த சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தாரமங்கலம் தோப்பூர் சாலையில் கிலோமீட்டர் 3-6ல் சரபங்கா ஆற்றின் குறுக்கே ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிக்கு 1979 நவம்பரில் அரசின் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பணிக்கு தலைமை பொறியாளரால் ரூ. 5 இலட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு திரு. மக்பூல்ஜான் என்னும் ஒப்பந்தக்காரரிடம் ஜூன் 1980-ல் ஒப்படைக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி இ பணி 20-4-81-க்குள் முடிக்கப்பட வேண்டும். ஆனால் ஒப்பந்தக்காரர் ரூ. 1.33 இலட்சத்திற்கான பணிகள் முடிந்ததும் வேலையின் வேகத்தைக் குறைத்து விட்டார்; இது தொடர்பாக அவருக்கு பலமுறை அறிக்கை அனுப்பியும் ரூ. 1800/- அபராதம் விதித்தும் ஒப்பந்தப்படி அவர் வேலையை முடிக்கவில்லை. எனவே அவரது ஒப்பந்தம் முறிக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் ஒப்பந்த விதிப்படி அவர் செலவிலேயே புதிய ஒப்பந்தக்காரரால் சய்யப்படவேண்டும்.



2. எனவே மீண்டும் ஜூன் 1982ல் ஒப்பந்தப் புள்ளிகள் கோவை மேற்பார்வைப் பொறியாளரால் கோரப்பட்டன. இப்பணியை ஏற்க ஒரே ஒரு ஒப்பந்தக்காரர் திரு. கே. மாணிக்கம் என்பவர் முன்வந்தார். இவர் மீதமுள்ள பணிக்கு 1979—80 விலை விகிதப்படி 65.19 சதவீதமும் 1982—83 விலை விகிதப்படி 24.07 சதவீதமும் கூடுதலான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளி தற்போது அரசின் பரிசிலனையில் உள்ளது. முதல் ஒப்பந்தக்காரர் குறித்த காலத்தில் பணியை முடிக்காததால் தான் இப்பணியில் வீண் காலதாமதம் உண்டாகி உள்ளது. ஒப்பந்த விதிகளின்படி ஒரு ஒப்பந்தக்காரரால் விடடுச் செல்லப்பட்ட மீதிப் பணியை புதிய ஒப்பந்தக்காரரைக் கொண்டு முடிக்கவேண்டும். அவ்விதிகளுக்கேற்ப புதிய ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே இப்பணியில் ஏற்பட்ட கால தாமதமும் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள போர்க்குவரத்து பாதிப்பும் தவிர்க்க இயலாத ஒன்று என அறிவித்துக் கொள்ளப் படுகிறது

(முற்பகல் 10-30)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு கடந்த ஜூன் மாதத்திலிருந்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மழைக்காலம் வந்துவிடுமேயானால் அந்த ஆற்றில் வெள்ளம் நிரம்பிவிடும். பணி மேலும் பாதிக்காமல் இருக்க மழை காலத்திற்கு முன்பாக இந்த பாலம் கட்டும் பணியை துவங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே டெண்டர் எல்லாம் பைனலைஸ் பண்ணப்பட்டு வருகின்றன. சீக்கிரமாக வேலைகளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 1979-80 விலை விகிதப்படி 65.19 சதவீதமும் 1982-83 விலை விகிதப்படி 24.07 சதவீதமும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி மறு ஒப்பந்தக்காரருக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. ஒரு வேலை இது கூடுதலான விலை விகிதம் என்ற காரணத்தால் அரசு இதை மறுக்காமல் தொப்பை ஆறு பாலத்தை இந்த துறையே எடுத்து கட்டி முடித்தது போல் இதையும் துறையே எடுத்து மிக விரைவாக கட்டி முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த விதிமுறை படி எந்த ஒப்பந்தக்காரர் இந்த பணியை எடுத்துக்கொண்டிருக்கிறாரோ அவர் முடிக்கவில்லை என்றால் மீண்டும் அந்த பணியை மறு ஒப்பந்தத்துக்கு விடப்பட்டு மறு ஒப்பந்தக்காரர் என்ன விலை சொல்கிறாரோ அந்த விலையினை பழைய ஒப்பந்தக்காரர் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்கிற விதிமுறை இருக்கின்றன. ஆகவே, அரசாங்கத்திற்கு இதில் எதுவும் நஷ்டம் இல்லை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த நிறுவனம் ஒரு அப்ளிகேஷன் கொடுத்து இருக்கிறார்கள். ப்ரபோஸலும் அனுப்பியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் 12.79 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு அமைப்பை அங்கே ஏற்படுத்தி இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இந்த 12.79 லட்சம் ரூபாய் அளவுக்கு அவர்கள் அங்கே ஏற்படுத்தி இருக்கின்ற அந்த இயந்திரத்தின் மூலமாக நமக்கு தேவையான அளவுக்கு முழுமையாக சுத்திகரிப்பு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதுஎன்று அதற்கு ஒரு 'என்வையர் மெண்டு போர்டு' இருக்கிறது. அந்த புரபோசல் அனுப்பி இருக்கிறார்கள். அதை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். வெகு விரைவில் அதற்கு ஒப்புதல் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைக்கொண்டு வருவோமானால் நிச்சயமாக அங்கே இன்னும் நிலைமை நன்றாக இருக்கும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

திரு. டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, இந்த, விவர அறிக்கையிலே பல்வேறு தகவல்களைத் தந்திருக்கிறார்கள். 4590 கன மீட்டர் கழிவு நீரை வெளியிடுவதற்கு பணி நடை பெறுவதாகச் சொல்லப்படுகிறது. மேட்டூர் கெமிக்கல்ஸிலிருந்து போகிற கழிவுநீரை விவசாயிகள் அங்கே பயன்படுத்தியதால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதால் ஆயிரம் ரூபாய் நட்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று இந்த ஆற்று நீரைப் பயன்படுத்துகின்ற விவசாயிகளும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதைப் போன்று நட்ட ஈடு கொடுப்பதற் காக அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஏற்கனவே நான சொன்ன மாதிரியாக 12.79 லட்ச ரூபாய் மதிப்புள்ள இயந்திரத்தை மெஜூரா கோட்ஸோடு இணைத்தார்கள் என்றால் நிலைமைகள் சீரடைய வாய்ப்புகள் இருக்கின்றன. நாம் அதற்கு உடனடியாக ஒப்புதல் கொடுக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கழிவு நீர் மூலமாக பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு நட்டஈடு கம்பெனி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்ற கேள்வியை எழுப்பி யிருக்கிறார்கள். அதையும் ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: அம்பாசமுத்திரத்திலுள்ள மெஜூரா கோட்ஸ் நிறுவனத்திலே 4560 கன மீட்டர் கழிநீர் வெளியேற்ற படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்போது சுத்திகரிப்புக்காக இயந்திரங்கள் இணைத்தால் எவ்வளவு தண்ணீர் வெளியேற்றப் படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: சற்று முன்பு நம்முடைய உறுப்பினர் திரு. சொரணம் அவர்கள் என்னிடத்திலே வந்து சொன்னார்கள். அந்நிறுவனத்திடம் 3 ஆயிரம் அளவுக்கு செய்யக்கூடிய கெப்பாசிடியுடைய இயந்திரம் தான் இருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே தேவைப்படுகிற அளவுக்கு

(கவன ஈர்ப்புகள் விதி 54)

(ஆ). மதுரா கோட்ஸ் சாயப்பட்டறை கழிவுநீர் தாமிரபரணியில் கலத்தல்.

ஆகவே தான் இந்த பணி சீக்கிரமாக நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, ரா. கிருஷ்ணன், டி. மணி, கே. ஆர். சுந்தரம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மதுரா கோட்ஸ் நிறுவனத்தார் சாயப்பட்டறையிலிருந்து அசுத்த தண்ணீரை தாமிரபரணி ஆற்றில் கலக்கி விடுவதால் குடிதண்ணீர் கெடுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அம்பாசமுத்திரத்திலுள்ள மதுரைக் கோட்ஸ் நிறுவனம் பருத்தி மற்றும் செயற்கையிழைத் துணிகளைத் தயாரிக்கின்றது. துணிகள் வெளுக்கப்பட்டு, சுருக்கம் நீக்கி, சாயம் ஏற்றி அச்சு பதிக்கப்படுகின்றது. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு சுமார் 4560 கனமீட்டர் கழிவு நீரை வெளியிடுகின்றது.

இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் சாயம் கலந்த கழிவு நீர், சாயமற்றப் பிற கழிவு நீர் என்று பிரிக்கப்பட்டுத் தனித்தனியாகச் சேகரிக்கப்படுகின்றது. சாயம், மற்றும் அச்சு பதிக்கும் பகுதிகளிலிருந்து வரும் கழிவு நீரை நடுநிலைப் படுத்தி, இரசாயனப் பொருட்களுடன் சேர்த்துக் கழிவு நீர்ப் படிவத் தொட்டியில் (Clarifloccułator) படிய வைக்கப்படுகின்றது. இப்படி படிய வைக்கப்பட்ட கழிவு நீர் மேலும் படிய வைக்கப் படுகின்றது. பிற பகுதிகளிலிருந்து வெளிவரும் கழிவுநீர் ஒரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு வெப்பத்தைக் குறைக்க, துளைக் குழாய்கள் மூலம் தெளிக்கப்படுகின்றது. பின்னர் படிய வைக்கப் படுகின்றது இவ்வாறு சுத்தப்படுத்திய கழிவு நீர் இரண்டும் கலக்கப்பட்டு இரண்டு வடிகட்டிகள் மூலம் வடிகட்டப்படுகின்றது. வடிகட்டிய கழிவு நீர் ஒரு சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப் பட்டுப் பின்பு அருகாமையிலுள்ள வாய்க்காலுக்கு வெளியேற்றப் பட்டுத் தாமிரபரணி ஆற்றை அடைகின்றது. சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்த இத்தொழிற்சாலை நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுபுறச் சூழல் பொறியியல் ஆய்வுக் கழகத்தின் துணைக்கொண்டு திட்டமொன்றைத் தீட்டியுள்ளது.



எனினும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை மேம்படுத்துமாறு மேற்படி தொழிற்சாலை அறிவுறுத்தப் பட்டுள்ளது. வாரியம் இது பற்றி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இதே அசெம்பிளியிலே இதைப்பற்றி ஒரு கேள்வி வந்தபோது சாயப் பட்டறையிலிருந்து அசுத்தத் தண்ணீர் ஆற்றில் கலப்பதன் காரணமாக மீன்கள் செத்து மிதக்கின்றன, சீரான முறையில் சுத்தம் செய்யப்படவில்லை என்ற முறையில் அவர்களுக்கு ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாக இந்த அவையில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இன்று வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் அவர்கள் நல்ல முறையில் நடப்பது போல சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டு அறிக்கையும் முன்னுக்கு பின் முரணாக இருக்கின்றன. இந்த இரண்டு அறிக்கையிலே எது உண்மை. தண்ணீரில் இது கலப்பதன் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் தாமிரபரணி ஆறு பாபநாசத்தில் ஆரம்பித்து கிழக்கே திருச்செந்தூர் வரை செல்கிறது. அங்குள்ள மக்கள் வெகுவாக அந்த தண்ணீரை பயன்படுத்துகிறார்கள். இதில் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக தலையிட்டு, ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் எது உண்மை என்று தெரியும். ஆகவே அமைச்சர் அவர்கள் மக்களைப் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே இந்தக் கேள்வி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக இங்கே எழுப்பப்பட்டு விடை அளித்து இருக்கிறோம். அந்த விடையில் ஷோ-காஸ் (show cause) நோட்டீஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் ஷோ-காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அதற்கு பிறகு நிலைமை இப்போது நன்றாக இருக்கிறது என்கிற தகவல் நமக்கு கிடைத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நானே போய் இதைப் பார்க்கவேண்டும் என்ற ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கு மதிப்பு அளிக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விவர அறிக்கையிலே சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்த இத்தொழிற்சாலை நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுப்புறச்சூழல் பொறியியல் ஆய்வுக் கழகத்தின் துணைக்கொண்டு திட்டமொன்றைத் தீட்டியுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு காலமாக திட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்? தீட்டிய திட்டத்தை அமுல்படுத்த எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கெப்பாசிடி இருக்கிறது என்ற தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். எது உண்மை என்பதை நாம் சட்டமன்றத்திலே உண்மையைச் சொல்ல வேண்டுமென்பதற்காகப் பாடுபடுகிற நிலைமையிலே—மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே தகவல் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர் கொடுத்து இருக்கிற காரணத்தினால், பொறுப்பு வாய்ந்ததாக இருப்பதால், இரண்டையும் நானே போய்ப் பார்க்கிறேன் என்பதை வாக்குறுதியாக நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்று. அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''ஆளுநர் அவர்களால் 1-12-1982 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்று, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச்சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1982) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம் முறையே வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1983,* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் தீர்மானமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும், பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. திரு. அ. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1937-ம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த திருத்தம் எதற்காக என்று கேட்டால், மாநிலங்களுக்கு இடையே மது கடத்தப்படுவதை தடுப்பதற்காக, அதைப் போலவே ஆயத்தீர்வை வணிகவரி மூலம் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படாமல் பாதுகாப்பதற்காக இந்த இரண்டு காரணங்களுக்காக மட்டுமல்லாமல் மாநிலம் விட்டு மாநிலம் மது கடத்தப்படக் கூடாது என்பதற்காகவும், பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்காகவும், கள்ளத்தனமாக, அனுமதியில்லாமல் கடத்தப்படுகிற மதுவை கண்டுபிடித்து, சம்பந்தப்பட்ட மதுபொருள்களை கைப்பற்றுவதற்காக அதிகாரத்தை அதிகாரிகளுக்கு தரவேண்டுமென்ற அடிப்படையிலே இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இங்கே எடுத்த எடுப்பிலேயே ஒரு தவறான அச்சம் இருப்பதை உங்கள் மூலமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், நீதிமன்றங்கள் மது தயாரிப்பது முதலியவற்றிற்கு தனிப்பட்ட அல்லது ஏனைய சிறப்புரிமை வழங்குவதற்கு செலுத்துகிற தொகை அல்லது கட்டணத்தை

* 1983-ம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



135929
சென்னை 600 008

வசூலிப்பதற்கு அல்லது அந்த சிறப்புரிமை அல்லது உரிமை வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை பொறுத்தமட்டில் நீதிமன்றங்கள் தடையாணை அல்லது இடைக்கால தடையாணை பிறப்பிக்க இயலாவண்ணம் செய்வது அவசியம் என்று கருதப்பட்டு இது கொண்டு வரப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. மதுவகைகள் தயாரிப்பதற்கான லைசென்ஸ், அதைப்போலவே அந்த லைசென்ஸ் கட்டணம், இவைகளை எல்லாம் அதிகாரிகள் குற்றம் சுமத்தி அந்த பணத்தை திரும்பப்பெறுவதல் நடவடிக்கை மேற்கொள்கிற போது பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களுக்கு செல்லக் கூடாது நீதிமன்றத்திலே அதற்கு தடையாணை பிறப்பிக்கக் கூடாது என்று இங்கே இந்த மசோதாவிலே சொல்லப்படுகிறது இந்த நாட்டினுடைய குடிமகனுடைய ஜீவ தார உரிமைகளை பறிப்பதாகும் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது இயற்கை நீதி, நேச்சுரல் ஜஸ்டிஸ்க்கு இது விரோதமானது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் பாதிக்கப்படுகிறார்கள் சிலபேர் என்று அவர்கள் சார்பாக - சாதகமாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம்; அதிகாரிகளிடத்திலே அதிகாரம் இருக்கிறது; அந்த அதிககாரிகள் தேவ தூதர்கள் இல்லை. அந்த அதிகாரிகள் சிலநேரங்களில் உள்நோக்கத்தோடு தவறுகள் செய்யலாம். அப்படிப்பட்ட தவறின் காரணமாக இந்த மதுவை தயாரிப்பவர்கள் கட்டணம் அல்லது, லைசென்ஸ் கட்டணம் இதுபோன்றவைகளை நாங்கள் திரும்பப்பெறுகிறோம் என்றோ அல்லது கைப்பற்றுவதற்கு முயற்சி எடுக்கிறோம் என்றோ எடுக்கிற அல்லது எடுக்கப்படுகிற நடவடிக்கைகளில் உத்தரவு போடுகிறார்கள். அந்த உத்தரவுகள் தவறாக இருக்குமானால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இங்கே பாதுகாப்பு இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அந்த உத்தரவு தவறானது, சரியானதல்ல என்று நீதிமன்றங்களிலே வழக்கு தொடர்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டும். நீதிமன்றம் இறுதி தீர்ப்பு சொல்லலாம். இதில் அந்த உரிமையே கிடையாது; இன்னும் செல்லப் போனால் நீதிமன்றம் தடை உத்தரவு கொடுக்கக் கூடாது என்று சொல்லி நீதிமன்றத்திற்கு நீங்கள் கட்டளையிடுவது அடிப்படை உரிமைகளை மறுப்பதாகும் என்று திரும்பவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். நீதிமன்றத்தை பொறுத்தவரையில் நீதிமன்றம் தான் பிரச்னைகளை விசாரித்து தீர்ப்பு சொல்லி, அதன் அடிப்படையில் மக்களுக்கு பயனுடைய காரியங்கள் நடைபெற்றாக வேண்டும், ஆனால் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற மசோதா நீதி தேவனுடைய குரல்வளையை நெறிக்கிற மசோதாவாக இருக்கிறது; நீதியினுடைய கதவுகளை மூடுகிற மசோதாவாக இந்த மசோதா இருக்கிறது. காரணம் அரசாங்கத்திற்கு நீதிமன்றம் என்று சொன்னாலே ஒருவிதமான அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணம் என்ன? அரசியல் சட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்:

Y211,31 N83
N83-41-1 [illegible]

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது அதெல்லாம் தேவையில்லை. அந்த பிரச்னை இப்போது வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் தவறாக ஒன்றும் சொல்ல வில்லை; இருக்கிற ப்ரொவிஷனை தான் படிக்கிறீர்கள். அதை தவறு என்று சொல்லவில்லை. இந்த மசோதாவில் மதுவிலக்கை மட்டும் குறிப்பிட்டு பேசுங்கள். அந்த ஆர்ட்டிக்கிள் வேண்டாம். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.**

திரு. அ. ரகுமான்கான். கோர்ட்டுக்குப் போகக் கூடாது கோர்ட் ஸ்டே கொடுக்கக் கூடாது. இன்டரிம் இன்ஜங்ஷன் கொடுக்கக் கூடாது என்று......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் போகக் கூடாது என்று சொன்னால், நீங்கள் போக முடியாது என்று அல்ல. எல்லாச் சட்டங்களிலும் கடைசியிலும் இப்படித்தான் போட்டிருக்கிறார்கள். எந்தக் கோர்ட்டுக்கும் ஜூரிஸ்டிக்ஷன் இல்லையென்றுதான் போட்டிருக்கிறார்கள். ஆனால், எல்லோரும் ரிட் போடலாம் இதனால் அது தடையாகவில்லை. அது எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம்.

திரு. அ. ரகுமான்கான்: மாமன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மிகத் தெளிவாக ''மது தயாரிப்பது முதலியவற்றுக்குத் தனிப்பட்ட அல்லது ஏனைய சிறப்புரிமை வழங்குவதற்குச் செலுத்துகிற தொகை அல்லது கட்டணத்தை வசூலிப்பதற்கு அல்லது அந்த சிறப்புரிமை அல்லது உரிமம் வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையைப்பொறுத்த மட்டில் நீதிமன்றங்கள் தடையாணை அல்லது இடைக்காலத் தடையாணைகள் பிறப்பிக்க இயலா வண்ணம் செய்வதும் அவசியமெனக் கருதப்பட்டது''. அதனால் தான் இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்று காரண நோக்க விளக்கங்களிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நான் திரும்பவும் சொல்கிறேன், அதிகாரிகள் தவறான உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? நீதிமன்றத்திற்குச் சென்று போடப்பட்ட உத்தரவு தவறானது, உள்நோக்கத்தோடு போடப்பட்டது, நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எனவே, எங்களுக்கு இந்தத் தடை உத்தரவை வழங்கவேண்டும்; நியாயமான தீர்ப்பு வழங்க வேண்டுமென்று பாதிக்கப் பட்டவர்கள் நீதிமன்றம் செல்வதுதான் அவர்களுடைய ஜனநாய அடிப்படை உரிமையாகும். அதுதான் நாச்சுரல் ஜஸ்டிஸ் என்று சொல்லக்கூடிய இயற்கை நியதியாகும். நான் அதைத்தான் ஏற்கனவே சொன்னேன், திரும்பவும் சொல்லவிரும்பு கிறேன். இந்த உரிமை மறுக்கப்படுகிறது. ஏன் இந்த உரிமை மறுக்கப்படுகிறது? நீதிமன்றம் தடையாணை கொடுப்பதிலே என்ன தவறு இருக்கிறது? தடையாணை

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொடுப்பதிலே என்ன தவறு இருக்கிறது? தடையாணை கொடுக்கூடாது என்று ஒரு மசோதா கொண்டு வரக்கூடிய அளவுக்கு நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டிலே உங்களுக்கு நம்பிக்கையில்லையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். இன்னும் சொல்லாப்போனால், நீதிமன்றத்தைப் பற்றி இப்படி நம்பிக்கை இழப்பதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்கு காரணம், நீதிமன்றம் இந்த அரசாங்கத்தைப் பற்றி, ஸ்டிரிக்ச்சர் பாஸ் பண்ணி இருக்கிறது. உதாரணமாக நான் சொல்ல விரும்புகிறேன், பல்வேறு பிரச்னைகள் பத்திரிகை களிலே வருகின்றன. இன்றைக்குக்கூட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. தொடர்புடைய பிரச்னையாக இருப்பதாலே சொல்லவிரும்புகிறேன். கலாநிதி என்ற மாணவர் ஒருவர். அவர் கண்பார்வை தெரியாத ஒரு மாணவர். பிரசிடென்சி கல்லூரியிலே படித்தவர். அங்கு படித்தவர் ஐந்தாவது செமஸ்டர் பரிட்சை எழுதினார். ஒரு வருஷம் ஆகிவிட்டது, இன்னும் ரிசல்ட் வரவில்லை. ஆனால் 6வது செமஸ்டர் எழுதி பாஸ் பண்ணிவிட்டார். ஆனால், எம்.ஏ. வகுப்பில் சேர அனுமதி கேட்டபோது, ஐந்தாவது செமஸ்டர் ரிசல்ட் வரவில்லை எனவே, உனக்கு அட்மிஷன் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் பைல் பண்ணினார். இன்றைக்குச் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. ஐந்தாவது செமஸ்ட்டர் ரிசல்ட்டை சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிடாதது தவறு; ஒரு வருஷம் ஆகியும் வரவில்லை. ஆனால், ஆறாவது செமஸ்ட்டர் முடிவு வந்துவிட்டது. எம்.ஏ. படிக்க வாய்ப்பில்லை. மேல் படிப்பு படிப்பதற்கு வாய்ப்பில்லை. இதை எதற்குச் சொல் கிறேன் என்று சொன்னால்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மதுவிலக்குத் திருத்தச் சட்ட முன்வடிவிலே இதெல்லாம் அவசியம் இல்லாதது. நீங்கள் பேசும்போது, நீதிமன்றத்திற்குப் போவதற்குத் தடை விதித்து இந்த மசோதாவிலே திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லாச் சட்டங்களிலேயும் கடைசியிலே இருக்கிற செக்ஷனிலே, அதைப் போட்டிருக்கிறார்கள். எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எதிர்த்துதான் எல்லோரும் கோர்ட்டுக்குப் போகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: அது கூடாது என்று சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படியானால், எல்லாச் சட்டங்களையும் மாற்ற வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட விதி இருக்கக் கூடாது என்று என் சார்பாக ஆதரிப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, நான் சொல்ல விரும்புவது, நம்முடைய துணைத் தலைவர், இதுபோன்று எல்லாச்

ட்டங்களிலும் இந்த புரவிஷன் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எல்லாச் சட்டங்களிலும் அந்த புரவிஷன் இருந்தாலும் கூட, அவரும் சென்னை உயர்நீதிமன்றத்திலே தலைசிறந்த வழக்கறிஞர்—அவருக்கும் தெரியும். நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு வாய்ப்பிருக்கவேண்டும். தடை உத்தரவு பிறப்பிப்பதற்கான வாய்ப்பிருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய வாதத்தினுடைய அடிப்படை நோக்கமே. அது இல்லை, மறுக்கப்படுகிறது என்பதற்காகத்தான் கோடிட்டுக் காட்டினேன்.

(முற்பகல் 10-50)

அந்த கலாநிதி என்ற கண் தெரியாத மாணவனுக்கு எம். ஏ. படிப்பிற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது, இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. 5–வது செமஸ்டர் ரிசல்ட் சென்னைப் பல்கலைக் கழகத்திலிருந்து வராத காரணத்தால் 3,000 பேர்களின் படிப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், நீதிமன்றத்திற்குச் செல்கின்ற காரணத்தால்தான் நியாயம் கிடைக்கிறது. எனவேதான் அந்த மாதிரி பிரிவுகளைக் கடுமையாக எதிர்க்கிறோம், அந்தப்பிரிவு இருக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

அடுத்து ஒரு பிரச்னைக்கு வர விரும்புகிறேன். சோதனைச் சாவடிகள் இருப்பதாகவும், அதை நிறுவுவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அதைப்போலவே கள்ளக் கடத்தல் மூலம் மது கடத்தப்படுமேயானால் பறிமுதல் செய்ய அதிகாரம் வேண்டுமென்றும், அதைப்போலவே, கள்ளக் கடத்தல் பொருளா இல்லையா என்று சோதனை செய்ய அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கும் வாய்ப்பிலே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் உங்களுடைய அனுமதியோடு நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்கிறேன். இவைகளுக்குப் பிறகும்கூட நீங்கள் கள்ளக் கடத்தலைத் தடுத்து விட முடியுமா என்று கேட்கிறேன். காரணம், இன்றைக்கு நடைமுறையில் இருப்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மது கடத்தப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது. பிடிக்கப்படுகிறது என்று காட்டுவதற்காக அன்றாடம் பத்திரிகைகளில் ஒரு சில செய்திகளைப் போடுகிறார்கள். அது வழக்குக்காக அதிகாரிகள் காட்டும் காட்சியாகத் தான் இருக்கிறதே தவிர திரை மறைவில் எவ்வளவோ காரியங்கள் அன்றாடம் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

மாநிலம் விட்டு மாநிலம் மது கடத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. அது மட்டுமல்ல, சேம்பர் ஆஃப் காமர்ஸில் முதலமைச்சரவர்கள் ஒரு முறை பேசும்பொழுது சொன்னார்கள், பத்து இலட்சம் லிட்டர் எரிசாராயத்திற்கு அனுமதி கொடுத்தால்





பதினைந்து இலட்சம் லிட்டர் கொண்டு போய்க் கடத்துகிறார்கள் என்று சொல்லி, அது நியாயமா என்று கேட்டார்கள். ஆகவே, எரிசாரயம் கடத்தப்படுகிறது: மதுவும் கடத்தப்படுகிறது இன்னும் சொல்ல வேண்டுமென்றால் * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் * என்றெல்லாம் சொன்னார்கள். கமிஷன் இருப்பது அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அதுசம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்ற நிலைமையை உருவாக்க வேண்டாமென்று கேட்டு, அதை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * *என்று சொல்லி அதை ஒட்டிக் கூறிய கருத்துக்களை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, கமிஷன் முன்னால் ஒரு பிரச்னை இருக்கும்பொழுது அதைப்பற்றி மன்றத்திலே பேசக் கூடாது என்ற விதிகளைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். நான் அந்தப் பிரச்னைக்குள்ளே போகவில்லை, அந்த விவாதத்தைத் தொடவும் இல்லை.

மாநிலத்திற்கு விட்டு மாநிலம் மது கடத்தப்படுவதைத் தடுக்க வேண்டுமென்று கொண்டு வருவதாகச் சொல்கிறீர்கள், போலீஸ் அதிகாரிகள் சோதனையிடவும், கடத்தல் பொருளாக இருந்தால் பறிமுதல் செய்யவும், அதைப்போலவே கொண்டு வரப்படும் பொருட்கள் சரியான முறையிலே லைசென்சோடு மாநிலம் விட்டு மாநிலத்திற்கு போகிறதா அல்லது கள்ளச் சரக்கா, கடத்தப்படுகிறதா என்று சோதனை செய்வதற்கான அதிகாரம் வேண்டுமென்பது இந்தச் சட்டத்தின் காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற அம்சாகும்.

நான் சொல்கிறேன், தொடர்ந்து மது மாநிலம் விட்டு மாநிலம் கடத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. நான் எல்லா அதிகாரிகளையும் பற்றிக் குறை சொல்ல முன்வரவில்லை. குறிப்பாக இந்தப் பிரச்னையிலே இன்றைக்கிருக்கும் நிலைமையிலே......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு, மாநிலம் விட்டு மாநிலம் அல்லது நமது மாநிலத்திலேயிருந்து பிற மாநிலங்களுக்கு மது கடத்தப்படக் கூடாது என்ற நல்லெண்ணம் இருந்தால் இதை இங்கே சொல்வதோடு மட்டும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1983 பிப்ரவரி 8

நில்லாமல் யார் கடத்தினார்கள், எங்கே கொண்டு போனார்கள் என்ற தகவலைக் கொடுத்தால் அதைத் தடை செய்ய முடியும். அப்படி இல்லாமல் இங்கே சொல்ல வேண்டுமென்பதற்காக கடத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பொதுவாகச் சொல்லாமல் யார் கடத்தினார்கள் என்று பயரைச் சொல்லுங்கள். நீங்கள் அதை இங்கே சொல்ல முடியாவிட்டாலும் கூட தனியாகச் சொல்லுங்கள். அப்படியின்றி பொதுவாக எதையாவது சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லாமல் முறையாகச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முறையாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் போட்டிருக்கிறீர்களே, ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸிலே சொல்லியிருக்கிறீர்கள். என்னிடத்திலே அமைச்சரவர்கள் கேட்கிறார்கள், யார் கடத்தியது, எங்கே கடத்தினார்கள்? எந்த அதிகாரி உடந்தையாக இருந்தார் என்ற தகவல்கள் இருந்தால் உறுப்பினரவர்கள் தரட்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் அமைச்சரவர்களைப் பகிரங்கமாகவே கேட்கிறேன், இதுபற்றிய தகவல்கள் உங்கள் சர்க்காருக்கு இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எங்களிடத்தில் கிடைத்துள்ள தகவலின் பேரில் தக்க நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். வர வர நடவடிக்கை எடுக்கிறோம். எங்களிடத்திலே இல்லாத தகவல் உங்களிடத்தில் ஏதாவது இருந்தால் அதையும் தரவேண்டும் அப்படித் தந்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, பெரியவர்கள் சொன்னால் அது பெருமாள் சொன்ன மாதிரி. முதலமைச்சர் அவர்களே ஒரு விழாவில் பேசுகிறபோது சொல்லி இருக்கிறார்கள். மாநிலம் விட்டு மாநிலம் கடத்தப்படுகிறது என்று....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார் என்றால், இருக்கக்கூடிய அதிகாரிகளையும் மற்றவர்களையும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், இந்த மாதிரி இருக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் முதலமைச்சர் சொன்னார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.



1983 பிப்ரவரி 8]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொன்னார், நல்ல எண்ணம், அதிலே சந்தேகம் இல்லை. கடத்தப்படக் கூடாது என்பது வேறு, கடத்தப்படுகிறது என்பது வேறு. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நல்ல முறையிலே தமிழ் தெரியும் என்பதிலே சந்தேகம் இல்லை. கடத்தப் படுகிறது என்ற வாசகத்தை அவர்கள் சொன்னார்கள். அது மட்டுமல்ல, இங்கே கொண்டு வந்திருக்கிறீர்களே சட்டம் அதிலே என்ன சொல்லி இருக்கிறீர்கள். In order to prevent the inter-state smuggling of liquor என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் என்ன பொருள்? அதற்கு என்ன பொருள்? நெருப்பில்லாமல் புகை உண்டா? கடத்தப்படுகிறது என்பதுதான் பொருள். ஆகவே தான் இதைத் தடுக்கவேண்டும் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் சொல்வதனுடைய நோக்கம், இன்றைக்கு இது மாதிரியான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, 'டிரான்சிட்' என்ற வார்த்தையை உபயோகப்படுத்தி இருக்கிறோமே ஒழிய வேறல்ல. 'டிரான்சிட்' என்பது என்ன வென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். 'டிரான்சிட்' என்றால் கள்ளக்கடத்தல் என்பது பொருளா என்பது எனக்குத் தெரியாது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் டிரான்சிட்டுக்கு விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். என்ன விளக்கம் தெரியுமா? ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு சரக்குப் போக வேண்டும் என்று சொன்னால், லைசன்சு அல்லது பர்மிட் இருக்கவேண்டும். எங்கேயிருந்து போகிறது, எந்த இடத்திற்குப் போகிறது என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். அடுத்து அனுப்பு கிறவர்களின் செலவிலே செக்யூரிட்டி போர்ஸ் இருக்கவேண்டும். அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் அவைகளைப் பார்வையிடு வார்கள். இதுதான் 'டிரான்சிட்" என்பதற்கு இந்த மசோதா விலே கொடுக்கப்பட்ட விளக்கம். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. நான் போக விரும்புவது, என்னதான் நீங்கள் அதிகாரிகளுக்கு அதிகாரங்களைக் கொடுத்தாலும் சோதனைச் சாவடிகளைப் போட்டாலும், தடைகள் நிறுத்தினாலும், அதைப் போலவே பறிமுதல் செய்கிற அதிகாரத்தைக் கொடுத்தாலும் கூட அவர்களைப் பொருத்த மட்டிலே, லஞ்சப் பணம் கையிலே கொடுக்கப்பட்டு, இன்னும் சொல்லப் போனால் தவறான வழிகளிலே எல்லாம் பயன்படுத்தப்பட்டு, இன்றைக்கு இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அமைச்சர் அவர்களே நன்றாக அறிவார்கள்.

குறைத்து இருக்கிறீர்களே, நான் கேட்கிறேன். அதை ஆதரிக்கிறேனா இல்லையா என்பது வேறு விவகாரம். அந்த அவசியம் எதற்காக ஏற்பட்டது? யார் உங்களிடம் மனுப் போட்டது. மக்கள் போராட்டம் நடத்தினார்களா? மக்கள் மகஜர் கொடுத்தார்களா? மக்கள் பிரச்னை என்று சொன்னார்களா? ஆக இன்றைக்கு அதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை. கடைசியாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெறுகின்ற உரிமை இந்த நாட்டு மக்களுக்கு இருக்க வேண்டும். அந்த அதிகாரிகள் தேவ தூதர்களா, அல்ல. தவறு செய்யக் கூடும். ஆகவே இது எதற்காக? இரண்டாவது மிக முக்கியமான காரணம். அதிகாரிகள் கையிலே நீங்கள் கொடுப்பதாலும், அல்லது சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தினாலும் நீங்கள் பறிமுதல் செய்தாலும், கள்ளச் சரக்கை பறிமுதல் செய்தாலும் இன்றைக்கு லஞ்ச லாவண்யம் பெருக்கெடுத்து ஓடுகிறது. காரணம் இந்த விஷயங்களிலே பெரும்பாலும் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், கருத்து ஓர் குலம் என்று பெரும்பாலான அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு நடந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்த சர்க்கார் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, கள்ளக் கடத்தலை எல்லாம் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று மசோதா கொண்டுவரக்கூடிய நீங்கள் இங்கே எரி சாராயம் கடத்தப் படுகிறது என்ற வகையிலே வாக்குமூலம் கொடுத்திருக்கிறீர்கள். அது மட்டும் இல்லாமல் இந்த மருவகைப் பொருள்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே பல்வேறு ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று குற்றம் சுமத்தியதன் பேரில் ஒரு கமிஷன் போட்டு — ராமமூர்த்தி கமிஷன் போட்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. *** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-05—11-15 வரை நடைபெற்ற விவாதம் அகற்றப்பெற்றன.

(முற்பகல் 15-15)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையினால் விவாதம் செய்தும் முடிவுக்கு வர முடியவில்லை என்றுதானே கமிஷன் வைத்திருக்கிறோம். அதைப்பற்றி நாமே இங்கே விவாதித்துக் கொண்டிருந்தால் அந்தக் கமிஷனே வேண்டாமே. கமிஷனைப்பற்றி எதுவும் பேசவேண்டாம்.



ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கமிஷனைப் பற்றி பேசியதையும், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதையும், இது சம்பந்தமான விசாரணை இருக்கிற காரணத்தால், அந்த கமிஷன் விசாரணை நல்ல முறையில் நடக்கவேண்டும், நல்ல தீர்ப்பாக வரவேண்டும் என்று அனைவரும் விரும்புகிற காரணத்தால், அந்தப்பகுதிகளையும் அதையொட்டிய பகுதிகளையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். (கரவொலி)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீக்குவது குறித்து எனக்கு கருத்து வேறுபாடு கிடையாது. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ** (குறுக்கீடு)

நம்முடைய மாநிலத்திலே மது கடத்தப்படுகிறது. கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது. கள்ளச்சாராயமும் கடத்தப் படுகிறது. அது மட்டும் அல்ல. பல்வேறுவகையான ஊழல் குற்றச்சாட்டுகளும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளை நாங்கள் எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறோம். அதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்கிறபோது, நாங்கள் பயந்து ஓடுகிறவர்களாக இருந்தால் .. (குறுக்கீடு) நான் அதைப்பற்றியும் எதுவும் சொல்லவில்லை. கமிஷனைப் பற்றியும் பேசவில்லை....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; நீங்கள் இந்த பில்லிலே பேசுவது குறித்து எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நீக்கப்பட்ட விவகாரங்கள் இல்லாமல் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : ஆகையினால் நாங்கள் அதை நிரூபிக்க முடியாமல் பயந்து ஓடியவர்கள் என்கிற முறையில் புகார் இருக்குமேயானால், நாங்கள் வந்து எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் கேட்டோம். டெக்னிகல் கிரவுண்ட்ஸ் என்று சொல்வது வேறு, ** ** (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; நீங்கள் அந்த வார்த்தைகளை கொஞ்சம் மாற்றிப் போட்டு அதன் பொருள் தொனிக்கிற மாதிரி சாமர்த்தியமாகப் பேசுகிறீர்கள். அம்மாதிரி வேண்டாம். எப்படியும் நீங்கள் பேச ஆரம்பித்து 15நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு அ. ரகுமான்கான் : நான் கமிஷன் என்று ஏதாவது குறிப்பிட்டுச் சொன்னேனா? கமிஷனைப்பற்றி எதுவுமே நான் பேசவில்லையே....

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1983 பிப்ரவரி 8

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் மாநிலத்திலே இருந்து கூட — அது அவருடைய துறையின் கீழ் வருவதால் சொல்லுகிறேன். — கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட்டோம் என்று கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் அண்மையிலே ஒரு அறிவிப்பை செய்திருக்கிறார்கள். அதாவது ஒரு பாட்டிலிலே 100 மில்லிதான் அடைத்திருக்கவேண்டும். அதற்கு மேல் வரக்கூடாது, இதற்கு என்ன காரணம்? அதற்கு அமைச்சர் என்ன காரணம் சொன்னார் தெரியுமா? தமிழ் நாட்டிலே கள்ளச் சாராயம் பெருகி இருக்கின்ற காரணத்தாலே கள்ளச்சாராயம் தொடர்ந்து விற்பனை செய்யப்படுகிறது. அதைத் தடுப்பதற்காகத்தான் ஒரு பாட்டிலிலே 100 மில்லிக்கு மேல் அடைக்கப்படக் கூடாது என்று அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டார்கள். துணை அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயம் கங்கையாக காவிரியாக பெருக்கெடுத்து ஓடுகிற நிலைமை இருக்கின்றது என்று அவர் சொல்லிய காரணத்தால்தான் இந்த அறிவிப்பு — அதாவது 100 மில்லிக்குமேல் ஒரு பாட்டிலிலே இருக்கக் கூடாது — வந்திருக்கிறது.

நான் சொல்ல விரும்புவது, இன்றைக்கு இந்தமாதிரியான கடத்தல் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதை இந்தச் சட்டத்தின் மூலம் இந்த தடுத்துவிட முடியாது என்று நான் நம்புகிறேன். அதற்காக கள்ளக்கடத்தல் பெருகட்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் நடைமுறையில் நிர்வாகத்திலே இருக்கக்கூடிய கோளாறுகளை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்ல விரும்பு கிறேன். சாராயத்திற்கு சர்க்கார் விலை நிர்ணயித்திருக்கிறது. அதிலே இன்னொரு பயின்ட் வருகிறது. ஏனென்றால் சம்பந்தமில்லாமல் பேசுகிறேன் என்று அமைச்சர் சொல்லக் கூடும். அடுத்த பிரச்னை, மாநிலங்களில் மது கடத்தப்படுவதை தடுக்கவேண்டும். ஆயத் தீர்வு, வணிக வரிகளின்கீழ் வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கவேண்டும். கமர்சியல் டாக்ஸ், எக் சஸ் டூட்டி போன்ற இனங்களின் கீழ் வருகின்ற வருவாய் லாஸ் ஆகிவிடக் கூடாது, அந்த அடிப்படையிலே இதைக் கொண்டு வருகிறோம் என்று இங்கே சொல்லி இருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பிரச்சினைக்கு நான் வருகிறேன். சாராயத்திற்கு விலை நிர்ணயித்திருக்கிறீர்கள். சரி ஒத்துக் கொள்கிறேன். நியாயமான விலை சாராயத்திற்குக் கொடுக்க வேண்டும். அநியாய விலை கொடுக்கக் கூடாது. எனவே சாராயத்திற்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு மர்மத்தை நான் அங்கே கேட்க விரும்புகிறேன். இந்த



1983 பிப்ரவரி 8] (திரு. அ. ரகுமான்கான்)

மது கடத்தக் கூடாது என்று அக்கறையோடு பேசுகிறீர்களே, அந்த மது ரீட்டெயிலுக்கு இருக்கிறதே, சில்லரை விற்பனை இருக்கிறதே அதற்கு ஏன் சர்க்கார் விலை நிர்ணயிக்கவில்லை. அதற்கு என்ன காரணம்? யாருடைய கோரிக்கையின் காரணமாக? நான் கேட்கிறேன், சாராய சாம்ராஜ்யவாதிகள் கோரிக்கை காரணமாகவா அல்லது மதுவை மையமாக வைத்து, கொள்ளை அடிக்கக்கூடிய மது அரக்கர்கள் கும்பல்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆதாரம் காரணமாக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்களா இன்றைக்கு கொள்ளை நடந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் தப்பாக எடுத்துக் கொள்ளக்கூடாது. விளக்கம் கொடுப்பதற் காக நான் இந்த கேள்வியை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

(முற்பகல் 11-00)

ஆக, இன்றைக்கு ரீட்டெயிலிலே சர்க்கார் பிரைஸ் நிர்ணயிக் காத காரணத்தாலே கள்ள மது விற்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னொன்றையும் நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே மன்றத்திலே இந்த மதுவிலே சேல்ஸ் டாக்ஸ் அதிகமாக கூட்டியபோது அப்படிக் கூட்டக்கூடாது என்று சொல்லி உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அதற்கு இங்கே என்ன பதில் சொல்லப்பட்டது தெரியுமா? மதுவிற்கு அதிகமாக சேல்ஸ் டாக்ஸ் போடாமல் குறைத்தால் ஸ்மக்லிங் ஏற்பட்டு விடும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது குறைத் திருப்பதாக எனக்கு ஆதாரபூர்வமாகத் தெரிகிறது. நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு குறைத்து இருக்கிறீர்களே. உங்கள் வாதப்படி, சேல்ஸ் டாக்ஸ், அந்த மதுப் பொருட் களுக்கு குறைத்து இருக்கிறீர்களே, உங்கள் வாதப்படி நான் கேட்கிறேன். இதன் காரணமாக கள்ளக் கடத்தல் அதிக மாகாதா? நீங்கள் சொல்லிய வாதம்தான். நான் சொல்ல வில்லை. அதோடு இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். ஹோட்டல்களிலே பண்டங்களினுடைய விலை இன்றைக்கு ஏறிக்கொண்டேயிருக்கிறது. எண்ணெய் போன்றவைகள், அரிசி போன்றவைகள் ஏறிக்கொண்டே யிருக்கிறது. சென்னையிலே நேற்றுகூட தீர்மானம் மீது கொண்டு வந்து பேசினோம். விலை அதிகமான அளவிற்கு, 7 ரூபாய் விற்கின்ற அளவிற்கு நிலைமை இருக்கிறது. ரேஷன் கடை களிலே அரிசி கிடைக்கவில்லை, அதைக் குறைப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். நெல் விலை அதிகமாக இருக்கிறது. அதைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? நெல் கொள்முதலுக்கு கூடுதல் விலை கிடைக்கவில்லை. விவசாயி பாடுபடுகிறான். கரும்புக்கு இன்னும் நிர்ணயம் செய்யப்பட வில்லை அதிகப்படியான அளவிற்கு. ஆனால் அதேநேரத்தில் நான் கேட்கிறேன். மதுவிற்குப் போய் சேல்ஸ் டாக்ஸ்

இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதைவிட மதுவிலக்கினை அமல்படுத்துகின்ற விதத்திலே நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த மதுவிலக்குச் சட்டமுன்வடிவின் மீது பேசுவதற்கு முன்பாக இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ள தலைவர்களின் படங்களை எல்லாம் பார்க்கிறேன். படங்களிலிருந்து அவர்கள் எல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றினை அடிப்படைக் கொள்கை யாகக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் கூட இங்கே இருப்பதைப் பார்க்கிறோம். அவர்களின் அரசாகத் திகழ்கின்ற இந்த தமிழ்நாடு அரசு மதுவிலக்கினைத் தீவிரமாக அமல் நடத்தித் தீருவேன் என்ற லட்சியத்தையும் எடுத்துக் கொண்டு அதன்பிறகு இப்படிப்பட்ட சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பது ஒரு குழப்பமான நிலைமையை ஏற்படுத்துகின்றது. எனவே இப்படிப்பட்ட சட்டத்தை நிச்சயமாக இந்த அரசு ரத்து செய்துவிட்டால் இந்த அரசுக்கு நல்ல பெயர் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து பள்ளிக்கூடம், கல்லூரி, மசூதி போன்ற இடங் களுக்கு அருகிலே சாராயக் கடைகளையும், கள்ளுக்கடை களையும் வைத்திருக்கிறார்கள். அதனால் கல்லூரிக்குச் செல்லக் கூடிய மாணவர்களுக்கு ஒரு சில அச்சப்பாடுகள் ஏற்படுகின்றன. ஆகவே மதுவிலக்கினை மீண்டும் அமல்படுத்துவேன் என்று சொல்லிவிட்டு பிறகு இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வருவது என்பது சொல்வதற்கும் செய்வதற்கும் சம்பந்தம் இல்லாமல் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

சாராயக்கடைகள், கள்ளுக்கடைகளை எல்லாம் நகர்புறத்திற்கு வெளியே வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் நகர்ப் புறத்திற்கு உள்ளே வைத்ததால் தாய்மார்களும், பொதுமக்களும் வெளியே செல்ல அச்சப்படுகிறார்கள். என் ஊருக்கு சில வாரங்களுக்கு முன் சென்றிருந்தேன். அங்கே குடித்துவிட்டு ஆடிக்கொண்டு பஸ்ஸையும், காரையும் வழி மறிக்கிறார்கள். செத்தவர்களைப் போல் ரோட்டில் விழுந்து கிடக்கிறார்கள். அவர்கள் மீது பஸ் ஓடக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த முறைகளை எல்லாம் மாற்றவேண்டும். தனிப்பட்டவர்களுக்குத் தான் இது ஆதாயமான முடிவு. தனிப்பட்டவர்கள் தான் இந்த சாராயக்கடையை வைத்துக்கொண்டு ஆதாயத்தை அடை கிறார்கள். இந்த கள், சாராயத்தைக் குடிப்பதால் குடும்பத்தில் இன்றைக்கு எந்த அளவுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். இதனால் ஃபேமிலி பிளானிங் திட்டமே தேவையில்லாமல் போய்விடுகிறது ...



எண்ணிக்கை பெருகுவதன் காரணமாக இந்த அரசு எடுத்த தவறான முடிவின் காரணமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டமே பாதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தாய்மார்களின் நிலைமையை பார்க்கிறபோது அவர்கள் வடிக்கின்ற கண்ணீரைப் பார்க்கிறபோது பல குடும்பங்கள் கடுமையான வறட்சியினாலும், பஞ்சத்தினாலும் அல்லல் படுகிற நிலைமை இன்றைக்கு இருக்கிறது என்பதால் இதை நான் கடுமையாக கண்டிக்க விரும்புகிறேன். குடிப்பது பாவம் என்று அறிவிக்க வேண்டும். குடித்தால் குடி கெடும் என்று விளம்பரங்கள் போட்டிருக்கிறார்கள். அதனால் எந்த விதமான பலனும் ஏற்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக உணர வேண்டும். குடியினால் இன்றைக்கு நாட்டிலுள்ள பொருளாதாரம் மட்டும் அல்ல தனிப் பட்டவர்களுக்கு வருமானம் வரக்கூடிய அளவில் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதை இந்த அரசு தேசிய மயம் ஆக்கலாம். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அரசாங்கம் செய்கிற தவறுகளை, குறைபாடுகளைச் சொல்லவேண்டும். மாநில அரசு எதை செய்தாலும் ஆமாம் என்று சொல்லிவிடக் கூடாது. குறைபாடுகள் உள்ள திட்டமாக இருந்தாலும் சட்ட மாக இருந்தாலும் அதை கண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடியினால் இன்றைக்கு வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தவறான திட்டங்களை கொண்டுவருவதால் இந்த அரசுக்கு கெட்ட பெயர் வரும் என்பதை நன்றாக அறிந்து கொள்ளவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் மதுவிலக்கை நிச்சயமாக அமுல்படுத்துவேன் என்று சொல்லியிருக்கிறார். அவர் சொன்னால் நிச்சயமாக செய்துகாட்டுவார். சொன்னதை செய்வதில் அவருக்கு இணை யாக யாரும் இருக்கமுடியாது, என்பதால் அதை அவர் செய்ய வேண்டும், என்று என்னுடைய கட்சியின் சார்பில் சொல்ல கட்மைப்பட்டுள்ளேன். இந்த சட்டமுன்வடிவை எந்த அளவிலே கொண்டு வந்தாலும் கட்சியில் ஒரு குழப்பமான நிலை தான் வரும். இன்றைக்கு மாநிலத்தை விட்டு மாநிலம் போவதற்கு அடிப்படையான காரணம், அரசாங்கத்திலுள்ளவர்கள் பின்னணி யில் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் எப்படி அது நடக்கும். இன்றைக்கு அதைப்பற்றி தினசரி பத்திரிக்கையில் பார்க்கிறோம். இந்த அவையிலே கருத்துக்கள் சொல்லப்படுகிறது. ஆகவே தவறான கருத்துக்கள் வருமானால் இந்த அரசுக்கு கெட்ட பெயர் வரும் என்பதை சொல்லிக்கொண்டு இந்த சட்ட முன் வடிவை நான் பாராட்டவில்லை, எதிர்க்கிறேன். இது சம்பந்தமாக சட்டங்கள் எவ்வளவு கொண்டுவந்தாலும் நாங்கள் அதை எதிர்க் கிறோம். இங்கே கூட அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் மாநிலம் விட்டு மாநிலம் போகிறது, நிச்சயமாக சென்றுகொண்டிருக்கிறது என்று. அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும் என்று சட்டத்திலே கொண்டு வந்து இருக்கிறார்களா என்றால் கொண்டு வரவில்லை என்று சொல்லிக்கொண்டு என் கட்சியின் சார்பாக இந்த சட்டமுன்வடிவை கடுமையாக எதிர்க்கிறேன்.

வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சிறந்த வழக்கறிஞர், சிறப்பாக வழக்காடுகிற திறமை அவர்களிடம் உண்டு. நல்ல வழக்குகளை எடுத்து வாதிடுவார்களேயானால் அவர்களுடைய திறமை விளங்கும். நல்ல வழக்காக எடுத்துக் கொள்ளாமல் வாதாடுவதினாலேதான் அவருடைய திறமை இங்கே....

திரு. அ. ரகுமான்கான் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூட என்னுடைய ஒரு வழக்கு இருக்கிறது. நான் கூட அதிலே ஆஜராக இருக்கிறேன். அது வேறு விவகாரம். வழக்கறிஞர் என்ற முறையிலே வெளியே வழக்குகளுக்கு ஆஜராவது வேறு விவகாரம். இங்கே சட்டமன்றத்தில் பேசுவது வேறு விவகாரம். இன்றைக்கு நல்ல நோக்கத்தோடுதான் இந்த சட்டமுன்வடிவினை கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த நல்ல நோக்கம் நிறைவேறுகின்ற விதத்திலே அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. இங்கே பல்வேறு கட்சிகளின் சார்பிலே இது பற்றிப் பேசுகிறபோது நடைமுறைப்படுத்துவதில் தவறு ஏற்பட்டிருக்கின்றது என்று சுட்டிக்காட்டுகின்றபோது அப்படி இல்லை, தவறு நடக்கவில்லை, நாங்கள் சரியாகத்தான் இருக்கிறோம், தவறு என்று அரசியல் உள்நோக்கத்தோடு சொல்கிறீர்கள் என்று உங்கள் தரப்பிலே சொல்வது நியாயம். ஆனால் அதை நல்லவிதத்திலே நிறைவேற்றுவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். அந்த அடிப்படையிலே பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு கமிஷன்கள் எல்லாம் கூட போடப்பட்டன. ஆனால் அவற்றின் கதி என்ன ஆயிற்று என்பது வேறு விவகாரம். ஆகவே இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நிறைவேறுகின்ற விதத்தில் நடைமுறை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

(முற்பகல் 11-20)

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இதனை மதுவிலக்குச் சட்டம் என்று சொல்லி இருக்கின்ற காரணத்தால்.... (குறுக்கீடு)... 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் திருத்துவதற்கு என்று போட்டிருக்கிறார்கள். கொஞ்சம் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்குச் சட்டம் போட்டிருக்கிறீர்கள். ஆகவே மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டுவருவதும் அதனை நடைமுறைப்படுத்துவதும் உங்களுடைய கொள்கை. அண்ணா சமாதியிலே கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி எடுத்திருக்கிறார்கள். அது இயலாது என்று நீங்கள் கருதக்கூடாது





ஏனென்றால் ப்ரொகிபிஷன் பாலிசி இயலாதது அல்ல. தாயின் மீது ஆணை, தந்தை மீது ஆணை, மதுவிலக்கினை அமல் நடத்தியே தீருவேன் என்றெல்லாம் சொன்னீர்கள், அது என்ன ஆயிற்று? எனவே மதுவிலக்கினை அமல் நடத்துகின்ற வகையிலே காரியங்களைக் கொண்டு வராமல் அதற்கு மாறாக மதுக் கடைகள் இருப்பதற்கு என்ன வழி, உள்ளூரிலேயே அதற்கு ஏற்பாடு பண்ணுவது எப்படி என்று யோசனை செய்யுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு மதுவிலக்கினை அமல் நடத்தியே தீருவேன் என்று சொன்னீர்களே. அதை நிறைவேற்ற இந்த நேரத்திலே சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். மக்களை ஏமாற்றுகின்ற தத்துவமாக அது ஆகிவிடக்கூடாது. நீதி தேவன் மயக்கம் ஏற்படுகின்ற நேரத்திலே,.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. பக்கீர் முகமது அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மதுவிலக்கு திருத்த சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இங்கே இந்த சட்டம் கொண்டுவந்ததற்குக் காரணம் மாநிலங்களில் கள்ளச்சாராயத்தைத் தடுப்பதற்காகவும் வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்காகவும் என்று கூறப்பட்டிருக்கின்றது. நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். அப்படியானால் இதற்கு முன்பு இது நடந்து கொண்டு இருந்தது என்பதை இந்த அரசு ஒப்புக்கொண்டிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சட்டம் வருவதற்கு முன்பாகவே இப்படிப்பட்ட சோதனைச்சாவடிகள் இருக்கத்தான் செய்கின்றன. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் சோதனை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே அரசு இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவருவதன் மூலம் சற்று முன்பாக இங்கே ஏற்பட்ட குழப்பங்கள் போன்று அதிகமாக குழப்பங்கள் ஏற்படுவதற்கு வழி வகுக்கின்றதே தவிர இந்தச் சட்டத்தின் மூலமாக மக்களுக்கோ அரசுக்கோ எந்தவிதமான நன்மையும் இல்லை என்பதைச் சொல்லிக்கொண்டு, மேலும் இந்த அரசுக்கு வீணான கெட்ட பெயர்தான் ஏற்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஆண்டுக்குக் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருமானம் வந்தாலும் கூட ஏழை மக்களின் கண்ணீரைப் பார்க்கின்றபோது அதனால் கூட தமிழ்நாட்டிலே வறட்சி நிலைமை அதிகமாக ஆகி இருக்கிறதோ என்ற ஐயப்பாடு ஏற்படுகின்றது. வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற மக்களையும், தாய்மார்களைக் கொண்ட குடும்பங்களையும் பார்க்கின்றபோது அங்கே இருக்கின்ற குழந்தைகளின் உணவுக்குக் கூட அவர்கள் சம்பாதிக்கின்ற தொகையினை ஒதுக்க முடியாமல் போய்விடுகிறதோ என்ற அச்சப்பாடு

(முற்பகல் 11-30)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டத் திருத்தம் சம்பந்தமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பத்திலேயே இந்தச் சட்டத்திருத்தத்தை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படைக் காரணம் ஏற்கெனவே உள்ள சட்டத்திலே அரசுக்கு இருக்கின்ற அதிகாரங்கள் — எங்கேயும் உரிமை பெறாமல், லைசென்ஸ் பெறாமல், பெர்மிட் பெறாமல் கொண்டுசென்றால் அந்த வண்டிகளையும் பறிமுதல் செய்யவேண்டுமென்று அதிகாரம் இருக்கிறது, இப்போது நாம் பல்வேறு காவல் நிலையங்களிலே பார்த்தால் கடத்திச் சென்ற வண்டிகள் நின்றுகொண்டிருக்கின்ற காட்சியைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது — போதாது என்ற முறையிலே அதற்காக திருத்தம் என்ற பெயரால் கொண்டு வரப்படுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, மதுவிலக்கு என்ற பெயரால் இப்போது லைசென்ஸ் பெறவேண்டும், பெர்மிட் பெறவேண்டும், என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற பெர்மிட்கள், லைசென்ஸ்கள், அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகளில் ஏதோ கோளாறு இருப்பதாக எங்களுக்கு ஐயப்பாடு இருக்கிறது, அதனால் தான் நீங்கள் எதற்கெடுத்தாலும் திருத்தம் திருத்தம் என்று கொண்டு வருகிறீர்கள். ஏற்கெனவே உள்ள சட்டத்திலே என்ன குறைபாடு என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னால் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் தெரிந்து கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும்.

கள்ளச்சாராயம் வருவதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்பதைப் பார்க்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட நகரத்தில் அல்லது கிராமத்தில் ஒரு கடை ஏலம் விடப்படுகிறது என்றால்— கடைகளுக்கு நம்பர்கள் கொடுக்கப்படுகின்றன, அந்தக் கடைகளுக்கு எந்த எந்தப் பகுதிகள் என்றும் கொடுக்கிறார்கள் —— நடைமுறையில் என்ன நடக்கிறது என்றால் ஒரு கடையை ஏலத்தில் எடுத்துவிட்டு 9 பிராஞ்சு கடைகள் வைக்கிறார்கள்

உதாரணமாக அம்பத்தூரில் ஒரு கடை ஏலம் எடுக்கப்படுகிறது என்றால் 51 இளைக்கடைகள் வைக்கிறார்கள் என்றால் அதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறதா? அதைச் சட்டம் ஒப்புக் கொள்கிறதா? எங்கள் மாவட்டத்திலே பல்வேறு கடைகள் விடப்பட்டிருக்கின்றன. மாநில அரசாங்கம் இருக்கிறது என்று சொன்னால் போடுகின்ற உத்தரவை நிறைவேற்றுவதற்கு மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள், ஆனால் ஒரு கடை ஏலம் விடப்படுகிறபோது பிராஞ்சு கடைகள் வருகின்றன என்றால் தெளிவாக யதார்த்தமாக உண்மையாக விற்பதற்கு வாய்ப்புகள் இருக்கும்போது ஏன் இளைகளை அமைக்கிறார்கள்? அதைத் தடுப்பதற்கு நீங்கள் ஏன் சட்டம் கொண்டுவரக்கூடாது? அதை நிறுத்தினால் கள்ளச்



சாராயம் நிறுத்தப்படும். அதை நிறுத்தாமல், அதைத் தடுக்காமல் இந்தச் சட்டத்தின் மூலமாக அதைத் தடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே இரஸ்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று பாதிக்கப்படுகிறவர் தன்னுடைய குறையைச் சொல்வதற்கு நியாயத்தை எடுத்து வைப்பதற்கு நீதிமன்றத்திற்குச் செல்லலாம், அமைச்சரிடத்திலே செல்லலாம் என்ற நிலை இல்லாமல், முறையீடு செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது, ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் இதை நாங்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு இன்றைக்கு உள்ள சட்டம், முதலாளித்துவ சமுதாய அமைப்பு இருக்கிறபோது, அந்த அமைப்பிலே உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் இருக்கிறபோது, அந்த அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே உருவாக்கப்பட்ட நீதிமன்றங்கள் இருக்கிறபோது, அந்த நீதிமன்றங்களுக்குக் கூடப் போவதற்கு உரிமை மறுக்கப்பட்டால் வேறு எங்கே சொல்லமுடியும் என்ற நிலை மக்களுக்கு ஏற்பட்டுவிடும்

அதுமட்டுமல்ல, மூன்றாவதாக இந்தச் சட்டத்திலே ஒரு பக்கம் பெர்மிட் கொடுக்கிறபோது அதிகாரிகள் வேண்டியவர், வேண்டாதவர், தெரிந்தவர், தெரியாதவர் என்ற நிலையோடு அச்சுறுத்துகின்ற அவலநிலையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்து கொண்டு இந்தச் சட்டம் வேண்டத்தகாதது, விரும்பத்தகாதது என்று சொல்லி இதற்கு எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டு உலரயை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. மணி : மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, இந்த 1937-ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தை மேலும் திருத்துவது சம்பந்தமாக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இரண்டு முக்கியமான காரணங்களை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்க . ஒன்று, கள்ளச் சாராயத்தைத் தடுப்பது; மாநிலம் விட்டு மாநிலம் கடத்தப்படுவதில் முக்கியமான நடவடிக்கை வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கள்ளச்சாராயத்தை தடுக்கவேண்டும் என்பதற்கு முக்கியமான காரணம் கள்ளச்சாராயம் ஓப்போது முன்னால் இருந்ததைவிட சர்வ சாதாரணமாக ஒரு குடிசைத் தொழிலாக மாறி இருக்கிறது என்பதாகும். கள்ளச்சாராயம் அதிகமானதற்கு மற்றொரு காரணமாக சொல்லப்படுவது, அரசாங்கம் விநியோகம் செய்கிற சாராயம் தரமானதாக இல்லையென்பதாகும். இரண்டாவது அதனுடைய விலை உயர்ந்து போயிருக்கிறது என்பதாகும். இதன் காரணமாக கள்ளச்சாராயம் சர்வ சாதாரணமாக குடிசைத்தொழிலாக பல்வேறு பகுதிகளில் மாறியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால் சென்னை பகுதிகளில் கள்ளச்சாராயம் பெருமளவில் பெருகி வருகிறது. ஆ. சி. எய். —லிருந்து பூம்புகார் செல்லும் பஸ்ஸிலே கள்ளச் சாராயத்தை ஏற்றி வில்லிவாக்கம் பகுதிகளில் வந்து இறக்குவது

மிகவும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாகும் அதைப்போல 53-ம் எண் பல்லவன் பஸ்ஸில் மாங்காடு என்ற இடத்தில் கள்ளச்சாராயம் ஏற்றப்பட்டு சென்னை நகரத்தின் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம் எல்லைப்பகுதியாக இருக்கிறது அடுத்த மாநிலமான கேரள மாநிலத்திலிருந்து கள்ளச்சாராயம் நம்முடைய கே. டி. சி.—ஐக் சேர்ந்த நீராடி பஸ்ஸில் குறிப்பாக இரவில் கடைசி பஸ்ஸிலும், காலை நேரத்தில் வருகிற பஸ்ஸிலும் ஏராளமான கள்ளச்சாராயம் கடத்தப்பட்டு வருகிறது. தனி நபர்கள் கள்ளச்சாராயத்தைக் கொண்டு வந்து சாதாரணமாக குடிசைத் தொழிலைப் போல விற்பனை செய்து வருகிறார்கள். இதில் கடுமையான நடவடிக்கை வேண்டுமென்ற கருத்து உடையவன் நான். மாநிலம் விட்டு மாநிலம் கடத்தப்படுகிறது என்று சொல்கிறபோது. சமீபத்திலே இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு பாண்டிச்சேரியிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு கள்ளச்சாராயம் கடத்தப்பட்டதாகவும். அவை முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பத்திரிகையிலே செய்தியை பார்த்தோம். ஏற்கெனவே சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. கள்ளச்சாராயத்தை கடுமையாக தடுக்கக்கூடிய நிலை வேண்டும். அதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து.

அடுத்து சாராயக் கடைகள் அமைக்கப்பட்டிருப்பதில் ஒரு குறைபாடு. சாராயக் கடைகள் பூராவும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கிற பகுதிகளில் தான் இருக்கின்றன. அதன் காரணமாக பல்வேறு சங்கடங்களுக்கு மக்கள் ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே நெருக்கடியான பகுதிகளிலும், வியாபார ஸ்தலங்களிலும், கல்லூரிகள், மருத்துவ மனைகள் பக்கத்திலும், கோவில்களுக்குப் பக்கத்திலும் சாராயக் கடைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

மேலும் சாராயக் கடைகள் அனுமதிக்கும்போது பல்வேறு கிளைக் கடைகள் என்று சொல்லி, சட்டத்திற்கு விரோதமாக, அதிகாரிகள் அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் கூட, சட்டத்தை மீறி வைத்துக் கொள்கிறார்கள். சட்டத்தைக் கடைபிடிக்க வேண்டிய அதிகாரிகள் சில இடங்களில் மாமூல்களை வாங்கிக்கொண்டு மவுன அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை.

(முற்பகல் 11-40)

இந்தக் கள்ளுக் கடை, சாராயக் கடை இரண்டுக்குமே ஒரே இடத்திலே அனுமதி கொடுத்து விடுகிறார்கள். அதனாலே அவர்களுக்குள்ளேயே, கடைக்காரர்களுக்குள்ளேயே, போட்டி ஏற்பட்டு, அதில் அடிதடியும். மோதலும் ஏற்பட்டு, இன்னும் கிரிமினல் வழக்குகள் நடக்கின்றன. ஆகவே, கள்ளுக்கடைகளையும், சாராயக் கடையையும் ஒரே இடத்திலே கொடுக்கக் கூடாது என்பது எனது கோரிக்கையாகும்; நம்முடைய



மாநிலத்தைப் பொறுத்தவரை, களியக்காவிளை என்ற ஒரு இடம். எல்லைப் பகுதியிலே இருக்கிறது. அங்கு நம்முடைய சாராயக் கடை இல்லை. ஆனால், கேரள மாநில சாராயக் கடை இருக்கிறது. நம்முடைய காலை எடுத்து வைக்கிற இடத்திலே இருக்கிறது. ஆகவே. இங்கே இருக்கிற கள்ளுக்கடை' சாராயக் கடை விற்பனையெல்லாம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அடுத்த மாநிலத்தோடு பேசி, சாராயக்கடைகள் கள்ளுக்கடைகள் எங்கெல்லாம் வைக்கவேண்டுமென்று விதிமுறைகளை நிர்ணயித்து அதற்கேற்ற வகையில் வைக்க முடிவு எடுக்க வேண்டும்.

அடுத்து, பொதுவாக, இன்றைக்கு நம்முடைய வாலிபர்கள் மத்தியிலே ஒரு பேரபாயம் வரக்கூடிய அளவிலே, மது அருந்தக்கூடிய முறை மாறி, அதற்குப் பதிலாக, கஞ்சாவும், அபினும் அடிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிறது: இரண்டு நாட்களுக்கு முன்னாலே பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். நம்முடைய மாநிலத்தில் ஒரு மலைப் பகுதியிலே, இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள கஞ்சா தயார் செய்யப்பட்டதாகவும், பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அதற்கு வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் செய்தியைப் பார்த்தோம். அது சமுதாயத்தை குறிப்பாக வாலிபர் சமுதாயத்தை எந்த அளவுக்குச் சீரழிக்கும் என்பதைப் பார்த்து. அதை இங்கே உற்பத்தி செய்கிறவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து' அதைத் தடை செய்வதற்கான கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதே போன்று, இந்த அபின் பொருளை உபயோகிக்கின்ற முறையிருக்கிறது. அதைத் தடுக்கின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால் நம்முடைய போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் வேலை நேரங்களிலே இந்த மது அருந்துகின்ற ஒரு நிலையை கண்கூடாகக் கடந்த மாதம் நான் பார்க்க முடிந்தது. கடந்த மாதம் 21-ஆம் தேதியன்று. என்னுடைய பகுதியிலே கடும்பு மூடு என்னுமிடத்தில் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்ற விவசாயிகள் போராட்டத்திலே குலசேகரம் சப் இன்ஸ்பெக்டர் அங்கு இருந்து கொண்டிருந்தார். அந்த இடத்திற்குச் சென்று நான் பார்க்கும்போது, அவரோடு சேர்ந்து சில போலீஸ் ஜவான்களும்; அவர்களோடு சேர்ந்து சில காலிகளும்—அந்தக் காலிகள் மது அருந்தினார்களா அல்லது போலீஸ் மது அருந்தியிருக்கிறதா என்று சொல்ல முடியாத அளவுக்கு இருந்தார்கள். இதனால் ஏற்படுகிற சங்கடங்கள் என்னவென்றால், சாதாரண மக்கள், மீது அநியாயமாக, பொய் வழக்குகளிலே மாட்டிக்கொள்கிற நிலை உருவாகியுள்ளது. ஆகவே, திட்டவட்டமாக வேலை நேரங்களிலே போலீசும் குறிப்பாக, மதுவிலக்கை முறைப்படுத்துகிற அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற போலீசும், ஊழியர்களும் அந்த நேரங்களிலே, சாராயம், மது குடிக்கக்கூடாது என்றும், மது அருந்தினால் அவர்கள்மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

ஒன்றவர்களுக்கும் புரியவில்லை; லைசென்ஸ்தாரர்களும் ஏமாற்றும் வகையில் வழக்காடி வக்கீலைப் பயன்படுத்தித் தப்பித்துக் கொள்ள வழி வகுக்கும் நிலையிலேதான் இருக்கிறது. ஆகவே, நான் இந்த சட்டத்தை எதிர்ப்பது என்பது மட்டுமல்ல, மனிதாபிமானத்தோடு இன்றைக்கிருக்கின்ற நிலைமை என்ன என்று பார்த்து, சட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம் என்று இருந்தாலும் அதை அமல் நடத்துகின்ற அதிகாரிகளின் அலட்சியப் போக்கையும் கவனிக்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினரவர்கள் சொன்னார்கள் போலீஸ் அதிகாரிகள் இதில் ஈடுபட்டு, யார் கண்காணிக்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அவர்களே வேலையில் இருக்கும்பொழுது குடித்துக் கொண்டிருக்கிறார்கள். கான்ட்ராக்ட்காரர்கள் மூலம் ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்கு, ஒரு ஜில்லாவை விட்டு இன்னொரு ஜில்லாவிற்குப் போய்க்கொண்டு தான் இருக்கிறது. இதுகுறித்து நான் எந்த அரசியல் கட்சியைப் பற்றியும் குறிப்பாகக் குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் அரசியல் பின்னணியில் லைசென்ஸ்தாரர்களும், கான்ட்ராக்ட் காரர்களும் நல்ல சாராயத்தோடு திருட்டு சாராயத்தையும் கலந்து ஒரு ஜில்லாவை விட்டு இன்னொரு ஜில்லாவிற்குக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு லைசென்ஸ்தாரரோ நான்கு பிராஞ்ச் என்று வைத்துக் கொண்டு கோயில்களுக்குப் பக்கத்தில் எல்லாம் கடைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த பிராஞ்ச் கடைகள் சம்பந்தமாக சட்டத்தில் விதி வைத்திருப்பதால்தான், நீங்கள் ஒரு பிராஞ்ச் என்று சொன்னால் அவர்கள் பத்து பிராஞ்ச் கடைகளை வைத்துக்கொண்டு திருட்டுச் சாராயத்தை வாங்குகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசாங்கம் எவ்வளவு சாராயம் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அதைவிட பத்து மடங்கு சாராயம் இருப்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். இதுகுறித்து மனசாட்சியோடு அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிராஞ்ச் கடைகள் கொடுக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல, இதை அமல் நடத்தும் அதிகாரிகளில் சிலர் இந்த மாதிரி தவறுகளைச் செய்கிறார்கள். சில அதிகாரிகளின் துணையோடு கான்ட்ராக்ட்காரர்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு அனுப்புகிறார்கள். அவர்கள் அரசியல்வாதிகளின் துணை கொண்டுதான் செய்கிறார்கள். எந்தக் கட்சி அரசியல்வாதி என்று நான் சொல்லவில்லை. ஆளுங்கட்சி அரசியல்வாதி என்று சொல்லி நான் தப்பித்துக் கொள்வதற்காகச் சொல்லவில்லை. ஆகவே இந்த பாவச் சுமையிலே ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற எண்ணத்தோடு பார்க்காமல் நேரடியாகக் கவனிப்பதற்குத் தைரியம் இருந்தால் கொண்டு வருவது நல்லது. அப்படித் தைரியம் இல்லாமல்; நடப்பது





நடக்கட்டும், வந்தவரையில் இலாபம், ஐந்து வருஷ ஆட்சிக் காலத்தில் மூன்று வருடங்கள் முடிந்து விட்டது; இன்னும் பாக்கியிருக்கின்ற இரண்டு வருடங்களையும் கழித்து விட்டுப் பிறகு பார்த்துக் கொள்வோம் என்ற பாவமான எண்ணத்தில் இருந்தால் அதைப்பற்றி நான் அமைச்சருக்கே விட்டு விடுகிறேன்; அரசாங்கத்திற்கே விட்டு விடுகிறேன்.

இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். நீங்கள் என்ன எண்ணத்தோடு இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்களோ அந்தக் கருத்திற்கேற்ப அதிகாரிகள் நடக்கப் போவதில்லை; கான்ட்ராக்ட்காரர்கள் நடக்கப் போவதில்லை. இதில் அரசியல் பின்னணி இருக்கிறது. அந்த அரசியல் வாதிகளைத் தண்டிப்பதற்கான தைரியம் உங்களிடத்திலே இருக்கிறதா? அப்படிப்பட்ட தைரியம் இல்லாமல் சட்டத்தைக் கொண்டு வருவதைவிட தைரியமாக, மதுவிலக்கை ரத்து செய்து விட்டோம் என்று சொல்லிவிட்டால் நீங்கள் ஒரு முடிவிற்கு வந்து விட்டது தெரியும். ஏழைகளைக் காப்பாற்றுவதற்காக இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது. பெண்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது, குழந்தைகளுக்குச் சத்துணவு போடுவதற்காக இந்தச் சர்க்கார் வந்திருக்கிறது என்றெல்லாம் சொன்னீர்கள்.

(முற்பகல 11-50)

அவன் தாயையும் தகப்பனையும் குடிகாரர்களாக ஆக்கி விட்டு, அவர்கள் வீட்டிலே பட்டினிபோட்டுவிட்டு, அந்தக் குழந்தைக்கு சத்துணவு என்ற பேரால் கொடுத்து, அந்தக் குழந்தையையும் வருங்காலக் குடிகாரனாக ஆக்கக் கூடிய இந்த மதுவிலக்கைக் கொண்டு வருவதிலே பெரும் பாவம் இருக்கிறது. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும் என்ற தெய்வத்தின் பேரால் சொல்லுகிறேன். இன்றைக்கு நடக்கின்ற அராஜகம் அக்கிரமம் (குறுக்கீடு) சாபம் என்று சொல்லுகிறார் நம்முடைய அருமைச் சகோதரர். சாபம் விடுவதற்கு நான் ஒன்றும் சாமியார் இல்லை. நான் சாபம் விடவில்லை, மனசாட்சியோடு சொல்லுகிறேன். ஏழைகள் வீதியிலே வாழ்ந்த மரியாதை கூட இல்லை. அவர்களிடம் இருந்த வெண்கலப் பாத்திரம், பித்தளைப் பாத்திரம், எவர் சில்வர் பாத்திரம் இன்னும் அவனுடைய ஆடைகள் அத்தனையும் விற்று குடிகாரர்களாக மாறுகிறார்கள். எனவே, நீங்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை ஒன்று ஒழுங்காக அமல் படுத்த வேண்டும், இல்லை என்றால் மதுவிலக்கை ரத்துசெய்ய வேண்டும். இதைச் செய்யத் தவறினால் இந்த நாட்டு மக்களுக்கு செய்கின்ற துரோகமாகும் என்று சொல்ல விரும்புகிறேன். இதிலே 100 கோடி 120 கோடி என்று ஏதோ ஒரு கணக்குச் சொன்னாலும், பத்து மடங்கு மக்களுடைய பாவம், கான்ட்ராக்ட்டர், போலீஸ், ரௌடிகள் இன்னும் பின்னாலே

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு மது விலக்குத் திருத்தச் சட்டத்திலே நான் இரண்டு விஷயங்களைத் தான் சொல்லவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் ஏழைகளைப் பற்றி நன்றாகப் புரிந்தவர். அதிலும், தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஏழைகளுடைய நிலைமைகளைப்பற்றி தெரிந்தவர். குறிப்பாக, தமிழகத்திலே, ஏழை எளியவர்களை வாழ வைப்போம் என்று சொன்னவர்கள்; அல்லது நாம் நல்ல அறிஞர்களைப் பெற்றவர்கள், திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கின்றவர்கள், நல்லவகையிலே வாழ வேண்டுமென்று சொல்கின்ற நாம், இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற நாம், மதுவிலக்கு ரத்து என்று கொண்டு வந்தால், உண்மையிலே தைரியமாக நம்மால் முடியாது என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னால் அதில் ஒன்றும் தவறில்லை. நிலைமை அப்படியிருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? அரசாங்கம் இரக்கப்பட்ட அரசாங்கம் என்பது உண்மையானால், கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதிலே சற்று கஷ்டம் இருந்தாலும்கூட, அரசியல்வாதி என்ற எண்ணோட்டத்தோடு அல்ல, ஓட்டு என்ற பாவமான சுமையில் நாம் சிக்கிக் கொண்டதற்காகவே, இந்தச் சட்டத்தை நாம் திருத்தச் சட்டமாகக் கொண்டு வந்து மது விலக்கை அமுல்படுத்த பயன்படுவது நியாயமானது அல்ல. நேர்மையானது அல்ல, ஏழைகள் அவதிப்படுகிறார்கள். ஏழைகள் மட்டுமல்ல இளைஞர்கள், பள்ளிகள். உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் கூடக் கெட்டிருக்கின்றார்கள். சட்டத்திலே நாம் சொன்னோம். இத்தனை வயதுக்குட்பட்டவர்களுக்குச் சாராயம் கொடுக்கப்படமாட்டாது, அவர்கள் குடிக்காமல் இருப்பதற்கு அரசு வழி செய்திருக்கிறது என்று சட்டத்தைச் சொன்னோம். ஆனால் நடைமுறையில் நடப்பது என்ன?

அது மட்டுமல்ல, இந்தக் கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் முன்பிருந்தபொழுதுகூட, கிராமத்தில் ஒதுக்குப்புறமாக, பொது மக்களுக்கு இடையூறு இல்லாத முறையில் இருந்தது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அதுதான் உண்மையான நிலைமையுங்கூட. ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே எல்லா இடங்களிலும் கடைகளுக்கு லைசன்ஸ் கொடுக்கப்படுவதோடு மட்டுமல்ல, கடைகளுக்குள்ளே பிராஞ்சுகள் என்று வைத்துக் கொண்டு, தெருத் தெருவாக, மோர் விற்பனைப் போல், பதனிர் விற்பனைப் போல் கிராமமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும், விற்கப்படுகின்ற இந்தப் பாபமான காரியம் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரிகிறதா?





இந்தப் பாவச்சுமையை எத்தனை நாட்களுக்கு நீங்கள் நடத்தப் போகிறீர்கள்? மனிதாபிமான எண்ணத்தோடு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேனே தவிர, சட்ட ரீதியாகவோ அல்லது அரசியல்வாதி என்றமுறையிலேயோ அல்லது எதிர்க்கட்சி என்பதாலோ சொல்லவில்லை. மனிதாபிமான எண்ணத்தோடு நீங்களும் இதைப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில்களுக்குப் பக்கத்திலேயும், மார்க்கெட்டுகளுக்குள்ளே பக்கத்திலேயும், பள்ளிக் கூடங்களுக்குப் பக்கத்திலேயும் சாராயக் கடைகள் இருக்கின்றன. சென்னை நகரத்திலேயே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி அமைச்சரவர்களிடத்திலே இரண்டுமுறை சொல்லியிருக்கிறேன். நியாயம் நடக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற புரசைவாக்கம் தொகுதியில் உள்ள கங்காதரேஸ்வரர் கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கிறது, அதற்கடுத்தக் கடை சாராயக் கடை தான்; அருகே புஷ்பக் கடை இருக்கிறது, மார்க்கெட் இருக்கிறது, எத்தனையோ பெண்கள் அந்த இடத்திற்கு வந்து போகிறார்கள்! தினமும் சண்டைகள் நடக்கின்றன.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற அவதானம் பாப்பையர் தெருவில் பள்ளிக் கூடத்திற்குப் பக்கத்தில் இப்படிப் பட்ட கடை இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் நான் கலெக்டரிடத்திலும் சொன்னேன், அதிகாரிகளிடத்திலேயும் சொன்னேன், அமைச்சரிடத்திலேயும் சொன்னேன். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். நான் சொல்வது, மது விலக்கை ரத்து செய்து விட்டோம் என்று சொல்லிச் செய்யுங்களேன். நீங்கள் மனிதாபிமான எண்ணத்தோடு, பொதுமக்கள் கூடும் இடங்களையும், பள்ளிகள் இருக்குமிடங்களையும் மார்க்கெட் இருக்கின்ற இடங்களையும் பார்வையிட்டபிறகு அனுமதி கொடுத்து விட்டு மதுவிலக்கை ரத்து செய்து விட்டோம் என்று சொன்னால் கூட அதில் ஆட்சேபணை இல்லை. காரணம் நான் சொல்லி ஒன்றும் நடக்கப் போவதில்லை. அரசாங்கம் ஒரு முடிவிற்கு வந்து விட்டது. 100 கோடி ரூபாய், 120 கோடி ரூபாய் ஒரு ஆண்டுக்கு வருமானம் வருகிறது என்று சொல்கிறார்கள் 100 கோடி ரூபாய் என்று நீங்கள் நினைத்தாலும் கூட அதைவிடப் பத்து மடங்கு அளவிற்குத் திருட்டுச் சாராயம் இன்னும் பாவமான பொருள்கள் சேர்க்கப்பட்ட சாராயம் விற்றுக் கொண்டிருப்பது உண்மையா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு மனச்சாட்சி அறிய அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தச் சட்டம் கொண்டு வருகிறீர்கள். மூலச் சட்டத்திற்கு எத்தனைத் திருத்தச் சட்டங்கள் கொண்டுவருகிறீர்கள்? இப்படித் திருத்தம் திருத்தம் என்று சொல்லிக்கொண்டு வருவதால் அதிகாரிகளுக்கும் [illegible]ரியவில்லை, அமல் நடத்து

இருக்கின்ற பாவிகளிடம்தான் சேருகிறது. உங்களுக்கு இதனால் வருகின்ற லாபத்தை விட பாவம்தான் அதிகம். தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதைவிட பெரும் கெடுதல் செய்யத் துணிந்திருக்கிறீர்கள் (குறுக்கீடு) நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் நல்லது செய்வோம் என்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக நல்லது செய்யவேண்டுமானால் மதுவிலக்கை அமல் படுத்துவது என்ற நல்லதை செய்வதற்காக, நீங்களும் உபயோகமாக இருக்கவேண்டும் என்று கேட்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இங்கே கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன் வடிவை எதிர்த்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பின ருடைய கருத்துக்களை ஒட்டி, ஒன்றிரண்டு கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன். இங்கே இந்தக் காரண—காரிய விளக்கத்தை சொல்லுகின்ற நேரத்திலே, மாநிலங்களுக்கு இடையே மது கடத்தப்படுவதைத் தவிர்ப் பதற்கும் இன்னும் மத்திய இறக்குமதி, ஏற்றுமதி செய்வதற்காக கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவும் நீதி மன்றங்களிலே இடைக்காலத் தடையாணை பிறப்பிக்க இயலா வண்ணம் செய்வதற்கும், வெளிநாட்டு மதுவகைகளுக்கு விற்பனை வரி விதிப்பதற்கும் இந்தச் சட்டத் திருத்தம் வகை செய்கிறது.

இன்று எடுத்த எடுப்பிலேயே இந்த மதிவிலக்குச் சட்டத்தை திருத்துவதற்கு மேலும் என்ன இருக்கின்றது என்பதுதான் எனக்கு இருக்கின்ற ஆச்சரியம். மதுவிலக்கிலே எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டு, இன்றைய தினம் நாட்டிலே நடைபெறுகின்ற காரியங்களைப் பார்க்கின்ற போது, உண்மையிலேயே மதுவிலக்கு எங்காவது கொஞ்சம் அமலில் இருக்கிறதா என்று பார்ப்போமேயானால் அரசாங்கத்தின் கடைகளிலே விற்கின்ற, அரசாங்கத்தின் சார்பிலே கொடுக்கப்படுகின்ற சாராயத்தை தவிட கள்ளத்தனமாக விற்கப்படுகின்ற மதுவகைகள்தான் அதிகமாக இருக்கிறது (குறுக்கீடு) நன்றாக இருக்கிறதா இல்லையா என்று குடித்தவர் களுக்குத்தான் தெரியும். அந்தப் பழக்கம் எங்கள் பரம்பரைக்கே இல்லை, எங்கள் கட்சியிலே.

எங்களைப் பொறுத்தவரையிலே எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, இதன் மூலமாக வருகின்ற வருவாய் நாங்கள் 400 கோடி, 500 கோடி என்று சொல்லுகிறோம், ஆளுகிற கட்சிஅமைச்சர்கள் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்திலே சென்ற ஆண்டு 110 கோடி இந்த ஆண்டு 150 கோடி என்கிறார், எப்படியிருந்தாலும் கூட அது சின்புல் பி ாவிட்,







இந்த மதுவின் மூலமாக அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருவாய் பாவகரமான வருவாய் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கலாம். அரசாங்கம் உள்ளபடியே ஏழைகளுக்கு நன்மை செய்ய விரும்பு மானால் இதைத் தவிர்த்து வேறு வழிகளிலே—வணிக வரித் துறை இருக்கிறது. வேறு வழிகள் எல்லாம் இருக்கின்றன- அதை முறையாக இன்னும் கடுமையாக வசூல் செய்வதிலேதான் அரசாங்கத்திற்கு வருவாய் வரவேண்டுமே தவிர, இதுமாதிரி இனங்களிலே வரவேண்டாம். வசூலிக்கவேண்டாம் என்பது எங்கள் கட்சியினுடைய தீர்மானமான முடிவாகும்' இன்றைய தினம் தமிழகத்திலே கடுமையான வறட்சி இருக்கிறது. மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் என்ன சொல்லுகிறார் தெரியுமா? அன்றைக்கு உரை நிகழ்த்துகின்ற நேரத்திலே தமிழகத்திலே ஆண்டு ஒன்றுக்கு......

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு மூலமாக வசூலிக்கக் கூடிய பணம் பாவத்தில் வரக்கூடிய பணம் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்டுக் கொள்வது மற்ற காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்யக்கூடிய மாநிலங்களிலே வசூலிக்கிறார்களே அது பாவம் என்று தெரிந்து வசூலிக்கிறார்களா அல்லது அந்த மக்களை ஏமாற்ற விரும்பு கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆளுகின்ற தரப்பிலே அமைச்சர் அவர்களாலே கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கு விரிவாக நானும் பதில் சொல்லி, அது பழைய கதையாக போய்விட்டது, அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. மேலும் மேலும் சபையினுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) இதில் நகைப் பதற்கு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடு). நான் நிறைய சொல்லிவிட்டேன். (குறுக்கீடு).

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மது குடிப்பதற்கான அனுமதியை வைத்திருப்பவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலே உறுப்பினராக சேர்க்கமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இப்படி எதையாவது சொல்லி, விவாதத்தை திசை திருப்புவதிலே பிரயோஜனம் இல்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த அளவிலே மிகத் தெளிவாக இருக்கிறது. குடிக்கக்கூடாது என்பது காங்கிரஸ் கட்சியினுடைய அன்றும், இன்றும், என்றும் இந்தக் கொள்கை இருக்கிறது. ஆனால் தனிப்பட்ட முறையிலே நீங்கள் சொல்வீர்களானால்,

பெயரைச் சொல்வீர்களானால் அதற்கான காரணத்தையும் கேட்டுச் சொல்வேன். என்ன காரணத்திற்காக என்பது பற்றி. இப்படி சொல்லிவிட்டு திசை திருப்புவது நியாயம் அல்ல. இது முறையும் இல்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இன்று கடுமையான வறட்சி இருந்தாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் இன்றைக்கு. 55 லட்சம் லிட்டர் விற்பனை ஆகியிருந்தது இன்றைக்கு 75 லிட்டராக உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருப்பதை கேட்கும்போது உண்மையிலே நாங்கள் மிகவும் வேதனைப்பட்டோம். சாதனை என்று சொல்வது உயர்வு என்று சொல்வது உணவுத்துறையிலே அல்லது தனியார் வருமானத்திலே இருக்கவேண்டுமே தவிர, இங்கே மது விற்பனை உயர்ந்திருக்கிறது என்று சொல்வது ஒரு நல்ல அரசுக்கு. சேமநல அரசுக்குப் பொருந்தாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே விற்பனையைப் பற்றிச் சொல்கிற நேரத்திலே பல்வேறு குறைபாடுகளை இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். மதுக்கடைகளிலே அனுமதி வழங்குகின்ற நேரத்திலே கல்வி நிலையங்களுக்கு அருகிலே, இன்னும் சொல்லப்போனால், பெண்கள் கல்வி நிலையங்களுக்கு அருகிலே, மத ஸ்தாபனங்களுக்கு அருகிலே எல்லாம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் உடனடியாக, அது ஆளும் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, அல்லது வேறு கட்சிக்காரராக இருந்தாலும் சரி. உடனடியாக அவைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மதுக்கடைகளிலே விற்கின்ற மது 9 மணிக்கு மேலே விற்கக்கூடாது என்று சட்டம் இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் 9 மணி வரை அரசாங்கச் சாராயமும் அதற்குப் பிறகு வேறு சாராயமும் விற்கப்படுவதாக எனக்கு நம்பத்தகுந்த இடங்களிலேயிருந்து செய்திகள் வந்திருக்கின்றன. நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இது சரியான முறையல்ல. தவிர்க்கப்பட வேண்டும். வரி இழப்பு ஒரு புறம், மக்கள் கள்ள மது குடிப்பதாலே அவர்கள் உடல் நலம் கெடுகிறது. அந்த முறையிலே இருப்பதாலே அதை தவிர்க்கவேண்டும். அது அறவே ஒழிக்கப்படவேண்டும். அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மது பெர்மிட் இந்த அரசாங்கம் வழங்கியிருக்கிறது நான் அன்றைக்கே அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஒருவர் இவ்வளவுதான் குடிக்கவேண்டும், அல்லது வாங்கிக்கொள்ள வேண்டும் என்று அந்த மது பெர்மிட்டிலே வரைமுறைகள் இருக்கின்றன. தமிழகத்திலே இன்றைக்கு எத்தனை மது பெர்மிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வழங்கப்படுவதிலே அவர்கள் மது பெர்மிட்டின் மூலமாக எந்த மதுவகைகள் வாங்கலாம்.





ஆனால் தமிழகத்திலே இன்றைக்கு எவ்வளவு விற்று கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கணக்குப்படி நான் சொல்லவில்லை. அரசாங்கத்தின் கணக்குப்படி இல்லாத சாராயத்தை விட்டுவிடுவோம். ஆக ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி தமிழகத்தை மேலும் சீரழிக்கும் முறையாக இது இருக்கிறதே தவிர, நிச்சயமாக மக்களுக்கு வகை செய்கின்ற அல்லது நல்லது செய்கின்ற சட்டத்திருத்தமாக இருக்கவில்லை என்று சொல்லி இது மக்கள் எதிர்பார்க்கின்ற பலனை திருத்தத்தின் மூலமாக அமைய முடியாது என்று சொல்லி, ஏற்கனவே உள்ள அதிகாரங்கள் மூலமாக நிச்சயமாக நல்லமுறையிலே இந்த மதுவிலக்கை ஓரளவுக்கு செயல்படுத்த முடியும். இது அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதோடு மேலும் பல சிக்கல்களை உருவாக்கி அதன் மூலமாக கோர்ட்டுக்குப் போகின்ற முறையிலே இந்த சட்டத்திருத்தம் மூலமாக வரக்கூடாது என்பதாலே இந்த சட்டத்திருத்தத்தை நான் எதிர்த்து அமர்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டம் என்பது உண்மையிலே ஒரு தமாஷான வார்த்தையாக இருக்கிறது. சமீபத்திலே ஒரு நாடக விளம்பரத்தைப் பார்த்தேன். எஸ்.வி. சேகருடைய 'காதிலே பூ' என்ற ஒரு நாடகத்தைப் பார்த்தபோது, அதுபோல் மதுவிலக்குக்கு ஒரு திருத்தம் என்ற அளவிலே இன்றையதினம் நாட்டிலே ஏதோ மதுவிலக்கு நடந்து கொண்டிருப்பது போலவும் அதற்கு ஒரு திருத்தச் சட்டம் என்பது போல இந்த திருத்தச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவாக இப்படி கடத்தப்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஆராய்ச்சி செய்கின்றபோது இங்கே அதிக விலையிலே சாராயம் விற்கப்படுகிறது ஒன்று. இரண்டாவது மற்ற மாநிலங்களிலே விலை குறைவாக இருக்கிறது. இங்கே விலை அதிகமாக இருக்கிறது. பிராந்தி போன்ற மற்ற வகைகளிலே எல்லாம் பாண்டிச்சேரி போன்ற இடங்களிலே எல்லாம், இன்னும் மற்ற மாநிலங்களிலே எல்லாம் இருந்து கடத்தி வரப்படுகிறது என்று சொன்னால், இங்கே வரி அதிகமாக இருக்கிறது. அங்கே விலை குறைவாக இருக்கிறது என்று சொல்லி சில முதலாளிகள் ஒருசிலர் இப்படி கடத்துவதற்கு ஏதுவாக இருக்கிறது. சாராயத்தை பொறுத்தவரையிலே ஒரு பெரிய கொள்ளை நடக்கிறது என்பதை அதனுடைய புள்ளிவிவரங்களை பார்க்கிறபோது சற்றேறக்குறைய ஒரு 2, 3 பைசாக்கள் வித்தியாசமாக இருக்கலாம்.

(நண்பகல் 12-00.)

ஒரு பாட்டில் சாராயம் 750 எம்.எல். தயாரிக்கத் தேவைப்படுகிற மூலப்பொருள்—ஸ்பிரிட்— எரி சாராயத்தின் விலை 59 பைசா ஆகிறது. அதிலே இரண்டு டம்ளர் தண்ணீர் கலந்தால் அது சாராயம். இது ஒன்றும் பெரிய சாமார்த்தியமான

வேலை அல்ல. தமிழ் நாட்டில் ஒரு குடிசைத்தொழிலாக நடந்து வந்த கள்ளச்சாராயம் தயாரிப்பவர்கள் செய்து வந்த வேலை. அப்படி இரண்டு டம்ளர் தண்ணீர் கலப்பதற்கு 35 பைசா சார்ஜ் செய்கிறீர்கள், அதற்குப் பிறகு ஒரு பாட்டிலுக்குக் கேப் போட 10 பைசா செலவாகிறது. அதற்குப் பிறகு அதன்மேல் லேபிள் ஒட்டுவதற்கு 5 பைசா சார்ஜ் ஆகிறது. அதற்குப் பிறகு கிரேடு செய்வதற்கு 10 பைசா 15 பைசா ஆகலாம். ஆனால் அதற்கு மேல் எக்ஸைஸ் டியுடி என்ற முறையில் 3.35 பைசா வரி அரசு போடுகிறது.

அதற்கு அடுத்த நிலையில் ஒரு பெரிய கொள்ளை நடக்கிறது. ஒரு பாட்டிலுக்கு ரூ. 2 சார்ஜ் செய்கிறார்கள். ஆக ஒரு பாட்டில் சாராயம் தயாரிக்க ரூ. 7.90 ஆகிறது. அதற்குப் பிறகு கடைக்காரர்கள், ஏலம் எடுத்தவர்கள், அதிக விலை வைத்து 100 மில்லி 2 ரூபாய் என்ற அளவில் விற்கிறார்கள். சில இடங்களில் 10 பைசா 15 பைசா குறைவாக இருக்கலாம். எந்த ஏழை மக்கள் மது அருந்தக்கூடாது என்பதற்காக மது விலக்குக் கொண்டு வருகிறேன், என் தாய் சத்தியா மேல் ஆணை என்று முதல்வர் சொல்லி, பிறகு அதை ஒத்தி வைத்து இருக்கிறேன் என்று சொல்கிறீர்களே அந்த வார்த்தை ஏற்றுக் கொள்கிறேன்.

எந்த ஏழை மக்கள் கள்ளச்சாராயம் குடிக்கக்கூடாது என்பதற்காக இதைக் கொண்டு வந்தீர்களோ, அந்த ஏழை மக்கள் இன்றைக்கு குறைந்த விலையில் சாராயம் சாப்பிட முடிகிறதா ? நீங்கள் தான் அந்தச் சாராயத்தின் விலையை ஏற்றி இருக்கிறீர்கள், இது நியாயமா என்ற கேள்வியை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் பாட்டில் விலை ரூ. 2 என்று சார்ஜ் செய்கிறீர்கள். அதிலே கூட பெருத்த ஊழல் நடந்து கொண்டு இருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்து இருக்கின்றன.

ஒரு பாட்டில் விலை திருப்பிச் செல்கிற நேரத்தில் 60 பைசா என்ற அளவிலே தான் இருக்கின்றன. இப்படி ஒரு நாளைக்கு 50,000 காலி பாட்டில்கள் திருப்பி எடுக்கின்ற நிலை இருக்கிறது. இப்படி ஒரு பாட்டிலுக்கு ரூ. 1.40 கொள்ளையடிக்கும் நிலையிருக்கிறது. ஆகவே, இந்த பாட்டில் விலையைக் குறைக்க அவசியம் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்து கிறேன்.

கள்ளச்சாராயம் நாட்டிலே பெருகியிருக்கிறது. கள்ளச் சாராய முதலாளிகள் எல்லாம் இன்றையதினம் 4 மடங்கு, 5 மடங்கு அளவிலே பெருகியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், சென்னை, மற்றும் பல இடங்களிலே கொள்ளை அடித்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்குச் சாராயம் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்ற அளவிலே பல கிராமங்களிலே கள்ளச்





சாராயம் ஆறாக ஓடிக்கொண்டு இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும். இந்தக் கள்ளச்சாராயத்தால் உடல் பாதிக்கப்படுகிறது. ஏழை எளியவர்கள் எல்லாம் உங்களுக்கு வாக்களித்தார்கள். அந்த ஏழைகள் கள்ளச்சாராயம் சாப்பிடுகிறார்கள். ஆகவே, சாராயத்தின் விலையைக் குறையுங்கள். பெரும்பாலான மக்கள் சாப்பிடுவது சாராயம்தான். அதிலே இன்றைக்குப் பெருத்த கொள்ளை நடைபெறுகிறது. ஆகவே, அந்த விலையைக் குறைக்க, கொள்ளையைத் தடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் பிராந்திக்கடை முதலாளிகள் பினாமி முதலாளிகளாக இருக்கிறார்கள். அப்படி பினாமி முதலாளிகளாக இருப்பவர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே இந்த பினாமி முதலாளிகளை ஒழித்து, நல்ல முறையிலே, அந்த மாவட்டத்திலே தமிழகத்திலே உள்ளவர்களே முதலாளிகளாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் — இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் எல்லாம் --- மாண்புமிகு ரவீந்திரன் அமைச்சர் அவர்களை வெகுவாக மதிக்கின்றவர்கள். ஆகவே, நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து வருவாய்த் துறைக்கு மட்டும் நீங்கள் அமைச்சராக இருங்கள். இந்தச் சாராயத்திற்கு அமைச்சராக இருக்கவேண்டாம். உங்களுடைய பெயரைக் கெடுத்துவிடும் இலாகாவாக, ஊழல் நிறைந்த இலாகாவாக, ஏழை எளிய மக்களின் பழி பாவத்தை சுமக்கச் செய்யும் இலாகாவாக இது இருக்கிறது. ஆகவே, இதற்கு நீங்கள் அமைச்சராக இருக்கவேண்டாம் என்று பணிவன்போடு அவரோடு பாசத்தோடு பழகுகின்றவன் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் மதுக்கடைகளிலே பல வகையான பிராந்திகள், சாராயம் போன்றவற்றிற்கு பல வகைகளிலே விலை உயர்த்தப் பட்டு இருக்கின்ற காரணத்தால்தான் கடத்தல் போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. இந்தக் கடைகளுக்கு எங்கே பார்த்தாலும் தற்போது பிராஞ்சுகள் இருக்கின்றன. எப்படி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஊருக்கு ஊர் பிராஞ்சுகள் இருக்கின்றனவோ அதைப்போல இந்தச் சாராயக் கடைகளுக்கும் பிராஞ்சுகள் இருக்கின்றன. 5 கிளை, 6 கிளை என்றெல்லாம் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இந்தக் கிளைகளை ஒழிப்பதற்கு இந்த பிராஞ்சு முறை வைத்திருப்பதை ஒழிப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கடத்தல் நடைபெறுவதற்குக் காரணம் சாராய விலை உயர்ந்திருக்கிறது. சாராய விலை உயர்ந்திருப்பதற்குக் காரணம் அதிலே ஊழல் நிறைந்திருக்கிறது. ஆகவே, ஊழலைத் தடுத்து, சாராய விலையைக் குறைத்து, இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுங்கள்.

இந்தத் திருத்தச் சட்டம் இன்றைக்குத் தேவையில்லை. பழைய சட்டத்தையே நல்ல முறையில் செயல்படுத்துங்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் 7 பேர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை கூறும்போது அவர்கள் என்ன நினைக் கின்றார்களோ அதைப்பற்றி நன்றாக உணர்ந்து சொல்லி யிருக்கிறார்கள். இந்த அரசு ஏதாவது தவறு செய்திருந்தால் அதை நீக்கி, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலே அவர்கள் சொன்னதாகத்தான் நான் எடுத்துக் கொள்கிறேன் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவில் அதிகமான கருத்துக்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்பதும், இதிலே மூன்றே மூன்று விஷயங்கள் மட்டுமே சொல்லப்பட்டிருக்கின்றன என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த மூன்று விஷயங்களில் ஒன்று, விற்பனை வரி வாங்குவதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறது. ஆனால் விற்பனை வரி தனியாக வாங்குவதற்கு வேறு முறை இருப்பதினால் விற்பனை வரி இலாகா மூலம் வாங்குவதால், அது இங்கே பயன்படவில்லை என்பதால் அந்தப் பிரிவை நீக்கியிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இரண்டாவது விஷயம் என்னவென்றால், இங்கே இருக்கிற மது வகைகள் நம்முடைய மாநிலத்தின் எல்லைக்குள் விற்கப் படுவதற்கு அனுமதி பெற வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், அரசு போடுகிற வரியை வசூல் செய்யாமல் தடை உத்தரவு பிறப்பிக்கவோ, வழக்குப் போடவோ கூடாது என்று இருப்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த மூன்று விஷயங்களைத் தவிர இந்த சட்ட முன்வடிவிலே வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் போது பல்வேறுபட்ட கோணங்களிலே தங்களுடைய கருத்துக களைச் சொல்லியிருக்கிறார்கள்.



அருமை சட்டமன்ற உறுப்பினர், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தைப்பற்றிச் சொன்னார்கள். முதலமைச்சர் சொல்லும் போது என்ன நோக்கத்தோடு சொன்னார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் சொன்ன கருத்து என்னவென்றால் கள்ளச் சாராயங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னால் நாட்டிலே இப்போது காவல் துறை இருக்கிறது என்றால், நாட்டிலே திருடர்கள்தான் இருக்கிறார்கள். அதனால்தான் காவல்துறை இருக்கிறது என்று அர்த்தம் அல்ல. நீதி மன்றம் இருக்கிறது என்றால் எல்லாருமே குற்றவாளிகள் அல்ல. குற்றவாளிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்: இல்லை என்று சொல்ல முடியாது. சமுதாயத்திலே அவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க நீதிமன்றங்கள் இருக்கின்றன.

அதைப்போன்றுதான் கள்ளச்சாராயம் இருக்கத்தான் செய்யும். அந்தக் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு அரசு இவ நடவடிக்கைகளை எடுக்கிறது; முயற்சி செய்கிறது. அந்த முயற்சியிலே நாங்கள் வெற்றிபெற்றிருக்கிறோம் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் முயற்சியிலே அரசு வெற்றி பெற்றிருக்கிறது; கள்ளச்சாராயத்தைக் குறைத்திருக்கிறோம். மேலும் வெற்றி பெறுவோம் என்பதைத்தான் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே, வியாபார நோக்கத்தோடு சொல்லவில்லை என்பதை காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் சொல்கிறபோது, சட்டத்திருத்தம் என்றால் அது என்ன சட்டத் திருத்தம்—இது காதிலே பூ வைப்பதுபோல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ காதிலே பூ வைத்துக் கொள்பவர்கள் இருக்கிறார்கள் என்பது. ஏனென்றால் அவர் களுடைய சிறு பிராயத்திலே அவர்கள் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்றாலும் கூட அவர்களுடைய முன்னோர்கள் வைத்திருப்பார்கள். அப்போதெல்லாம் சட்டைபோடுவது இல்லை. கிராப் வைத்துக் கொள்வதில்லை, குடுமி வைத்துக் கொண்டு ஆண்கள் தலையில் சடைபின்னிக் கொண்டிருப்பார்கள். இப்போது பெண்களே சடை பின்னிக் கொள்வதில்லை. கிராப் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) ஆண்கள் சடை பின்னிக் கொண்டு பூ கூட வைத்திருந்தார்கள். அப்போது

தலையிலே. ஆகையினால்தான் காதிலே பூ வைப்பது ஒன்றும் புதியது அல்ல. அதேபோல சட்டத்திருத்தம் கொண்டு வருவதும் புதியது அல்ல. சட்டத்திருத்தம் கொண்டு வருவது சாதாரணமானதுதான். அநேக சட்டங்களுக்கு அப்படி திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்கிறபோது கூட இது என்ன திருத்தம் விசித்திரமான திருத்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு அருமை உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூட இது என்ன ஓயாமல் திருத்தம் என்று கேட்டார்கள். நம்முடைய அரசியல் சட்டத்திலே கூட 48 வரை திருத்தங்கள் வந்துவிட்டன. ஆனால் அந்த திருத்தங்கள் ஏன் என்று நாங்கள் கேட்கவில்லை. இன்னமும் திருத்தங்கள் புதியதாக வரலாம். நாட்டினுடைய வளர்ச்சிக்கேற்ற எண்ணங்கள் வளர்கிறபோது, அந்த எண்ணத்திற்கு ஏற்றவாறு சட்டங்களைத் திருத்திக் கொண்டு போவதுதான் எதிர்கால சமுதாயத்தினருக்கு ஏற்றவாறு காரியங்களை ஆற்றுகிறோம் என்று கருத்திலே, இதிலே இருக்கிற நல்லவைகளை, சாதக பாதகங்களைப் பற்றித்தான் நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர, திருத்தங்களே கூடாது என்பதல்ல. ஆகையினால் இந்தத் திருத்தங்கள் புதியதும் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். அவர் மட்டும் அல்ல, எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியிலே சொன்னார்கள், கம்யூனிஸ்ட் கட்சியிலே சொன்னார்கள்; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொன்னார்கள்; அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினர் கூட சொன்னார்கள் ஓட்டு என்பது ஒரு பாவச் செயல் என்று சொன்னார்கள்; ஓட்டு போடுவது பாவச் செயல்—அவர்கள் சொன்னதை சொல்கிறேன். ஓட்டுப் போடுவதை பாவச் செயல் என்று யார் சொன்னார்கள் தெரியுமா? நெப்போலியன் சொல்லியது அது. ஹிட்லர் சொல்லியது அது. சர்வாதிகாரிகள்—சர்வாதிகார நாட்டிலே இருப்பவர்கள் ஓட்டுப்போடுவதை பாவச் செயல் என்று சொல்வார்கள். ஆனால் இங்கே நம்முடைய ஜனநாயக நாட்டிலே பாவம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) ஓட்டை வாங்குவதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டி, அப்படி ஓட்டு போடுவது, ஓட்டுப்போடுவது பாவச் செயல் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதுதான். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் மிக நல்ல நோக்கத்தோடுதான் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப் பட்டிருக்கிறது என்று,







இப்படிப் பல விஷயங்களைப் பற்றி எலலாம் நீங்கள் சொல்கிறபோது, அவைகளுக்கெல்லாம் நான் பொதுவாக பதில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், எவ்வளவு தூரத்திலே இந்த மதுக் கடைகளை வைக்க வேண்டும் என்பது பற்றி சொல்கிறபோது பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் அருகாமையில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். சட்டத்திலே மிகத் தெளிவாக போடப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையில் இருக்கக்கூடாது. கல்லூரிகளுக்கு அருகாமையில் இருக்கக்கூடாது. விடுதிகளுக்கு அருகில் இருக்கக்கூடாது. கோயில்களுககு அருகில் இருக்கக் கூடாது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

அது மட்டும் அல்ல, இவைகளிடமிருந்து 500 மீட்டர்கள் தள்ளி, இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படி எங்காவது தவறு நடந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தால் அதை நீக்குவதற்கும் உடனேயே நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அவர்கள் கூட ஒரு முறை அவர்களுடைய இடத்திலே புரசைவாக்கம் பகுதியிலே ஒரு கடையைப்பற்றி இப்படி சுட்டிக் காட்டியவுடன், அவர்கள் சொன்னவுடனேயே அது பற்றி கேட்டு அந்தக் கடையை நீக்க முயற்சி செய்தோம். ஆனால் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு சென்று தடை உத்தரவை வாங்கிவிட்டார்கள்......

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாண்புமிகு இளைய பெருமாள் அவர்கள் சொன்ன அந்தக் கடை இன்னும் புரசைவாக்கம் பகுதியிலேருந்து அகற்றப் படவில்லை. கடை நடந்து கொண்டுதான் இருக்கிறது. சுற்றி 4 பெண்கள் பள்ளிக்கூடங்கள், 4 ஆண்கள் பள்ளிக்கூடங்கள், கோயில் எல்லாம் இருக்கின்றன. இதை அந்தப் பகுதியிலே இருப்பவன் என்கிற முறையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சட்டத்தினைப் பற்றிச் சொன்னார்கள். இத்தனை அடிக்குப் பக்கத்திலே, இருக்கக்கூடாது என்றும், பள்ளிக்குப் பக்கத்திலே, கல்லூரிக்குப் பக்கத்திலே, மசூதிக்குப் பக்கத்திலே இருக்கக்கூடாது என்றும் சொன்னார்கள். ஆனால் அந்த சட்டம் சட்டமாக இருக்கின்றதே தவிர தமிழ்நாடு பூராவும் பரவலாக இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக கடைகள் இருப்பது நமக்குத் தெரியும். எனவே

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் தீவிரப்படுத்தி அவற்றை அப்புறப்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதுதான் இந்த அவையின் கேள்வியாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரசைவாக்கத்திலே உள்ள கடை எடுக்கப் பட்டதுதான். ஆனால் நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே தடையுத்தரவு பற்றிச் சொன்னார்கள் தடை உத்தரவு பற்றி விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. திரு. திருவேங்கடம் கூட இங்கே படித்துக் காட்டினார்கள். (குறுக்கீடு)........ சிறப்புரிமம் வழங்குவதற்குச் செலுத்துகின்ற தொகை அல்லது கட்டணம் என்று அதிலே சொல்லப்பட்டிருக் கின்றது. சாதாரணமாக செலுத்தப்படுகின்ற தொகையை அல்லது கட்டணத்தை வசூலிப்பதற்காக அல்லாமல் சிறப்பு உரிமம் வழங்குவதற்கான கட்டணத்தை வசூலிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையைப் பொறுத்து மட்டுமே என்று போடப்பட்டிருக் கின்றது. ஆகவே அரசுக்கு வரவேண்டிய வருமானத்தை வசூல் செய்வதில் மட்டும்தான் இந்தத் தடையுத்தரவு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே (1972–73 ஆம் ஆண்டிலேயே வரி வசூல் செய்வதில் ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்தாத காரணத்தால் இன்றைக்கு 300 இலட்சம் ரூபாய் அரசுக்கு வரவேண்டியது பாக்கியாக இருக்கிறது. எனவே இதனை நல்ல நோக்கத்தோடு எண்ணிப் பார்க்கவேண்டும். சாதாரணமாக கடைகளை ஏலம் போடுகின்ற போது 3 மாத கிஸ்தி கட்டவேண்டும். அதை அவர்கள் கட்ட வில்லை என்றால், அவர்கள் சம்பந்தப்பட்ட வகையிலே நீதிமன்றத்திலே தடையுத்தரவு கொடுத்துவிட்டார்கள் என்றால் அவர்கள் பணத்தைக் கட்டாமலே 12 மாதங்கள் கடையை நடத்திவிட்டு பணத்தை சம்பாதித்துக் கொண்டு போய் விடுவார்கள். எனவே அரசுக்கு இருக்கின்ற ஒரே ஒரு வாய்ப்பு அந்த 3 மாத பணத்தை மட்டும்தான் நாம் வைத்துக்கொள்ள முடியும். எனவே இங்கே அரசுக்கு வரவேண்டியதை வசூலிப்பதை பொறுத்தவரையில் அதற்கு தற்காலிகமாகவோ, நிரந்தர மாகவோ தடை இருக்கக்கூடாது என்பதைத் தவிர மற்ற எந்தத் தடையும் அவர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்த நல்ல நோக்கத்தில் தான் இதைக் கொண்டுவந்திருக்கின்றது என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இன்றைக்கு 168 தடை உத்தரவுகள் மொத்தம் உள்ளன. அவற்றின் காரணத்தால் 2,23,67,658 ரூபாய் இன்றைக்கு பாக்கியாக இருக்கின்றது. எனவே இந்தத் தடையினை தாமதப்





படுத்திக் கொண்டே போனால் உயர்நீதி மன்றம் தடை கொடுக்கும் என்ற ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு எல்லோருமே தடையை வாங்கிவிட்டால் அவர்கள் 12 மாதம் கடையை நடத்திவிட்டு சென்றுவிடுவார்கள். அவர்கள் முன்பணமாகக் கட்டிய அந்த மூன்று மாத கட்டணத்தைத் தவிர மற்றவை வராமல் போய்விடும். எனவே அரசுக்கு வருமானம் வருவதைத் தடுக்கின்ற வகையில் தடை கொடுக்கக்கூடாது என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்தச் சட்டத்தை முதலிலேயே கொண்டு வரவில்லை. அதனால் இன்றைக்கு 168 வழக்குகளின் மூலம் கிட்டத்தட்ட 2¼ கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டிய பாக்கி இருப்பதன் காரணத்தால் இந்த அரசு இதைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை எல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று மட்டும் நான் இதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20)

அடுத்து இங்கே சொல்கிறபோது, நம்முடைய மாநிலத்தி லிருந்து கடத்தி செல்கிறபோது நமக்கு ஆயத்தீர்வை குறைந்து விடுகிறது. அது மாநிலத்திற்குள்ளே வருகிறபோது உள்ளே எந்த மது வந்தாலும் முன்கூட்டியே 4 தினங்களுக்கு முன்னாலே அறிவித்து விடவேண்டும். எவ்வளவு வருகிறது, எந்த லாரியில் வருகிறது, எந்தப் பகுதிக்கு போகிறது என்பதை எல்லாம் அவர்கள் சொல்லவேண்டும். அவர்கள் எடுத்துச் செல்வதற்கு அனுமதி உண்டு, எடுத்துக்கொண்டு போகலாம். கொண்டு வருகிற மதுவுக்கு ஆயத்தீர்வை இல்லாமல் இங்கே இறக்கி விட்டால் நமக்கு நஷ்டம் வரும் என்பதால் தான் இதை போட்டிருக்கிறோம். இந்த அவசரச் சட்டம் டிசம்பர் மாதம் வந்தது. இங்கே நீங்கள் பார்த்தால் நவம்பர் மாதம் இந்த சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலே இந்த இந்தியாவிலே உற்பத்தி செய்கிற அயல்நாட்டு மதுவகையறாக்களில் ஒரு மாதத்தில் ரூபாய் 98 லட்சம் தான் வசூல் ஆகியிருக்கிறது. இதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனமாகக் கேட்கவேண்டும். அவசரச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலே நவம்பர் மாதம் 98 லட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம். அவசரச்சட்டம் கொண்டுவந்த பிறகு, நவம்பர் மாதம் கொண்டு வந்தால் டிசம்பர் மாதம்தான் அதனுடைய எதிர்பார்ப்பு இருக்கும். அதற்கு பிறகு 98 லட்சம் ரூபாய் என்பது டிசம்பர் மாதத்தில் 157 லட்சம் ரூபாய். ஜனவரி மாதத்தில் 149 லட்சம் ரூபாய் வசூல் ஆகியிருக்கிறது. தடை உத்தரவு வந்தபிறகு, அரசினுடைய அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்லக்கூடாது என்று வந்த பிறகு இவ்வளவு லாபம் வந்திருக்கிறது. இந்த லாபத்தை அரசு சம்பாதிக்கவேண்டும் என்று நீங்கள் கருதினால் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள், அந்தப் பணம் மாதத்திற்கு ஒரு கோடி ரூபாய்

போனால் போகிறது, திருத்தம் தேவையில்லை என்று சொன்னால் நீங்கள் எதிர்க்கலாம் அது உங்கள் விருப்பம். உங்களுக்கு உரிமை இருக்கிறது. கொண்டுபோகவே கூடாது என்று சொல்லவில்லை. கொண்டு போவதற்கு முன்னால் சொல்லிவிட்டு போங்கள் என்று சொல்கிறோம் நம்முடைய மாநிலத்திற்கு உள்ளே வருகிற போது சொல்லிவிட்டு வாருங்கள், எந்த குறைபாடும் இல்லை. நீங்கள் எல்லாம் இதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

அதேபோல் இன்றைக்கு சொல்கிறபோது எங்கே பார்த்தாலும் கள்ளச்சாராயம், கள்ளச்சாராயம் என்று சொல்கிறார்கள். அதை எல்லாம் போக்க வேண்டும் என்பதற்காகதான் இப்படிப் பட்ட நிலைமைகளை கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கி றன. அந்த வழக்குகளை எல்லாம் அரசு செம்மைப் படுத்துகிறது, அதனால் கள்ளச்சாராயம் நிச்சயமாக ஒழியும் என்பதை நான் நிச்சயமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமானகான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும். என்பதில் கருத்து வேறுபாடு எங்களுக்கு இல்லை சொல்லப்போனால் இந்த மதுவகையறாக்களின் இன்னும் அவர்கள் கட்ட வேண்டிய அந்தத் தொகையை அரசாங்கம் வசூல் செய்வது குறித்தும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் எங்களுக்கு கிடையாது. ஆனால் அதே நேரத்தில் மதுக்கடைகளை நடத்து கிறவர்கள் அனுமதி பெற்று மது கடைகளை நடத்துகிறார்கள். அப்படி நடத்துகிறபோது அதிலே சில காரணங்களால் நஷ்டம் ஏற்படுகிறது. உடனே அரசாங்கத்திற்கு முறையீடு செய்கிறார்கள். Suitabili y of the place இந்த இடத்திலே நாங்கள் தொழில் முறையாக செய்யமுடிவது இல்லை. இடம் மாற்றிக் கொடுங்கள் என்று எல்லாம் விண்ணப்பிக் கிறார்கள். ஆனால் அரசாங்கம் அந்த கோரிக்கைகளை மறுத்து விடுகிறது. அப்படி மறுத்துவிடுகிற காரணத்தால் அந்த வியாபாரம் செய்பவர்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. அப்படி நட்டம் ஏற்படுவதையும் சேர்த்து ஏலம் விட்டு நட்டம் ஏற்பட்ட காரணத்தாலே அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய லாபமும் உங்களாலே பாதிக்கப்படுகிறது. எனவே அரசாங்கத்திற்கு தர வேண்டிய அந்த நஷ்ட ஈட்டையும் நீங்கள் சேர்த்து தரவேண்டும் என்று கேட்பதும், அவர்கள் மாத வாடகை கட்டமுடியாத நிலைமை இருந்தால் அதையும் சேர்த்து நீங்கள் அரசாங்கத்திற்கு அந்த தொகைகள் எல்லாம் தரவேண்டும் என்று வசூலிக்கிற உத்தரவு போடுகிறபோது, அந்த உத்தரவு நியாயம் இல்லை, சரி இல்லை, அதிலே இன்ன இன்ன காரணங்கள் இருக்கின்றன





ஆகையால் வியாபாரத்தை சிறப்பாக நடத்த முடியவில்லை அரசாங்கம் இந்த நஷ்டத்திற்கு காரணம் என்று வாதாடுகிறார். இதை யாரிடத்தில் போய் வாதாடுவது நீதிமன்றத்திற்கு சென்று வாதாடி இந்த உத்திரவை 'ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட்' மூலமாக நீங்கள் உடனே அந்தத் தொகையை வசூலிக்க முயற்சி எடுக்கிறபோது அதை கொஞ்சம் நிறுத்தவேண்டும் என்றும் நீதி மன்றம் விசாரிக்க வேண்டும் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கேட்பது பாதிக்கப்பட்டவருடைய உரிமை ஆகும். நீதியை முழுமையாக தருகின்ற விதத்திலே நீதிமன்றம் வழக்கை முழுமையாக விசாரித்து தீர்ப்பு வழங்குகின்ற வரைக்கும் இடைக்கால உத்தரவு பிறப்பிப்பது என்பது தான் நியாயமானது, முறையானது, இயற்கை நீதியானது. இல்லை என்று சொன்னால் அரசாங்கம் போடுகிற உத்தரவு பாக்கியை செலுத்தியாகவேண்டும், இல்லை என்றால் ஜப்தி செய்வோம். ரெவின்யூ ரெக்கவரி ஆக்ட் வரும் என்று சொன்னால் இவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. ஆகவே அந்த பாதுகாப்பை தடுக்கக்கூடிய இந்த மசோதாவில் ஒரு அம்சம் இருக்கிறது. ஆகவே அதை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறேம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் இங்கே சொல்கிறபோது தெளிவாகத்தான் தெரிவித்திருக்கிறேன். இந்தத் தடையுத்திரவு போடுவதாலே என்ன நிலைமை என்பதைப் பார்க்கவேண்டும். பல்லாயிரக்கணக்கான கடைகளை ஏலம் எடுப்பவர்கள் 3 மாதம் முன்பணம் கட்டியதை விட்டு விட்டு 12 மாதம் வியாபாரம் செய்துவிட்டு அதற்குப் பிறகு கொடுக்காமல் போய்விட்டால் எப்படி வசூல் செய்யமுடியும். இதிலே என்ன ஷரத்து இருக்கிறது. அதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களிடம் எவ்வளவு சொத்து இருக்கிறது என்ற நிலை இருக்குமானால், சொத்துள்ளவர்கள் தான் கடைகளை ஏலத்திலே எடுக்க முடியும் என்ற நிலை வந்துவிடும், அப்போது ஏழை எளியவர்கள் கடைகளை ஏலம் எடுத்து நடத்தமுடியாது. இம்மூலவபிள் புராப்பர்டி இருந்தால்தான் அவர்கள்தான் ஏலம் எடுக்க முடியும் என்ற நிலைமை வரும். சொத்து இல்லா விட்டாலும் ஏலம் எடுப்பதற்கு முன்னால் பணம் கட்டினால் டெபாசிட் கட்டியதைப் போல் 5 மடங்கு கொடுத்தால் எடுக்கலாம் என்ற விதி இருக்கிறது. இந்த விதியை நாம் ஏற்படுத்துவதற்குக் காரணம் வசதியில்லாதவர்கள் ஏழை எளியவர்கள் வியாபாரம் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் சில பேர்கள் முன்பணத்தைக் கட்டிவிட்டு நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்திரவு பெற்று அதற்குப் பிறகு வியாபாரம் செய்தால் — நான் முதலிலேயே சொன்னேன், 1972-73 ஆம் ஆண்டிலே 309 இலட்சம் ரூபாய் பாக்கியிருக்கிறது இன்று வரை வசூலிக்க முடியவில்லை. ஏலம் விடுவதைப் பொறுத்தவரையிலே நாம் முதலிலேயே சொல்லிவிடுகிறோம், அந்த ஊரிலே கடை யார் வேண்டுமானாலும் எடுக்கலாம், ஏலம் போடுகிறோம்.

எவ்வளவு முன்பணம் கட்டவேண்டும். ஒரு கடைக்கும் இன்னொரு கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கவேண்டும், ஏரியா ஆப்பரேஷன் என்ன என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறோம். ஏலம் விடுகிறபோது ஏலம் எடுக்கிறவர்கள் நாம் ஏலம் எடுத்தால் இலாபம் வருமா நட்டம் வருமா என்று யோசித்துத்தான் ஏலம் எடுக்கவேண்டும், ஏலம் எடுப்பார்கள். அதற்குப் பிறகு அவர்கள் தவறு செய்யாமல் காப்பாற்றிக் கொள்வதற்காக இதைச் செய்கிறோமேயல்லாமல் வேறு எந்த நோக்கமும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

எல்லாக் கடைகளிலும் துணைக் கடைகள் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். கள்ளுக்கடைகளில் துணைக் கடைகள் இல்லை. சாராயக் கடைகளுக்கு இருக்கிறது என்றால் மாநிலம் பூராவும் 5163 கடைகள் இருக்கின்றன. ஆனால் எல்லாக் கடைகளுக்கும் துணைக் கடைகள் கொடுக்கவில்லை. மொத்தம் 5163 கடைகள் இருக்கின்றன, அந்த 5163 கடைகளில் 1295 கடைகளுக்கு மட்டும்தான் துணைக் கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில கடைகளுக்கு 1, 2 துணைக்கடைகள், அதற்கு மேலே எங்கேயும் கொடுக்கவில்லை. இந்தத் துணைக்கடைகள் கொடுக்கப்படுவதிலே தவறு இருந்தால் எந்த எந்த ஊர்களிலே அப்படி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் அதைக் கண்டுபிடித்து ரத்து செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். துணைக் கடைகள் கொடுப்பதற்கு எண்ணம் வந்ததற்கு என்ன காரணம் என்றால் ரொம்ப தூரம் குடிப்பதற்காக வந்தால் 3, 4, 5 மைல்கள் எல்லாம் முந்தி நடந்து போனவர்கள் இப்போது 1 பர்லாங் நடப்பதற்குக்கூட கார்வேண்டும் பெருந்து வேண்டும் என்கிறார்கள், அவ்வளவு தூரம் சென்று குடித்து விட்டு அவர்கள் எப்படி பெருந்திலே வருவது? அதனால் சில நேரங்களிலே கள்ளச் சாராயத்தை, மதுவைக் குடித்து விடுகிற நிலைமை ஏற்படுகிறது. அதிலேயிருந்து காப்பாற்றுவதற்காக அந்த நல்ல நோக்கத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நல்ல நோக்கம்தான். 5 ஆயிரம் கடைகளுக்கும் துணைக் கடைகள் கொடுக்கவில்லை. ஆயிரம் கடைகளுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏதோ சில குறிப்பிட்ட ஆயிரம் கடைகளுக்கு துணைக் கடைகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் ஏற்கெனவே ஏலம் விடப்பட்ட போதே அதிகாரிகள் ஏராளமான துணைக் கடைகளை கொடுப்போம் என்று உறுதி அளித்ததாகவும் சொல்லப்படுகிறதே இன்றையதினம் அதிகாரிகள் அல்லது போலீஸ் மட்டத்தில் ஏராளமான இலஞ்சம் இருக்கிறதே, ஏதாவது கட்டணம்



சலுகையை அளிப்பீர்களானால் அரசாங்கத்திற்கு வருமானம் வரும்? இந்த தொல்லையும் போகுமே, அதில் என்ன சிக்கல் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் நல்ல கேள்வியை தான் கேட்பார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும், துணைக்கடைகளை கொடுப்போம் என்று தான் ஏலம் போடுவதற்கு முன்னால் பகிரங்கமாகச் சொல்லப்பட்டது. யார் யார் துணைக்கடைகளை கேட்கிறார்களோ அவர்களுக்கு கொடுத்து வருகிறோம். கேட்பதிலே வியாபார நோக்கம் கொண்டு, முதலிலே சொன்னேனே, 500 மீட்டருக்கு அதிகமான தூரத்தில் இருக்கவேண்டும் என்று சொல்கிறபோது; துணைக்கடைகளை அவர்கள் சரியான இடத்தில் காண்பிப்பது இல்லை. இதுபோன்ற சங்கடத்தைத்தான் சொன்னேன். எங்காவது துணைக்கடைகள் யாருக்காவது தரவில்லை என்றால்; அதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அந்தத் துணைக் கடைகளை சரியான இடத்தில் கேட்டால் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சாராய விலையை குறைப்பது பற்றி அடுத்த ஆண்டு இந்த ஆண்டு முடியாது. ஏனென்றால் ஏலம் எல்லாம் விட்டு விட்டார்கள்; அதிகம்பேர் ஏலம் எடுத்திருக்கிறார்கள்; அடுத்த ஆண்டு 100 மில்லி சாராயம் இந்த விலையில் தான் விற்க வேண்டும் என்று விற்பனை விலை நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, சாராய கடைகள், கள்ளுக்கடைகளுக்கு அனுமதி கொடுக்கிற போது பெண்கள் தண்ணீருக்கு போகக்கூடிய இடங்களிலோ, பள்ளிக்குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்கு போகிற இடங்களிலோ, கோவில்களுக்கு அருகாமையிலே கடைகளை வைக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் கண்டிப்பான உத்தரவை போட்டிருக்கிறார்களா? அப்படி இல்லையென்றால் சட்டவிதிகளிலே இவை சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு முன்பே நான் பதில் சொல்லியிருக்கிறேன். எந்த எந்த இடங்களில் கடைகளை வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இங்கே மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். துணைக்கடைகளை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்; அவர்கள் கொடுத்தாலே தவறு என்று

## 6. அறிவிப்பு

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9–2–1983 (புதன்) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

10–2–1983 (வியாழன்) —காலை–தனியார் அலுவல்கள்.

மாலை–4.00 மணி முதல்–வறட்சி பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம்.

11–2–1983 (வெள்ளி) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

தேவை இருப்பின் பேரவை மாலையிலும் கூடும்.

12–2–1983 (சனி) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 12–40)

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (ஈ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 13–11–1982 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1982) இப்பேரவை நிராகரிக்கிறது"

தீர்மானம் முறையே வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்டத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1983) **ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, கேளிக்கை வரிச் சட்டத்தில் அமைச்சரவர்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வருவதைக் கண்ணை மூடிக்கொண்டு நான் எதிர்க்கவில்லை. சட்டத்திற்குத் திருத்தங்கள் கொண்டு வருவது சில சூழ்நிலைகளைக் கொண்டுதான். காரணம் சட்டங்கள் கைபடாத ரோஜா அல்ல. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கே பலமுறை திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பல்வேறு சட்டங்கள் திருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் சட்டங்கள் திருத்தப்படுவதன் பலன்கள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அந்த அடிப்படையில் திருத்தங்கள் இருந்தால் அவைகளை வரவேற்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது.

காம்பவுண்டிங் டாக்ஸ் என்று சொல்லப்படும் அந்த வரியை திரையரங்குகளின் உரிமையாளர்களுக்கு விதிப்பதற்கு இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. குறிப்பாகச் சில பகுதிகள் என்று சொல்லி, செலக்ஷன் கிரேடு முனிசிபாலிட்டி, ஃபர்ஸ்ட் கிரேடு முனிசிபாலிட்டி, முனிசிபல் டவுன்ஷிப், பஞ்சாயத்து டவுன்ஷிப் ஆகிய இந்தப் பகுதிகளில் உள்ள சினிமாத் தியேட்டர்களுக்கு இந்த காம்பவுண்டிங் டாக்ஸை விதிப்பது முறையாக விஸ்தரிக்கப்படுகிறது. இந்த காம்பவுண்டிங் டாக்ஸ் கொண்டு வரப்படுவதாலே அரசாங்கத்திற்கு இலாபம் இருந்தால் நாங்கள் வரவேற்கிறோம். அந்த அடிப்படையிலே காம்பவுண்டிங் டாக்ஸின் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் வருவதாகவே புள்ளி விவரங்கள் மூலம் தெரிகிறது. ஆகவே காம்பவுண்டிங் டாக்ஸ் சிஸ்டத்தை நான் எதிர்க்கவில்லை. காம்பவுண்டிங் டாக்ஸ் தேவைதான், ஏனென்றால் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது.

(மாண்புமிகு மாற்று தலைவர் தலைமை)

ஆனால் அதேநேரத்திலே, இதிலே காம்பவுண்டிங் டாக்ஸ் என்று சொல்லி விதித்திருக்கின்ற விவரம் பற்றிய விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்

**1983 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் இருக்கக்கூடாது என்று நான் தெளிவாக சொலலியிருக்கிறேன். பள்ளிக்கூடம் மருத்துவமனை, குளம், கோவில். கிறித்துவர்கள், முஸ்லீம்கள் வழிபடுகிற இடங்கள் முதலிய இடங்களுக்கு அருகாமையில் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். எங்கேயாவது மீறி யாராவது வைத்திருந்தாலும் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக அதற்கான நட வடிக்கையை நாங்கள் எடுக்கிறோம். அப்படி நடவடிக்கை எடுத்தால் பலர் உச்சநீதிமன்றத்திற்கு போய் அனுமதி வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள்; தடையுத்தரவை பெற்றுவிடுகிறார்கள் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்-

அதுமட்டுமல்ல, இங்கே சொல்கிறபோது அரசு அதிகாரிகள் குடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசு அதிகாரிகள் யாரும் குடிப்பதில்லை; அதற்கு அனுமதி வழங்குவது இல்லை, எங்கேயோ, ஏதோ தவறு நடந்துவிட்டால் அதை பெரியதாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளுக்கெல்லாம் பதில் சொல்லியிருக்கிறேன். இந்த சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிற போது ஒன்றைக் குறிப்பிட்டேன்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். தமிழ் நாட்டிலே இன்றைக்கு மது அருந்துவதற்காக வழங்கப்பட்ட பெர்மிட்டுகள் எத்தனை? பெர்மிட்டுகள் மூலம் எவ்வளவு வழங்கலாம்? தமிழ் காட்டிலுள்ள மதுக்கடைகள் மூலமாக விற்கப்படுகிற சாராயத்தினுடைய அளவு எவ்வளவு?

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாராயக் கடைக்கு அனுமதி கொடுக்கும் போது, அந்த இடத்திலே பள்ளிக்கூடம் அல்லது, ஏனைய கோவில் போன்றவைகள் இருந்தால், புகார் வந்தால் அதைப் பரிசிலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஊத்துக்குளி ஆர், எஸ். நகரத்தில், பள்ளிக்கூடத்திற்குச் சமீபத்திலேயே ஒரு....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை எல்லோரும் பேசியாயிற்று. எல்லா இடங்களிலும் பள்ளிக்கூடம் இருக்கிறது

திரு. ப. பொன்னுரங்கம்: என் தொகுதியில் பெண்கள் கழிப்பிடம் இருக்கிறது. அதன் எதிரிலேயே சாராயக்கடை இருக்கிறது. அதையாவது அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



திரு. என். ஏ. பூங்காவனம்: பேரவைத் துணைத் தலைவர் வர்களே, நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் நிதாக கடைகள் விடுகிறபொழுது, பிராஞ்ச் கடை என்று யிரம்தான் விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார் ர். ஆனால், ஒரு கடை விடுகிறபொழுது, அந்தக் கடைக்கு ரண்டோ, மூன்றோ, என்று நீட்டித்துச் சொல்வார்கள். ப்படிச் சொல்வதற்கு, 3 பிராஞ்ச் கடை அல்லது அதற்குப் க்கத்திலே ஒரு கடை என்று சொன்னால், 15 ஆக வைத்துக் காள்வார்கள். அந்த நிலைமை காரணமாகத்தான் கள்ளச் ாராயம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது விவாதமாகப் போகிறது, வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கானின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

> ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம். பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.3/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

பொழுது போடப்பட்டிருக்கும் காம்பவுண்டிங் டாக்ஸ், செலக்ஷன் கிரேடு முனிசிபாலிட்டிக்கு 31 சதவீதம் என்று போடப்பட்டிருக்கிறது; ஃபர்ஸ்ட் கிரேடு முனிசிபாலிட்டிக்கு 30 சதவீதம் என்று போடப்பட்டிருக்கிறது. வரியில்லாமல் சர்க்கார் நிர்வாகத்தை நடத்த முடியாது என்பது உண்மை. அரசாங்கத்திற்கு வருமானம் வேண்டும்தான். அதுவும் உண்மை. ஆனால் இந்த வரியைச் செலுத்தும் அளவிற்குத் திரையரங்குகளின் உரிமையாளர்கள் எல்லாவிடங்களிலேயும் இருக்கிறார்களா என்றால் இடையாது.

உதாரணமாக, புதுக்கோட்டையை எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு அமைச்சருடைய ஊருக்குப் பக்கத்தில் இருக்கின்ற ஊர் அது. பட்டுகோட்டைக்குப் பக்கத்திலிருக்கின்ற புதுக்கோட்டையில் உள்ள நிலைமையைப்பற்றி நம்முடைய அமைச்சரவர்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்ற நிலைமை இல்லை. பல தியேட்டர்கள் மூடப் பட்டு உள்ளன. என்ன காரணம் என்றால், அந்த ஊரிலே பல தியேட்டர்கள் இருக்கின்றன, பக்கத்திலேயும் பல தியேட்டர்கள் இருக்கின்றன. அங்கே 80,000-க்கு மேல் ஜனத்தொகை கிடையாது. ஆகவே, அங்கே உள்ள சினிமாத் தியேட்டர் உரிமையாளர்களுக்கு நல்லமுறையில் போதுமான வருமானம் வருகிறதா என்றால் இல்லை. போதுமான வருமானம் வராததற்குக் காரணம் அங்கே ஜனத்தொகை அதிகமாக இல்லை; தியேட்டர்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த சீட்டுகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமென்றால் அதற்கு சுதந்திரமாக அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் இப்பொழுது விதித்திருக்கின்ற காம்பவுண்டிங் டாக்ஸ் விகிதாச்சார அளவிற்கு அவர்கள் பணம் கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, வரிப்பளு கடுமையாக இருக்கிறது. அதனால் அரசாங்கம் போடும் வரியைச் செலுத்துகின்ற பேயிங் கெப்பாசிட்டி செலுத்தும் தன்மை இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, மனிதாபிமான உணர்வோடு அவர்கள் கட்டுகின்ற சூழ்நிலையில், இந்த இடமானாலும் சரி, செலக்ஷன் கிரேடு முனிசிபாலிட்டியாக இருந்தாலும் ஃபர்ஸ்ட் சரி, கிரேட்யூனிஸிபாலிடியாக இருந்தாலும் சரி, முனிசிபல் டவுன்ஷிப்பாக இருந்தாலும் பஞ்சாயத்து டவுன் ஷிப்பாக இருந்தாலும் சரி, அந்த வரி விகிதத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த வரிவிகிதத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்ற நேரத்திலே, எந்த அளவாக இருந்தாலும் 25 சதவீதத்திற்கு மேலே வரிவிதிப்பு இருக்கக் கூடாது என்பதையும் அமைச்சருடைய கவனத்திற்கு நான் இந்த நேரத்தில் கொண்டுவரவிரும்புகிறேன்.

அதைப்போலவே, இந்த வரிவிதிப்புக்கு எத்தனை காட்சிகள் என்று கணக்கிடும்பொழுது 21 காட்சிகளைத்தான் எடுக்க வேண்டும். காரணம், ஏழுநாட்களுக்கு தினசரி 3 காட்சிகள் என்றால் 21 காட்சிகள் என்று கணக்கெடுக்க வேண்டும். ஆனால் 24 காட்சிகள் என்று கணக்கில் எடுத்துக்கொள்கிறார்கள்.



இது எப்படி தவறாகிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். அமைச்சருக்கு குன்னூர் தெரியும், ஊட்டி தெரியும். இன்றைக்கு அந்த குன்னூரிலே, ஊட்டியிலே நான்கு ஷோக்கள் நடத்த முடியாது. மூன்று ஷோக்கள் கூட நடத்த முடியாது. காரணம் அங்கே இருக்கின்ற கிளைமேட்டிவ் கண்டிஷன், ஒரு காரணம். இரண்டாவதுகாரணம், ஜனத்தொகை அதிகமாக இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் 24 காட்சிகளை ஊட்டியையும், குன்னூரையும் அடிப்படையாக வைத்து நீங்கள் கம்பவுன்டிங் டாக்ஸ் வைக்கிறோம் என்று சொன்னால் சட்டியிலே இருந்தால்தானே அகப்பையில் வரும்-அது சரியாகாது எனவே இந்த கம்பவுன்டிங் டாக்சை நீங்கள் அமல் நடத்துகிறபோது இந்த மாதிரியான கணக்கையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகையினாலே பல்வேறு ஊர்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் சரி, பல்வேறு நகரங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் சரி எல்லா இடங்களிலும் ஒட்டுமொத்தமாக 21 காட்சிகளை அடிப்படையாக வைத்து 25 சதவிகிதம் கம்பெளண்டிங் டாக்ஸ் என்ற முறையிலே கணக்கிட்டு செய்வதுதான் சரியாக இருக்குமே தவிர, காமதேனு என்பதற்காக தவறான வரிகளை அவர்கள் மீது சுமத்தக் கூடாது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது இப்போது பல்வேறு தியேட்டர்களிலே அவர்களுடைய வருமானத்திற்கு தகுந்தபடி நட்டங்கள் ஏற்படக்கூடாது என்ற காரணத்தாலே சீட்டுகளை குறைக்க வேண்டுமென்று உரிமையாளர்கள் கோருகிறார்கள். ஆனால், அந்த உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சீட்டுகளுடைய எண்ணிக்கை குறைக்கின்ற அளவுக்கு அரசாங்கம் அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே இன்னொன்றையும் நான் சொல்ல மறந்துவிட்டேன். 25% கம்பவுண்டிங் டாக்ஸ் நீங்கள் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிற நேரத்தில் அதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்தால்தான் சரியாக இருக்க முடியும். காரணம் நீங்களே ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கிறீர்கள். அதாவது 15-11-82 லிருந்து இந்த கம்பவுண்டிங் டாக்ஸ் உயர்த்தப்படும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அல்லது வரி வசூலிக்கப்படும் என்று சொல்கிறீர்கள். 15-11-82லிருந்து கட்ட வேண்டும். ஆனால் நான் கேட்பது அதே முறையிலே வரி விகிதாச்சாரத்தை நீங்கள் மறு பரிசீலனை செய்து 25% தான் போட வேண்டும் என்று கேட்கிற போது அதற்கும் நீங்கள் இதே ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்தால் சரியாக இருக்குமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே ரேட் ஆப் அட்மிஷனும் பொருத்த மட்டிலே இன்றைக்குத் தியேட்டர்களுக்கு உரிமை இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, இங்கே பிலிம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்று இருப்பதாக நான் கேள்விப் படுகிறேன். அதாவது திரைப்படத்துறை முன்னேற்றத்திற்காக ஒரு கழகம் இருக்கிறது. அதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் துறையிலே ஈடுபட்டுள்ள அருமைச் சகோதரர்கள் எல்லாம் ஆளுங்கட்சியிலே இருக்கிறார்கள். நான் கேட்கிறேன் தமிழகத்திலே எடுக்கப்படுகின்ற படங்களுக்கு நீங்கள் என்ன ஊக்கம் செய்திருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். உதாரணமாக கர்நாடகத்திலே அங்கே எடுக்கக் கூடிய படங் களுக்கெல்லாம் இன்றைக்கு 50 சதவிகிதம் வரி விதிவிலக்கு வழங்கியிருக்கிறார்கள். மகாராட்டிரத்திலே லோக்கலாக எடுக்கப்படுகின்ற படங்களுக்கு முயற்சிகள் செய்கின்ற விதத்திலே அவர்களை ஊக்கப்படுத்துகின்ற விதத்திலே நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். ஆனால் பிலிம் இன்டஸ்டிரி டெவலப் மென்ட் கார்ப்பரேஷன் என்று நீங்கள் வைத்திருக்கிறீர்களே, அதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்களே, அதன் மூலமாக எந்தவிதமான காரியங்களும் செய்யப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது என்பதை இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு திரை உலகம் நல்ல முறையிலே வளர்ந்து கொண் டிருக்கிறது. இன்றைக்கு திரை உலகத்தை பயன்படுத்தி நல்ல பல கருத்துக்களை எல்லாம் சொல்லுகின்ற படங்கள், மக்களுக்கு பயன்படுகின்ற படங்கள் எல்லாம் எடுத்திருக்கிறார்கள். கருத்துகள் வேண்டுமானால் ஒத்துக்கொள்ள முடியாமல் இருக் கலாம். அது வேறு விவகாரம். நிறைய தமிழ் படங்கள் இன்றைக்கு தமிழகத்திலே தயாராகின்றன. இன்னும் சொல்லப் போனால் ஆளும் கட்சியிலே இருக்கக்கூடிய நண்பர்கள் எல்லாம் கூட சிறப்பாக படங்களையெல்லாம் எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். நம்முடைய சமரசத்தைப் போன்றவர்கள் எல்லாம் படங்களிலே நடிகர்களாக வருகின்ற அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் வரவேற்கத் தக்க அம்சங்கள் தாம். தமிழ்த் திரைப்படங்கள் வளர வேண்டும்; ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வரவேண்டும். தமிழ் பண்பாடு சித்தரிக்கப்பட வேண்டும். கருத்துகள் சொல்லப்பட வேண்டும். இவைகள் எல்லாம் சரிதான்

ஆனால் அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் அமைச் சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அண்மையிலே கூட ஒரு படம் பார்த்தேன். இது பில்லுக்கு விரோதமானதாக நம்முடைய மாற்றுத் தலைவர் அவர்கள்

யோடு இருப்பதாகச் சொல்கிறீர்கள். மாநில சுயாட்சிக்கு குரல்
கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ரொம்பவும் மகிழ்ச்சி
தான். ஆனால் இன்றைக்கு சென்சார் போர்ட் என்று இருக்
கிறதே இது யார் அதிகாரத்தில் இருக்கிறது. மத்திய
சர்க்காருடைய அதிகாரத்தில் இருக்கிறது. அதற்கு அதிகாரி
களை நியமிப்பது யார். மத்திய சர்க்கார்தான், அதிகாரிகளை
நியமிக்கிறார்கள் இங்கே கோடம்பாக்கத்திலே சென்னையிலே
படம் எடுக்கப்படுகிறது. நடிப்பவர்கள் இங்கே இருப்பவர்கள்.
நம்மவர்கள். படம் நம்முடைய தமிழ்படம். தமிழ்ப்பண்பாட்டை
கலாசாரத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது.
ஆனால் இன்றைக்கு அதை சென்சார் செய்வது யார் என்று
கேட்டால் மத்திய சர்க்கார் நியமிக்கக்கூடிய அதிகாரிகள். அவர்
களுக்கு கலை உணர்வு ஏதாவது இருக்கிறதா? எது ஆபாசம்,
எது சரி என்று கூட தெரியாத நபர்கள்தான் இன்றைக்கு
சென்சார் போர்டிலே இருக்கிறார்கள். சென்சார் போர்டிலே
மத்திய சர்க்கார்தான் அதிகாரிகளை அனுமதிக்கிறது. தரமான
படங்களை எல்லாம், ஆபாசமான படங்கள், அரசியல் கருத்துக்
களை எடுத்துச்சொல்லுகின்ற படங்கள் என்று தடை விதிக்கக்
கூடிய அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. ஆகவே
இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இங்கே தமிழகத்திலே
தயாரிக்கக்கூடிய படங்களை சென்சார் செய்கின்ற அதிகாரம்
தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இருக்கவேண்டும். இந்த
சென்சார் போர்டு தமிழக சர்க்காருக்கு வந்தாக வேண்டும்.
மாநில சர்க்காருக்கு வந்தாக வேண்டும். மாநில சுயாட்சிக்கு
குரல் கொடுக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் இதற்காகவும் குரல்
கொடுத்தால் இவர் மாநில சுயாட்சியை உளப்பூர்வமாக நேசிப்
பதாகப் பொருள். இல்லை என்றால், ஆந்திராவிலே என். டி.
ராமாராவ் பெற்றிருக்கிற வெற்றியும், இங்கே ஜனதா,
ஹெக்டே அவர்கள் கர்நாடகத்திலே சமீபத்திலே பெற்றிருக்கிற
வெற்றியும், பிரதமர் இந்திரா அம்மையார் அவர்களின்
தற்காலத் தோல்வியும் ஏதோ உங்களுக்கு ஒரு உற்சாகத்தைக்
கொடுத்திருக்கிறது. ஆகையினாலே, மக்களை திசை திருப்பு
வதற்காக மாநில சுயாட்சி என்று பேசுகிறோம் என்று திசை
திருப்புகின்ற முயற்சியாக இருக்குமே தவிர அது உண்மையிலே,
அந்த உணர்வு இருக்குமானால், சினிமாத் துறையிலே இருக்கக்
கூடிய சென்சார் போர்ட் மாநில சர்க்காருக்கு வரவேண்டும்.
அதற்கு அமைச்சர் அவர்கள் போர்க்குரல் எழுப்பவேண்டும்.
முடிந்தால் பதவியைக்கூட ராஜினாமா செய்து போராடுவதற்கு
தயாராக இருக்க வேண்டும். ஆக இவ்வளவு பிரச்னைகளை....
(குறுக்கீடு).

திரு. ஆர். மணிமாறன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்
களே, திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலே இருந்தபோதும்
மத்திய சர்க்காருடைய நேரடி நிர்வாகத்திலேதான், மத்திய
சர்க்கார் யாரை நியமித்தார்களோ அவர்களை வைத்துக்





கொண்டுதான் சென்சார் போர்ட் இயங்கி வந்தது. எங்களுக்கு
எல்லாம் வழிகாட்டியாக அன்றைக்கு நீங்கள் பதவியைவிட்டு
விலகி இந்த மாநில சர்க்காருக்குத்தான் இந்த சென்சார்
போர்ட் நிர்வாகம் வரவேண்டுமென்ற அளவிற்கு ஒரு முன்
உதாரணமாக திகழ்ந்து இருந்தால் எங்களுக்கு வழிகாட்டி
யாக இருந்து இருக்கும் என்பதற்காகத்தான் இதை நான்
சொல்ல விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, தைப்போன்ற ஆரோக்கியமான வாதங்களை
நான் வரவேற்கிறேன். நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு
மணிமாறன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள்.
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற
போது ராஜமன்னார் கமிட்டி நியமித்து இங்கே மாநில
சுயாட்சி, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார் உறவுகள் பற்றி
விவாதித்து அவர்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பித்து அந்த
அறிக்கையின் மீது தமிழ்நாடு சட்டமன்றத்திலே மாநில
சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி, அந்த அறிக்கையின் மீது
தமிழ்நாடு சர்க்கார், ஒரு அறிக்கை கலைஞர் காலத்திலே
வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது...

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சோமசுந்தரம்: பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, புல் அட்டானமி பார் தி ஸ்டேட்
என்பது எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக வந்தபோது
மட்டுமே கொண்டுவரவில்லை. நீதிக்கட்சி இருக்கிறபோதேகூட
அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நீதிக்கட்சியைப் பற்றி
உங்களுக்குத் தெரிந்திருக்கும். புல் அட்டானமி பார் தி ஸ்டேட்
என்று ஒரு தீர்மானத்தை அப்போதே போட்டிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாநில சுயாட்சி—ஸ்டேட் அடானமி என்பது வேறு.
டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ் என்பது வேறு. நீதிக் கட்சி
கேட்டு இருப்பது, ஸ்டேட் அடானமியா அல்லது டிசென்ட்ரலை
சேஷன் ஆப் பவர்ஸா என்று கேட்டால், அரசியல் சட்டத்திலே
மாநிலங்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டும்,
மத்திய சர்க்காருக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க
வேண்டும் என்று வரையறுக்கப்படுவதுதான்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சோமசுந்தரம்: நாம் இதைப்பற்றிப்
பேசிக்கொண்டே போனால் காலம் போதாது.
ஆனால் இப்போது இரட்டை ஆட்சி முறை வந்து இருக்கிற
போது, அதை எதிர்த்து மாநிலங்களுக்கு அதிகாரம் வேண்டும்
புல் அடானமி பார் தி ஸ்டேட்—என்ற வார்த்தைகளைப்
போட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

கருதக் கூடாது. நல்ல கருத்துகள் எப்படி சொல்லப்படுகிறது என்பதற்காக—கர்நாடகாவை நீங்கள் பின்பற்ற வேண்டும். மஹாராட்டிரத்தை நீங்கள் பின்பற்ற வேண்டும். பிலிம் இண்டஸ்ட்ரி டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனை வைத்து அதற்கு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதிலே அர்த்தம் கிடையாது என்பதற்காக சொல்கிறேன். அந்த படங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். நமக்கு எதிரான கருத்துகளை கூட சொல்லலாம். அது வேறு விவகாரம். அரசாங்கத்திற்கு ஆதரவான கருத்துகளை சொல்கிறார்களா எதிரான கருத்துகளை சொல்கிறார்களா என்பதல்ல முக்கியம். நல்ல படங்களை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். அதிலே அரசியல் கூட இருக்கலாம். படங்களிலே கூட சில படங்கள் அரசியல் கருத்துக்களோடு கூட இருக்கலாம். அந்த பார்வை சர்க்காருக்கு இருக்கக் கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-50)

அண்மையிலேகூட ஒரு படம் பார்த்தேன். அந்தப் படத்திலே ஒரு நல்ல பாட்டுகூட எங்கள் பகுதியைச் சேர்ந்த தோழர் அருமைச் சகோதரர் கங்கை அமரன் அவர்கள் கூட எழுதியிருக்கிறார்கள். அந்த பாடல் ரொம்ப சிறப்பான பாடல். இதிலே ஆளும் கட்சி வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அண்ணே அண்ணே, சிப்பாய் அண்ணே என்ற வரியிலே துவங்குகின்ற அந்தப் பாடல் நம்ப ஊரு நல்ல ஊரு, இப்போது கெட்டுப் போச்சு அண்ணே என்ற வரியோடு, சொல்லாவிட்டால் வெட்கக்கேடு, சொன்னால் மானக்கேடு என்று சொல்லிவிட்டு ஆளாளுக்கு நாட்டாண்மை செய்கிறார்கள், ஆளாளுக்கு அதிகாரம் வந்துவிட்டது. $1\frac{1}{2}$ அணா காய்கறியை $1\frac{1}{2}$ ரூபாய் ஆக்கிப்போட்டார்கள் என்று சினிமாவிலேகூட இந்த நாட்டு நடப்புகளை எல்லாம் அற்புதமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய அணுகுமுறை தப்பாக இருக்குமானால் அவர்களை எப்படி நீங்கள் ஊக்கப்படுத்த முடியும். ஆளாளுக்கு நாட்டாண்மை செய்கிறார்கள், ஆளாளுக்கு அதிகாரம் பண்ணுகிறார்கள், $1\frac{1}{2}$ அணா காய்கறியை $1\frac{1}{2}$ ரூபாய் ஆக்கிப் போட்டார்கள் என்று கோழி கூவுது என்ற சினிமாப் படத்திலே சகோதரர் கங்கை அமரன் பாடினார், நீங்கள் எப்படி இதற்கு ஊக்கப்படுத்த முடியும். உங்களைத் தாக்குவதாக நீங்கள் கருதலாம். அப்படிக் கருதக்கூடாது. இன்னும் சொல்லப் போனால், நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்றைக்கு இந்த பிலிம் இன்டஸ்ட்ரிஸ் உண்மையிலே பயன் உள்ளதாக இருக்கவேண்டுமென்று சொன்னால் நீங்கள் அதை ஊக்கப்படுத்த வேண்டாமா? நான் கேட்கிறேன். அடுத்து, அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மசோதாவிலே இன்னொரு முக்கியமான அம்சம், சென்சார் சம்பந்தமானது மிகவும் மோசமாக இருக்கிறது. நான் கேட்கிறேன் இங்கே கூட மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மை

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மன்றத்தின் அவர்கள் மாநில சுயாட்சி குறித்து விளக்கம் அமைச்சர் கொண்டு இருக்கிறார்கள் அந்தக் கருத்து அளித்துக் படவில்லை. மகிழ்ச்சி. ஒன்றைத் தெரிவித்துக் மறுக்கப் கிறேன். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். கொள் அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்வது அல்லது ஆகாது என்று கரு கிறேன், அதிகாரங்கள் மாநில சுயாட்சி வேண்டும் என்பதிலும், அல்லது பரவலாக்கப்பட அதிகாரங்கள் பெறவேண்டும் மாநிலங்கள் என்பதிலும் அதிக இருக்கின்றன. இப்போது அதிக விந்தியாசங்கள் என்று கேட்கலாம். அதிகாரங்கள் அதிகாரங்கள் வேண்டும் வேண்டும் என்று கேட்கலாம், பரவலாக்கப்பட மத்திய சர்க்கார் கொடுத்து விட்டு, ஆனால் இன்றைக்கு சாதாரண ஒரு சட்டத்தின் மூலம் அதை மாற்றிவிட முடியும். நாளைக்கு ஆகவே, சொல்கிறேன், மத்திய சர்க்காருக்கு என்று அதிகாரங்கள் வரையறுக்கப்படவேண்டும். குறிப்பாக, வெளிநாட்டு உறவு, போக்குவரத்து, கரன்சி, இது மாதிரி சில முக்கியமான அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக்கொண்டு, மீதி இருக்கும் அதிகாரங்களை விட்டுவிட்டு, ஆஸ்திரேலியா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் உள்ளது போல் மாநிலங்களுக்கு கொடுக்கவேண்டும். இன்னும் சொல்லப் போனால், அவைகள் எல்லாம் மாநிலங்களுக்கு இன்னின்ன அதிகாரங்கள், மத்திய அரசுக்கு இன்னின்ன அதிகாரங்கள் என்று 'டிமார்கேட்' செய்து, வரையறை செய்து அரசியல் சட்டத்தி லேயே எழுதி வைத்து விட்டால், அதிலே யாரும் உள்ளே நுழைய முடியாது.

ஸ்டேட் அடானமி என்று சொல்கிறோம். அதைப்பொறுத்த வரையில் மகிழ்ச்சி. தற்போது திரைப்படத் துறையைப் பொறுப்பேற்றுள்ள அமைச்சரும் வந்து விட்டார். சென்சார் போர்ட் அல்லது திரைபடங்களை சென்சார் செய்யும் அதிகாரம் மாநில சர்க்காருக்கு வரவேண்டும். மாநில சர்க்காரின் அதிகார எல்லைக்குள் வரவேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள்.

தமிழ்திரைப்படங்கள்தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. அவை தமிழ். தமிழ் கலாசாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. அதனை சென்சார் செய்யும் அதிகாரம், தமிழ் கலாசாரம் பற்றி தெரியாத அதிகாரிகள் கையில், மத்திய சர்க்காரால் நியமிக்கப்படுகிற அதிகாரிகள் கையில் இருக்கக்கூடாது. என்பது என்னுடைய வாதம்.

இறுதியாக, ஆனால், உறுதியாக ஒரு கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே தமிழ் திரைப்படங்கள் இன்றைக்கு நிறைய எடுக்கிறார்கள். அவற்றை தயாரிக்கும் ஸ்டியோக்களில் ஆயிரக்கணக்கான, பல லட்சக் [illegible] தொழிலாளர்கள் [illegible] இருக்கி[illegible]ர்கள் அவர்





களுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பு வேண்டும். துணை நடிகர்கள், துணை நடிகைகள் இன்று பாதிக்கப்பட்டு இருக் கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரு பாதுகாப்பு கொடுக்க அரசாங்கம் ஒரு நல்ல திட்டம் கொண்டு வரவேண்டும். அதைப் போலவே, இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிறமொழிப் படங்கள் சென்னை போன்ற நகரங்களில் திரையிடப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்தி ஆதிக்கத்தை நாம் எதிர்க்கிறோம். இந்தி திணிப்பை நாம் எதிர்க்கிறோம். ஆனால் சென்னை நகரத்தில் இந்திப் படங்கள் நிறைய திரையிடப்படுகின்றன. நீதிமன்ற நீதிபதி அவர்களே, தமிழ் தெரிந்தவராக இருக்கவேண்டும் என்று நாம் சொல்கிறபோது, கூடுமானவரையில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடுவதற்கு அதிகம் வாய்ப்புத் தரவேண்டும்.

ஒரு உத்தரவு போடப்பட்டதாகக் கருதுகிறேன். அது யார் காலத்தில் போடப்பட்ட உத்தரவு என்று எனக்குத் தெரியாது. 12 வாரங்களுக்குத் தமிழ்ப்படம் போடவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு, அது உயர்நீதி மன்றத்திற்குப் போய் இன்றைக்கு அதைச் செய்யமுடியாத நிலை இருக்கிறது ஆனாலும் அரசாங்கம் அந்தச் சட்டச்சிக்கலைத் தவிர்க்கின்ற முறையில் இங்கே ஒரு சட்டம் கொண்டு வரலாம் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதைப்போல, தமிழகத்திலே தமிழ்ப் படங்களுக்கு முதலிடம் தரப்படவேண்டும். தமிழ் படங்கள் எங்கும் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

காம்பவுண்டிங் டாக்ஸைப் பொறுத்தவரையில். கொள்கை அடிப்படையில் வரவேற்கத்தக்கது என்று சொன்னாலும், போடப்பட்டு இருக்கும் வரி விகிதாசாரம் சரியாக இல்லை. அதை 85% என்று போடவேண்டும். காரணம் பல திரையரங்கு உரிமையாளர்கள் கட்ட முடியாத நிலை இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி, நம்முடைய அமைச்சர் அவர்கள் வரி விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லி, 21 ஷோ என்ற அடிப்படையில் வைக்கவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 1-00)

திருமதி பு. யசோதா: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, இந்த கேளிக்கை வரி சட்ட முன்வடிவின்மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக்கு இன்றைக்கு இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவின் மூலமாக கிட்டத்தட்ட 20 கோடி ரூபாயிலிருந்து 33 கோடி ரூபாய் வரை [illegible] வரக்கூடிய சூழ்நிலை

இருக்கிறது. தமிழ்நாட்டிலே இன்றைக்கு வறட்சி நிலை இருக்கும்போது, இன்றைக்கு குடிநீர் பற்றாக்குறை இருக்கும் போது, இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற இந்த நேரத்தில் நாம் வரியை உயர்த்தியிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உண்மையிலே சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு இருக்கின்ற சாதாரண மக்களுக்கு, இந்த சினிமாத் துறையின் மூலமாக ஓரளவுக்கு தங்களுடைய கவலையைப் போக்கும் வாய்ப்பு இருக்கிறது. தங்களுடைய கவலையைப் போக்கு வதற்காக மக்கள் இந்தத் துறையைப் பயன்படுத்திக் கொள் கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது. இந்த நிலையிலே இந்த வரியை உயர்த்துவதன் மூலமாக டிக்கட், நுழைவுக் கட்டணங்கள் உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

இன்றைக்கு பல தியேட்டர்காரர்கள், குறிப்பாக ஏ.சி. தியேட்டர்காரர்கள் அந்த தியேட்டர்களைக் கட்டி லைசென்ஸ் பெறும்போது "நாங்கள் ஏ.சி. போடுகிறோம்; ஆனால் தற் கென்று தனியாக மின்சாரம் வேண்டாம்; எங்களிடம் ஜெனரேட்டர் இருக்கிறது; அதைவைத்து ஏ.சி. போடுகிறோம்" என்று சொல்லி லைசென்ஸ் பெற்று தியேட்டர் நடத்தும் போது, மின்சாரத் தட்டுப்பாடு வருகிறபோது "மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக இங்கே ஏ.சி. இல்லை" என்று ஒரு போர்டு எழுதி வாசலிலே வைக்கின்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் நிச்சயமாக பொதுமக்கள்தான். ஏ.சி. தியேட்டர் என்ற முறையில் அதற் குரிய கட்டணத்தோடுதான் டிக்கட் வாங்கிக் கொண்டு செல் கிறார்கள்; ஆனால் அதனுடைய பலனை அனுபவிக்க முடியவில்லை. பலனை அனுபவிக்க முடியாமல் வாசலிலே இப்படி ஒரு அட்டையை வைத்துவிடுகிறார்கள். இதை எல்லாம் நிச்சயமாக நாம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு குறை. இன்றைக்கு நம்முடைய தலைநகரில், சென்னை மவுண்ட் ரோட்டில் இருக்கிற தியேட்டர்களில் கூட சீட்ஸ் சரியாக இல்லை. இருக்கிற சீட்டுகளிலே எல்லாம் உள்ளே இருக்கிற 'ஸ்பாஞ்சை' எடுத்து, அங்கே பின்னாபின்னமாகக் கிடக்கிறது. அந்த சீட்டுகளிலே போய் உட்காருகிறோம், பின்னால் தலை* முடியை அந்த சீட்டுகள் பிடித்து இழுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஓய்வுக்காக போய் படம் பார்க்கும் போது, அந்த சீட்டுகள் பின்னால்* முடியைப் பிடித்து இழுத்தால் அவர்களுக்கு எப்படி இருக்கும்?

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க முடி என்று மாற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* என்று குறிப்பிட்டதை 'முடி' என்று மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: சார், பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பின்னாலே முடியைப் பிடித்து இழுக்கிறது என்று சொன்னார்கள். முடியை சீட் பிடித்து இழுக்கிறதா அல்லது சில்மிஷம் பிடித்த ஆள் பிடித்து இழுக்கிறதா (சிரிப்பு) என்று சந்தேகமாக இருக்கிறது; ஆகவே, சீட்டை கொஞ்சம் டிஸ்டன்சில் போடும் உத்தேசம் உண்டா?

திருமதி டி. யசோதா: பின்னாலே ஆள் இருந்தால் இழுப்பது ஆள் என்று சொல்லலாம். பின்னால் ஆளே இல்லாமல் இருக்கும் போதுமுடியைப் பிடித்து இழுப்பது சீட்டாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களுக்கு அப்படி இழுத்து பழக்கம் உண்டா? (சிரிப்பு).

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, முடியைப் பிடித்து பின்னால் இழுக்கிறார்கள் என் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதனால் நான் ஆளா, சீட்டா என்று குறிப் பிட்டேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி எனக்கு அனுபவம் உண்டா என்று கேட்கிறார்கள். நான் மாணவனாக இருக்கும்போது அவர்கள்தான் எங்கள் அமைப்புக்கு பொதுச் செயலாளர். ஆகையால் அப்படி ஏதாவது நான் கற்றுக்கொண்டிருந்தால் அது அவர்களிடமிருந்துதான் கற்றிருக்க வேண்டும். (பலத்த சிரிப்பு).

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இழுத்தால் கையோடு வந்து விடுகிறது (பலத்த சிரிப்பு); அதனால் இழுக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள்.

திருமதி டி. யசோதா: துணைத் தலைவரவர்களே, பின்னாலே இருக்கிற சீட் இழுக்கிறபோது வருகின்ற முடியாக இருந்தால் வலிக்காது; தலையோடு இருக்கிற முடியாக இருந்தால்தான் வலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க முடி என்று மாற்றப்பட்டது.

[திருமதி டி. யசோதா] [1983 பிப்ரவரி 8

இன்னும்கூட நான் சொல்ல வேண்டுமென்றால், பல தியேட்டர்களிலே இன்றைக்கு நாம் போய் உட்கார்ந்து படம் பார்க்கும் நிலைமை இல்லை. சுகாதார வசதி இல்லாத காரணத்தால் பல தியேட்டர்களில் நாற்றம் அடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை நிச்சயமாக நம்முடைய அரசு கண்காணிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. நாம் இன்றைக்கு ஒரு பக்கம் வரியை உயர்த்திக் கொண்டு போகிறோம். மற்றொரு பக்கம் தியேட்டர் காரர்கள் கட்டணத்தை உயர்த்திக்கொண்டு போகிறார்கள்.

அடுத்து சென்னைக்குப் பக்கத்திலே பார்ப்போமேயானால் இன்னும் தரை டிக்கட்டுகள் என்று சொல்லக்கூடிய அளவிலே 20 ஆம் நூற்றாண்டுக்கு வந்தபிறகும் கூட, சென்னைக்குப் பக்கத்திலே இந்த தரை டிக்கட்டுகளைப் பார்க்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம். அந்த தரை டிக்கட்டுகளை ஒழிப்பதற்கு நாம் முன்வர கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன்.

தஞ்சாவூர், கும்பகோணம், நாகர்கோவில் போன்ற பகுதிகளிலே எல்லாம் ஒரு நாளைக்கு 3 காட்சிகளை நடத்துவதே சிரமமாக இருக்கும் நிலையில் வாரத்தில் 24 காட்சிகளை நடத்த வேண்டும் என்று சொல்லி வரிவிதிப்புச் செய்வது நிச்சயமாக சாதகமாக அமையும் என்று என்னால் குறிப்பிட முடியவில்லை. இருப்பதை வைத்து நல்ல நிர்வாகத்தின்கீழ் தவறுகளை குறைத்தால், நிச்சயமாக இந்த சட்டத்திருத்தத்திற்கே அவசியம் இருக்காது என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டு என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டத்தினை திருத்துவதற்கான இந்த மசோதாவை வரவேற்று சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். தமிழகத்திலே தியேட்டர்களின், கொட்டகைகளின் உரிமையாளர்களுக்கு இருந்து வந்த சங்கடங்களை

காம்பவுண்ட் டாக்ஸ் முறை சமீபத்திலே அறிமுகப் படுத்தப்பட்டு அதன் மூலம் அவர்களுடைய குறைபாடுகளை நீக்கி, அரசுக்கு 20 கோடியிலிருந்து 33 கோடி வரை வருமானத்தை தரக்கூடிய அளவுக்கு, இந்தத் திட்டம் தமிழகத்திலே மிகச் சிறப்பாக செயலாற்ற வருகிறது.

அதிலும் குறிப்பாக டவுன் பஞ்சாயத்து, டவுன்ஷிப், செலக்ஷன் கிரேடு முனிசிபாலிட்டி போன்ற நகரங்களுக்கும் இந்த திட்டத்தினை விரிவு படுத்த இருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் ரேட் ஆப் டாக்ஸ் 30லிருந்து 31 பெர்சன்ட் 24 காட்சிகளுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெருவாரி யான இடங்களில் அந்த 24 காட்சிகளை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் சிரமத்தை கொடுக்கிறது. எனவே 21 காட்சிகளுக்கு மேல் நடத்த முடியாத அந்தப் பகுதிகளுக்கு ரேட் ஆப் டாக்ஸ் 5 சதவீதம் குறைத்து வசூலிக்க நடவடிக்கை எடுத்தால் அது மிகச் சிறப்பாக இருக்கும்.

பல இடங்களில் அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம், தஞ்சாவூர் போன்ற நகரப் பகுதிகளில் தினசரி 3 காட்சிகளுக்கு மேல் நடத்த முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே அந்தச் சங்கடங்களை போக்க 21 காட்சிகள் என்று அவைகளுக்கும் நிர்ணயித்து 25 சதவீதத்திற்கு வரி வசூலிப்பு செய்தால் நல்ல முறையில் இந்த திட்டம் செயல்பட வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் திரைப்பட அரங்குகளும் தமிழகத்தில் அதிகமாக தோன்றி அரசுக்கு வருவாயும் கூடுதலாக கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

சில இடங்களில் அதாவது second grade பஞ்சாயத்து முனிசி பாலிடி போன்ற இடங்களில் இந்த வரி விதிப்பு 1 முதல் 3½ சத வீதமாக அதிகரிக்கப்பட்டு, காட்சிகளும் அதிகரிக்கப்பட்டன. ஆகவே அதனையும் குறைத்து 15-11-1982க்கு முன்பு இருந்த வரியை விதிக்கின்ற முறையில் அரசு நடவடிக்கை எடுத்தால் மிக நல்லதாக இருக்கும். அடுத்து தியேட்டர்களில் உள்ள இருக்கை களின் உயர்விற்கு ஏற்ப வரி விதிப்பையும் விதிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அந்த தீர்ப்புக்கு ஏற்ப நடைமுறைகள் மாற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் களிடம் உடனுக்குடன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி பணிக்கப் பட்டால் இதனுடைய நடைமுறைச் சிக்கல்கள் இடையூறுகள் நீங்க வாய்ப்பிருக்கிறது.

அதே சமயத்தில் அரசு வருமானம் குறையாமல் இருக்க ரேட் ஆப் அட்மிஷனை வேண்டுமானால் கூடுதலாக ஆக்கிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. டூரிங் டாக்கீசுகளில் தற்போது அரசு விடுமுறை நாட்களில் பகல் காட்சி நடத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது அதைப் போலவே எல்லா நாட்களிலும் அவர்களை பகல்காட்சிகளை நடத்த அனுமதி கொடுத்தால் அவர்களுடைய

வருமானம் பெருக வாய்ப்பு இருக்கும். அரசுவருமானமும் பெருகும்
என்பதை கூறி இந்த மசோதாவினை வரவேற்று என்னுடைய
உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி சட்டத்தினை மேலும்
திருத்துவதற்கான இந்த மசோதாவை பரிசீலிக்கின்ற நேரத்தில்,
இந்த சினிமாத் துறை, அதிலும் தியேட்டர்கள் என்பது
நம்முடைய நாட்டில் ஒரு சிறிய குடிசைத் தொழிலைப் போல்
பெருகியுள்ள ஒரு துறையாக இருக்கின்றது என்று சொன்னால்
அது மிகையல்ல. அந்த திரைஅரங்குகளிலே பல லட்சக்கணக்கான
பேர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

இதை எல்லாம் நீங்கள் இந்தச் சட்டத்தினைக் கொண்டு
வருகின்ற போது கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். ஒரு காட்சிக்கு வசூல் ஆகக் கூடிய தொகையில் 31
சதவீதம் தேர்வுநிலை நகராட்சிக்கு என்று போட்டிருக்கிறீர்கள்.
சாதாரணமாக ஒரு தியேட்டரில் 3, காட்சிகள் நடத்துகிறார்கள்.
அவர்கள் 3 காட்சிக்கும் சேர்த்து தான் இந்த வரியைக்கட்டுவது
என்று சொல்கிறார்கள். நடத்தக் கூடிய காட்சிக்கு மட்டும்
என்றால் பரவாயில்லை. வாரத்தில் 24 காட்சிகள் என்று கணக்
கிட்டு கட்டணத்தை வசூலிப்பது என்பதன் காரணத்தால்
இன்றைக்கு பல ஊர்களில் சினிமா தியேட்டர்கள் மூடிக்கிடக்
கின்றன. எனவே இதை இந்த அரசு பரிசீலித்துப் பார்க்க
வேண்டும். இன்றைக்கு மழை இல்லாதன் காரணத்தால் மின்சார
வெட்டு இருக்கின்றது. எனவே சினிமா தியேட்டர்களில் அமர்ந்து
சினிமா பார்த்துக் கொண்டிருக்கும் போது எந்த நேரத்தில் படம்
ஓடுவது நின்று விடுமோ என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய
நிலைமை இருக்கிறது. சில தியேட்டர்களில் ஜெனரேட்டர்களை
பல்லாயிரக்கணக்கான பணம் கொடுத்து வாங்கி வைத்துக்
கொண்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சென்னை போன்ற பெரிய நகரங்களிலே இன்றைக்குப் பல
ஊழல்களை நடத்துவதற்குரிய சந்தர்ப்பம் இன்றைக்கு இருக்கிறது
ஆனால் அதைப் பற்றி இதிலே வலியுறுத்தவில்லை. சென்னை
நகரிலே தியேட்டர்களில் 2 ரூபாய் 90 பைசாவிற்கான டிக்கெட்டு
கள் வெளியே 4 ரூபாய்க்கும், 5 ரூபாய்க்கும் விற்கிறார்கள்



அதனைப் போக்குகின்ற வகையிலே அரசாங்கம் கவனித்ததாக
தெரியவில்லை. ஆனால் கிராமங்களில் மற்றும் சாதாரண
முனிசிபாலிட்டிகளில் இருக்கக்கூடிய தியேட்டர்களில் அப்படி
விற்க முடியாது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இவர்கள்
போட்டிருக்கக் கூடிய வரியானது இந்தத் தொழிலை இன்றைக்கு
மிகவும் பாதித்து பல ஊர்களில் தியேட்டர்களில் மூடுவிழா
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வரியைக் கணிச
மாகக் குறைக்க வேண்டும். இன்றைக்கு மின்சார வசதி இல்லை
அது ஒரு பெரிய பிரச்சினை. தமிழ்நாட்டிலே சினிமா தொழில்
என்பது மிக முக்கியமான ஒரு தொழிலாக இருக்கின்ற காரணத்
தால் அரசாங்கம் இதற்கு மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே
சலுகை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சினிமா தியேட்டர் சம்பந்தப்பட்ட வகையிலே நீங்கள்
போட்டிருக்கின்ற காம்பவுண்டிங் டாக்ஸ் முறையானது பல
திரையரங்குக்காரர்களை ஊழல் செய்வதற்கு வழி வகுக்க
இடமளிக்கின்றது. மக்கள் கூட்டம் குறையக் குறைய அவர்கள்
டிக்கெட்டை வெளியிலே விற்கிறார்கள். 2 ரூபாய் 90
பைசாவிற்கான டிக்கெட்டை 4 ரூபாய்க்கு 5 ரூபாய்க்கு
விற்கிறார்கள். அப்போதுதான் அவர்களால் ஈடுகட்டக்கூடிய
நிலைமை இருக்கும் போல் தெரிகிறது. ஆகவே அது குறித்து
பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு திரையரங்குகளில் சுகாதார வசதி
இல்லை. எனவே சுகாதாரத்தினை பாதுகாக்கக்கூடிய நடவடிக்கை
எடுக்கப்படவில்லை. நகராட்சியாக இருந்தாலும், மாநகராட்சி
யாக இருந்தாலும் பஞ்சாயத்து போர்டாக இருந்தாலும் அந்த
அதிகாரிகள் அந்த சுகாதாரவசதியினைக் கவனிப்பது இல்லை.
அதற்குக் காரணம் அவர்கள் திரையரங்குக்காரர்களிடம் ஏதோ
பெற்றுக் கொண்டு கண்டும் காணாமல் இருந்து விடுகிறார்கள்.
ஆகவே சுகாதார வசதியினைச் செய்து கொடுக்க அரசாங்கம்
கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு சென்னையில் மவுண்ட் ரோட்டிலே
சென்று பார்த்தால், வால்போஸ்டர்கள் மிக மிக அநாகரீகமாக
இளைஞர்களின் உள்ளத்தைத் தூண்டக் கூடிய முறையிலே அரை
நிர்வாணத்தோடு வால்போஸ்டர்கள் வைத்திருக்கிறார்கள். அது
மட்டுமில்லாமல் மக்களை ஏமாற்றக்கூடிய முறையிலேயும் வால்
போஸ்டர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை எல்லாம்
அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அண்ணா சாலையிலே போய் பார்த்தால் கிராமத்து
கிளிகள் என்ற பெயரில் நிர்வாணமாக படம் போட்டிருக்கிறார்கள்
சின்னஞ்சிறுசுகள், இன்பஇரவுகள் என்ற பெயரிலே எல்லாம்
படம் வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் இப்படி ஒரு நிலைமை

விதிக்கக்கூடிய முறையிலே விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஓரே ஊரிலே நிரந்தர திரையரங்கத்திற்கு 20 பைசாவும், டூரிங் திரையரங்கிற்கு 16பைசாவும் விதித்திருப்பதால் அங்கே 4 பைசா குறைகிறது என்றும் இங்கே 4 பைசா அதிகமாகிறது என்றும் மக்கள் மத்தியில் பேசிக்கொள்கிறார்கள். இதைப் போக்க்கூடிய முறையிலே ஓரே ஊரிலே எந்த திரையரங்கை எடுத்துக் கொண்டாலும் ஓரே மாதிரியான வரியைப் போடக் கூடிய முறையைக் கொண்டுவர வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஓடுகிற காட்சிகளுக்குத்தான் வரிவிதிப்பு செய்ய வேண்டும். ஓடாத காட்சிகளுக்கு வரிவிதிப்பதாக சட்டத்திலே இருக்கிறது. இதிலே ஒரு சீரான நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் இந்தச் சட்டத்தை வரவேற்கக்கூடிய நேரத்திலே பாதகம் இல்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு.இல. பலராமன்; சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் வரவேற்க வேண்டிய ஒரு சட்டமாக இருந்தாலும் இதற்கு திருத்தம் அவசரம் அவசரமாக—பல திருததங்கள் கொண்டு வருவது —கொண்டு வருவது சந்தேகத்திற்குரியதாக இருந்து கொண்டிருக்கிறது. புதிய கம்பவுண்டிங் முறையை அறிமுகப்படுத்தினாலும் அதிலே சிக்கல்கள் இருக்கின்றன என்று அரசு தரப்பிலே கூறினாலும் சில ஐயப்பாட்டுணர்வுகள் ஏற்படுகின்றன அதை அரசு தரப்பு போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செலக்ஷன் கிரேட் முனிசிபாலிட்டிகளுக்கு கம்பவுண்டிங் முறையை அறிமுகப்படுத்துகிற போது 31,30 என்ற விகிதாச்சார அடிப்படையில் ஏற்றினாலும் அதிகம் என்ற நிலை இன்றைக்கு இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறவர்கள் கருதுகிறார்கள். இது ஒரு பெரிய தொழிலாக தென்னகத்திலே தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது, வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற நிலையில் அதை ஊக்குவிக்கின்ற முறையிலே அரசுத்தரப்பிலே என்ன என்ன வகையில் வருமானம் வர வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த முறையில் செய்தாலும் கூட பொன் முட்டையிடும் வாத்து என்று கருதி கொலை செய்யக கூடாது என்ற முறையிலே இங்கிதமாக நல்ல முறையிலே வரியை வசூலிக்க வேண்டுமென்று அரசு கருதுவது நியாயமானது. இருந்தாலும் இந்தத் துறையில் அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் நியாயமானவர்களாக இருந்தால் தான் குறிப்பிட்ட அளவுக்கு வரியைக் கட்ட முடியும் என்பதை நடந்த காலத்திலே நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே அதிகாரிகள்



வெகு ஜாக்கிரதையாக நாணயமாக இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது. செலக்ஷன் கிரேட் முனிசிபாலிட்டிகளுக்குப் போட்டிருக்கின்ற வரியைக் குறைக்க வேண்டுமென்றக் கோரிக்கை இருக்கிறது. 24 காட்சிகள் என்பது நடைமுறைக்கு சாத்தியமல்ல. ஆகவே அதை 21 காட்சிகளாக ஆக்க வேண்டுமென்று—7 நாட்களுக்கு நாளொன்றுக்கு 3 காட்சிகள் வீதம்—கோரிக்கை யை கவனிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். கிரேட் 1 முனிசிபாலிட்டிகளுக்கு ஒரு வரியை விதிக்கிறோம். நகர எல்லைக்கு சில கெஜங்களுக்குள் ஒரு பஞ்சாய்த்து இருக்கிறது என்றால் அந்தப் பஞ்சாயத்து எல்லையில் இருக்கின்ற நிரந்தரக் கொட்டகைக்கு வேறு வரி விதிக்கின்ற நிலைமை இருக்கிறது அங்கே மக்கள் அதிகமாகச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு சில கெஜத்திற்குள்ளாக இருக்கக்கூடிய இரண்டு திரைஅரங்குகளுக்கு வித்தியாசமான வரிகள் என்பது பல இடங்களில் அனுபவப்பூர்வமாக இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. அதை தவிர்ப்பதற்கு என்ன நிலையை கொண்டுவந்திருக்கிறீர்கள் என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். இதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறன்.

இன்றைத்கு கிரேடு—1 முனிசிபாலிட்டிகளுக்கு ஒன்று முதல் 3½ சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதையும் குறைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அதையும் அரசு பரிசிலனை செய்ய வேண்டும். உள்ளாட்சித் துறைகளுக்கு விகிதாசாரப் பங்கு—அன்றைக்கு ஒன்றியம் இருந்தது. அதனுடைய தலைவர்கள் இருந்தார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். அதற்காக அவர்கள் போடக் கூடிய பங்கை ஏதாவது உயர்த்தி இருக்கிறீர்களா? அது கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி கிராம பஞ்சாயத்து ஒன்றியமாக இருந்தாலும் சரி, நகரமன்றமாக இருந்தாலும் சரி 200,300 கோடி வருமானம் வரக்கூடிய இந்தத் துறை, மேலும் பஞ்சாயத்து உள்ளாட்சித் துறைகளுக்கு அதிகமான பங்கை வழங்கக் கூடிய சூழ்நிலை இந்த மாற்றத்தினால் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே உள்ளாட்சித்துறைகளுக்கு அதிகமான பங்கை தருவதற்கான சூழ்நிலை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து எல்லைகளில் இருக்கிற டூரிங் சினிமாக்களுக்கு 15 சதவீதம் என்று 17 சதவீதம் என்ற நிலை இருக்கிறது. இதைத் தொழிலாக குறைத்தால் தான் சாதாரண மக்கள், 40, 50 ஆயிரம் எடுத்துக் கொண்டவர்கள் பயன் பெறலாம். இன்றைக்கு இருக்கிறது. அவர் முதலீடு போடக் கூடிய நிலை இருக்கிறது. வருமானம் களுக்கு வருமானம் இல்லாத நிலை கட்டாமல் அவர்கள் திரை இல்லாததினால் டாக்கூஸ் கூட அவர்களுக்கு 15 யரங்குகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நிலையாக இருக்கும் சதவீதமாக குறைப்பது என்பது நல்ல என்பதை ஆலோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருக்கின்றது என்றால் நமக்கெல்லாம் வெட்கமாக இல்லையா எனவே இதைப்பற்றி அரசாங்கம் சிந்திக்கவேண்டும்என்று கேட்டுக் கொள்கிறேன். சிந்தித்து தணிக்கை செய்யும் அதிகாரத்தில் பங்கு பெற வேண்டும் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவிலே சினிமா தியேட்டர்கள் வைத்திருப்பது தமிழகம் தான். சினிமா துறையின் மூலம் வருமானம் இந்தியாவிலே இங்குதான் பெருமளவு இருக்கின்றது. எனவே அந்தத் தணிக்கை செய்கின்ற அதிகாரத்திலே பங்கு பெற நாம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில சுயாட்சி என்று பேசக்கூடிய அரசு இதிலே முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுகேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்— மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களால் 13-11-82 அன்று கொண்டு வரப்பட்ட அவசரசட்டத்திற்காக இன்றைய தினம் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த சட்டமுன்வடிவினைப் பற்றி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஒரு சில வார்த்தைகளை மட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு 27 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாகவும், 3 ஆம் நிலையில் இருக்கக்கூடிய நகராட்சிகளுக்கு 26 சதவீதத்திலிருந்து 28 சதவிபமாகவும் முதல் நிலை தேர்வு நகராட்சிகளுக்கு 36 சதவீதமாகவும் இப்படி வரியை விதிப்பதற்கு. இந்த சட்டத்திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தை திருத்துகின்ற அதே சமயத்தில் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல் நகராட்சிகளில் மின்சார வெட்டு, வறட்சி இன்னும் ஏனைய நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால் கொட்டகையில் இருக்கக்கூடிய அவர்களுக்கு ஓரளவு வசூல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது இந்த நேரத்தில், ஆனால் அதே சமயத்தில் நாம் போட்டிருக்கக் கூடிய அந்த வரியை தற்காலிகமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் இருக்கக் கூடிய, ஊராட்சிகளில் இருக்கக்கூடிய அந்த சினிமா கொட்டகைகளுக்கு ஏற்கெனவே இருந்த வரியோடு மேலும் ஒரு சதவீத வரி போட்டிருப்பதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கக் கூடிய அந்த கொட்டகைகளுக்கு 14 காட்சிகள் என்று வரையறுக்கப் பட்டிருப் பினும் அந்த 14 காட்சிகளே அங்கே முறையாக நடைபெறுமா என்கிற ஐயப்பாடு இருக்கிறது. காரணம் பேரூராட்சிகளிலோ அல்லது நகராட்சிகளிலோ எப்படியேனும் கூட்டம் வந்துவிடும். கிராமங்களில் இருக்கக் கூடிய ஊராட்சிகளில் இருக்கக்கூடிய அந்த கொட்டகைகளில் ஏற்கெனவே இருக்கக்கூடிய வரியிலிருந்து குறைப்பதற்காக பரிசீலனை செய்வார்கள் ஆனால் வரவேற்க வேண்டிய அம்சமாக இருக்கும். காரணம் அந்த கொட்டகைகள்





ஓரளவு சீராக நடைபெறுமானால் வருமானம் இல்லாத அந்த ஊராட்சிகளிலே ஓரளவு வருமானம் வரக்கூடிய நிலைமை ஏற்படும். அப்படி ஊராட்சிகளிலே கொட்டகைகளே இல்லாத ஒரு நிலை இருக்குமானால் அங்கு இருக்கக் கூடிய சினிமா ஆசைப் பிடித்தவர்கள், சினிமா பார்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் நகரத்திற்கு வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் ஏற்கெனவே நகரத்தில் இருக்கக்கூடிய கூட்டத்தோடு கூட்டம் சேரும் அந்த நிலை தான் வரும். எனவே அதை பரிசீலித்து கிராமங்களில் இருக்கக்கூடிய கொட்டகைகளுக்கு வரியை குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சினிமா கொட்டகைகளில் ஈடுபட்டு இருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு எந்தவிதமான சட்டமும் முறையாக ஏற்படுத்தவில்லை. இந்த வரியை உயர்த்துகின்ற அதே நேரத்தில் அந்த நிரந்தரம் இல்லாத அந்த தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளை நாம் பார்த்து அவர்களுக்கு ஏதாவது ஒரு சட்டத்தை கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சுகாதார வசதியை பொறுத்தவரை பல உறுப்பினர் கள் பேசியது போன்று நாம் அனுமதிக்கின்ற போது அது நகரத்திலே இருக்கக் கூடிய தியேட்டர் ஆனாலும் சரி, அல்லது கிராமத்திலே இருக்கக்கூடிய டூரிங்காக இருந்தாலும் சரி இவை களில் அறவே சுகாதார வசதி கிடையாது. குடி தண்ணீர் வசதி கிடையாது. தரையிலே உட்கார வேண்டிய ஒரு சூழ்நிலையும் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது. இதனை எல்லாம் அனுமதிக்கின்றப்போது நாம் பரிசீலனைச் செய்து இம்மாதிரி யான நிலை இருக்க வேண்டும் என்று சொல்லி அந்த அனுமதியினை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 1-20)

திரு. கா. வே. கந்தசாமி: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னையும் பேச அனுமதித்ததற்காக நன்றியைக் கூறி இந்த மசோதா தமிழகம் முழுவதும் வரவேற்க கூடியதாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே ஒரு பஞ்சாயத்து என்ற அடிப்படையில் பேரூராட்சியாக இருந்தாலும் நிலையான திரை யரங்கத்திற்கு ஒரு வரியும்— 20பைசாவும் டூரிங் திரையரங்கிற்கு ஒரு வரியும்—16பைசாவும் விதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப் பட்டிருக்கிறது. வரி வேறு விதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் ஒரே படத்தைத்தான் இரண்டு திரையரங்குகளிலும் காட்டு கிறார்கள். அந்த படத்தை எந்த திரையரங்கிலே போட்டாலும் ஒரே மாதிரியாகத் தான் காட்சியளிக்கிறது. ஆகவே ஒரே ஊரில் வரிகள் வேறுபாடு இல்லாமல் அரசாங்கம் சீரான வரியை

[திரு. இல. பலராமன்] [1983 பிப்ரவரி 8

ஏதோ பஞ்சாயத்தின் மூலையிலிருந்து, பக்கத்திலிருக்கிற கிராமத்திற்கு வருமானம் வராமல் இருப்பதை ஐந்து மைல் சுற்றளவு உள்ள கிராமங்களுக்கு அது எந்த கிராமமாக இருந்தாலும், அந்த கிராமத்திற்கு வரிகளை பிரித்துக்கொடுப்பது என்பது நல்லதொரு ஆலோசனையாக இருக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் பகிர்ந்து வாங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கேட்டு வாங்கி தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதோ மாநில அரசிற்கு மைய அரசிடமிருந்து பணம் வரவில்லை என்று கூறினாலும் இந்த பிரச்சினையை இரண்டு அமைச்சர்களும், உள்ளாட்சித்துறைகளுக்கு அதிகமான பங்கு வாங்கித் தர வேண்டுமென்று சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதை மாண்புமிகு அமைச்சர்அவர்கள் பதிலில் சொல்வார்கள்என்று நினைக்கிறேன். பொன் முட்டையிடும் வாத்தாக இருக்கும் இந்தத் தொழிலை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். தொழிலின் மூலமாக பண்பாட்டை வளர்ப்பதற்கான நிலைமை எய்த வேண்டும். இந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல ஆலோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். வளரும் சமுதாயத்தில் திரையரங்குகளை கட்டுபடுத்த வேண்டுமென்று எண்ணக் கூடிய நிலை இருக்கிறது. ஆனால் சோஷலிச நாடுகளில் அதிகமான திரையரங்குகளை ஏற்படுத்தியும், நம்முடைய நாட்டில் பண்பாடு உள்ள படங்களை எடுப்பதற்கான சூழ்நிலையை அரசு வகுத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவில் திருத்தங்கள் மேலும் அதிகமாக வராமல், குழப்பம் இல்லாமல் இருக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

நகர்புறங்களில் இருக்கிற திரையரங்குகளில் சுகாதார சீர்கேடுகள் அதிகமாக இருப்பது நகர மன்றங்களுக்குக் கொடுக்கக் கூடிய பங்கு குறைவாக இருக்கிற காரணமாகவா அல்லது திரையரங்க முதலாளிகள் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் காரணமாகவா? என்பதை பார்க்க வேண்டும். காம்பவுண்டிங் டாக்ஸ் வந்த போது அதற்காக இருக்கக் கூடிய சீட்டுகளுக்கு தான் பணம் வாங்க வேண்டுமென்ற நிலை இருந்த போதும், நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த போதும், சிலமாவட்ட ஆட்சியாளர்களின் நடைமுறையில் தான் நினைத்தது தான் சட்டம் என்ற நிலைக்கு ஆளானது என்பதையும் யோசித்து அவர்களுக்கு அறிவுரைகளை அமைச்சர் அவர்களும், அரசும் வழங்க வேண்டும். திருத்தங்கள் மேலும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கமாக இருக்க வேண்டும் என்பதை கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:— பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.





திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட திருத்தத்திலே பிரச்சினை இல்லை. ஆனால் நாங்கள் வைத்திருக்கக் கூடிய கோரிக்கைகளான வரி விதிப்பை மட்டும் கணக்கிலே எடுத்துக் கொண்டு 25 ஆக ஆக்கவேண்டுமென்றும், அதே போல் காட்சிகளை 21 ஆக மட்டும் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இவற்றை ஏற்று கொள்வதாக இருந்தால், நான் கொடுத்த தீர்மானத்தைத் திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரகுமான்கானின் தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப் பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைமுன்னுள்ள கேள்வி

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 5/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவுகள் 4 முதல் 6 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் துலைவர்; பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9–2–1983 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

---

11-2-1983 ஆம் நாள் சட்ட முன் வடிவு மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ.) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

137. 1977--78ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் ஆறாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்திய சட்டம் 1/1956 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

138. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1979-80 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை(ஆங்கிலம்) (தமிழ்நாடு) 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு—அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971 41-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனையதாள்கள்.

25. தமிழ்நாடு 1983—ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன் வடிவின் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 5/1983) நகலும் இணைப்பும்.

26 தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவின் (சட்ட மன்றப பேரவை சட்ட முடிவு எண் 6/1983.) நகலும் இணைப்பும்.

27. 1983—ஆம் ஆண்டு ஷெரிஃப் நியமனத்திற்கு வகை செய்யும் முத்திரைப்பத்திர (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண்.7/1983) நகலும் இணைப்பும்.

28. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1முதல் 200 வரை).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவையில் 8-2-1982-ஆம் தேதியன்று வைக்கப் பெற்ற உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியலில் உள்ள அச்சுப்பிழையும் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 6 | திரு சேலம் ஆறுமுகம் 83 | 88 |
| 7 | 5 | இராமநாதப்புரம் தொகுதியில் | இராமநாதபுரம் தொகுதியில் |
| 14 | 7 | க்ளினிக்கம் பார்மருட்டிகல்ஸ் | க்ளினிக்கம் பார்மாசூட்டிகல்ஸ் |
| 14 | 25 | ezemptions | exemtions |
| 17 | 2 | பராமின் மெழுகு | பாரபின் மெழுகு |
| 23 | 15 | தவாளை | தோவாளை. |





| | | | |
|---|---|---|---|
| [illegible]3 | 28 | பக்கம் | பக்கம் 114ல் |
| [illegible]5 | 4 | திரு.என் பழனிவேல் | திரு.என்.பழனிவேல் மற்றும் திரு.எம். ஆறுமுகம் |
| [illegible]0 | 10 | 9980 | 1980 |
| 38 | 13 | மான்ணவியர் | மாணவியர் |
| 38 | 13 | 8657 | 8647 |
| 40 | 6 | போக்குவரத்துக் கழகத்திலுள்ள | போக்குவரத்துக் கழகத்திலுள்ள |
| 40 | 21 | சென்னையிலுள்ள | சென்னையிலுள்ள |
| 40 | 26 | அரசு | அரசு |
| 47 | 30 | ாக்டர் கோ. சமரசம் | டாக்டர்.கோ. சமரசம் |
| 51 | 1 | வரிசை எண்.88 என்பதனைச் சேர்த்து வாசிக்கவும் | |
| 51 | 24 | இரண்டாம முறை வரும் Tanjore Picture Painting என்பதனை நீக்கி வாசிக்கவும். | |
| 53 | 28 | திரு.வி. பாலசுப்பிரமணியன் | திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் |
| 54 | 6 | பாமம் | பாலம் |
| 54 | 8 | வி. ப லசுப்பிரம ியன் | திரு.வி வேடசந்தூர் பாலசுப்பிரமணியன் |
| 54 | 14 | கட்டப்பட வேண்டுல் | கட்டப்பட வேண்டும் |
| 54 | 27 | திரு வி. பாலசுப்பிரமணியன் | திரு.?. பி. பால சுப்பிரமணியன் |
| 58 | 17 | சேமம் மாவட்ட விவசாயிகளுக்கு தமிழய அரசு | சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு |
| 59 | 22 | இக்கால ஆரம்ப | இக்கால வரம்பு |
| 59 | 28 | தராமங்கலத்தில் | தாரமங்கலத்தில் |
| 59 | 31 | அமைச்சர் | அமைச்சர் |
| 64 | 7 | திரு உாம்சந்த் | திரு. எஸ்.டி. உகம்சந்த் |
| 64 | 18 | மா ட்டுத்ளனம் | மாட்டுத்தீவனம் |
| 64 | 19 | திருமதி. தா. ராஜம்பாள் | திருமதி. தா. ராசாம்பாள் |
| 67 | 8 | என்னுமிடத்துதில் | என்னுமிடத்தில் |
| 71 | 4 | திருமதி. தா. இரா சாம்பாள் | திருமதி. தா. இராசாம்பாள் |

| | |
|---|---|
| ...கை அதிகப் ...தும் திட்ட | எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் |
| | 124 |

(மேற்கண்ட விடையானது நிதி அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்றது) என்பதனை நீக்கி வாசிக்கவும்.

| | |
|---|---|
| திரு.கே. செங்கோட்டையன் | திரு.கே.ஏ.செங்கோட்டையன் |
| திரு. எம்.டி. ஆண்டி அம்பலர் | திரு.எம்,டி.ஆண்டி அம்பலம் |
| திரு.கோ. சமரசம் | டாக்டர் கோ. சமரசம் |

வினா எண். 11013–க்கு அடுத்து திரு.வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் என்பதனை சேர்த்து வாசிக்கவும்.

| | |
|---|---|
| பக்கம்–ல் | பக்கம்117-ல் |
| இராமேஸ்வரம் | இராமேஸ்வரம் |

தொழில் துறை என்பதனை நீக்கி வாசிக்கவும்

| | |
|---|---|
| திரு. சு. பாலகிருஷ்ணன் | திரு. ச. பாலகிருஷ்ணன் |
| பாலியஸ்டர் உற்பத்தி செய்தல் | பாலியஸ்டர் வேட்டிகள் உற்பத்தி செய்தல் |
| வரிசை எண். 264 | வரிசை எண் 164 |
| திருவாரூர் கடலூரி பிற்பட்டோர் மாணவர் நல விடுதிக்கால தளவாடங்கள் | திருவாரூர் கல்லூரி பிற்பட்டோர் மாணவர் நல விடுதிக்கான தளவாடங்கள் |
| அரசிவர் | அரசினர் |
| திரு.ப. வெங்கடசுப்பிரமணியன் | திரு ப. வெங்கடசுப்பிரமணியன் |
| திரு.ப. வெங்கிடசுப்பிரமணியஞ் | திரு.ப. வெங்கடசுப்பிரமணியன் |
| பீடுகள் | வீடுகள் |
| விவா 11906 | வினா 11908 |
| விவா 11910 | வினா 11910 |
| Religiour | Religious |
| குழித்துறைபயணிகள் | குழித்துறை பயணிகள் |
| அடுத்துள்வ | விடுத்துள்ள |

S.No. 140/Sr/8

உள்ளடக்கம்

9—2—1983.


1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் 119—151

2. உரிமைப் பிரச்சினை :

ஆளுநர் உரையில் தவறான தகவல் அளித்தது 151—155

3. ஒத்தி வைப்புத் தீர்மானம் :

மத்திய அரசு அரிசி வழங்க முதலமைச்சர் உண்ணாவிரதம் 155—176

4. அறிவிப்பு :

அவையில் ஒரு பொருளை காட்டியது பற்றிய பிரச்சினை குறித்து 176—183

5 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் : 183


123—288—1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1983 பிப்ரவரி 9

தை 27, துந்துபி — திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.''

ஒரு செயலைச் செய்வதில் 'திண்மை' எனச் சொல்லப்படுவது ஒருவனுடைய உள்ளத்தின் உறுதியே ஆகும். மற்றவை எல்லாம் சிறந்த உறுதிப்பாடுகள் ஆகா.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தஞ்சை மாவட்டத்திலுள்ள பாபநாசம் மீனவர் கூட்டுறவுச் சங்கம்

* வினா எண் 192—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் ( 129) என்ன காரணத்தின் அடிப்படையில் கலைக்கப்பட்டது?

(ஆ) தமிழக அரசு ஆணையின் மீது நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு என்ன?

(இ) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ), (ஆ) மற்றும் (இ) : விவரமான அறிக்கை * சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 481 முதல் 168 ம் பக்கங்களின் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் வட்ட உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தைக் கலைத்ததற்கு உண்மையான காரணம் என்னவென்றால் அங்கே அரசியல் தலையீடுதான். அங்கே வேறு எந்தவிதமான ஒழுங்கீனமும் நடைபெறவில்லை. மாறாக, வலங்கைமான் உரிமை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராகவும் கும்பகோணம் சப்கோர்ட் வழங்கிய தீர்ப்புக்கு எதிராகவும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டது என்பதும் உண்மையா? கலைக்கப்பட்டது தவறு என்றால் மீண்டு பழைய நிர்வாகத்தினரைக் கொண்டு நிர்வாகம் செய்ய அனுமதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே ஏன் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான காரண காரிய விளக்கங்கள் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்தெந்த வகைகளில் விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றன என்பது சொல்லப்பட்டிருக்கிறது. கலைக்கப்பட்டதை எதிர்த்து அவர் உயர்நீதி மன்றத்தில் வாதாடினார். உயர்நீதிமன்றம் அதை விசாரித்து பிறகு அவர் மீது நியாயம் இல்லை என்று அந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது. அதற்குப்பிறகு அவர் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றார். பிறகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். திரும்பப் பெற அனுமதி வழங்கும்பொழுது, உரிய முறையீட்டு அதிகாரியிடம் இது குறித்து 15 தினங்களுக்குள் முறையீடு செய்யும்படி உச்ச நீதி மன்றம் எடுத்துத் தெரிவித்தது. சங்க நிர்வாகத்தைக் கலைத்து மீன்துறை இயக்குநர் எடுத்த நடவடிக்கை சரியானதா என்பது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுத்த பிறகு அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சங்கத்தைக் கலைத்ததற்கான காரணங்களைக் கூறும் பொழுது, கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த ஒரு சீனியர் இன்ஸ்பெக்டர் முன்னிலையிலே ஏலம் விடப்பட்டிருக்கிறது, அதில் உள்ளபடியே ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்குமானால் அதற்கு இலாக்காதான் பொறுப்பு. மேற்கொண்டு விசாரணை நடத்தியபொழுது மீன் இலாக்கா துணை இயக்குநர் அவர்கள், There are no specific serious allegations for superseding the Committee என்றுகூட அவர்கள் அரசுக்குக் குறிப்புரை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இப்படி எழுதியிருந்தும் இந்தச் சங்கம் கலைக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், பழைய நிர்வாகிகள் இருந்தபொழுது அந்தச் சங்கம் இலாபகரமாக இயங்கியதோடு, உள்ளபடியே மீனவர்களுக்குப் பயன்தரத் தக்கதாகவும் இருந்தது. ஆனால் தற்பொழுது அந்தச் சங்கம் தனி அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் மிகவும் நஷ்டமாக இயங்குவது அரசுக்குத் தெரியுமா? எனவே, மீண்டும் அந்த நிர்வாக போர்டு மாற்றியமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



2669

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விவர அறிக்கையிலே தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சங்கம் ஏன் கலைக்கப்பட்டது என்பதற்கான காரண காரிய விளக்கங்கள் மிகவும் தெளிவுபடச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவருடைய கோரிக்கையில் நியாயம் இருந்தால் உயர்நீதிமன்றம் விசாரித்தபொழுது, அந்த நியாயத்தின் அடிப்படையிலே, நடவடிக்கை எடுத்தது தவறு என்று சொல்லியிருக்கும். ஆனால், இரு தரப்பாரையும் விசாரித்தபிறகு உயர்நீதிமன்றம் அவருடைய வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. நான் முதலிலேயே சொன்னபடி அதற்குப் பிறகு அவர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்.

மீன்துறை இயக்குநர் சங்க நிர்வாகக் குழுவைக் கலைக்க பிறப்பித்த 31—7—80 நாளிட்ட ஆணையில் மேல்முறையீடு செய்வதற்காக இரண்டு மாத கால வரம்புக்குள் செய்யலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆணை மனுதாரருக்கு 2—8—80 இல் வழங்கப்பட்டது. அப்படி மேல்முறையீடு செய்ததற்குப் பிறகும்கூட இரண்டு மாதங்களுக்குள் அவர் மேல் முறையீடு செய்யவில்லை. 11—11—80 அன்றுதான் அவர் மேல்முறையீடு செய்தார், காலங்கடந்து. அதற்குக்கூட மன்னிப்பு அளித்து அந்தக் கோரிக்கையை ஏற்று பரிசிலனை செய்யப்பட்டதற்குப் பிறகு அவரிடத்திலே நியாயம் இல்லை என்ற காரணத்தினால் கோரிக்கை தள்ளப்பட்டது. ஆனாலும் சங்கம் இப்பொழுது தனி அதிகாரிகளின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. சட்டப்படி அதை எப்படி சீரமைக்கலாம் என்று பார்த்து சீரமைப்பதற்காக, ஒழுங்கான நடவடிக்கை எடுக்கலாம் என்று துறையினருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டப்படி ஒழுங்குபடுத்தி, எப்படியும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் நல்லமுறையிலே நடக்கவேண்டும் என்பது அரசின் அவா. அறிக்கை வந்ததற்குப் பிறகு, அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### தமிழ்நாட்டிலுள்ள நிலகுத்தகைதாரர்கள் எண்ணிக்கை.

* வினா எண். 193—திரு. எம். எஸ். மாணிக்கம், திரு. த. வீரசாமி, திரு நன்னிலம் அ. கலையரசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தமிழ்நாட்டில் இதுவரையிலும் குத்தகைதாரர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு குத்தகைதாரர் என்று உரிமை வழங்கப்பட்டுள்ளது?

(இ) குத்தகை உரிமை வழங்கப்படுவதில் காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

| | | தனியார் நிலத்தில் உள்ள குத்தகை தாரர்கள். | பொதுப்பொறுப்புக் கழக நிலங்களில் உள்ள குத்தகை தாரர்கள் |
|---|---|---|---|
| (அ) | 4,59,470 | 3,36,184 | 1,23,286 |
| (ஆ) | 3,57,848 நபர்கள் | 3,04,950 | 52,898 |

(இ) காலதாமதம் ஏதும் இல்லை.

திரு. த. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 4,59,470 குத்தகைதாரர்களும், அதிலே 3,57,848 பேர்களுக்கு குத்தகைதாரர் என்ற உரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். மற்றவர்களுக்கும் இந்தக் குத்தகை உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? தஞ்சை மாவட்டத்தில் உள்ள குத்தகைதாரர்கள் எண்ணிக்கை எவ்வளவு? அதிலே இதுநாள் வரை குத்தகைதாரர் உரிமை வழங்கப்படாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு அப்படி வழங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன.?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகள் பரிசீலனையில் உள்ளன. பரிசீலித்து விரைவில் குத்தகைதாரர்களுக்கான உரிமை வழங்கப்படும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் குத்தகைதாரர்களையும் நிலச் சொந்தக்காரர்களாக ஆக்கி, அவர்களை குத்தகை உரிமை பெற்றவர்களாக மாற்றி, அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்ற முறையிலே அவர்கள் பேரிலே நட்டஈடு கொடுத்து, குத்தகைதாரர்களை நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆக்க அரசு ஏதாவது சட்டத்தைக் கொண்டு வர முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, கொள்கையைப் பற்றி கேள்வி நேரத்திலே சொல்லக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய நிலங்களைக் குத்தகைக்கு விடுகிறபோது, அந்த நிலங்களை நிலத்ினுடைய சொந்தக்காரர்கள் சொந்தத்திலே விவசாயம் செய்ய வருகின்ற போது, திரும்பப் பெற எந்தவிதமான உரிமையும் இல்லை





உதாரணமாக அரசுப் பணியாளர்கள் தங்கள் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், அந்த விவசாய நிலத்தைத் திரும்பப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே சொந்த உபயோகத்திற்காக இந்த நிலங்களை திரும்பப் பெறுகின்ற நேரங்களில் அது கிடைப்பதற்கு வழி வகைகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசு அதைப்பற்றி யோசிக்கும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, . இந்தக் குத்தகை விவசாயிகள், பதியாமல் பல லட்சம் பேர்கள் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். இதனால் அவைகள் எல்லாம் கணக்கிலே வராமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது இன்றைக்குக் குத்தகைதாரர்கள் இவர்கள் இல்லை என்று நிலச்சுவான்தாரர்கள் கோர்ட்டிலேயோ அல்லது ரெவின்யூ அதிகாரிகளிடத்திலே நிரூபிக்க வேண்டும் என்று சட்டத்தைத் திருத்துவதன் மூலம், வாய் மொழி சாட்சியத்தின் முலம் அந்தப் பதிவு உறுதிப் படுத்தப்படும என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அவர்கள் குத்தகைதாரர்களா அல்லவா என்கிறபோது பெரும்பாலும் நிலச் சொந்தக்காரர்கள்தான் குத்தகைதாரர்கள் இல்லை என்று சொல்கிற வாய்ப்பிருக்கிறது. நிலத்தை வெள்ளாமைக்காக வெளியிலே விடுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிலச் சொந்தக்காரர்கள்தான் வாய் மூலமாக குத்தகைக்கு விடுவதால், ரிக்கார்டுகள் இல்லாத காரணத்தால் மறுக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதைக் கண்டுப் பிடித்து ஒழுங்குபடுத்துவதற்காக அந்தந்த வட்டங்களிலே அங்கே இருக்கின்ற பொதுமக்களைக் கொண்டு ஒரு கமிட்டி போட்டு அதைச் சரிசெய்யலாம் என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக குத்தகை பதிவு செய்யப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர்கள் பதிவு செய்வதற்கு தமிழ்நாடு அரசுக்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிவிக்க இயலும். நான் முதலில் சொன்னபடி மனுக்கள் கொடுத்தவர்கள் 4,59,470 பேர்கள். அதிலே குத்தகைதாரர்களாக பதிவு பெற்றவர்கள், 3,57,848 பேர்கள் என்று சொன்னேன். மாவட்ட வாரியாக விவரங்களைக் கொடுப்பதற்கு அதிக நேரமாகும். மாவட்ட வாரியாகக் கொடுப்பதற்கு இயலும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 9

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே குத்தகை நிலம் உழுகிறபோது-நிலச் சொந்தக்காரர்களுக்கு பாத்தியதை இருக்கிறது என்று பட்டா இருந்தாலும்கூட,—அவர்கள் தான் உழுகிறார்கள் என்பதற்கு ரிக்கார்ட் இல்லாமல் இருக்கிறது. பதிவு செய்கின்றபோது நிலச் சொந்தக்காரர்கள் அவ்வாறு செய்யச் சொல்லி ஏற்பாடு செய்து விடுகிறார்கள். நீண்டகாலமாக நிலம் உழுபவர்கள் யார் என்பதைப் பற்றி பக்கத்திலே நிலம் உழுபவர்களுக்குத் தெரியும். அப்படி அவர்களுக்கு ரெவின்யூ அதிகாரிகள் ரெக்கார்ட் கொடுப்பதற்கு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே பக்கத்திலே நிலம் உழுபவர்களிடமிருந்து உண்மையைத் தெரிந்து அவர்களைப் பதிவு செய்வதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களுக்கு அப்படித்தான் செய்ய வேண்டுமென்று, சாதகமாக செய்யவேண்டுமென்று, அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடைபெறுகின்ற அரசு நிகழ்ச்சிகளிலே எல்லாம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தை வெள்ளாமை செய்கின்ற குத்தகைதாரர்கள் சில நேரங்களிலே அதற்கு எழுத்து மூலமாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் நிலச் சொந்தக் காரர்கள் வாய் மூலமாக நிலத்தை குத்தகைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிந்த விஷயம். அதைச் சரிப்படுத்துவதற்கு ஆங்காங்கே ஒவ்வொரு வட்டத்திற்கும் கமிட்டி போடவேண்டுமென்று அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது வட்ட ரீதியாக கமிட்டி போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இருக்கிற சட்டப்படி தஞ்சை, தென் ஆர்க்காடு மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் பதிவு செய்வதற்கு அதிகாரிகள் முன்வரவில்லை என்ற தகவல் அரசுக்கு வந்ததா? அப்படியானால் இதை வருங்காலத்திலாவது செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தகவல் வரவில்லை. வந்தால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும். குத்தகைதாரர் களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதில் அரசு மிகுந்த அக்கறையாக இருக்கிறது. குறிப்பாக குத்தகைதாரர்கள் பிரச்சினையில் அதிகாரிகள் மீது அரசு மிகமிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.



1983 பிப்ரவரி 9]

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மொத்த குத்தகைதாரர்களில் இன்னும் சுமார் 1 லட்சம் பேர்கள் குத்தகை பதிவு இல்லாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த குத்தகைப் பதிவு செய்வதற்கு தனியாக அதிகாரிகள் போட்டுப் பார்த்தார்கள். ரெவின்யூ இலாகாவிடம் ஒப்படைத்துப் பார்த்தார்கள். அப்படி இருந்தும் இன்னும் 1 லட்சம் பேர்கள் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள் என்றால், எந்த அளவுக்கு இன்றைக்கு அதிகாரிகள் குத்தகை பதிவு செய்வதில் ஒரு உணர்வு காட்டாமல் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு கமிட்டி போடப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால் அந்தக் கமிட்டி எப்போது போடப்படும்? இன்னும் எவ்வளவு காலத்தில் இந்த 1 லட்சம் பேர்களை பதிவு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் போட்டுப் பார்த்து சரியாக இல்லாத காரணத்தால்தான் நான் உங்களைப் போன்றவர்களையெல்லாம் இந்தக் கமிட்டியிலே போட்டு, அதன் மூலமாக சரியான நடவடிக்கை எடுக்க அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு எழுத்து மூலமாக ஆதாரங்கள் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக, சிவில் நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெற்று குத்தகை தாரர்களை வெளியேற்றும் நிலை இருந்து வருகிறது. ஆகவே சிவில் நீதிமன்றங்கள் இம்மாதிரி வழக்குகளை எடுக்கக்கூடாது என்று ஒரு சட்டத்தை அரசு கொண்டுவருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போடப்படுகிற கமிட்டிக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் அவர்களே செய்துவிடுவார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம் இந்த குத்தகை பதிவு செய்கிற நேரத்தில் யாராவது நிலத்தை கிரயத்திற்கு வாங்கிவிட்டால்—8 கிலோ மீட்டருக்கு அப்பால் அவர்கள் இருந்தால் கூட—அதை உண்மையாக உழுதுகொண்டிருந்த குத்தகைதாரர்களை வெளியேற்றும் முறையில்—அவர்கள் பக்கத்திலே வந்து குடியேறிக் கொண்டு, தான் அங்கேயே குடியிருப்பதாக தெரிவித்து குத்தகை தாரர்களை மாற்றக்கூடிய நிலைமை இருப்பதால் அதை தடுக்கக் கூடிய முறையில் ஏற்கனவே இருந்தவருடைய உரிமையை நிலைநாட்ட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள குத்தகைதாரர்களுக்கு எல்லா விதமான பாதுகாப்பையும் இந்த அரசு கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 104, 105, 106, 107 ஆகியவை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

எடை, அளவுகள் சட்டத்திலுள்ள தண்டனை அளவை அதிகரிக்கும் திட்டம்.

*வினா எண். 194—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடை, அளவுகள் சட்டத்தில் உள்ள தண்டனை அளவை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த தண்டனை, குறைந்த அபராதம் என்று விதிப்பதால் எப்படி குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறதோ. அதேபோல இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற அலுவலர்கள் குறைவாக இருப்பதாலும் அதனை தீவிரமாக நடைமுறைப் படுத்த இயலாமல், குற்றங்கள் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, எனவே இந்தச் சட்டத்தினை நடைமுறைப் படுத்த கூடுதலாக அலுவலர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதிலும் உண்மை இருக்கிறது. குறைந்தபட்சம் 100 முத்திரை ஆய்வாளர்களும், 10 துணை ஆய்வாளர்களும் இருந்தால்தான் செம்மையாக நடைமுறைப்படுத்த முடியும் என்று கருதப்படுகிற காரணத்தால், அதை நிறைவேற்ற படிப்படியாக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே இப்படி அதிகமாக தண்டனை விதிக்கின்ற வகையில் திருத்தங்கள் வேறு ஏதாவது கொண்டு வரப்பட்டிருக்கிறதா அல்லது இதுதான் முதன்முறையா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசே ஒரு விரிவான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக ஏற்கெனவே நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் 79 லேயிருந்து அது நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்த்தும் வரவில்லை. முதன்முறையாக தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு விரிவான திருத்தத்தை, எடையில் குறைவு செய்து ஏமாற்றுகிறவர்கள் அல்லது அதுபோன்ற குற்றங்குறைகளைச் செய்பவர்கள், இவர்களைக் கடுமையாக தண்டிக்கும் வகையில் இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடைகளைக் குறைவாகக் காட்டும் வியாபாரிகளைப் பிடிப்பதற்காக புதியதாக அலுவலர்களை போடப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே உள்ள பாமர மக்கள் வெளியிலே சென்று கடைகளிலேயிருந்து சில பொருள்களை வாங்கி விற்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தக் கடைகளிலே இருக்கும் வியாபாரிகள் எடைகளை—எடை அளவுக் கற்களை சரியாக வைத்திருப்பார்கள். ஆனால் எடையை நிறுத்துப்போடும்போது ஏதாவது ஏமாற்று செய்து, குறைவாக அந்தப் பாமர ஜனங்களுக்கு விற்று விடுகிறார்கள். அதை வாங்கி கொண்டு வந்து, அந்த கிராமத்து மக்கள் விற்கும்போது, இந்த அலுவலர்கள் எடை சரியாக இல்லை என்கிற காரணத்திற்காக, அவர்களை பிடிக்கும்போது, அந்த படிப்பறிவில்லாத கிராமத்து பாமர மக்களுக்கு தண்டனை அளிக்காமல், அவர்கள் வாங்கி வந்த அந்தக் கடை வியாபாரிகளுக்கு தண்டனை கொடுக்கும்படியான முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடை குறைவாக இருக்கும்போது தண்டனை கொடுப்பது இருக்கிற விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். தண்டனை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலே தப்பித்துக் கொள்ளலாம் பிறகு என்ற நம்பிக்கையோடு தவறுகளை வியாபாரிகள் சற்று அதிகமாகவே செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல சில வியாபாரிகளிடத்தில் எடை அளவுகள் சரியாகவே இருக்கும். ஆனால் தந்திரமாக ஏமாற்றுகிற பணியைச் செய்வார்கள். தராசில் வேகமாக பொருள்களை போட்டு மற்றும் சில ஏமாற்று வேலைகள் மூலம், எடைகளின் அளவு சரியாக வைத்திருந்தாலும், பொருள்களின் எடையைக் குறைத்துப் போடும் சாமர்த்தியம் அவர்களுக்கு உண்டு. இவர்களிடம் மக்களும் சற்று விழிப்பாகத்தான் இருக்கவேண்டும். இதுகுறித்து என்ன செய்யலாம் என்பதையும் அரசு பரிசீலிக்கும்.

[1983, பிப்ரவரி 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 66 அடுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தை தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டங்களின் 1979—80-ம் ஆண்டு முன்னுரிமை பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த பெரியகுளத்திலுள்ள தாமரைக்குளம் கிராமம் நில அளவை எண். 563/3, 563/8-ல் 1.02 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொண்டு இத்திட்ட வேலைகளுக்கான மதிப்பீடுகள் வீட்டுவசதி வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## சென்னை நகரை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான திட்டங்கள்.

*வினா எண். 198—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுத்தமாக வைத்துக்கொள்ளவும், கூவம் ஆற்றில் சாக்கடை தண்ணீர் கலக்காமல் இருக்கவும் அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) சென்னை நகரை சுத்தமாக வைத்துக் கொள்ள சென்னை மாநகராட்சியால் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

(1) கொத்தவால் சாவடி போன்ற நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் இரவில் துப்புரவு செய்தல்.

(2) தூய்மைப் பகுதிக்கு பரிட்சார்த்தமாக ஆய்வு செய்தல்.

(3) சந்து பொந்துகளில் எளிதாகச் செல்ல, சிறிய தள்ளு வண்டிகளை உபயோகித்தல்.

(4) தொட்டி கட்டுமானப் பணி.

(5) அதிக லாரிகள் வாங்கும் திட்டம்

(6) பரிட்சார்த்த முறையில் வீடுகளுக்கு குப்பைகளைக் கொட்டி வைக்க பிளாஸ்டிக் வாளி வழங்கும் திட்டம்.

மேலும் கூவம் ஆறு மற்றும் நீர் வழிப்பாதைகள் அசுத்த மடைவதைத் தடுப்பதற்காக சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்தால் உலக வங்கி உதவியுடன் நகரின் பிரதான கழிவு நீரேற்று நிலையங்களைப் புதுப்பித்தல் போன்ற பல வகையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1983 பிப்ரவரி 9]

திரு. இரா. தாமரைக்கனி: சென்னை நகரை தூய்மையாக வைத்துக்கொள்வதற்காக 'மெக்கானிக்கல் ஸ்வீப்பர்', குப்பை கூட்டும் இயந்திரம் சில ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டது, அது வேலை செய்கின்றதா? இதேமாதிரி இயந்திரங்களை வாங்கி குப்பை கூட்ட வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப் பற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: சாக்கடைத் தண்ணீரை கூவத்தில் கலப்பதற்குப் பதிலாக அந்த அசுத்தத் தண்ணீரை இரசாயன முறையில் சுத்தப்படுத்தி தொழிற்சாலைகளுக்கு வழங்கும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா? கூவம் நதிக்கரையோரத்தில் மல்லிகைத் தோட்டங்கள் அதிகமாகப் போட்டு மணமிக்கதாக கூவம் ஆற்றை செய்யக்கூடிய திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தண்ணீரை சுத்தம் செய்து இன்டஸ்ட்ரியல் யூஸ்-க்கு கொண்டுபோவதற்கும் புல் வளர்க்கவும் திட்டம் உள்ளது. கரையோரத்தில் பூங்கா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும்.

திரு. என். வி. என் சோமு: சென்னை நகரில் கழிவுநீரால் ஏற்படும் சீர்கேடுகள் அதிகமாக இருக்கிறது என்று சென்னை நகர சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கூட 28-1-83 ஒரு நாள் மறியல் நடத்தியிருக்கிறோம். அமைச்சர் அவர்களுக்கு அது தெரியும். நான் கேட்க விரும்புவது, ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக அந்த கழிவுநீர் அகற்றும் இயந்திரத்தை ஒதுக்கும் திட்டம் ஏதாவது அரசாங்கத்தினிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தற்போது இல்லை.

திரு. எஸ். இளையபெருமாள்: கழிவுநீரை சுத்தம் செய்வதற்கு ஒரு மெஷின் வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மெஷின் எல்லாயிடங்களுக்கும் செல்வதற்கு சௌகரியமாக இருக்கக்கூடிய நிலையில்லாது, தெருக்களை அகலப்படுத்தாத நிலை இருப்பதால் கஷ்டமாக இருக்கிறது. இதுபோன்று இன்னும் பல புதிய மெஷின்கள் வாங்கி தெருக்கள் அசிங்கமில்லாமல் இருக்கச் செய்யக்கூடிய நிலையில் புதிய நிலைமகளை உருவாக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: காலம் ஆக ஆக மாண்புமிகு உறுப்பினர்கள் போன்ற அனுபவம் உள்ளவர்கள் சொல்லும் ஆலோசனைகளை கருத்தில் ஏற்றுப் புதுப்புது வகையான திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எடை போடும் கற்களை வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அந்த வருடத்திற்கு ஒரு முறை என்பதும், குறிப்பிட்ட ஒரு சமயத்தில் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அங்கேயுள்ள ஊழியர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் வருடத்திற்கு ஒரு முறை என்பதை இந்த தேதியிலிருந்து இந்த தேதி வரை என்று குறிப்பிட்டு மாற்றுவதற்கு அரசு உத்திரவு விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு இரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடைகளை ஒரு மாதத்தில் புதுப்பிக்க வேண்டும் என்பது நடைமுறையில் கண்டிப்பாக இயலாத காரியம் என்று அரசு உணருகிற காரணத்தால், வர இருக்கின்ற சட்டத் திருத்தத்திலே இதற்கும் தக்க மாற்றங்கள் கொண்டு வர அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம்.

*வினா எண். 195—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம் பயன்படுத்தப்படாமல் அதன் அலுவலகம் வேறு இடத்தில் செயல்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் சங்க கட்டிடத்திலேயே அதன் அலுவலகம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) சங்க கிடங்கு கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க கிடங்குக் கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது என்று மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது இயங்குகிற அலுவலகம் மிராசுதார்கள் இருக்கின்ற பகுதியில் இருப்பதால் சாதாரண ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே சென்று அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த அலுவலகத்தை வேறு இடத்தில் மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தற்போது கிராம அங்காடியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அங்காடியாக இருந்தாலும் சரி, அது பஞ்சாயத்து கட்டடத்திலே இயங்குகிறது. சீவாடி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் அந்த அங்காடி இயங்குவதால், தாழ்த்தப்பட்ட மக்கள், அந்தப் பகுதிக்குச் சென்று பொருள்கள் வாங்க முடியாத அளவிற்கு சிரமம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறையைப் போக்க அதனுடைய கிளை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முயற்சிக்கும்.

சென்னை பிராட்வேயிலுள்ள வெளியூர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண். 196—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே வெளியூர் பேருந்து நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். சென்னை பிராட்வேயில் உள்ள வெளியூர் பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி, தற்போதுள்ள இடத்தில் நகர் பேருந்து நிலையம் மற்றும் கடைவீதியாக மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த பேருந்து நிலையம் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே மாற்றுகின்ற வரையில் அதை நல்ல முறையில் கவனிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி கவனிக்கலாம்.

பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம்.

*வினா எண். 197—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1983 பிப்ரவரி 9

திரு. மி. வின்சென்ட்: சென்னை நகரை சுத்தமாக வைத்துக் கொள்வதோடல்லாமல், கழிவு நீரேற்று நிலையங்களை புதுப்பிப்பதோடு கூவம் ஆற்றில் சாக்கடைத் தண்ணீர் கலக்காமல் இருக்க அரசிடம் தனித் திட்டம் ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சாக்கடை நீர் ஏற்று நிலையங்கள் சரிவர இயங்காததினால் கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பது உண்டு. இதைத் தடுக்க உலக வங்கியின் உதவியுடன் ஏழு கோடி ரூபாய்க்கு திட்டம் வகுக்கப்பட்டது. இதன்படி சென்னை குடிநீர் வாரியம் பிரதான 15 சாக்கடை நீர் ஏற்று நிலையங்களில் மேம்பாட்டு வேலைகள் மேற்கொண்டு அதிக சக்தி இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வேலைகள் முடியும் தறுவாயில் உள்ளன. இதனால் சாக்கடை கூவம் ஆற்றில் கலப்பது தடுக்கப்படும்.

நகரில் சாக்கடை அடைப்புகளினால் கழிவுநீர் வழிந்து வடிகால் மூலம் கூவத்தை அடைகிறது. இதைத் தடுக்க இயந்திரங்கள் மூலம் அடைப்புகளை அப்புறப்படுத்த சென்னை குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபாய். 50 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன. இதனால் கூவம் ஆற்றில் கழிவு நீர் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

மற்ற சாக்கடை நீர் ஏற்று நிலையங்களையும் மேம்பாடு செய்ய சென்னை குடிநீர் வாரியம் ரூ. 2 இலட்சம் செலவு செய்துள்ளது. பாதாளச் சாக்கடை இல்லாத பகுதிகளான அரும்பாக்கம், அமைந்தகரை ஆகிய பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியம் பாதாளச் சாக்கடை அமைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் முழுவதும் நிறைவேறிவிட்டால் கூவம் ஆற்றில் சாக்கடை கலப்பது தடுக்கப்படும். சென்னை பொது மருத்துவமனை, மத்திய சிறை ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள குடிசைப் பகுதி ஆகியவைகளினால் சாககடை கூவத்தில் கலக்கிறது. இதை தடுக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

திரு. து. புருஷோத்தமன்: சென்னை நகரில் பல்வேறுயிடங்களில் குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் பாதாளச் சாக்கடை வசதிகள் இல்லாமல் இருக்கிறது. அதுவும் கூவம் ஆற்றங்கரைப்பகுதி, அடையாறு ஆற்றுப்பகுதி யோரங்களில் உள்ள குடிசைப்பகுதிகளில் பாதாளச் சாக்கடை இல்லாததால், அதிகப்படியாக தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி பல்வேறு நோய்கள் வருகின்றன. இவைகளைப் போக்குவதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்துள்ளதா?



1983 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆற்றங்கரையோரங்களில் குடியிருப்பவர்களுக்கு பக்கத்தில் பாதாளச்சாக்கடை போட முடியாது. அங்கே இருப்பவர்களை மாற்று இடத்திற்கு எவ்வளவு அருகாமையில் இடம் கொடுக்கமுடியுமோ அங்கே குடியேற்றுவதுதான் சிறந்த முறை. அதைத்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று நான் சற்று முன்பே தெரிவித்தேன்.

(முற்பகல் 9 30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆற்றில் பெருகிவரும் துர்நாற்றத்தைப் போக்குவதற்கு ரசாயன கலவையைக் கலந்தால், போக்க முடியும் என்று சென்னை ஐ. ஐ.டி. யிலிருந்து மாநில அரசுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளதா? ஆம் எனில், அதை அரசு விரைவில் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை ஐ. ஐ. டி. யிலிருந்து பல்வேறு நேரங்களில் பல்வேறு ஆலோசனைகளைக் கூறுகிறார்கள். பெரும்பாலான ஆலோசனைகள் அவுட் டேட், அவுட் மோடடாக இருக்கின்றது. இருந்தாலும், அவைகளைப் பரிசீலனை செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சென்னை நகரைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு பல்வேறு விதமான திட்டங்களை இங்கே அறிவித்தார்கள். சென்னை நகரத்திலே பல இடங்களில் கழிவு நீரை அகற்றுவதற்கு சரியான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ரோடுகள் சரியாக இல்லாத காரணத்தினால், பல இடங்களில் அந்த கழிவு நீர் ஆங்காங்கே தேங்கியிருப்பதன் காரணமாக, பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. இன்று பல இடங்களில், ரோடுகளை மேடாக்குவதற்கு கார்ப்பரேஷன் குப்பைகளைக் கொட்டுகிறார்கள். அதனால், அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் அங்கே குடியிருக்க முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் ரோடுகளை மேடாக்குவதற்கு கார்ப்பரேஷன் குப்பைகளைக் கொட்டாமலும், அதேமாதிரி ஆங்காங்கே தண்ணீர் தேங்காமல், அவற்றை அவ்வப்போது அகற்றவும் துரிதமான நடவடிக்கை எடுக்க, இந்தப் பிரச்னைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடைத் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. அதற்காகத் தான் 1, 2, 3, 4, 5 என்று விடைகளை சற்று முன்பாகப் படித்தேன். சந்து பொந்துகளில் எளிதாகச் செல்லக்கூடிய சிறிய

தள்ளு வண்டிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. குப்பைகள் சேர்ந்து விடுகின்றன. பெரிய ரோடுகளில் உடனடியாக எடுத்து விடுகிறார்கள். சிறிய சாலைகளில் அப்படி உடனடியாக எடுப்ப தில்லை; அது உண்மை. சந்துபொந்து போன்ற இடங்களில் போகக்கூடிய அளவுக்கு சிறிய தள்ளுவண்டிகள் மூலம் எடுக்கப் பட்டு வருகின்றது.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நகரைச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் மாநகராட்சிக்கு மட்டு மின்றி, பொது மக்களுக்கும் பொறுப்பு இருக்கின்றது என்ற வகையில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் கடுமையான சட்டத்தின் மூலம் நகரைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அதைப்போல் இங்கே கொண்டு வந்து, நகரைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல கேள்வி. இதேமாதிரியான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு பப்ளிக் கோவாபரேஷன் இருக்கவேண்டும். ஆற்றங்கரை ஓரத்தில் இருக்கக்கூடிய குடிசை களை அப்புறப்படுத்தி, கூவம் ஆற்றில் அசுத்தமான கழிவு நீரை விடாமல் இருக்கவேண்டும் என்று நடவடிக்கை எடுத்தால் குடிசைகளைத் தாக்காதே, குடிசைகளை அகற்றாதே, நடுத் தெருவில் நிறுத்தாதே, பாலங்களை உடைக்காதே என்றெல்லாம் கோஷங்கள் எழுப்பி, அதை அரசியலாக்கி விடுகிறார்கள். இம் மாதிரியான விஷயங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, சிங்கப்பூர் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய மாதிரி சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சொன்னால், இம்மாமன்றம் அந்தச் சட்டங் களுக்கு பின்னால் நிற்கும், அதற்கு ஆதரவு தரும் என்று சொன்னால் நிச்சயமாக அதுமாதிரியான சட்டங்களைக் கொண்டு வரலாம்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதில் நான் கேட்க விரும்புவ தெல்லாம், எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு முன்னால், நீதி மன்றம், பொதுவாக பஸ் நிலையங்கள், நம்முடைய போலீஸ் கமிஷனர் அலுவலகம்—போலீஸ் கமிஷனர் அலுவலகம் சந்து பொந்தில் இல்லை, பெரிய ரோடு தான், அப்படியிருக்கும் இடங் களில் இம்மாதிரி சுத்தப்படுத்துவதற்கு அரசு முன்முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள் கிறோம். பப்ளிக் ரெப்ரசென்டேஷனுக்கு ரெஸ்பான்சிவ்வாக இருக்க வேண்டும். நாங்கள் பப்ளிக் ரெப்ரசன்டேஷன்-க்கு ரெஸ் பான்சிவ்வாக இருக்கிறோம். அதுதான் சிறந்த அம்சம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, சென்னை நகரை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரச்சனையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல பல விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். ஆனால் சென்னை நகரத் தையும் அதைப்போன்று தமிழகத்தில் இருக்கிற பெரிய நகரங் களையும் சுத்தப்படுத்தி, சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டு மென்றால் அதற்கு அடிப்படையான ஆட்கள் போதுமான அளவுக்கு இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? போதுமான ஆட்கள் இருந்தால் தான் குப்பைகளை அப்புறப்படுத்தி, சாக்கடை களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும் என்பதை அரசு உணர்ந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

### சென்னை நகரில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க 1982-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை.

*வினா எண். 199—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு 1982 மே, ஜூன் மாதங்களில் கோடையில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க தனியாக நிதி ஒதுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) செய்யப்பட்ட பணிகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) குடிநீர் பற்றாக்குறையைச் சமாளிக்க கீழ்க்கண்ட நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன:—

(1) சென்னை நகரில் பல இடங்களில் குடிநீர் அல்லாத மற்ற உபயோகங்களுக்கு 4,000க்கு மேற்பட்ட கூடுதலான ஆழாய் கிணறுகள் அமைத்தல்.

(2) குடிசைப் பகுதிகளுக்கும் குறைந்த நீர் அழுத்தம் உள்ள பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க 750 நீர்த்தொட்டிகள் அமைத்தல்.

(3) அதிகப்படி குடிநீர் லாரிகளை வாடகைக்கு அமர்த்தி மொத்தம் லாரிகள் எண்ணிக்கையை 100 வரை அதிகப் படுத்துதல்.

(4) பெரிய மருத்துவ மனைகள், கல்வி நிலையங்கள், அரசு அலுவலகங்கள் முதலியவற்றிற்கு அவசிய தேவையைப் பூர்த்தி செய்ய லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல்.

வகையிலே ஒரு தவறான பிரச்சாரம் நாட்டு மக்கள் மத்தியில் கிளப்பப்படுவது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அந்தத் தவறான பிரச்சாரத்தை போக்க அரசு செய்த சாதனைகளை விளக்கி மக்கள் மத்தியிலே விளம்பரப்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லாத கேள்வி. ஆனால் அப்–டு–டேட் அதாவது பிப்ரவரி மாதம் 9-ஆம் தேதி வரையில் என்ன செய்திருக்கிறோம் என்பதற்கு தனிக் கேள்வி கேட்டால் நான் விரிவான மிக விவரமான பதிலைச் சொல்லத் தயாராகக் காத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய குடிநீர் பிரச்சினையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்கள். குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் கச்சேரி நடத்தப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். எனவே மீண்டும் அதுபோன்ற கச்சேரிகளை புழலேரியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை தாங்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே' கச்சேரி நடத்தப்பட்டது உண்மை. நான் போய் இருந்தது உண்மை. ஆனால் இது ஒரு ஜனநாயக நாடு. இங்கே தனிப்பட்ட கொள்கையினை யார் மீதும் திணிக்கக்கூடாது. பொதுவாக மக்கள் விரும்பி ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்தால் அவற்றில் அமைச்சர்கள் போய் கலந்துகொள்வதுதான் தமிழகத்தின் பண்பாடு. நீங்கள் நாத்திகர்கள். you are an atheist. ஆனால் கட்சியில் சேருபவர்கள் எல்லாம், அனுதாபிகள் எல்லாம அப்படித்தான் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவதில்லை. அப்படி ஒரு சிறந்த கொள்கையைக் கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அதைத்தான் கையாண்டுகொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 200, 201, 202 ஆகியவை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க த ளி வைக்கப்பெறுகின்றன.

### தமிழ்நாட்டில் இயங்கி வரு விசைத்தறிகள்.

*வினா எண். 203—திரு. குமரிஅனந்தன்; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக விசைத்தறி அமைக்க உரிமை வழங்குவது முழுமையாக தடை செய்யப்படுமா?

(ஆ) இப்போது எவ்வளவு விசைத்தறிகன் இயங்குகின்றன?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) புதிதாக விசைத்தறிகளை நிறுவ அனுமதி வழங்குவது மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். மத்திய அரசு புதிதாக விசைத்தறி நிறுவுவதைத் தடை செய்திருந்தது. தற்பொழுது மத்திய அரசு விசைத்தறிகளை 5 சதவீத அளவிற்கு கூட்டுறவுத் துறையில் மட்டுமே விஸ்தரிப்பதென கொள்கையளவில் முடிவெடுத்துள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் 31–12–81 அன்றைய தேதியில் மொத்தம் 85,909 விசைத்தறிகள் உரிமத்துடன் இயங்கி வந்தன. இந்த ஆண்டு புதிதாக 200 விசைத்தறிகளை மத்திய அரசு வழங்கி இருக்கின்றது. 14 இடங்களில் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு இது வழங்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேகமாக விசைத்தறிகள் வருவது பற்றிப் பேசுகின்றபோது அதை நாம் தடுக்க முடியாது. ஆனால் இதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி அரசு ஆராய்ச்சி செய்ததா? அதுபற்றி முடிவு எடுத்ததா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். உரிமம் வழங்குகின்ற அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கின்றது என்று. அவர்கள் 5 சதவீத அளவுக்கு அனுமதி வழங்குவதாக முடிவெடுத்திருக்கிறார்கள். அப்படி வழங்கப்படுகிற அனுமதி கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுத்தான் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. கைத்தறி நெசவாளர்கள்பாதிக்கப்படக்கூடாதுஎன்பதற்காகத்தான்கைத்தறி நெசவாளர்கள் எந்தெந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும், விசைத்தறி எந்தெந்த ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மீறுகின்ற விசைத்தறியாளர்கள் மீது வழக்கு தொடரவோ அபராதம் விதிக்கவோ வழிமுறைகள் சட்டத்திலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, நான் கேட்க இருந்த கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறி விட்டார்கள். ஆனால் கைத்தறிக்கு என்று ஒதுக்கப்படுகின்ற ரகங்களை விசைத்தறியிலே உற்பத்தி செய்கிறார்கள், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். கைத்தறிக்காக ஒதுக்கி இருக்கின்ற ரகங்களை விசைத்தறி நெசவாளர்கள் தயாரித்தால் அவர்களுடைய உரிமங்கள் ரத்து செய்யப்படவும், அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்கு தொடரவும், அபராதம் விதிக்கவும், சிறைக்கு அனுப்பவும் பல்வேறுவிதமான வழிமுறைகள்

சென்னை நகருக்குள் மேற்கண்ட பணிகள் தவிர, மேலும் கூடுதலான நீர் நகருக்கு வழங்க தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களில் புதிய 20 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், மூன்று நீர்த்தேக்கங்களில் ராட்சதக் கிணறுகள் தோண்டுதல் மற்றும் பூண்டி நீர்த்தேக்கத்தில் அடியில் உள்ள சிறிதளவு நீரையும் சென்னைக்குக் கொண்டுவர வழிசெய்ய ஏரிக்குள்ளே மேட்டுப்பகுதியை வெட்டி கால்வாய் அமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி 1982 மே, ஜூன் மாதத்தில் இந்தத் திட்டத்தைப் பற்றி கேட்கப்பட்டது. இங்கே பல திட்டங்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு கடுமையான குடிநீர் பஞ்சம் இருக்கக்கூடிய இந்த நிலையில் ஏற்கனவே போடப்பட்ட திட்டங்களில் என்ன என்ன திட்டங்கள் இப்போது உபயோகமாக இருக்கின்றன. மேற்கொண்டு இந்த ஆண்டில் அதைவிட தீவிரமான திட்டம் ஏதாவது அரசின் ஆலோசனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி 1982 மே, ஜூன் மாதங்களைப் பொறுத்தது மட்டும்தான். மே, ஜூனுக்குப் பின்னால் இந்த பிப்ரவரி வரையில் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்று ஒரு தனிக் கேள்வியை, அதுவும் அவசரக் கேள்வியாக, போட்டால் நான் உடனே நோட்டீஸ் கொடுத்து, விவரங்களைப் பெற்று, அவைக்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன். கேள்வி போட்டால் நிச்சயமாக பதில் தரப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இதைப் போன்ற கேள்வி போட்ட பிறகு ஏற்கனவே 1982 லே நிறைவேற்றப்பட்டத் திட்டங்களில் 1983 ஆம் ஆண்டில் எத்தனைத் திட்டங்கள் உபயோகத்தில் இருக்கின்றன என்பதைச் சொல்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அந்த விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 1982 மே, ஜூன் மாதங்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. உதாரணமாக, 4000 க்கு மேற்பட்ட குழாய்கள் போட்டோம் என்றால் அந்த 4000 க்கு மேற்பட்ட குழாய்களும் உபயோகத்தில் இருக்கின்றன. அதற்கு மேலும் இப்போது போட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேலும் பல்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டுமென்றால், மூன்று பக்கத்திற்கு மேல் பதில் இருக்கிறது. அதற்கு வேண்டிய தனிக் கேள்வியை, குறுகிய கால வினாவாகப் போட்டால் கூட முழுமையாகப் பதில் அளிக்கிறேன்.



திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, இந்த தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கான திட்டத்தைச் சொன்னார்கள். 1982 லே பல திட்டங்களை நிறைவேற்றினார்கள். 1982-லே நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் இப்போது உபயோகத்தில் இருக்கின்றனவா இல்லையா? ஏனென்றால் பல இடங்களில் குழாய்களைக் காணவில்லை. மேலும் ஒரு இடத்தில் குழாய் போடவேண்டும், இத்தனை அடி ஆழத்தில் போடவேண்டும் என்று காண்ட்ராக்ட் கொடுக்கிறார்கள். அவர்கள் கொஞ்சம் ஆழத்திற்கு குழாய் அடித்துப் பார்த்துவிட்டு, தண்ணீர் இல்லை, அதனால் போட முடியாது என்று அப்படியே விட்டு விட்டு போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு இடங்களிலே இருப்பது உண்மையா? அபபடியானால் அந்த நிலைமையைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, எங்கெங்கே தண்ணீக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்களோ அங்கெல்லாம் தண்ணீர் கொடுக்க தேவையான முயற்சிகளை எடுக்கிறோம். இன்றைக்கு ஒரு இடத்திலே 10 அடி குழாய் போடுகிறோம். அங்கே தண்ணீர் இல்லை என்று தெரிந்தால் உடனே அதற்குப் பக்கத்தில் அடுத்த இடத்தில் போடுகிறோம். ஒரு இடத்தில் தண்ணீர் இல்லை என்று தெரிந்தவுடன் அப்படியே விட்டுவிடுவதில்லை. தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்கிற இடங்களிலெல்லாம் இப்போது குழாய்கள் போடுகிறோம். சில இடங்களில் குழாய் போட்டு சில நாட்களில் தண்ணீர் வரவில்லை என்று புகார் வருகிறது. உடனே பக்கத்திலே, அதற்கு அடுத்த பக்கத்திலே குழாய்போட்டு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். இதெலலாம் தொடர்ந்து இருக்கக்கூடிய ஒன்று. அதைத் தான சொன்னேன். குறிப்பிட்ட ஒரு இடத்தில், எந்த இடத்திலாவது, இடத்தைக் குறிப்பிட்டு, இன்ன இடத்தில் போடப்பட்ட குழாயில் தண்ணீர் வரவில்லை என்று புகார் வந்தால் உடனே இங்கே தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தகவல் கிடைத்தவுடனே 'we rush there' அங்கே தண்ணீர் இல்லை என்று தெரிந்தால், அதற்கு அடுத்து எவ்வளவு பக்கத்தில் தண்ணீர் கொடுக்க முடியுமோ எவ்வளவு அருகாமையில் குழாய் போட்டு தண்ணீர் கொடுக்க போர்க்கால நடவடிக்கை போல்—வார்ஃபுட்டிங்—வேலை நடக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–40)

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் குடிநீர் பஞ்சத்தினை ஒழிக்க அரசு போர்க்கால நடவடிக்கை எடுத்தும் கூட அந்த நடவடிக்கைகளை மறைக்கிற விதத்திலே தண்ணீர் பஞ்சம் இருக்கின்ற நிலைமையை விட அதிகமாக இருக்கின்ற

படும். எனவே இப்படி விசைத்தறியில் உற்பத்தி செய்து அதில் வேறு முத்திரை குத்தி வியாபாரம் செய்தால் அது அரசு கவனத்திற்கு வந்தால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கைத்தறிகளுக்கு கரை போட்ட வேஷ்டி, சேலை என்ற ரகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற கைத்தறி ரகத்தினைப் பாதுகாப்பதற்கு அரசு இது வரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

(முற்பகல் 9—50)

திரு. ரா. கிருஷ்ணன்: இந்தக் கேள்வியின் நோக்கமே கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டும் கைத்நூல் விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான். இதிலே அடங்கியிருக்கின்ற பிரச்சினை. கூட்டுறவுப் ஸ்பின்னிங் மில்களிலே உற்பத்தியாகிற நூல் கைத்தறிக்கு குறைந்த விலையிலே கொடுக்கப்படுவதோடு, உற்பத்தி செய்யப்படுகிற துணிக்கு நல்ல விலை கிடைக்க அரசு உத்திரவாதம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி விசைத்தறிகளைப் பற்றியது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மூலக்கேள்வி விசைத் தறியைப் பற்றி இருக்கிறது. கைத்தறியைப் பொறுத்தவரையில் அந்த இலாகா கல்வியமைச்சரிடத்திலே இருக்கிறது. கூட்டுறவு ஆலைகளிலே உற்பத்தியாகிற நூல் கூட்டுறவு நெசவாளர் சங்கங் களுக்குக் கொடுக்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிற துணிகள் கோஆப்டெக்ஸால் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய் யப்படுகிறது. விசேஷ காலங்களிலே சப்ஸிடி அரசு கொடுத்து வருகிறது. கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியைப் பெருக் கவும், அவர்கள்உற்பத்தியை விநியோகம் செய்யவும் கோஆப் டெக்ஸ் எல்லா விதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறது.

திரு. து. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் நூல் உற்பத்தி பஞ்சாலைகள் மூலமாக அதிக மாகிறதுஎன்று சொன்னார்கள். விசைத்தறிகளுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் நூல் கிடைக்காமல் இன்றைக்கு அதிகமான விலைக்கு நூல் விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி 'விசைத்தறிகளைக் குறைக்க வேண்டுமென்ற நெசவாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை அரசு ஏற்று நடைமுறைப்படுத்துமா' என்று இருக்கிறது. அதற்கு இது சம்பந்தமில்லை.



மணவாளக்குறிச்சியிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மணல்

*வினா எண். 205—திரு. டி. மணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மணலிலிருந்து அந்நிய செலவாணி எவ்வளவு கிடைக்கிறது?

(ஆ) அப்பகுதியில் கிடைக்கும் இல்மனைட், நூட்டையின், சுர்கான், மோனசைட் போன்ற மணலிலிருந்து இப்பகுதியில் தொழிற்சாலை ஏதாகிலும் தொடங்க செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) 1980—81 நிதியாண்டில் கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சி கடற்கரை மணலிலிருந்து பெறப்பட்ட இல்மனைட், கார்னட் மற்றும் சிர்க்கான் முதலிய கனிமங்களின் ஏற்றுமதி மூலம் ரூ.33,15,916 அந்நியச் செலவாணி கிடைக்கப்பெற்றுள்ளது.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே தொழில்கள் இல்லை. தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. 1967 ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்படவில்லை. இருக்கின்ற தொழில்களை பாதுகாக்க முடியவில்லை என்ற நிலை இருக்கிறது. கடந்த 5 மாதங்களாக 50 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுகின்ற முந்திரி ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. இந்த நிலையில் மணவாளக்குறிச்சியிலே ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பிக்க ஆய்வு நடத்தி தொழில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே கடற்கரை மணலிலிருந்து பெறப்படுகின்ற பொருட்கள் இந்திய அரசினுடைய அணுசக்தி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மீதம் இருப்பது ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்காகச் சுரங்கக் குத்தகை இந்திய அரசினுடைய இண்டியன் ரேர் எர்த்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு லீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் ஏற்றுமதியின் மூலமாக 33 லட்ச ரூபாய் அன்னியச் செலாவணி கிடைத்திருக்கிறது. அந்தப் பகுதியிலே எந்தத் தொழிலும் இல்லை என்று கூறி ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களா என்று கேட்டார்கள். அரசு அதைப் பற்றி பரிசீலிக்கும்.

சட்டத்திலே இருக்கின்றன. அப்படி வசதிகள் இருப்பதால் யாராவது மீறினால் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அதிகபேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியது கைத்தறித் தொழில். இப்போது விசைத்தறியில் தயாரிக்கக்கூடிய துணிகளை கைத்தறி துணி என்று சீல் போட்டு விற்கக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. ஆகவே இன்னின்ன ரகங்களைத்தான் விசைத்தறி உற்பத்தி செய்யவேண்டும் என்று திட்டவட்டமாக அரசு முடிவு எடுக்குமா அல்லது விசைத்தறிகள் ஓரளவுக்குத்தான் தமிழ்நாட்டில் அமுலில் இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; ஏற்கனவே நான் சொன்னேன், விசைத் தறிகள் இன்னின்ன ரகங்களைத் தயார் செய்ய வேண்டும், கைத்தறி இன்னின்ன ரகங்களைத் தயார் செய்யவேண்டும் என்று மிக தெளிவாக மத்திய அரசால் விதிகள் மூலமாக வரையறுக்கப் பட்டிருக்கிறது.

*வினா எண்.204—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விசைத்தறிகளை குறைக்க வேண்டுமென்ற நெசவாளர் களின் நீண்ட நாளைய கோரிக்கையை அரசு ஏற்று நடைமுறைப் படுத்துமா?

(ஆ) அனுமதியில்லாத விசைத்தறிகளை உடன் ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) விசைத்தறிகள் நிறுவிட, உரிமங்கள் வழங்குவது மத்திய அரசினுடைய அதிகாரத் திற்கு உட்பட்டதாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பின் மத்திய அரசால் மாநிலங்களுக்கு புதிய விசைத்தறிகள் ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆனால் தற்பொழுது மத்திய அரசு புதிய விசைத்தறிகளை 5 சதவித அளவிற்கு கூட்டுறவுத் துறையில் மட்டும் விஸ்தரிப்பதென கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது.

(ஆ) நாட்டில் அங்கீகரிக்கப்படாத விசைத்தறிகள் பெருகி விட்டப்படியால் அவற்றை முறைப்படுத்தி உரிமம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி 31-3-81 அன்றைய தேதியில் உரிமம் இல்லாமல் இயங்கி வந்த விசைத்தறிகளை அங்கீகரிக்கும் பொருட்டு முறையாக விண்ணப்பிக்கப்பட்ட விசைத்தறிகளுக்கு சென்னையிலுள்ள மத்திய அரசின் துணிநூல் ஆணையர் அலுவலகம் உரிமம் வழங்கிவருகிறது. எனவே



விசைத்தறிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து மத்திய அரசால் முடிவு எடுக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வியும் ஏற்கனவே எடுத்துக்கொண்ட கேள்விக்கு சம்பந்தப்பட்டதுதான்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஆயிரக்கணககான உரிமம் பெறாத விசைத்தறிகள் இருக்கின்றன. அப்படி உரிமம் பெறாமல் நடத்தி வருவதைத் தடுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—12—81 முடிய ஏற்கனவே அங்கீகரிக்கப் படாத விசைத்தறிகள் இயங்கிவந்தால் அவைகளை 'ரெகுலரைஸ்' செய்வதற்காக மத்திய அரசு அவர்களுக்கு அவகாசம் கொடுத்து அவர்கள் மனுக்கள் செய்துகொள்ளலாம் என்று அறிவித்து அதன் பேரில் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இதுவரை சுமார் ஏற்கனவே 'ரெகுலரைஸ்' பண்ணப்பட்டவை 55,000 விசைத் தறிகள். சட்டத்திற்கு உட்பட்டு அனுமதிக்கு உட்பட்டு இன்றைக்கு 86,000, 87,000 விசைத்தறிகளுக்கு அனுமதி வழங் கப்பட்ட லிஸ்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது மத்திய அரசால். இன்மேல் அங்கீகாரம் இல்லாமல் மேற்கொண்டு விசைத்தறிகள் போடுவதைத் தடுக்க அதிகாரிகள் தகுந்த நட வடிக்கை மேற்கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; இதுபோன்ற விசைத்தறிகள் அதிகமாவதால் பல கைத்தறி நெசவாளர்கள் வேலைவாய்ப்பு இழக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. விசைத்தறிகளில் தயார் செய்கின்ற அந்த ரகங்களை கைத்தறி என்று சீல் குத்தி வியாபாரம் செய்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு ஏதேனும் திட்டங்கள் வைத்து இருக் கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்த பெரியத் தொழில் நெசவுத் தொழில். அதே நேரத்தில் இன்றைக்கு பஞ்சாலைகள் தமிழகத்தில் ஏராளமாக பெருகியிருக்கின்றன. இதற்கு முன்னால் தேவையில்லாத நூல்களை வட மாநிலத்திற்கு கொண்டு போய் விற்றுக்கொண்டு இருந்தார்கள். இப்போது வட மாநிலங்களிலும் பஞ்சாலைகள் அதிகமாயிருக்கின்றன. எனவே பஞ்சாலைகள் சார்பில் விசைத்தறிகளை ஊக்குவிக்க வேண்டும் இல்லை என்றால் நூல் உற்பத்தி பாதிப்புக்கு உள்ளாகும் என்று அவர்கள் ரெப்பர சன்டேஷன் அல்லது அதேபோல் விண்ணப்பம் அரசுக்கு வந்திருக் கின்றன. ஆனாலும் கூட நாம் முடிவுகளை மேற்கொள்ளும் போது எந்த விதத்திலும், மிகப் பெரும்பான்மையான நெசவாளர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அவர்கள் பாதிப்புக்கு உள்ளாகாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, எண்ணிக்கைக்கு மேல் 10 சதவீதம்
ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளை சேர்க்கலாம். இருந்தாலும்
கூட சில அதிகாரிகள், சில ஜில்லாக்களில் இதுவரைக்கும் அந்த
இடங்களை பூர்த்தி செய்யாமல் இருக்கிறார்களே, அது அரசின்
கவனத்திற்கு வந்திருக்கிறதா? அது குறித்து அவர்கள் மீது
என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுபோன்ற குற்றச்சாட்டோ, குறை
பாடோ இதுவரை அரசின் கவனத்திற்கு வரவில்லை. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தருவாரானால் அதனை நிறை
வேற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம்
நீட்டிக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சிங்கம்புணரி ஹாஸ்டலானது கோயிலுக்கும் மடத்
திற்கும் சொந்தமான இடிந்துபோன கட்டிடத்தில் இருக்கிறது.
அந்த இடத்தை அங்கிருந்து மாற்ற வேண்டுமென்று கடந்த 1½
ஆண்டுக்காலம் ஆதி திராவிட நல அதிகாரியும் வார்டன் அவர்
களும் அரசுக்குத் தெரிவித்தும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க
வில்லை என்பது உண்மைதானா? அது மிக ஆபத்தான நிலையில்
இருக்கிறது. அது மட்டுமல்ல, மாணவர்கள் உயிருக்கு ஆபத்தான
நிலைமை இருப்பதால், உடனடியாக அந்த ஹாஸ்டலை வேறு
இடத்திற்கு மாற்ற அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர்
அவர்களே, அந்தத் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே அதைப்பற்றி
சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
எடுத்துச் சொன்னதைப்போல, பாழடைந்த வாடகைக் கட்டடத்
திலே இருக்கக்கூடிய விடுதிகளிலுள்ள மாணவர்களுடைய
நலனைக் கண்காணிக்க வேண்டியது அரசினுடைய கடமை என்ற
உணர்வோடும் அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்கும். குறிப்
பிட்ட சிங்கம்புணரி விடுதியைப் பொறுத்தவரையில் உறுப்பினர்
அவர்கள் எடுத்துச்சொன்ன அத்தகைய பிரச்னைகள் இருக்குமே
யானால், அதன்மீது நடவடிக்கை எடுத்து, தகுதியான நல்ல வாட
கைக் கட்டிடத்திலே தற்போது அந்த விடுதி இருக்கக்கூடிய நிலை
மையை உருவாக்கும். ஏற்கனவே, நான் கூறியபடி, அந்தத் தொகுதி
யினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அருணகிரி அவர்கள்
கேட்டுக் கொண்டதற்கிணங்க, வருங்காலத்திலே இந்த விடுதிக்
கென்று தனியாகச் சொந்தமான விடுதி கட்டுகின்ற நிலைமையை
யும் அரசு பரிசீலிக்கும்.





திரு. கே. சௌந்திரராசன்: பேரவைத் தலைவர் அவர்களே,
ஆதி திராவிட மாணவர்கள் எவ்வளவு பேர்கள் இந்த ஆண்டு
மனு செய்தார்கள், எவ்வளவு பேர்களுக்கு இடம் கிடைத்திருக்
கிறது. அப்படி மனு செய்த அத்தனை பேர்களுக்கும் இடம்
கொடுக்கின்ற வகையிலே இந்த அரசு தனியாக ஒரு திட்டம்
தீட்டி, எல்லா மாணவர்களையும் சேர்த்துக்கொள்கிற அளவுக்கு
ஒரு திட்டம் தீட்டுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சிங்கம்புணரியைப்
பற்றியது. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

### ஆதி திராவிடர்களுக்கு 1980—1981ல் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

*வினா எண். 207—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதி
திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

தமிழகத்தில் 1980—81ல் எவ்வளவு ஆதி திராவிடர்களுக்கு
வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தமிழகத்தில் 1980—81-ம்
ஆண்டில் 21,530 வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதி திராவிடர்
களுக்கு வழங்கப்பட்டன.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
1980—81-ல் பட்டாவிற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டு, எத்தனை
ஊர்களில், இன்னும் வீட்டுமனை வழங்க முடியாத நிலைமையில்
அல்லது டி.டி. பப்ளிகேஷனோடு நின்றிருக்கிறது என்பதனை
அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு தலைவர்
அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை, தனியாகக் கேள்வி
கேட்கவும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே,
அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு சட்டத்
திலே உள்ள எமர்ஜென்சி புரவிஷன் பிரகாரம் ஆர்ஜிதம் செய்
வதிலே, அண்மையிலே உயர்நீதி மன்றத்திலே ஒரு தடை
ஏற்படுத்தியிருப்பதாக அறிகிறேன். அதன் காரணமாக ஆர்ஜிதம்
செய்வது பாதிக்கப்படுகின்றதா? அமைச்சர் அவர்கள் அது
சம்பந்தமாக விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்காக அளிக்கப்படுகின்ற
வீட்டுமனைகளைக் கையகப்படுத்தும்படி தனியாருடைய
நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்றபொழுதும் அதனை முன்பிருந்த

[1983 பிப்ரவரி 9

திரு. டி. மணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் கிடைக்கும் மணலை எடுத்து ஆறுமுக நேரியில் சில கெமிக்கல்ஸ் தயாரிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கெமிக்கல்ஸ் தயாரிக்கிற தொழிலையாவது அந்த பகுதியில் ஆரம்பிப்பதற்கு தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல உடனடி யாக திட்டங்கள் ஏதும் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை புரிந்து அந்தப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு ஏதாவது தொழில் துவங்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் கிடைக்கிற மணலில் என் னென்ன மூலப்பொருள்கள் இருக்கின்றன என்பதை அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே கிடைக்கிற மணலில் இல்மனைட், ருட்டையின், சிர்கான், மோனசைட் போன்ற மூலப்பொருள்கள் இருக்கின்றன.

சிங்கம்புணரியிலுள்ள ஆதி திராவிடர் மாணவர் விடுதி

*வினா எண். 206—திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரி அரிசன மாணவர்கள் விடுதியில் கூடுதலான மாணவர்களை சேர்க்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் வரும் கல்வி ஆண்டே நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ): ஆதி திராவிடர் மாணவ விடுதிகளில் மாணவர்களின் வரையறுக்கப்பட்ட எண்ணிக் கைக்கு மேல் 10 சதவீதம் வரை மாணவர்களை சேர்க்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அரசு ஆணை எண். 862, சமூகநலத் துறை, நாள் 13-11-81-ல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது சிங்கம்புணரி ஆதி திராவிடர் மாணவர் விடுதிக்கும் பொருந்தும்.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவ விடுதிகளில் அந்த மாணவர் களுக்குரிய இடம் காலியாக இருந்தால் பிற்படுத்தப்பட்ட மாண வர்கள் சேர்க்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மாணவ இல்லங்களில் மாண வர்களைச் சேர்ப்பதற்கு 75 சதவீதம் ஆதி திராவிடர்கள்; 20 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்கள்; 5 சதவீதம் முற்பட்டவர்கள் என்ற விகிதாச்சாரம் ஏற்கனவே இருக்கிறது. அந்த அடிப்படை யிலே அவர்களுக்கு இடமளிக்கப்படும்.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்கம்புணரியில் இருக்கும் ஆதி திராவிடர் மாணவர் விடுதி மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் இருப்பதால் இந்த ஆண்டு புதிய விடுதி கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருக்கிற கேள்வி விடுதியில் மாணவர்களை சேர்ப்பது பற்றி; இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இருக்கிற விடுதி பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும், தனியாக கட்டிடம் கட்டிக்கொடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் விடுதியை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான கும்பகோணத்தில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு விடுதி இருக்கிறது. அதற்கெல்லாம் அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. சிங்கம்புணரி விடுதியைப்பற்றி கேள்வி இருந் தால் மட்டும் கேளுங்கள்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக்கு விடுதிகள் எடுக்கிறபோது பெரிய இடமாக இருந்தால் பெர்சென்டேஜ் கூடுதலாக அளிக்க ஏதுவாக இருக்குமே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி எவ்வளவு பெரியது என்றும் அதில் தங்கி படிக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்றும் அரசினுடைய கவனத்தில் இல்லை. தமிழகம் முழுவதி லும் இருக்கிற மாணவர் இல்லங்களில் தங்கிப் படிக்கக்கூடிய மாணவர்கள் குறிப்பாக ஆதி திராவிட மாணவர்களுக்கு இடம் அளிக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் அரசு 10 சதவீதம் உயர்த்தி ஒவ்வொரு விடுதிக்கும் அளிக்கக்கூடிய அதிகா ரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளித்திருக்கிறது.

மனைகளை அளிக்க வேண்டுமென்ற அக்கறை அரசுக்கும் இருக்
கிறது. நிலங்களை மட்டும் ஆர்ஜிதம் செய்கிற பணியோடு
மட்டுமின்றி, வருவாய்த்துறையின் மூலமாக ஒப்படை செய்யப்
பட்ட நிலங்களையும் அந்த மக்களின் நலனுக்காக, அவர்களுக்கு
வீட்டுமனைகளாக அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. என்னிடத்
திலே உள்ள குறிப்புகளின் அடிப்படையிலே பார்க்கிறபொழுது
தமிழகத்திலே தகுதி வாய்ந்த, வீட்டுமனைகளை ஒதுக்கீடு செய்
வதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக 16,97,000 ஆதிதிராவிடர்
பழங்குடியினர் குடும்பங்கள் உள்ளன. இவர்களிலே அரசு நிலம்
கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழாகவும், குடியிருப்புச் சட்டத்
தின் மூலமாகவும், புறம்போக்கு நிலங்களை வருவாய்த்துறையின்
மூலமாக ஒப்படை செய்து அளித்திருப்பதன் மூலமாகவும் இது
வரையில் மொத்தம் 6,91,316 ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு
வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-10)

இது தவிர, உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்
போல, அதிகத்தொகையை ஒதுக்கி அந்தச் சமுதாயத்தைச்
சேர்ந்த மக்களுக்கு, நலத்துறை மூலமாகவும், வருவாய்த் துறை
மூலமாகவும் இன்னும் இருக்கக்கூடிய அனைத்துத் துறைகளின்
மூலமாகவும். இந்த மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை
அதிகமான அளவிலே அளிக்கவேண்டும் என்று பரிவோடு இந்த
அரசு நடந்து கொண்டு இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குகிறபோது,
பெரும்பகுதி நன்செய்யிலேயே வழங்கப்பட்டிருக்கின்றது. நன்
செய்யிலே வழங்கப்பட்டிருப்பதால் அதிலே வீடுகள் கட்டப்
படாமல் தரிசாக கிடக்கின்றது. எனவே அந்த நன்செய் நிலங்
களை மேடாக்கி, ஆதிதிராவிட மக்களுக்கு உடனடியாக அரசின்
செலவிலேயே வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வீட்டுமனைகளை அளிக்கிறபோது, நன்செய்
நிலங்களாக அளிக்கப்படுகின்ற அந்த மனைகள் பள்ளங்களாக
இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். அத்தகைய இடங்களை அவை
நன்செய் நிலங்களாக இருந்தாலும், புன்செய் நிலங்களாக இருந்
தாலும் அந்தப் பள்ளங்கள் நிரப்பப்பட்டு, மேடாக ஆக்கி வீடு
களைக் கட்டுகின்ற நிலைமை உருவாக்கப்படுகின்ற வகையில்,
இந்த அரசைப் பொறுத்தவரையில் அனைத்து மாவட்ட ஆட்சித்
தலைவர்களுக்கும் என்.ஆர்.ஈ.பி. திட்டத்திற்காக இருக்கின்ற
தொகையினை வைத்து இதற்கான ஏற்பாடுகளைச்செய்யவேண்டும்
என்ற உத்தரவினை அளித்திருக்கிறோம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி
வுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

### ஆளுநர் உரையில் தவறான தகவல் அளித்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 246 விதியின்
கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை பேரவையில்
எழுப்ப என் இசைவைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகன் அவர்கள் ஒரு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்.
இந்தப் பிரச்சினையில் அவை உரிமை மீறல் எவ்வாறு எழுகிறது
என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்
கிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
சட்டமன்றத்தில் உண்மைக்கு மாறான தகவல்களை தெரிந்தே
அறிவித்து அவையை திசை திருப்புவது அவையின் உரிமை மீறிய
செயலாகும்.

இத்தகைய உரிமை மீறிய செயலை 24-1-1983 அன்று
மேதகு ஆளுநர் உரையில் இந்த அரசே செய்திருக்கிறது. ஆளுநர்
உரை என்பது அரசு தயாரித்து மேதகு ஆளுநர் மூலமாக படிப்பது
என்பதை யாவரும் அறிவோம். தமிழகத்திலே நிலவும் வறட்சி
குறித்து மத்திய அரசுக்கு 'அறிக்கை ஒன்று அனுப்பிவிட்டதாக'
ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 27-1-1983 அன்று
நான் சபையில் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு பதிலளித்த
வருவாய்த் துறை அமைச்சர் 'இந்த அரசு 24-1-83' அன்றுதான்
அரசு அதிகாரி மூலம் அனுப்பப்பட்டது என்று கூறினார்.
24-1-83 அன்றுதான் ஆளுநர் இம்மாமன்றத்தில் காலை 11.00
மணிக்கு உரையைப் படித்தார். அந்த உரையில் 'வறட்சித் துயர்
தணிப்பிற்கு ரூ. 190 கோடி செலவாகும். விரிவான திட்ட
மொன்று தயாரிக்கப்பட்டு அதுபற்றி இந்திய அரசுக்குத்
தெரிவிக்கப்பட்டுள்ளது' என்று கூறப்பட்டு இருப்பதிலிருந்து
ஏற்கனவே, அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டது என்பது தெளிவாகப்
புரிகிறது.

ஆனால் 27-1-1983 அன்று வருவாய்த் துறை அமைச்சர்
24-1-1983 அன்றுதான் அரசு அதிகாரி மூலம் அனுப்பினோம்
என்கிறார். இதிலிருந்து தெரிவது மத்திய அரசுக்கு அறிக்கையை
அனுப்புவதற்கு முன்பே அனுப்பியாகிவிட்டது என்கிற தவறான
தகவலை இம்மன்றத்திற்கு வேண்டுமென்றே தந்து, அதுவும்
ஆளுநர் உரையின் மூலமாக தந்திருப்பது வெளிப்படையான
உரிமை மீறிய செயலாகும். இத்தகைய உரிமை மீறிய செயலை

பழைய சட்டத்தின்—1894—ஆக்டின்படி கையகப்படுத்துகின்ற பொழுதும் அதிலே காலதாமதம் ஏற்படுவது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் காரணமாக, இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு இன்றியமையாத பிரச்னையாக இருக்கக்கூடிய வீட்டுமனைகளை அளிக்க வேண்டுமென்ற பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பது அரசினுடைய எண்ணமாக இருந்த காரணத்தாலே 1978 ஆம் ஆண்டு புதுச் சட்டத்தைக் கொண்டுவந்து அந்தச் சட்டத்தின்கீழ் இந்த நில ஆர்ஜித நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துகின்ற பணியை அரசு மேற்கொண்டது. ஆனால், உயர்நீதி மன்றத்திலே நிலச் சொந்தக்காரர்கள் அதன்மீது வழக்கு தொடர்ந்தபொழுது இந்தச் சட்ட செல்லாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. தற்பொழுது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பழைய சட்டத்தின் கீழே நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. இந்தச் சட்டம் செல்லாது என்ற உத்தரவை அளித்திருக்கிற உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து இந்த அரசு உச்சநீதிமன்றத்திற்குத் தற்போது வழக்கை எடுத்துச் சென்றிருக்கிறது. தற்பொழுது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், பழைய சட்டத்தின்கீழே ஆதி திராவிடர்களுக்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரியத்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆதி திராவிடர் நலத்துறை மூலமாக நில ஆர்ஜிதம் செய்து இதுவரையில் எத்தனை வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? இதற்காக அரசுக்கான செலவுத்தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்யப் படுவது 1949 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. என்னிடத்தில் உள்ள குறிப்புகளின்படி 30-6-1981 ஆம் தேதி வரையில், 1949 ஆம் ஆண்டு முதல் 30-1-1981-ஆம் தேதி யில் தமிழ்நாட்டிலே இதுவரையில் 3,74,892 வீட்டுமனைகளை ரூபாய் 909.81 இலட்சத்தில் அரசு கையகப்படுத்தியிருக்கிறது.

திரு. க. பா மனல: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1980—81 இல் ஏறக்குறைய 21,000—க்கும் அதிகமான மனை பட்டாக்கள் வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று நன்செய் நிலங்களை எடுக்க வேண்டாமென்று, கூடுமான வரையில் எடுக்கக்கூடாது என்ற அரசின் கொள்கையின் காரணமாக இந்தப் பட்டாக்கள் வழங்கப்படும் தொகையின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. இந்த 21,000—க்கும் அதிகமாக வழங்கப் பட்ட பட்டாக்களில் நன்செய் நிலத்திலிருந்து கொடுக்கப்பட்டவை எத்தனை? புஞ்சை நிலங்களிலிருந்து கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்கலாம்.



திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் பட்டா வழங்கப்பட்டும், அந்தக் கிராமங்களில் இருக்கின்ற தாசில்தார் அல்லது ஆர். ஐ. போன்றவர்கள் அந்த மனைகளை அளந்து உங்களுக்கு இவ்வளவு சென்ட் நிலம் என்று கொடுப்பது ஒரு வருட காலத்திற்கும் மேலாகத் தேங்கி உள்ளது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தந்த தாசில்தார்களுக்குச் சொல்லி உடனடியாக அந்த மனைகளை அளந்து அவர்களுக்கு இத்தனை சென்ட் நிலம் என்று காட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர்களுக்காக வீட்டுமனைகளைக் கையகப்படுத்தி அந்த இடங்களை அதிகாரிகள் அவர்களுக்குக் காட்டவில்லை என்ற எண்ணத்தில் உறுப்பினரவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நானும் பல்வேறு இடங்களுக்குச் செல்லும்பொழுதும் இதுபற்றி ஒருசில குறைபாடுகள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர் நல அலுவலர்களின் கூட்டத்தைக்கூட இதற்காகத் தனியாகக் கூட்டி, கூட்டியதோடு மட்டுமின்றி அந்தக் கூட்டத்திலே அவர்களுக்கு இதைப்பற்றி பிரத்தியேகமாக அறிவுரைகள், இதுபோன்ற நிலைமைகள் தமிழகத்தில் இருக்கக்கூடாது என்று என் மூலமாக அளிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமின்றி அரசினுடைய துறையைச் சார்ந்த அதிகாரிகளின் மூலமாக, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அத்தனை மாவட்ட நல அலுவலர்களுக்கும் இதுகுறித்து அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. கோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, 1947 ஆம் ஆண்டிலேயிருந்து ஏறத்தாழ 35 ஆண்டுக்காலமாக இந்த ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆனாலும்கூட இன்றும் பெரும்பாலான மக்களுக்குத் தங்களுக்கு என்று சொந்தமான மனைகள் இல்லை என்பதை அரசும் உணர்ந்திருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று முயற்சிகள் செய்கிறோம். ஆனாலும் இன்னும் கொடுக்கவில்லை. எனவே, தங்களுக்கு என்று சொந்தமான மனைகள் இல்லாத ஆதிதிராவிட மக்கள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வீட்டுமனைகளைக் கொடுப்பது என்று திட்டவட்டமான முடிவையெடுத்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அத்துடன், இந்த மனைகளை ஆர்ஜிதம் செய்து கொடுக்கக்கூடிய செலவை மத்திய அரசாங்கமே முழுவதும் ஏற்றுக்கொள்கிறதா அல்லது முழுத் தொகையையும் மாநில அரசே செலவு செய்கிறதா அல்லது மத்திய அரசாங்கம் ஓரளவுக்குக் கொடுக்கிறதா என்ற விவரங்களையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்யும்போது ஆகக்கூடிய செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. தமிழகத்திலே இருக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு ஒட்டுமொத்தமாக வீட்டு

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் 24-1-83 அன்று இரு அவைகளுக்கும் சேர்த்து ஆற்றியுள்ள உரையின் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டி அது உண்மைக்கு மாறான தகவல், ஆகவே, உரிமைப் பிரச்னை இருக்கிறது என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இங்கே உரிமை மீறல் பற்றிய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அதிலே தவறான தகவல் எதுவுமே தரப்படவில்லையென்பதையும் அதிலே உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

மாவட்டங்களில் உள்ள வறட்சி நிலையின் விளைவுகளின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளவேண்டிய நிவாரணம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருந்தும், இதர துறைத் தலைவர்களிடமிருந்தும் அறிக்கைகள் பெறப்பட்டன. அதுபற்றி 12-1-83 அன்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள் மற்றும் இதர துறைத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டத்தில், ஆலோசனை நடத்தப்பட்டது. நாம் மத்திய அரசை அணுக ஒரு விரிவான அறிக்கை, மெமோராண்டம் தயாரிக்கவேண்டும். அந்த அறிக்கை தயாரிப்பதற்காக அக்கூட்டத்தில் ஒவ்வொரு துறைக்கு வறட்சி நிவாரணப் பணிக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டு, ஒரு விரிவான திட்டம் – ப்ரோக்கிராம் தயாரிக்க விவாதிக்கப்பட்டது. விவாதிக்கப்பட்ட திட்டத்தின்படி பல்வேறு துறையின் மூலம் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை களுக்காக ரூ. 190 கோடி நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டு, அரசுக்குத் தேவையான நிதியின் அளவை முன்கூட்டியே மத்திய அரசுக்கு தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தொகையின் அளவு குறித்தும், விரிவான அறிக்கை, மெமோராண்டம் அனுப்பப்படும் என்றும் மத்திய அரசு விவசாயத் துறை கூடுதல் செயலாளருக்கும், மத்திய அரசு நிதித்துறை இணைச் செயலாளருக்கும் 13-1-83 அன்று டெலக்ஸ் மூலம் தெரிவிக்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

7-வது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநில அரசுகள் வறட்சி போன்ற இயற்கை பாதிப்புகளைப் பற்றிய அறிக்கை தயாரிப்பு பற்றியும், அத்துடன் சேர்த்து அனுப்பவேண்டிய அட்டவணை பற்றியும் மத்திய அரசு விதிமுறைகளை வகுத் துள்ளது. அந்த அறிக்கையில் மாவட்ட ரீதியாக ஏற்பட்டுள்ள பயிரிடப்படாத நிலங்களின் பரப்பளவு, விளைச்சலின் விளைவுகள் பாதிப்புகள், பாதிக்கப்பட்ட மக்கள் தொகை போன்றவைகள் அட்டவணையில் அடங்கும். அந்த அறிக்கையும், அட்டவணையும் தயாரிக்கப்படும் பணி முடிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு விரிவான





அறிக்கை, மெமோராண்டம், அட்டவணை ஆகியவற்றை 24-1-83 அன்று நேரடியாக அதிகாரி மூலம் கொடுக்கப்பட்டன. ஆகவே, விரிவான திட்டம், ப்ரோக்கிராம் என்பது ஒன்று. விரிவான அறிக்கை, மெமோராண்டம் என்பது வேறு. விரிவான அறிக்கை, மெமோராண்டம் என்பதில் விரிவான திட்டங்கள் அடங்கும். ஆனால் விரைவான திட்டம் 'காம்ப்ரஹென்சிவ் ப்ரோக்கிராம்' தீட்டப்பட்டு, அதுபற்றி இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டது என்றுதான் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டதே தவிர, அந்தத் திட்டம் அனுப்பிவைக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்பது கூர்ந்து நோக்கத்தக்கது ஆகும். ஆகவே, ஆளுநர் உரையிலே தெளிவாக குறிப்பிடப்பட்டு இருப்பது "வறட்சித் துயர் தணிப்பிற்கு ரூ. 190 கோடி செலவாகும் விரிவான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அது பற்றி இந்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது" என்று தமிழிலும், "A comprehensive drought relief programme costing Rs. 190 crores has been worked out and the Government of India has also been informed about this" என்று

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆங்கிலத்திலும், நாம் 13-ம் தேதி டெலக்ஸ் மூலம் தெரிவித்த அதைப்பற்றித்தான் 24-ம் தேதி ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்களே தவிர, மெமோராண்டம் அனுப்பி வைக்கப் பட்டது என்று அந்த உரையில் குறிப்பிடப்படவில்லை என்பது ஆளுநர் உரையில் குறிப்பிட்டது 13-1-83 அன்று மத்திய அரசுக்கு அனுப்பிய டெலக்ஸ் செய்தியை அடிப்படையாகக் கொண்டது. விரிவான அறிக்கை, மெமோராண்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட வில்லை. எனவே ஆளுநர் உரையில குறிப்பிட்டது சரியான செய்தியாகும். எனவே இதிலே உரிமைப் பிரச்னை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்னை குறித்து தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மத்திய அரசு அரிசி வழங்க முதலமைச்சர் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. ரகுமான் கான், ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், டி. மணி, எஸ். ஆண்டித்தேவர், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், உ. சுப்பிரமணியன், நா. சுந்தர ராஜ், எல். இளையபெருமாள், வே. இராஜசேகரன், எம். சுந்தரம், சி. பழனிமுத்து, கே. கல்லன், மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, செ. இராமலிங்கம், பெ. சு. திருவேங்கடம், ப. நெடுமாறன் ஆகியோர் "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு மத்திய அரசு அரிசி வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி 9-2-1983 அன்று உண்ணாவிரதம் இருக்கப் போவ

ஆளுநர் உரையில் செய்திருப்பதால் இந்த அரசே பொறுப்பாகும்.
அதாவது மாண்புமிகு முதலமைச்சரே பொறுப்பு என்பதால் அவர்
இந்த அவையின் உரிமையை தெரிந்தே மீறி இருப்பதால், இது
குறித்து முடிவு காண இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு விட
வேண்டுகிறேன். இது குறித்து என் கருத்துக்களைக் கேட்பதற்
காக என்னை அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்து நான் இந்த
நேரத்திலே சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

தலைவரவர்களே, சாதாரண ஒரு பிரச்னையில் ஒரு தவறான
தகவலைத் தந்து விட்டால் கூட ஒரு சில நேரங்களில் தவிர்க்கப்
படலாம் அல்லது அது பொருட்படுத்தாமலும்கூட விட்டுவிட
லாம். ஆனால் இந்த நாட்டில் கோரத் தாண்டவம் புரிகின்ற
பஞ்சம், பட்டினி, வறுமையைக்குறித்து மத்திய அரசுக்கு உரிய
காலத்திலே அறிக்கையை அனுப்பி, உரிய காலத்திலே அங்கே
யிருந்து நிபுணர் குழுவை வரவழைத்து உதவியைப் பெற்று,
தமிழகத்தை வாழவைக்கவேண்டிய ஒரு பொறுப்பிலே உள்ள ஒரு
அரசு அந்தக் காரியத்தைச் செய்யத் தவறியிருக்கிறது. தவறி
யிருக்கிறது என்பது மட்டுமல்ல, அதற்கு காரண காரியங்களைக்
கற்பிக்கிற வகையிலே தான் செய்திருக்கிற தவறை மூடிமறைக்
கிற ஒரு காரியத்திலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதிலும்
கவர்னர் உரையிலே இந்த அமைச்சரவை, அதனுடைய தலைமை
பொறுப்பை ஏற்று இருக்கிற முதல் அமைச்சர் அவர்களே,
ஈடுபட்டிருப்பது வருந்தத்தக்கது மட்டுமல்ல, இந்த அவை
யினுடைய உரிமையைத் தெரிந்தே வேண்டுமென்றே மீறியிருக்
கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
இந்த வறட்சி குறித்த ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு
அனுப்புவதில் இப்போது அல்ல, நீண்டகாலமாகவே இந்த அரசு
ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. முதலிலே
அறிக்கை (குறுக்கீடு). இந்த அவையிலே ஏற்கனவே அக்டோபர்
மாதத்திலே ஒரு அறிக்கையை மத்திய அரசுக்கு வந்து சேரவில்லை
என்று பாராளுமன்றத்திலே அன்றையதினம் வேளாண்மைத்
துறை இணை அமைச்சராக இருந்த ஆர். வி. சுவாமிநாதன்
அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். உடனே நம்முடைய
வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கனவே அறிக்கை
அனுப்பப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்கள். தலைவரவர்
களே, இதிலே நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள், மத்திய மந்திரிக்கு மறுப்பு, வறட்சியைப்
பற்றி டெல்லிக்கு அறிக்கை அனுப்பியாகிவிட்டது, தமிழக மந்திரி
அறிவிப்பு என்று ஒன்றை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.
அதற்கு மதிப்பிற்குரிய சோமசுந்தரம் அவர்கள் மறுப்பு சொன்
னார்கள் என்று தினமணி பத்திரிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது.
தமிழ்நாடு ஏற்கனவே விவர அறிக்கையை ஏறத்தாழ 3 வார
காலத்திற்கு முன்பே மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டது. மேலும்
அறிக்கை கிடைக்கப்பெற்றது என்ற தகவலையும் மத்திய
அரசுக்கு தமிழகம் தெரிவித்து உள்ளது. உண்மை இவ்வாறு
இருக்க தமிழ்நாடு அரசு பல்வேறு வறட்சி நிலை குறித்த விவர
அறிக்கை எதுவும் அனுப்பவில்லை என்று ஆர். வி. சுவாமிநாதன்





அவர்கள், லோக் சபையில் தெரிவித்து இருப்பது வியப்பாக
உள்ளது என்றும் அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் சொன்
னார்கள். தமிழக அரசு அறிக்கை அனுப்பி 3 வார காலமாகியும்,
மத்திய அரசு அதைப் பெற்றுக்கொண்டதாக தெரிவித்த பிறகும்
இன்னும் அறிக்கை சேரவில்லை, என்று மத்திய அரசு அமைச்சர்
சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று
அமைச்சர் சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார். தமிழகத்தில்,
பல்வேறு மாவட்டங்களில் எந்த அளவுக்கு பருவமழை பொய்த்து
உள்ளது என்ற விவரங்களையும், தற்போது நிலவும் வறட்சி
நிலைமையின் விவரங்களையும் தெளிவாகவும், அந்த அறிக்கை
யிலே தந்துள்ளோம் என்று வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள் என்று அந்தப் பத்திரிக்கையிலே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அவர்கள் 13-10-82 அன்று
சொல்லி, தினமணியில் 14-10-82 அன்று வெளியிடப்பட்டிருக்
கிறது. 14-10-82—லே மத்திய அரசுக்கு விவரமாக தெளிவாக
அறிக்கை அனுப்பப்பட்டுவிட்டது என்று சொன்னதற்கு பிறகு,
3 வார காலம் ஆகியும்கூட இன்னும் மத்திய அரசு அதனுடைய
கைக்கு கிடைக்கவில்லை என்பது வியப்பாக இருக்கிறது என்று
ஆச்சரியக்குறியைப் போட்டுக் காட்டிய அமைச்சரவை. 24-1-83
அன்றுதான் இந்த அவையிலே அறிக்கையை அனுப்பினோம் என்று
சொன்னால், இது ஒரு உண்மைக்கு மாறான செய்தியை
அக்டோபரிலிருந்து இட்டுக்கட்டியும் திரித்தும் வந்திருக்
கிறார்கள். இந்த அவையை திசை திருப்பவில்லை
அவர்கள், இந்த நாட்டு மக்களையே திசை திருப்புகின்ற ஒரு
காரியத்தை செய்துவிட்டு, இன்றைக்கு நாடகம் ஆடுகின்ற
பாணியிலே பல்வேறு விவகாரங்களைச் செய்து கொண்டிருக்
கிறார்கள். எனவே தலைவர் அவர்களே, 14-10-82—லே மத்திய
அரசுக்கு விவர அறிக்கை அனுப்பிவிட்டோம் என்று சொல்லி,
அதற்குப் பிறகு இதிலே அமைச்சரவை இந்த ஆளுநர் உரையிலே
அனுப்பிவிட்டோம் என்று முதலிலே கூறிவிட்டு, தேதியைப்
போடாமல் எந்தத் தேதி என்று கேட்டபிறகு 24-1-83 என்று
தெரிவித்ததிலேயிருந்து இங்கே கவர்னர் உரையை படிக்கிறபோது
அந்த அறிக்கை மத்திய அரசுக்குப் போய்ச்சேரவில்லை என்று
பொருள். இங்கே கவர்னர் 11 மணிக்குப் படிக்கிறார்.
உண்மையாக, சாதாரணமாக வாதம் செய்தாலும், அதிகாரிகள்
விமானத்திலே பறந்து போய் இருந்தாலும்கூட அந்த நேரத்திலே
போய்ச் சேர்ந்திருக்காது. ஆனால் ஒரு டிப்ளமேட்டாக என்ன
சொல்கிறார்கள் என்றால், தெரிவிக்கப்பட்டுவிட்டது. பாஸ்ட்
டென்ஸ், முடிந்துவிட்டது. ஆகையினாலே அனுப்பாத
அறிக்கையை அனுப்பியதாக இந்த மக்களை, இந்த மாமன்றத்தை
திசை திருப்புவதாக கூறியது முதல் அமைச்சர் அவர்கள் வேண்டு
மென்றே செய்திருக்கின்ற காரணத்தால், அவர் மீது உரிமை
மீறல் இருக்கிறது என்பது மேலெழுந்தவாரியாகத் தெளிவாகத்
தெரிகிறது. எனவே மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,
நீதியின்பால் நிற்கக்கூடிய தாங்கள் முதல் அமைச்சர் மீது உரிமை
மீறல் உண்டு என்பதை தாங்கள் அறிவித்து அதை உரிமைக்
குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி
வணக்கம்.

தாக அறிவித்து இருப்பதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இதே பொருள் குறித்து பேரவை விதி 54—ன்கீழ் டாக்டர் கே. பி. இராமலிங்கம், திரு. மி. வின்சென்ட் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, மத்திய அரசு மாநில அரசுக்கு அரிசி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் மேற் கொண்டிருக்கிறார்கள். இந்த அவையிலே உள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்கள் பொறுத்தவரையில், தமிழகம் பஞ்சப்பிரதேசம் ஆகாமல், தமிழகம் பட்டினிக்காடாக ஆகாமல், தமிழக மக்களைக் காப்பாற்றுவதற்கு மத்திய சர்க்கார் தேவையான அளவுக்கு அரிசியும், கோதுமையும் தர வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஏகமனதாக ஒரே கருத்தாகக் கொண்டிருக்கிறோம். அதை நாங்கள் வலியுறுத்து கிறோம். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

அது மட்டுமல்ல. வெளிநாடுகளிலிருந்து கூட அரிசி இறக்குமதி செய்ய மத்திய சர்க்கார் அனுமதிக்க வேண்டுமென்று கருதுகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த போது இந்தமாதிரி நேரத்திலே தாய்லாந்திலிருந்து அரிசி கொண்டுவரப்பட்டது. அதைப்போன்று பல வெளி மாநிலங் களிலிருந்தும் அரிசி கொண்டுவர மத்திய சர்க்கார் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள் சேலத்தில் பேசும்போது ஜனவரி 24—ந்தேதி பேசினார், 40,000 டன் அரிசியை ஆந்திராவிலிருந்து அனுப்ப என். டி. ராமராவ் அவர்கள் அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். அதை அனுப்பு வதற்கும் மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை.

அதே நேரத்தில் இன்னொன்றையும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலம் நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருப்பது, இந்தக் கோரிக்கையை வலியுறுத்த தேவைதானா என்பது பிரச்சனைக்கு உரியது. முதலமைச்சர் மக்கள் தீர்ப்பைப் பெற்று வந்திருக் கிறார், அது வேறு. ஆனால் அவர் என்ன செய்திருக்கவேண்டும்



சர்வ கட்சிகளையும் கூட்டி, நிலைமை இந்தமாதிரி இருக்கிறது; இந்த நேரத்தில் நமக்கு மத்திய அரசு அரிசி தரவேண்டும்; அதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டிருக்க வேண்டும். தமிழகத்தின் அரிசி தேவையை நிறைவு செய்ய சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, மத்திய அரசு அரிசி வழங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருக்க வேண்டும். அதைப்போன்று செய்யாமல் முதலமைச்சர் இன்றைக்கு உண்ணா விரதம் இருக்கிறார்.

ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி முதலமைச்சர் ஒரு அரசாங்க ஊழியர். அரசாங்க ஊழியர் உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் ஈடுபடக் கூடாது என்று தமிழக சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர் அந்த உத்தரவை மீறுவதாக இருந்தால் அது சட்டவிரோத மானது. எனவே, முதலமைச்சரே உத்தரவு போட்டுவிட்டுச், அந்தச் சட்டத்திற்கு விரோதமாக இன்றைக்கு அவரே உண்ணா விரதம் இருக்கிறார்.

ஏற்கெனவே அரசாங்க ஊழியர், என். ஜி. ஓ. சங்கத் தலைவர் சிவ இளங்கோ உண்ணாவிரதம் இருந்தபோது அவரை கைதுசெய்து, வழக்குப்போட்டு, தற்கொலை முயற்சி என்று குற்றஞ்சாட்டி, 15 நாள் போலீஸ் கஸ்டடியில், ரிமான்டில் வைத்தார்கள். ஒரு நாள் சம்பளத்தை நிறுத்தியிருக்கிறார்கள்.

திரு. கோ. விஸ்வநாதன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அடிக்கடி பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்பது பழக்கமாகிவிட்டதால் அவரும் கேட்கிறார். நீங்களும் அடிக்கடி பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டிருக்கிறீர்கள்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் உண்டா? இப்படிக் கேட்பது முறையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்பது முறையல்ல; உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுடைய தலைமையிலே........

திரு. கோ. விஸ்வநாதன்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்....

திரு. அ. ரகுமான்கான்: வித் ஆல் மை ரெஸ்பெக்ட், ஐ ரெக்வஸ்ட். தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நான் பேசிக்கொண்டிருக்கிறேன். என்னை அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேச வேண்டியதை மட்டும் பேசுங்கள். நீங்கள் என்.ஜி.ஓ. சங்கத் தலைவர், மற்றவர்களைப்பற்றி எல்லாம் பேசும்போது பிரச்சனை வருகிறது.

(முற்பகல் 10—30)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இன்றைக்குக் கூட இந்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. மத்திய சர்க்காரின் சார்பாக ஒரு குற்றச் சாட்டு சொற்லியிருக்கிறார்கள். என்ன குற்றச்சாட்டு என்று சொன்னால், மத்திய தொகுப்பிற்கு மாநில அரசுகள் எல்லாம் அரிசி அனுப்பி வைக்க வேண்டும். இது போன்ற வறட்சி, பஞ்சங்கள் வருகிறபோது, பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும்.

போன வருடத்திற்கு முதல் வருடம் பஞ்சம் ஏற்பட்டபோது தமிழகத்திற்கு அவ்வாறு அரிசி அனுப்பியிருக்கிறோம். ஆனால் தமிழக அரசுதான் அவர்கள் அனுப்ப வேண்டிய அளவிற்கு அனுப்பவில்லை. அங்கே அவர்களே வைத்துக் கொண்டு நிறைவு செய்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள் என்கிற ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். விவசாய அமைச்சர் பிரேந்திர சிங் அவர்கள் பார்லிமெண்ட்டிலே ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கிறபோது, தமிழகத்திலே இருப்பவர்கள் நிலைமை சாதகமாக இருக்கிறது, நல்லமுறையில் இருக்கிறது, நாங்களே தன்னிறைவு அடைகிற அளவுக்கு இருக்கிறது என்று சொல்லிய தாக கூட ஒரு அறிக்கை வைத்திருந்தார்கள். நான் அதற்குள்ளே பேச விரும்பவில்லை.

ஆனால் நான் இங்கே ஒரு கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். ஜனவரி மாதம் மத்திய சர்க்கார் 50 ஆயிரம் டன் அரிசியையும், பிப்ரவரி மாதம் 40 ஆயிரம் டன் அரிசியையும், அடுத்து மார்ச் மாதம் 35 ஆயிரம் டன் அரிசியையும், ஏப்ரல் மாதம் 35 ஆயிரம் டன் அரிசியையும், மே மாதம் 30 ஆயிரம் டன்னையும் அனுப்பியதாக அரசு துறை சார்பாக, அரசு தலைமைச் செயலாளர் திரவியம் அவர்களுடைய அறிக்கையில் இருக்கிறது. ஆக 1 லட்சத்து 95 ஆயிரம் டன் அரிசியை மத்திய சர்க்கார் தமிழகத்திற்கு அனுப்பியிருக்கிறது. ஆனால் கடந்த பத்துமாத காலமாக மத்திய சர்க்காருடைய தொகுப்பிலேயிலிருந்து நமக்கு அரிசி கிடைக்கவில்லை. இந்தப் பிரச்னை 10 மாத காலமாக இருந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட, ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரத்திலே, தமிழகத்திலே சர்ப்ளஸ் இருந்தபோது, உபரியாக இருந்தபோது, நாங்கள் மத்திய சர்க்காரின் தொகுப்பிற்கு அனுப்பியிருக்கிறோம். தற்போதுள்ள வறட்சி யான சூழ்நிலையில் எப்படி கொடுக்க முடியும் என்று கேட்டு

இருக்கிறார்கள். தமிழகத்திலே முன்பு வறட்சி ஏற்பட்டிருந்த போது கூட, 24000 டன் அரிசியை அந்த சென்டிரல்-பூல் என்று சொல்லப்படும் மத்திய தொகுப்பிற்கு திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அனுப்பியிருக்கிறது. அது வேறு விவகாரம். அவர்கள் இன்னொரு புள்ளி விவரத்தையும் தருகிறார்கள்.

1971 ஆம் ஆண்டு சர்பிளஸ் இருந்தபோது கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி, டி.எம்.கே. ஆட்சி இருந்தபோது— 50 ஆயிரம் டன் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல 1972-73 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1.11 லட்சம் டன் அரிசி அனுப்பப்பட்டிருக்கிறது. 1975-76 லே- 1976-லே எமர்ஜென்சி-திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில்லை. 2.93 கொடுத்திருக்கிறார்கள்........(குறுக்கீடு) சார் இது ஒத்திவைப்புத் தீர்மானம். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். (கூச்சல், குழப்பம்).

(திருவாளர்கள் துரைராமசாமி, டாக்டர் சமரசம், சேலம் மு. ஆறுமுகம், என். எஸ். வி. சித்தன், நா. சுந்தரராஜ், துரைமுருகன், என். வி. என். சோமு, அ. ரகுமான்கான், ஆகியோர் எழுந்து நின்றிருந்தனர்.)

திரு, துரைராமசாமி; தலைவர் அவர்களே, அவையை ஒத்திவைத்துவிட்டதுபோல், ஒத்திவைத்தற்குப் பிறகு பேசுவதுபோல் பேசுகிறார். இதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் ஒத்தி வைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சொல்லாமல், நீண்ட விளக்கமாகப் பேசிக் கொண்டே போகிறீர்களே. புள்ளி விவரங்கள் எல்லாம் தேவையில்லை. அதை வைத்துக்கொண்டு என்ன பண்ணப்போகிறீர்கள்? சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தப் புள்ளி விவரத்திலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கத்திலே ...(குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

திரு. துரைமுருகன்: ஸ்பீக்கர் சார், அவரைப் பேசவிடாமல் செய்கிறார்கள். நமது சீப் மினிஸ்டர் கொடுத்த புள்ளி விவரம் தான் அது. இன்றைக்கு காலையிலே இந்து பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. அதை, ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் தன்னுடைய வாதத்திற்கு சாதகமாக எடுத்து கையாளுவதிலே என்ன தப்பு? ஏன் உங்களுக்கு இப்படி கோபம் வருகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தை, மன்றத்திலே உள்ள பல கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கி இருக்கிறார்கள். அது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஆதாரமாக அமையும் என்பதைப் பற்றி விளக்கும்படி தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மாண்புமிகு3

உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் ஏன் ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரண காரியங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே இதிலே பேசுகின்ற உறுப்பினர்கள் ஏன் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சொன்னால் அதற்குப் பதில் உரைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களையும், இந்த அவையினையும் கட்டுப்படுத்துகின்ற முழுப் பொறுப்பும் பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது. யாராவது தவறாகச் சொன்னால் அதைச் சுட்டிக்காட்டி தடுத்து நிறுத்தி இந்த அவையை ஒழுங்காக நடத்திச் செல்வதற்குரிய முழுப்பொறுப்பு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன சொன்னாலும் அதற்குப் பதில் சொல்ல நான் இருக்கிறேன் என்ற காரணத்தால் யாரும் எதையும் சொல்ல வேண்டாம் என்பதைச் சொல்லிக்கொண்டு, பேசுகின்ற உறுப்பினர்களும் கூடுமானவரையில் ஏன் ஒத்தி வைக்கவேண்டும் என்பதற்கான விளக்கங்களை மட்டும் சொல்லவேண்டும் என்பதுதான் சரி. அதற்கு அப்பால் போய் மற்ற காரியங்களைப்பற்றிப் பேசி அவற்றை எல்லாம் விவாத மாக எடுத்துக்கொள்கின்ற நிலைமை வரவேண்டாம். ஏனென்றால் எது எதுக்கு பதில் கிடைக்கும், எது, எதுக்குப் பதில் கிடைக்காது என்பதை அறிந்து அதற்குத் தக்க வகையிலே பேசுவது நல்லது. பதில் கிடைக்காது என்பன பற்றிப் பேசத் தேவையில்லை. அப்போது தான் அவை முறையாக ஒழுங்காக நடைபெறக்கூடிய வழி வகை ஏற்படும். மாண்புமிகு பேரவைத் தலைவர் இந்த அவையினை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்தி நல்லமுறையில் நடத்துவதற்கு எல்லா சாராரும் ஒத்துழைப்பு கொடுப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடுத்த அறிக்கையில் 1975-76-ல் 2.93 இலட்சம் டன் ஜெனரல் பூல்-க்கு கொடுத் திருக்கிறார்கள். 1978-79-ல் 2 இலட்சம் டன் நமிடத்திலே சர்ப்ளஸ்—ஆக இருக்கின்றது என்றும் அதை மத்திய தொகுப்புக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டதற்குப் பிறகு அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை, அதனால் இந்த அரசுக்கு ஏகப்பட்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற தகவல் சொல்லி இருக்கிறார்கள். 1978-79 என்றால் அப்போது பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் ஆட்சி நடைபெற்ற காலம். அன்றைக்கு அவரோடு நேசக் கரம் நீட்டிய காரணத் தால் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் வெளிச்சத்துக்கு கொண்டு வந்து அன்றைக்கே இந்தப் பிரச்சினைகளை நீங்கள் பேசுவதற்குப் பதிலாக மூடி மறைத்து குற்றத்தினைச் செய்திருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.



அடுத்து, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். நாங்கள் அதைக் குறை சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்த அரசாங்கத்தின் சார்பாக செய்யப்பட வேண்டிய ரெஸ்பான்ஸிபிலிட்டீஸ் அதாவது கடமைகளையும், பொறுப்புகளையும் தட்டிக் கழிக்கின்ற வகையிலே திசை திருப்புகின்ற வகையில் அது அமைந்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் 10 மாதங்களாக அரிசி வரவில்லை. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இன்னும் சொல்லப்போனால் காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றிக்கூட டிமாண்ட் செய்யவில்லை, ரெக்வஸ்ட் தான் செய்கிறோம் என்று பவ்வியமாக சொல்லக் கூடிய நிலைமைகள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன.

கேரளாவிலே திரு. நம்பூதிரிபாட் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது 20,000 டன் அரிசி தரப்படவில்லை என்று சொன்னதற்காக மிகப் பெரிய போராட்டம் நடத்தி கேரளாவே தீப்பற்றி எரியும் என்று அறிவித்தார்கள். அந்த அளவுக்கு நிலைமை ஏற்பட்டது. அதேபோன்று தமிழகத்திலே கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு அறிக்கையிலே சேலம் ஸ்டீல் ப்ளாண்டை சேர்ப்பதற்கு ஒத்துக்கொள்ளாத காரணத்தால் முதலமைச்சர்கள் மாநாட்டிலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையிலே சேலம் ஸ்டீல் ப்ளாண்ட் இடம் பெறாவிட்டால் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிய காரணத்தால், வலியுறுத்திய காரணத்தால் அப்போது திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் அந்த உருக்காலை உருட்டாலையாக மாறியது என்பது வேறு விவகாரம். இதை எதற்கு சொல்கிறேன் என்றால் இப்போது மாநில அரசு கடிதம் போட்டோ, பேசியோ, தந்தி கொடுத்தோ பேசிப் பயன் இல்லை. இப்போது வருத்தத்திற்குரிய அளவிலே நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. பக்கத்திலே இருக்கக்கூடிய பாண்டிச்சேரியிலே 1982 ஆம் ஆண்டை வறட்சி ஆண்டாக அறிவித்து சட்டசபையிலே தீர்மானம் நிறைவேற்றி இன்றைக்கு பணம் எல்லாம் வாங்கப்பட்டு காரியங்கள் நடந்துகொண்டிருக் கின்றன. ஆனால் இந்தச் சர்க்கார் தன்னுடைய கடமையான அரிசிப் பஞ்சத்தைப் போக்குவதற்குப் பதிலாக மத்திய சர்க்காருக்கு எதிராக ஒருவிதமான பிரச்சாரத்தை ஏற்படுத்திக் கொண்டு உங்களுடைய பொறுப்பினைத் தட்டிக் கழிக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்திருக்கக்கூடிய முறையானது சரியாக இருக்க முடியாது. அதோடு * *

(முற்பகல் 10—40)

---

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * என்று சொன்னதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷயம் ரொம்ப சீரியஸாக இருப்பதால் விவாதம் அவசியமாக இருக்கிறது. கடுமையான ஒரு வறட்சி நிலையில் கிராமப்புற மக்கள், பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் இன்றைக்கு திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். பல கிராமப்புற மக்கள் இன்றைக்கு மாவட்டத்தை விட்டு வெளியே வரக்கூடிய ஒரு சீரியஸ் நிலை இருக்கிறது. அரிசியின் விலை 5 ரூபாயிலிருந்து 10 ரூபாய் என்று உயர்ந்து வரக்கூடிய ஒரு சீரியஸான நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் ஆயிரம் இருக்கலாம். இந்த கவர்ன்மெண்டு, அந்த கவர்ன்மெண்டு என்று சொல்லலாம். Immediately the people have to be saved என்ற நிலையில் தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், மத்திய அரசிலிருந்து அரிசி தேவை என்று ஒரு முதலமைச்சர் உண்ணாவிரதம் இருக்கிறார் என்றால் இதிலிருந்து அந்தப் பிரச்சனையில் நம் தமிழ் மாநிலத்தினுடைய நிலைமை எவ்வளவு சீரியஸாக இருக்கிறது என்பதும் எவ்வளவு அவசரத்தன்மை வாய்ந்தது என்பதும் நமக்குத் தெரிகிறது. இந்த விதத்தில் 'அங்கர் ஸ்டிரைக் என்பது கரெக்ட் தான்'. இதை நாங்கள் வரவேற்கிறோம். We have no hesitation. எங்களுக்குள் ஆயிரம் டிபரன்ஸ் இருக்கலாம் ஆனால் இந்தப் பிரச்சனையில் மக்களை சேவ் செய்வதற்காக இன்றைக்கு இந்த ஸ்டெப் எடுத்தது கரெக்ட் தான். அதோடு அடிக்கடி நாங்கள் சொல்வது உண்டு. நிலைமை ரொம்ப சீரியஸாக வருகிறபோது அனைத்துக்கட்சிகளையும் கூட்டி நீங்கள் கன்சல்ட் செய்து ஒரு காமான் டெசிஸன் எடுப்பது தான் நல்லது. இதே உண்ணாவிரத விஷயத்தை உண்மையிலே மாண்புமிகு முதலமைச்சர்........(குறுக்கீடு) We must have tolerance நீங்கள் சொல்வதையே நான் சொல்லவேண்டும் என்றால் நான் அங்கே அல்லவா உட்காரவேண்டும். எல்லாக் கட்சிகளையும் கலந்துகொண்டு சில கட்சிகள் சேரவில்லை என்றால் சேரக்கூடிய கட்சிகளை அழைத்து பேசி இந்த 'இஷ்யூ'விலே ஒரு முடிவு எடுத்து இருந்தால் இதைவிட பெட்டர் பெனிபிட்ஸ் நிச்சயமாக கிடைத்து இருக்கும். ஆனால் இந்த ஒரு நிலையை எடுத்தது சந்தோஷம். இவ்வளவுக்கும் பிறகு இன்றைக்கு காலையில் பத்திரிக்கையில் பார்த்தேன் மத்திய அரசு தமிழகத்திற்கு அரிசி தராமல் தமிழகத்தை மேலும் தாக்கக்கூடிய நிலையை எடுத்து இருக்கிறது. இந்த நிலமையினால் மக்களுக்கு ரொம்ப அபாயம் ஏற்படும். ஏன் என்று சொன்னால் நெல் உற்பத்திச் செய்யும் மாநிலங்களின் பங்கைக்கொண்டு தான் மத்திய அரசு அரிசி ஸ்டாக் பண்ண முடியும். இதற்கு ரிப்ளை அது. தமிழ்நாடு அரசு அரிசிகொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். வறட்சி, வறட்சி என்று நாம் கத்திக்கொண்டு இருக்கிறோம். வறட்சி இருக்கிறபோது சென்டிரல் பூலுக்கு இந்த சூழ்நிலையில் எப்படி இங்கிருந்து அரிசி கொடுக்கமுடியும், I do not understand, what is the point in their harping on that. வறட்சி இருக்கிற நேரத்தில் சென்டிரல்

*மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஸ்டாக்குக்கு எப்படி கொடுக்கமுடியும்? அக்ரிகல்சர் தஞ்சாவூர் பூராவும் பாதித்தது இருக்கிறது. காவேரி தண்ணீர் இல்லை. 1924 அக்ரிமெண்டை ரெப்யூடியேட் பண்ணியது ஒரு மேஜர் ரீசன். அந்த காவேரி வாட்டர் மூலமாக தண்ணீர் வரவில்லை, பூராவும் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. ரெப்யூடியேட் பண்ணியது அதன் விளைவாக அங்கே அக்ரிகல்சுரல் நஷ்டம் ஆகியிருக்கிறது. ரெப்யூடியேட் பண்ணிய காரணத்தால் லெவி கொடுக்க முடியாத பொஸிஷனிலே ரெப்யூடியேட் பண்ணியிருக்கக் கூடியது மத்திய சர்க்காரில் சம்பந்தப்பட்ட ஒரு பார்ட்டி, அப்படி தெரிந்தும் கூட இதிலே தலையிட்டு மத்திய அரசு அதை செட்டில் பண்ணி இங்கே சேவ் பண்ணியிருக்கவேண்டும். அந்த மாதிரி சென்டிரல் பூலுக்கு கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறவர்கள் அதைப்பற்றி பேசாமல் விட்டுவிட்டு பாலிடிக்ஸ் பிலே பண்ணியது என்ன அர்த்தம், அப்படி செய்துவிட்டு நீங்கள் கொடுக்கவில்லை என்று சொல்வது சரியாக இருக்காது. அந்த நிலைமையை எடுத்து இருப்பதால் மாநிலத்தில் என்ன நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும், பல்வேறு மாநிலங்களில் வறட்சி 'டெவலப்' ஆகிக் கொண்டிருப்பது சென்டிரல் கவர்மெண்டுக்கு ரொம்ப நாளைக்கு முன்பே தெரியும் அதனால் பலயிடங்களில் சென்டிரல் பூலுக்கு கொடுக்க முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஒரு ஆயிரம் கோடி ரூபாய்க்கு 'எக்ஸ்டிரா ஆர்டினரியாக' இந்த நிலையிலே சென்டிரல் பூலுக்கு வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்து ஸ்டாக் செய்து இருக்கலாம் அல்லவா? They could have been aware of that.

மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. பிரணாப் முகர்ஜி சென்டிரல் பைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது ஒரு கூட்டத்தில் சொன்னார் ஐ.எம்.எப். நிபந்தனை காரணமாக இம்போர்ட் ரெஸ்ட்ரிக்ஷனை நாங்கள் லூஸ் செய்து இருப்பதால், தளர்த்தியிருப்பதால் 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கான இறக்குமதி தேவையில்லாத இறக்குமதியை நாங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்று, அந்த 2 ஆயிரம்—கோடியில் பல்வேறு மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நிலையிலே ஒரு ஆயிரம் கோடி ரூபாய்க்கு அரிசியைத்தான் இறக்குமதி செய்வோம் என்று சொல்லி இறக்குமதி செய்து இருக்கலாம் அல்லவா? அதைச் செய்யவில்லை. ஸ்டாக் இருப்பதைப் பார்த்துத் தான் மாதா மாதம் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்கிறோம் என்கிறார்கள். அரசினுடைய லட்சணம் எங்களுக்கு தெரியாதா?

இங்கே போன செஷனிலே தோழர் திரு. வரதராஜன் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். மத்திய அரசாங்கம் நமக்கு ஒதுக்கீடு செய்தது என்ன, கொடுத்தது என்ன என்று. அப்போது அவை முன்னவர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்ததைப் பார்த்தபோது நமக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. ஒரு மாதத்திற்கு ஒதுக்கீடு செய்தது 60 ஆயிரம் டன்கள்

கொடுத்தது 10 ஆயிரம் டன்கள்; இன்னொரு மாதத்திற்கு ஒதுக்கீடு செய்தது 50 ஆயிரம் டன்கள், ஆனால் கொடுத்தது 8 ஆயிரம் டன்கள்தான். நான் கூட புட் மினிஸ்டரிடம் சொன்னேன். நீங்கள் கொடுத்த கணக்கை டோட்டல் பண்ணிப் பார்த்தால் நமக்கு மூன்றே கால் லட்சம் டன்கள் கொடுக்காமல் இருக்கிறார்களே, என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டேன். மலிவு தானியக் கடைகளில் ஜனங்கள் பயங்கரமாகப் போய் வாங்குகிறார்கள். டிசம்பர் மாதத்திலே 90 ஆயிரம் டன்கள் டிரா ஆகியிருக்கிறது. அதனால் அரிசி போதாமல் சென்ட்ரல் கவர்ன்மெண்டிடம் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள். மாநில அரசு ஸ்டாக்கை புத்திசாலித்தனமாகப் பராமரிக்க வில்லை என்கிறார்கள். 'இன்ஜுடிஷியஸ் மேனேஜ்மெண்ட்' என்று சொல்கிறார்கள். ஆகவே ஜனங்கள் திடீரென்று வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்கள். மேனேஜ்மெண்டிலே குறைகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது, நாங்கள் அதை விவரமாக நாளைக்குப் பேசப் போகிறோம். விலைவாசிகள் ஏறிப்போயிருக்கின்றன, அதனுடைய இம்பிளிகேஷனால் ஜனங்கள் அப்படிப் போகிறார்கள் என்று சொல்வது தப்பு, இன்ஜுடிஷியஸ் மிஸ்மேனேஜ்மெண்ட் விலைவாசி ஏறியிருக்கிறது அதனால் அப்படிப் போகிறார்கள் என்று சொல்வது தப்பு. அதனால் ரஷ் பண்ணுகிறார்கள் ஜனங்கள் என்று சொல்வது தப்பு. ஒரு ஸ்டேட்டிலே இன்ஜுடிஷியஸ் மேனேஜ்மெண்ட் ஏற்பட்டதுஎன்றால் அதனாலேயா பிரைஸ் ரைஸ், ஐ.எம்.எப். கண்டிஷனை இம்பிளிமெண்ட் பண்ணுவதால் பிரைஸ் ரைஸ், நோட்டு அடிக்கிறார்கள், அதனால் பிரைஸ் ரைஸ், அரசு பிரைஸ் ரைஸ் பண்ணுகிறார்கள், மத்திய பிரைஸ் ரைஸ். இந்த மாதிரியெல்லாம் தெரிந்தும்கூட தங்களுடைய குறைகளை குற்றங்களை மறைப்பதற்காக மக்களிடம் மறைப்பதற்காக செய்து இன்றைக்கு சீரியஸான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இன்றைக்குக்கூட காலையிலே நான் பார்த்தேன். இவ்வளவு கொந்தளிப்பும் ஏற்பட்டும். இப்போதாவது ரஷ் பண்ணு கிறார்களா என்று பார்த்தால் அவர்கள் எங்களுடைய தேசிய உணவுக் கொள்கைக்கு உட்பட்டவர்களுக்குத்தான் நாங்கள் அரிசி கொடுப்போம் என்கிறார்கள். அப்படி என்று சொன்னால், தமிழ்நாடு தேசிய உணவுக் கொள்கைக்குள்ளே வரவில்லை. ஆகவே கொடுக்கமாட்டோம் என்றுதானே அர்த்தம். இன்றைக்கு மார்னிங் லேட்டஸ்ட் பொஸிஷன் அதுதான். தேசிய உணவுக் கொள்கை என்பது காங்கிரஸ் கட்சியின் உணவுக் கொள்கைதான். As a State Government, we must have our own policy. We have got our own procedures. நம்முடைய மாநிலத்திலே உணவுக் கொள்கை முறையாக இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். அதைப்பற்றி ஏற்கெனவே கிரிட்டிசைஸ் பண்ணியிருக்கிறோம், இன்னும் பண்ணப்போகிறோம். தேசிய உணவுக் கொள்கையிலே உட்படாதவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்றால் காங்கிரஸ் கட்சியின் உணவுக் கொள்கைக்கு



உட்படாதவர்களுக்குக் கொடுக்கமாட்டோம் என்றுதான் அர்த்தம். மாநில அரசுக்கு உணவுக் கொள்கை இல்லையா? இருக்கிறது. அதிலே மெத்தனப் போக்கு இருக்கிறது, முறையான கொள்கை இல்லை, திருப்தி மனப்பான்மை இருந்து இருக்கிறது. நாங்கள் போன வருஷம் பேசுகிறபோது புட் சிட்சுவேஷன் மோசமாகப் போகும் என்று வார்ன் பண்ணிய போது அவை முன்னவர் சொன்னார், நிலைமை சீராகிவிடும் விலை குறையும் என்றெல்லாம் சொன்னார்கள். விலைகள் விஷயம் உங்கள் கையில் இல்லை, சிறிய அளவுக்குத்தான் உங்களிடம் இருக்கிறது, டிஸ்டிரிபியூஷன் விஷயத்தில் விலைவாசிப் பிரச்சினைகள் விஷயத்தில் எல்லாம் சென்ட்ரல் கவர்ன்மெண்டிடம் தான் இருக்கிறன. அப்படியிருக்கிறபோது எந்த நம்பிக்கையிலே விலை குறையும் என்று சொல்கிறீர்கள்? சீரியஸாகிவிடும் என்று சொன்னோம். உங்களுக்கு திருப்தி மனப்பான்மை இருக்கிறது என்று வார்ன் பண்ணினோம். மூன்றே கால் லட்சம் வரவில்லை, அதை நீங்கள் பைட் பண்ணி வாங்க வேண்டுமென்று சொன்னபோது அவை முன்னவர் சொன்னது என்னைப் பாதித்து விட்டது. அவர்கள் சொன்னது என்னை வருத்தத்திற்குள்ளாக்கியது. அவர் சொல்லியபோது நாம் முழுமையாக சர்ப்ளஸாக இல்லையென்றாலும் சுமாராக சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக அரிசியைப் பொறுத்தவரைக்கும் இருக்கிறோம், ஆகவே மூன்றே கால் லட்சம் நாம் வற்புறுத்தி வாங்கா விட்டாலும் எங்களை அதிகமாக பாதிக்காது என்று சொன்னார்கள்.

(முற்பகல் 10-50)

அந்த ஆன்சர் அங்கே போனால் நேச்சுரலி தே வில் டேக் அட்வான்டேஜ் ஆப் இட், உங்களை பாதிக்காது என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த பொசிஷனில் இன்றைக்கு சென்டர் முடிவு எடுத்து நம்முடைய ஜனங்கள் கஷ்டப்பட அன்-கான்ஸ்டிடிஷனலாக ஒரு முடிவிற்கு போயிருக்கிறார்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், 'வி ஹேவ் பீன் பிரஸ்ஸிங் தி கவர்ன்மெண்ட' அரிசி பிரச்சினை மட்டுமல்ல, பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் வெறும் கடிதம் எழுதினால் மட்டும் போதாது; சும்மா அங்கே போகிறபோது பிரைம் மினிஸ்டரிடம் சொன்னால் போதாது என்று நாங்கள் சொன்னோம். சொல்லியும் செய்யவில்லை; நீங்கள் ஃபைட் பண்ணவெண்டும். 'டேக் தி பீப்பிள் இன் கான்பிடன்ஸ்' என்று பல தடவைகள் சொன்னோம்; ஜனங்களை திரட்டுங்கள் என்று சொன்னோம். சென்டரிடம் நியாயமான விஷயங்களில் போராட வேண்டும். கான்ப்ரான்டேஷனுக்காக கான்ப்ரான்ட் பண்ணவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை; அப்போது என்ன சொன்னார்கள் என்றால், அப்படி சண்டை போடுவது அண்ணா வழி இல்லை என்று சொன்னார்கள். 'வெரி ரிக்ரட்டபிள் திங்'; அண்ணா வழி இல்லை என்று சொன்னார்கள். ரூலிங் பார்ட்டியை கொஞ்சம் தாஜா பண்ணிவிட்டு காரியம்

சாதிக்கலாம் என்று செய்தார்கள்; 'தே ஹேவ் நாட் அண்டர்ஸ்டுட் தி ரூலிங் பார்ட்டி பிராப்பர்லி': அட்லீஸ்ட் இப்போது புரிந்து கொண்டார்கள். கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து பிடிப்பது என்பது ஒன்று உண்டு. கொக்கு என்று நினைத்துக்கொண்டு வெண்ணெய் வைத்து பிடிக்கலாம் என்று போய் இப்போது கொக்கும் இல்லை; வெண்ணெயும் போயிற்று; நாக பாம்பாகத் தான் நமக்கு தெரிகிறது. தலைவர் அவர்களே முடித்துக் கொள்கிறேன்; எவ்வளவு சீரியஸான ஒரு விஷயம் பாருங்கள்; உண்ணாவிரதம் என்று ஒரு ஸ்டேட்டினுடைய முதலமைச்சர் நேற்றுக்கு 12 மணிக்கு அனவுன்ஸ் பண்ணுகிறார். 2.10-க்கு ரீஜினல் நியூஸ், ஆல் இண்டியா ரேடியோ கொடுக்கக்கூடிய அந்த குறிப்பிட்ட நியூசில் கம்ப்ளீட்டாக பிளாக் அவுட் பண்ணினார்கள். சாயங் காலம் 6·30 மணிக்கு வரும் நியூசிலும் பிளாக் அவுட் பண்ணினார்கள். சாயங்காலம் 7.15 மணி நியூஸ் அதிலும் கம்ப்ளீட்டாக பிளாக் அவுட் செய்தார்கள். ஆகவே எவ்வளவு விஷியஸ்ஸாக செய்திருக்கிறார்கள் பாருங்கள்; இன்றைக்கு எல்லாம் விவகாரம் ஆன பிறகு காலையில் சொல்கிறார்கள்; (குறுக்கீடு) எனக்கு தெரிந்தவரைக்கும் 2.10-லும் சொல்ல வில்லை, 6.30 மணிக்கும் சொல்லவில்லை; ஒரு முதலமைச்சர் உண்ணாவிரதம் என்று அறிவித்து மத்திய சர்க்கார் அரிசி கொடுக்கவில்லை என்ற பிரச்னை எவ்வளவு ஹைலைட்டாகிற பிரச்னை; அதை 2.10-க்கும் சொல்லவில்லை; 6.30-க்கும் சொல்லவில்லை; ஆகவே என்ன சொல்கிறேன் என்றால் உடனடியாக புரொக்யூர்மெண்ட் செய்யவேண்டும்; தஞ்சாவூரில் தான் ரொம்பவும் கம்மி; குவிண்டாலுக்கு ரூ. 160 ரூ. 200 என்று விலை இருக்கிறது; மாநில சர்க்காரே 150 ரூபாய் தஞ்சாவூரில் கொடுத்து புரொக்யூர் பண்ணி பொது விநியோகத்திற்குக் கொடுத்து அதை முறையாக நடத்தி, புட் பார் ஒர்க் உடனடியாக ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு வரி வஜா செய்து, கடன் ரத்தும் செய்து, மத்திய சர்க்கார் அரிசி கொடுக்கவேண்டுமென்ற விஷயத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இன்றைக்கு உண்ணாவிரதம் முடிந்த பிறகும் ஒன்றும் ஆகவில்லை என்றால் யுனைட்டடாக எத்தனை கட்சிகள் ஒன்று சேர்கிறார்களோ, அத்தனை கட்சிகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு' கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்களை யுனைட் பண்ணி ஃபைட் பண்ணவேண்டும்; அமைச்சரவையிலே டிஸ்கஸ் பண்ணவேண்டும்; அதற்காக இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு முறையாக மத்திய அரசிடமிருந்து அரிசி கிடைக்கவில்லை. நாட்டுமக்களுடைய அத்தியாவசியமான உணவுப் பொருள்களைக் கொடுக்கமுடிய நிலையில் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை கண்டிக்கிற வகையில் இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக நாட்டுமக்களின் உணர்வைக் காட்டுவதற்கு, முதலமைச்சர் உண்ணாவிரதம் இருக்கிற அந்த நிலையில்

எங்களுடைய இயக்கத்தின் சார்பாக எங்களுடைய ஆதரவை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த மன்றத்தில் சென்ற 28-ம் தேதி ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேசுகிறபோதே நான் தெளிவாக சொன்னேன். அரிசி 1982 ஜூன் மாதம் முதல் தமிழகத்திற்கு வழங்கவில்லை என்று ஆளுநர் உரையில் சொல்லியிருந்தார்கள். அதுபோல காவிரி நீர் பிரச்னையில் மத்திய அரசு நடந்து கொண்ட விதமும், மின்சாரப் பற்றாக்குறையால் தமிழகம் இன்றைக்கு எந்த அளவிற்கு உற்பத்தியில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆளுநர் அவர்களின் உரையில் சொல்கிறபோது மத்திய அரசு நிலக்கரி கொடுக்க மறுக்கிறது; வெளிநாட்டிலிருந்து வாங்குவதற்கும் அனுமதி இல்லை என்று அறிவித்திருக்கிறீர்களே, அதற்கு தமிழக சட்டமன்றத்திலே ஆளும் தரப்பில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள். இந்த நாட்டில் அரிசி பற்றாக்குறை காரணமாக விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. ஒரே நாளில் இரண்டு ரூபாயிலிருந்த அரிசி விலை ரூ. 4.30 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி உயர்ந்த நிலையில் மின்சாரம் இல்லாத நிலையில், நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்மை காரணமாக அவதிப்படுகின்ற நிலையில் விலைவாசி ஏறுவதற்கு மத்திய அரசு காரணமாக இருக்கிறது. அரிசி கொடுக்கவில்லையென்று இங்கே தமிழக அரசு இந்த மன்றத்திலேயே ஒரு தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று 28-ஆம் தேதியே நான் வலியுறுத்தி பேசியிருக்கிறேன். அப்படி தீர்மானம் கொண்டு வந்திருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, காவிரி பிரச்னையிலே சர்வகட்சியைக் கூட்டி விவாதித்தீர்கள். பஞ்சாயத்து தேர்தல் நடக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைக் குறித்து, ஒத்திப் போடுவதற்காகக் கூட, சர்வகட்சித் தலைவர்களைக் கூட்டி விவாதித்தீர்கள். அதுபோன்று சர்வகட்சியைக் கூட்டி, மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டிருக்கிறேன். அந்த நேரத்திலே எல்லாம் இல்லை என்று சொன்னதற்குப் பின்னாலும்கூட தமிழக அரசு உணர்வு பூர்வமாக நம்புகிறது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இல்லை, இந்த நாட்டு மக்களுடைய ஜீவாதார அடிப்படை உரிமை பாதிக்கப்படுகிறது, நாட்டுமக்களைக் காப்பாற்ற முடியாது, புரட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்தும் மாண்புமிகு முன்னவர் அவர்கள் மத்திய அரசைப் பகைத்துக்கொள்கிற அளவுக்கு இல்லையென்று அறிவித்து இருந்தார்கள். நான் இப்பொழுதும் கேட்கிறேன், மத்திய அரசை நீங்கள் பகைத்துக் கொள்ளவேண்டாம். இந்த நாட்டு மக்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டாமா? அதைத்தான் நான் சொல்கிறேன். மத்திய அரசைக் கண்டிக்கிற அளவுக்கு இன்றையதினம் முதலமைச்சர் நடக்கிறார் என்பதற்கு உளப்பூர்வமாகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான உணர்வையும் எடுத்துக்

காட்டும் வண்ணம் இன்றைக்கு முதலமைச்சர் உண்ணாவிரதம்
இருப்பதைப் பாராட்டுவதோடு, இதை இன்னும் விரிவாக
விவாதிப்பதற்கு. இந்த அவையினுடைய இதர அலுவல்களை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க மன்றத்தினுடைய
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குக் காலையிலே உண்ணா
விரதம் ஆரம்பித்திருப்பது, நேற்றைக்குக் கூடிய எங்களுடைய
சட்டசபை காங்கிரஸ் கட்சியினுடைய தீர்மானத்தில் முதலிலே
கூறியிருப்பதைப் போல, ஒரு துரதிருஷ்டவசமான சம்பவம்
என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த
அளவிலே இதற்கு முன்னாலே இது மாதிரியான ஒரு நிலை
ஏற்படவில்லையென்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொள்
கிறோம். இன்றைக்கு ஆளுகிற கட்சியிலே இருக்கிற
முதலமைச்சர் அவர்கள் தமிழகத்து மக்களுக்கு செய்ய
வேண்டிய அத்தனை சேவைகளையும் செய்யக்கூடிய
அதிகாரத்தைப் பெற்றிருக்கிற முதலமைச்சர் இந்தப்
பிரச்னையிலே தீர்வு காணுவதிலே முதலமைச்சரும் இந்த
அமைச்சரவையும் மெத்தனம் காட்டி இருக்கிறது என்பதை நான்
முதற்கண் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே தமிழக
மக்களைப் பஞ்சத்திலேயிருந்தும், பட்டினியிலேயிருந்தும்
காப்பதிலே தமிழக அரசு எவ்வளவு உறுதி கொண்டிருக்கிறதோ
அதைவிடப் பன்மடங்கு தமிழகத்திலேயிருக்கிற மக்களை,
பஞ்சம் பட்டினியிலே வாடவிடாமல் பாதுகாப்பதிலே மத்திய
அரசுக்கு இருக்கிறது என்பதை முதலாவதாக நான் தெளிவாகச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (கூச்சல்—குழப்பம்) நான்
அன்பார்லிமெண்டரியாக எதையும் சொல்லவில்லை. (கூச்சல்—
குழப்பம்)

Mr. SPEAKER: No unparl amentary words have been used.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர்
அவர்களே, ஆளுகின்ற கட்சியிலே இருக்கின்றவர்கள் ஏன்
உணர்ச்சி வசப்படுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.
(கூச்சல்—குழப்பம்) இதுதான் முறை என்று சொன்னால்,
நாங்களும் கடுமையாக நடக்க வேண்டி இருக்கும் என்று
எச்சரிக்க விரும்புகிறேன்

(கூச்சல்—குழப்பம்).

(முற்பகல் 11.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் எல்லோரும்
அமைதியாக இருக்க வேண்டும். யாரும் உணர்ச்சி வசப்
படாதீர்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டதைப்போல பாராளு
மன்ற சம்பிரதாய வரம்பிற்கு உட்பட்டுத்தான் நான் பேசிக்
கொண்டிருக்கிறேன். எனக்குத் தாங்கள் பாதுகாப்பு கொடுக்க





வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கிருக்கின்ற மற்றக்
கட்சித் தலைவர்கள் பேசியதைப்போல மத்திய அரசாங்கத்தின்
நிலைமையைச் சொல்லுகின்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது.
அதை நான் சொல்வதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும்.
எனவே நான் சொல்வதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்க
வேண்டும்.

உணவு நிலைமையைப் பொறுத்தவரையிலே நம்முடைய
ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 12-வது
பக்கத்திலே,

''காலதாமதம் செய்யாமல் உற்ற தருணத்தில்
உறுதுணையாக உதவ மத்திய அரசு முன்வந்து உடனடியாக
கணிசமான அளவு உணவு தானியங்களை ஒதுக்கும் என்று
நம்புகிறோம். அதே சமயத்தில், உணவு நிலையைக்
கட்டுப்பாட்டிற்குள் வைத்துவர......''

(கூச்சல்—குழப்பம்)

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு திரு. சித்தன் அவர்களைப்
பேசச் சொல்கிறார்களா அல்லது அவரைப் பேச வேண்டா
மென்று சொல்கிறார்களா?

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள்
அனைவரும் அமைதியாக இருக்கையில் அமருங்கள். யாரும்
உணர்ச்சிவசப்படக் கூடாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இந்த ஆளுநர் அறிக்கையிலே, ''உணவு
நிலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துவர மாநில அரசு முடிந்த
அளவுக்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது
என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதிகூற விழைகிறேன்''
என்று கூறிவிட்டு, ஜனவரி மாதம் 24 ஆம் தேதியன்று இந்த
அறிக்கையினைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுத்துவிட்டு,
15 நாட்களுக்குள்ளே உண்ணாவிரதம் இருக்க வேண்டிய
அவசியம் என்ன வந்தது என்று கேட்க நான் விரும்புகிறேன்.

ஆளும் பொறுப்பிலே இருக்கின்ற இந்த அரசு, தமிழகத்தை
எதிர்நோக்கி இருக்கின்ற பல்வேறு பிரச்சனைகள் வந்த
நேரத்திலேயெல்லாம் அனைத்துக் கட்சித் தலைவர்களையும்
அழைத்துப் பேசியிருக்கிறது. சான்றாகச் சொல்ல வேண்டுமே
யானால், காவிரி நதிநீர்ப் பிரச்னை, உள்ளாட்சித் தேர்தல்
எப்பொழுது வரும் என்ற பிரச்னை, இன்னும் சொல்ல வேண்டு
மென்றால், மொழிப் பிரச்னை போன்ற பிரச்னைகளிலே
அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி

முடிவெடுத்திருக்கிறோம். அப்படியிருக்கும் நிலையில்
தமிழகத்திலே உள்ள நாலரைக் கோடி மக்களின் எதிர்காலத்தைப்
பாதிக்கின்ற இந்தப் பிரச்னையான உணவுப் பிரச்னையிலே,
பஞ்சம், பசி என்று இருக்கக்கூடிய இந்தப் பிரச்னையிலே ஏன்
அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி
முடிவெடுக்கவில்லை என்ற வினாவினை நான் எழுப்பாமல் இருக்க
முடியவில்லை. இங்கே சட்டமன்றம் கூடியிருக்கிறது:
டெல்லியிலே 18 ஆம் தேதி நாடாளுமன்றம் கூடவிருக்கிறது.
நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.
ஆகவே அவர்கள் நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்பிருக்கிறது.
இந்த நேரத்தில் சட்டமன்றத்தின்மீது ஜனநாயக மரபுப்படி
நம்பிக்கை கொள்ளாமல், சட்டமன்றத்தில் வறட்சி நிலையையும்,
உணவு நிலையையும் பற்றி ஒயிட் பேப்பரை எங்கள் முன்னால்
வைத்து, விவாதம் நடத்தி, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி
முடிவு கண்டிருக்க வேண்டும். அப்படியில்லாமல் முதலமைச்சர
வர்கள் திசை திருப்பும் நோக்கத்தோடுதான், தங்களுடைய
இயலாத தன்மையை மூடி மறைக்க வேண்டுமென்பதற்காகத்தான்
இன்றைக்கு இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்
கிறார்கள் என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

உணவுப் பிரச்னையைப் பொறுத்தவரையில் தென்மேற்குக்
காற்றுப் பொய்த்து விட்டது, அது பல மாதங்களுக்கு முன்பே
நமக்குத் தெரியும். ஆகவே, பருவமழை பொய்த்தவுடனேயே
உணவு தானியத்தைச் சேகரிப்பதற்கு அக்கறை காட்டியிருக்க
வேண்டும். ஒரு சாதாரண எறும்புகூட அறுவடை காலத்தில்
தனக்கு வேண்டிய உணவுப்பொருட்களைச் சேமித்து வைத்துக்
கொண்டு பிறகு ஐந்தாறு மாதங்கள் வரையில் உண்டு
கொண்டிருக்கிறது. அப்படி அந்த எறும்புக்குக்கூட முன்
யோசனை இருக்கிறது. அதைப்போல இந்த அரசுக்கும் முன்
யோசனை இருந்திருக்கவேண்டும்.

நான் இன்னும் தெளிவாகச் சொல்லுகிறேன். இன்றைக்கு
உணவு நிலையைப் பொறுத்த அளவிலே பற்றாக்குறை
ஏற்பட்டிருப்பதற்கு தமிழக அரசே காரணம். இன்றைக்குத்
தஞ்சாவூரிலே பருவமழை பொய்த்ததனாலே, காவிரியிலே
போதுமான நீர் கிடைக்காததனாலே நிச்சயமாக உணவு
உற்பத்திக் குறையும் என்று தெரியும். அரசாங்கம் என்ன
செய்திருக்கவேண்டும். தஞ்சையில் 6,7 இடங்களிலே பில்டர்
பாயின்ட் கிணறுகளைத் தோண்டுவதற்கு ஏற்பாடு செய்திருப்பார்
களானால் நன்றாக இருந்திருக்கும். ஆயிரம் ரூபாய்கள்
செலவழித்தால்போதும். அங்கே நீர் மட்டம் எளிதாகவே
கிடைக்கிறது. n இன்னும் 4 ஆயிரம் 5 ஆயிரம் செலவழித்த
இருந்தால் போதும் பம்ப் செட்டு போட்டிருக்கமுடியும். அப்படி
ஒரு நிலையை அரசாங்கம் எடுத்திருக்குமேயானால் நிச்சயமா



5 லட்சம் டன் உற்பத்தியைச் செய்திருக்க முடியும். (கூச்சல்—குழப்பம்) அது தவறிய காரணத்தினாலேதான் இன்றைக்குக் கடுமையான நிலை தமிழகத்து மக்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு உரிமைப் பிரச்சினை வந்தது. வறட்சி நிலைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் இங்கே உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள். வறட்சி அறிக்கையைப் பொறுத்த அளவிலே முன்னாலேயே 3, 4 மாதங்களுக்கு முன்பே கொடுத்திருக்க வேண்டும் என்பதை இந்திய தேசிய காங்கிரஸ் பல மாதங்களுககு முன்னாலேயே சொல்லி இருக்கிறது. முன்னாலே அனுப்பி இருக்குமானால், அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் இப்போதுள்ள நிலையிலே ஜனவரி 24-ந் தேதி அனுப்பி பிப்ரவரி மாதக் கடைசியிலே வருவது என்பது காலம் தாழ்ந்துக் கொண்டிருக்கிறது. காலம் தாழ்த்துவதற்கு இந்த அரசாங்கமே காரணம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பொதுவாகவே அறுவடை காலத்திலே போதுமான அளவுக்கு உணவுத் தானியங்கள் இருக்கும். வறட்சி பற்றி இந்த அறிக்கை வருகின்ற காரணத்தினாலே, பின்னாலே 'லீன் மன்த்' வருகிறபோது அந்த மாதங்களிலே வருவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு இது காலதாமதப்படுத்துகிறது என்பதை என்னாலே சொல்ல முடியவில்லை. மேலும் நான் சொல்கிறேன் மத்திய அரசு சார்பிலே வந்த அறிக்கையிலே இந்த உணவு நிலைப் பற்றி தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இங்கே மத்திய 'பூலில்' இருந்து அரிசி பெருவதென்பது, இந்தியாவிலே இருக்கிற பல்வேறு நிலைகளை எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு இருக்கின்ற கையிருப்பைக் கொண்டு அந்த விநியோகத்தைச் செய்துகொண்டிருக்கிறது.

நான் உங்கள் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். 1970-71 லே 48,659 டன் தமிழகம் கொடுத்திருக்கிறது. 71-72 ஆம் ஆண்டிலே 1.11 லட்சம் டன் கொடுத்திருக்கிறது. 1975லே 2.93 லட்சம் டன் கொடுத்திருக்கிறது. 1979-லே 2 லட்சம் டன் கொடுத்திருக்கிறார்கள். 1979-க்குப் பின்னாலே ஒரு மணி அரிசி கூட தமிழகத்திலே இருந்து 'சென்ட்ரல் பூலுக்கு' கொடுக்கப்படவில்லை. மாறாக பல்வேறு சமயங்களிலே, ஏன் 1980, 81, 82 ஆண்டுகளில் கூட, மத்திய அரசாங்கம் முறையாகக்கொடுத்து வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்..

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரள மாநிலம் எப்போதுமே மத்தியத் தொகுப்புக்கு தருவது இல்லையே அங்கே எப்படி உதவுகிறீர்கள்.

[1983 பிப்ரவரி 9

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, எனக்குத் தெரியும். இப்படி திசை திருப்புவதிலே இன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்றவர்கள் மிக சமர்த்தர்கள் என்பது எனக்குத் தெரியும் (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் திசை திருப்பவில்லை. இது சாதாரணமான கேள்வி. மத்தியத் தொகுப்புக்கு மாநிலங்கள் கொடுத்தால்தான் மத்திய சர்க்கார் திரும்பக் கொடுக்க முடியும் என்று ஒரு கொள்கை வந்திருக்கிறது. நான் கேட்பது கேரள மாநிலம் எப்பொழுதுமே தருவதில்லையே அங்கே எப்படித் தருகிறீர்கள்?

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கேரள மாநிலம் எப்போதும் பற்றாக்குறை மாநிலம். அங்கு கொடுத்து தான் ஆகவேண்டும். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (கூச்சல், குழப்பம்) தயவு செய்து எங்களை எப்படிக் கேட்டுக் கொள்கிறீர்களோ அதைபோல நீங்கள் உணர்ச்சி வசப்படக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். சில ஆண்டுகளில் நாங்கள் தருகிறோம். சில ஆண்டுகளில் தருவது இயலவில்லை. என்ன காரணம்? பருவமழை சரியாக இருந்தால் நம்முடைய தேவையை நாமே நிறைவு செய்து கொள்கிறோம். 1978-லே பருவமழை நன்றாக இருந்தது. காவேரியிலே நல்ல தண்ணீர் இருந்தது. 78, 79-லே மின் வெட்டே இல்லை. அந்தக் காலங்களிலே நாம் தருகிறோம். நமக்குப் பற்றாக்குறை ஏற்படும்போது நாம் கேட்கிறோம். கேரளம் எப்படித் தொடர்ந்து பற்றாக்குறை மாநிலம் என்கிறோமோ அதைப்போலவே நமக்குப் பருவ மழை தவறுகிறபோது நாமும் பற்றாக்குறை மாநிலம். அதனாலேதான் கேட்கிறோமே தவிர, வேறல்ல.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, 1979-ம் ஆண்டுக்குப் பின்னாலே விளைச்சல் நல்ல முறையிலே இல்லையா. ஏன் அப்போது கொடுக்கவில்லை நன்றாக விளைந்த காலத்திலேயே ஏன் கொடுக்கவில்லை என்று நான் கேட்கிறேன். (கூச்சல், குழப்பம்)

(முற்பகல் 11·10)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் 1975 வரை கொடுத்ததையும், 1979-ஆம் ஆண்டு கொடுக்காததையும் பற்றி சுட்டிக்காட்டினார்கள். ஜனாதிபதி ஆட்சி நடந்தபோது 1976-ஆம் ஆண்டு அரிசி மத்திய தொகுப்புக்கு கொடுக்கப்படவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1983 பிப்ரவரி 9]

திரு. என் எஸ். வி. சித்தன். இதுமாதிரியான புள்ளி விவரங்களை எல்லாம் எங்களைவிட ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்கு இருக்கும். நான் ஒத்துக்கொள்கிறேன். நான் 1979-ஆம் ஆண்டு கொடுத்து இருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறேன். அதற்கு பின்னாலேகூட தொடர்ந்து நமக்கு வறட்சியில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அன்று மத்திய அரசுக்கு அரிசி கொடுத்திருக்கிறது வறட்சி இருந்த நேரத்திலேயுங் கூட, நீங்கள் வளமாக இருந்த நேரத்திலேயும்கூட, உற்பத்தி அதிகமாக இருந்த நேரத்திலேகூட கொடுக்கவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு

The stock position of rice with the Tamil Nadu Government at on Sep'ember 1, '9S2 was 3. 76 lakhs tonnes and the p:ccurements till February 1, 1983 was 2.46 lakh tonnes, compared to 2.30 lakh tonnes as on Febrnary 1, 1982. Thus, the procurement offort was better than last year, despito reports of drought. அதோடு On drought, the Agriculture Ministry said that it was only in the last week of January 1983 that the State Government's memorandum was received by the Centre The State Government had give the Centre to understand that the visit by the Central team to assess the drought might not take place ill the third week of February.

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாற்றாந்தாய் மனப் பான்மையோடு, மத்திய அரசு நடபெறுகிறது என்பதற்கு மறுப்பு அளிக்கும் வகையில் இதனைப் படிப்பதற்கு நீங்கள் எனக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் இந்திய அரசினுடைய வேளாண் மைத் துறை அமைச்சராக இருக்கின்ற ராவ் பீரேந்திர சிங் அவர்கள் சில நாட்களுக்கு முன்னாலே நாடாளுமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். உணவுப் பொருள் நிர்வாகத்தில், அதை நிர்வகிப்பதிலே மத்திய அரசிடம் ஒத்துழைக்காத, தமிழ்நாடு ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்கள் பல்வேறு நேரங்களில் மத்திய அரசிடம் இருந்து உணவுத் தானியங்களைக் கோருவதற்கு என்ன உரிமையிருக்கிறது. மாற்றாந்தாய் மாற்றாந்தாய் என்று சொல்கிறார்களே, தமிழகம் மட்டுமல்ல, ஒரிஸ்ஸாவையும் தான் அவர்கள் சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒட்டு மொத்தமாக இருக்கின்ற நிலையை வைத்து அவர்கள் சொல்கிறார்கள். வறட்சி நிலைபற்றி விவாதத்திற்கு அவர்கள் பதில் அளிக்கின்றபோது தமிழக அரசு சுமார் 4·5 லட்சத்திலே யிருந்து ஐந்து லட்சம் டன் வரையில் அரிசி கொள்முதல் செய்திருந்தபோதிலும் மத்திய தொகுப்புக்கு ஒரு மணி அரிசிகூட கொடுக்கவில்லை. உணவு நிலைமையை நாங்களே சமாளித்துக் கொள்வோம் என்று மாநில அரசு கூறியது. தற்போதுகூட அந்த மாநிலத்தில் ஓரளவு உணவு தானியம் கையிருப்பு இருக்கிறது என்று சொல்லிவிட்டு, ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்திற்கு உணவு தானியங்களை நேரடியாக வாங்க மத்திய

அரசு அனுமதிக்காது என்றும், அது தேசிய நலனுக்கு உகந்ததாக
இருக்காது என்றும் குறிப்பிட்டார்கள். பஞ்சாப் அல்லது
அரியானா போன்ற மாநிலங்களிலிருந்து ஓரளவு தானியங்களை
வாங்க மேற்கு வங்க அரசாங்கத்தை அனுமதிக்க வேண்டுமென்று
அந்த மாநில உறுப்பினர் யோசனை வைத்ததற்கு
மேற்கண்டவாறு அமைச்சர் அவர்கள் கூறினார் என்று
கூறிவிட்டு, நேரடியாக வாங்குவதில் சில பிரச்சனைகள் உள்ளன.
தானியம் வாங்கும் மாநில அரசு கூடுதலாக வி ல கொடுக்க
வேண்டியிருக்கும். அதுமட்டுமல்லாமல் விற்கும் மாநில அரசும்
இந்திய உணவுக் கார்ப்பரேஷன் விவசாயிகளிடமிருந்து பின்னால்
கொள்முதல் ஏதும் செய்வதிலே சிரமம் ஏற்படும் என்று
அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக நான்
மீண்டும் வலியுறுத்துவது எல்லாம் இந்தப் பிரச்சனையை தமிழக
அரசு சமாளித்திருக்கவேண்டும். காலம் கடந்துவிட்டது. இனி
விட்டது. பற்றாக்குறை என்று சொல்கின்றபோது. அதும்
கட்சியைப் பார்த்து நான் ஒரு வினாவை கேட்க விரும்புகிறேன்.
தமிழகத்திலே பற்றாக்குறை இருக்கிற நேரத்திலே தமிழகத்திலே
இருந்து கேரளாவிற்கு லட்சக்கணக்கான டன் அரிசி போனதே
அதை எப்படி அனுமதித்தீர்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு உண்மையும்
இடையாது. நாம் கேரளத்திற்குப் போக அனுமதிக்கவும்
முடியாது. எந்த வகையிலும் நாம் அனுமதிக்க முடியாது.
ஆனால் இங்கே ஒரு "சோனாக" இருப்பதன் காரணமாக
அங்கே வியாபாரிகள் நெல்லை கொள்முதல் செய்து
50 பர்சென்ட் லெவி கொடுத்துவிட்டு, எங்கும் எடுத்துக்கொண்டு
போகலாம் என்றிருக்கிறது. இப்போதுகூட ஆந்திராவிலே
வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்து 50 பர்சென்ட் லெவி
கொடுத்துவிட்டு இங்கே எடுத்துக்கொண்டு வருவதற்கு யாரும்
தடைசெய்ய முடியாது நாமாக கேரளாவிற்கு எடுத்துச்
செல்வதற்கு எந்த அனுமதியும் யாருக்கும் தரவில்லை என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர்
அவர்களே, கேரளத்திற்குப் போவதைத் தடை செய்து நாம்
கொள்முதல் செய்ய அனுமதி வேண்டும் என்று மத்திய
அரசைக் கேட்டோம். மாண்புமிகு சித்தன் அவர்கள் நன்கு
கவனிக்கவேண்டும் என்பதற்காக மீண்டும் சொல்கிறேன்.
கேரளத்திற்குப் போகும் அரிசியைத் தடைசெய்து தமிழகத்திற்கு
வேண்டிய கொள்முதல் செய்து கொள்ளவேண்டும் என்று
மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம், மத்திய அரசு முடியாது
என்று நமக்கு பதில் அளித்தார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அப்படியானால், ஆந்திரா
விலிருந்து தமிழகத்திற்கு எப்படி அரிசி வந்து கொண்டு
இருக்கிறது. (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதைப் பற்றி ஆந்திராவில்
போய் கேளுங்கள், அல்லது பாராளுமன்றத்தில் போய்
கேளுங்கள்,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஆந்திர மாநிலத்தில்
இருந்து தமிழகத்திற்கு அரசு மூலமாக அரிசி கொண்டு வர மைய
அரசு தடை விதித்து இருக்கிறார்கள். ஆனால் வியாபாரி
களுக்கு மத்திய அரசு சலுகை காட்டுகின்ற காரணத்தால்,
ஒரு அரசுக்கு அந்தச் சலுகை மறுத்து, தனிப்பட்ட வியாபாரி
களுக்கு சலுகை காட்டுகிற காரணத்தால்தான் இதை அரசு
எடுத்துச்சொல்லவேண்டியிருக்கிறது.

திரு என். எஸ். வி. சித்தன்: ஆந்திர மாநிலம் உபரி மாநிலம்
உபரி மாநிலத்தில் இருந்து தமிழகத்திற்கு வருவதைப் பற்றி
பிரச்சனை இல்லை. தமிழகத்திலே இந்த மாதிரி நிலை
இருக்கிறபோது, அன்றைக்கு தை அனுமதித்து விட்டு,
இன்றைக்கு மத்திய அரசிடம் அரிசி கேட்பதில் என்ன நியாயம்
இருக்கிறது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு உணவுப் பிரச்சனையைச் சரியாக நிர்வகிக்கத்
தவறிய காரணத்தால் மக்களுடைய கவனத்தைத் திசை திருப்பு
வதற்காக மத்திய அரசின் மீது பழி சுமத்துகின்ற வகையில்
இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் மேற்
கொண்டு இருக்கிறார்கள். இது மாதிரியான * *
தமிழக மக்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது
* * *
என்று கூறி முடித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * *
ஆகியவற்றை பேரவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி ஆணையிடு
கிறேன். (கூச்சல், குழப்பம், குறுக்கீடுகள்)

(பல உறுப்பினர்கள் நின்று கொண்டு கோஷமிட்டுக்
கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் அமைதியாக
உட்காருங்கள். இதுவரை நடந்த கோஷங்கள் எல்லாம் அவைக்
குறிப்பில் ஏறாது (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி
அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது போன்ற
பொருளைக் காட்டவில்லை, கட்டையத்தான் காட்டினார்கள்
என்று அவர்களும் சொல்கிறார்கள். மற்றும் உள்ள மாண்புமிகு

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

[ டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1983 பிப்ரவரி 9

உறுப்பினர்களில் சிலரும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே காட்டினார்கள் என்று சாதிப்பது தவறு. அது குறித்து வேண்டுமானால் விசாரிக்கலாமே தவிர இப்படி கோஷங்கள் போடக்கூடாது. (குறுக்கீடு) உறுப்பினர் அவர்கள் காட்ட வில்லை என்றுதான் சொல்லுகிறார்கள். மற்ற உறுப்பினர்களும் காட்டவில்லை என்றுதான் சொல்லுகிறார்கள்.(கூச்சல் குழப்பம்) (திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் (இ) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டு கோஷ மிட்டுக் கொண்டிருந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பெற்று பிற்பகல் 12-30 மணிக்கு மீண்டும் கூடும். பின்னர் பேரவை ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை பிற்பகல் 12-30 மணிக்கு. மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

## 4. அறிவிப்பு

### அவையில் ஒரு பொருளைக் காட்டியது பற்றிய பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு இந்த அவையிலே ஒரு சம்பவம் நடந்தது என்று உறுப்பினர்கள் எல்லாம் குறைபட்டுக் கொண்டார்கள். ஒரு பொருளைக் காட்டியதாக அறிவிக்கப்பட்டது. அந்த பொருளைக் ..........(குறுக்கீடு) ...... ஏற்கெனவே அவையிலே நடை பெற்ற சம்பவங்கள் பற்றி எல்லாம் இருதரப்பு தலைவர் களையும் நான் அழைத்துப் பேசினேன். அப்படி அழைத்துப் பேசியதின் விளைவாக இந்த உரிமைக் குழுவிற்கு விடுவது என்றும் ஒரு மாதத்திலே இதற்கான குறிப்பினை அந்த உரிமைக் குழு இந்த அவைக்கு வழங்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(கூச்சல், குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக, காங்கிரஸ் (இ) கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மாதிரி கோஷம் எல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்தது பற்றி உரிமைக் குழு பரிசீலிக்க வேண்டும் என்ற முறையில் முடிவு எடுக்கப்பட்டு அது உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. உரிமைக் குழு அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு தெரிவிக்கட்டும். இப்போது அவை நடவடிக் கைகளை நடத்தவிடாமல் இப்படி செய்வது சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(கூச்சல், குழப்பம்)



1983 பிப்ரவரி 9]

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே தாங்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள் இந்த அவையில் மற்ற கட்சிகளுக்கு பாதுகாப்பு இல்லாமல், ஆளுங்கட்சிக்குப் பாதுகாப்பு இல்லாத ளவிலே சட்ட மன்ற மரபுகளுக்கு எல்லாம் முரணான முறையிலே விதிகளையெல்லாம் மீறி தங்களுடைய கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் சட்ட மன்றத்தின் பாரம்பரியத்தை உடைக்கிற விதத்திலே நடந்து கொள்வது முறையல்ல. தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சத்தம் போடுகிறவர்களுக்குத்தான் சலுகை என்ற நிலை வந்துவிடக்கூடாது. அமைதியாக இருக்கிற மற்ற கட்சி உறுப்பினர்களும் பாதிக்கப்படுவதால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பாதிக்கப்படுவதால் அவர்களுக்கெல்லாம் தாங்கள் பாதுகாப்புத் தரவேண்டும். இது வேண்டுமென்றே திட்டமிட்டு ஏதோ விளம்பரத்திற்காக.... (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைக்குழுவிற்கும் விடப் பட்டிருப்பதைப்பற்றி திரு ஹாஜா செரீப் அபிப்ராயத்தைச் சொல்லலாம்;

திரு கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப: அந்த மெம்பர்மீது உடனுக் குடன் இப்போதே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டிய போது உங்களை நான் கேட்டேன், அந்த மெம்பர் எந்தப் பொருளைக் காட்டினார் என்று. பேப்பர் வெயிட்டைக் காட்டினார் நாங்கள் அதைத்தான் பார்த்தோம் என்று சொன்னார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லி யிருக்கிறார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களையும் நான் கேட்டேன், எல்லாக் கட்சித் தலைவர்களையும் கேட்டபிறகு நான் முடிவு எடுத்தேன். எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து உரிமைக்குழுவிற்கும் அனுப்பவேண்டுமென்று முடிவு எடுத்தேன். அந்தக்குழு விசாரிப்பதற்கு ஒத்துழைக்கவேண்டுமே தவிர அந்தக் குழுவையே நடத்தவிடமாட்டேன் என்றால் எப்படி நீதி வழங்க முடியும்?எந்தக் கோர்ட்டிலே உடனே தீர்ப்பு வழங்கு கிறார்கள்? நான் பார்க்கவில்லை, நான் பார்க்காத விவகாரத் திலே தீர்ப்புச் சொல்லமுடியாது. பார்க்காத விவகாரத்திலே தீர்ப்புச் சொல்லுங்கள் என்று வற்புறுத்துவது முறையுமல்ல நியாயமுமல்ல, (கூச்சல் குழப்பம்). பார்லிமென்டிலும்சரி, மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற சட்டசபைகளிலும் சரி இப்படிப்பட்ட முறைகேடுகளை அனுமதிப்பது கிடையாது. நான் பார்லிமென்டில் 10 ஆண்டுகள் இருந்தேன். பத்து ஆண்டுகளிலே பாராளுமன்றத் திலே இந்தமாதிரி முறைகேட்டை எந்தக் கட்சியும் செய்தது

கிடையாது. இது முறைகேடானது, தவறானது. நியாயமற்றது. பஞ்சாயத்திலே கூட இப்படி நடக்காது. பார்லிமெண்டிலே ஆளுங்கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சியும் சரி, ஏற்கெனவே ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகமும் சரி பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டும். அதுதான் என்னுடைய வேண்டுகோள். (கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன்: இதை அரசியல் பண்ணுவதாக இருந்தால் பண்ணட்டும். ஆட்சேபணை கிடையாது.

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையை நடத்த வேண்டாம் என்று நினைத்தீர்களானால் எனக்கு அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை; நான் எல்லாத் தலைவர்களையும் கலந்தேன்; கலந்து பின்னால் தான் இந்த முடிவை எடுத்தேன். (கூச்சல், குழப்பம்)

நீதி வழங்க வேண்டும்மென்றால் உரிமை குழுவிற்குத்தான் அனுப்ப வேண்டும். தீர்ப்பு வருகிற வரையில் பொறுத்துதான் இருக்கவேண்டும். திரு ரகுமான்கான் அவர்கள் சபையிலேயே இல்லை, இப்போது திடீரென்று வந்து சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார். எல்லா தலைவர்களையும் கலந்தேன்; அதற்கு பின்தான் உரிமைக்குழுவிற்கு விடவேண்டுமென்று முடிவு செய்தேன்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சம்பவம் நடைபெற்ற சமயத்தில் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்களும், நானும் திராவிடமுன்னேற்றக் கழகத்தினுடைய அலுவலக அறையில் இருந்தோம். உங்களால் விசாரிக்கப்பட்டபோது பலபேர்கள் செருப்பைக் காட்டினார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு பிறகுதான் எதற்காக பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் உடனடியாக ஒரு முடிவிற்கு வரவேண்டும் (கூச்சல், குழப்பம்)

திரு என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் இருந்தார்கள்; அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இருந்தார்கள்: அவையில் நடந்த விஷயத்தைப்பற்றி இரண்டுவிதமான பிரச்னைகள் வந்தன: ஆகவே உடனடியாக முடிவு செய்ய முடியாது, உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று எல்லோரும் முடிவு செய்தோம். அதுதான் அங்கே எடுத்த முடிவு. (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி அவர்கள் ஏதவது கருத்து சொல்வதாக இருந்தால்- சொல்லுங்கள். (கூச்சல் குழப்பம்)





திரு சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசப்பட்டபோது இரண்டு விதமான கருத்துகள் வந்தன. அவர் கையில் பேப்பர் வைத்திருந்தார் என்றும், செருப்பை வெயிட்டை தான் காட்டினார் என்றும் இரண்டு விதமாக கருத்துக்கள் வருகின்றன; ஆகவே இதுபற்றி விசாரிப்பதற்கு பிரச்னையை உரிமைக் குழுவிற்கு விடுவதாக தலைவர் அவர்கள் சொன்னீர்கள். நாங்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஹாஜா செரீப்பிடம் இதுபற்றி உரிமைக் குழு விசாரித்து தீர்ப்பு சொல்லட்டும்; உரிமைக் குழுவிற்கு விடுவதை ஒத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டோம். (கூச்சல், குழப்பம்)

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, இன்றைக்கு நடந்த ஆய்வுக் குழுவில் சர்வக் கட்சித் தலைவர்களும், நிகழ்ச்சியைப் பார்த்தவர்களும் பேசியதில் இரண்டு விதமான கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள் கூட, அவர் கையில் வைத்திருந்தது இங்கே இருக்கிற பேப்பர் வெயிட்தான் என்று சொன்னார்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிவசாமி அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்களில் சிலர், அவர் கையில் வைத்திருந்தது செருப்பு என்று சொன்னார்கள். ஆகவே இரண்டுவிதமான கருத்துகள் இருந்த காரணத்தால் அன்பில் தர்மலிங்கம் அவர்களும், ஹாஜா செரீப் அவர்களும், என். எஸ். வி. சித்தன் அவர்களும், சங்கரய்யா அவர்களும், அழகர்சாமி அவர்களும், நெடுமாறன் அவர்களும் நானும் இருந்து சபாநாயகர் அவர்கள் முன்னிலையில் உரிமைக் குழுவிற்கு விடுவது என்று முடிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்)

(பிற்பகல் 12-50)

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)

திரு.ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சபையிலே நடந்துவிட்ட எந்தச் சம்பவமானாலும் அதன் காரணமாக, சபை நடவடிக்கைகளை நிறுத்துவதை யாரும் ஆதரிக்கவில்லை, ஆதரிக்கவும் முடியாது. இந்தச் சூழ்நிலையிலே உங்கள் தலைமையிலே, உங்களுக்கு முன்னாலே கூடிய அனைத்துக்கட்சித் தலைவர்களும் இதைப்பற்றி பேசி, இருத் தரப்புக்களைக் கேட்டு, இதை உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்றும் உரிமைக் குழு முடிவை ஏற்றுக்கொள்வது என்றும் எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் நாங்கள் இருக்கிறோம். சபையிலே அதன்படி செய்வதுதான் நியாயமாக இருக்கமுடியும்.

உள்ள யாருடைய மதிப்பைக் குறைக்கும் வகையில் யார்
நடந்து கொண்டாலும், யாராக இருந்தாலும், உரிமைக் குழு
விசாரித்து, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று சொல்கிறதோ, அதைப் பூரணமாக விசாரித்து
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்து.

*திரு. பி.முகமது இஸ்மாயில்: பேரவைத் தலைவர் அவர்களே,
இங்கு ஒரு பொருள் காட்டப்பட்டதாகவும் அதுபற்றி மாறு
பட்ட கருத்துக்கள் கூறப்பட்டதாகவும் இங்கு விளக்கம்
வந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தச்
சம்பவத்தைத் தான் நேரடியாக பார்க்காத நிலையில் உடனடி
யாக தீர்ப்பை வழங்க முடியாது. என்று சொன்னதை நாங்கள்
ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில்
கூடிய நாங்கள் அத்தனைபேரும் இந்தச் சூழ்நிலையில் இதற்கு
விரிவான ஒரு விசாரணை தேவைப்படுகிறது என்று உணர்கிற
காரணத்தினால் இதை உரிமைக் குழுவுக்கு அனுப்புவது என்று
முடிவு எடுத்து; உரிமைக் குழுவுக்கு அனுப்புவதாக இருக்கிறோம்.
இங்கே சத்தம் போட்டுப் பேசுகிற அனைத்துத் தோழர்களைப்
பார்த்து கேட்டுக்கொள்கிறேன். தமிழகச் சட்டமன்றத்திற்குத்
தனியான ஒரு சிறப்புப் பாரம்பரியம் உண்டு. இன்று
நடந்திருக்கிற நிகழ்சிகள் வேறுபல மாநிலங்களுக்குச் செய்தித்
தாள்கள் மூலமாகப் பரவுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக்
கொண்டிருக்கிறீர்கள். தமிழகச் சட்டமன்றத்தினுடைய நல்ல
பாரம்பரியத்திற்கு தீங்கு விளைவிப்பதாக இது ஆகும் என்று
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர்
அவர்களே; இன்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய
உண்ணாவிரதத்தைப் பற்றி எதிர்க்கட்சிகள் சார்பிலே ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்திலே, திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினரும், ஏன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி உறுப்பினரும் பேசுகின்ற நேரத்திலே, நாங்கள் அதை
அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். மத்திய
அரசாங்கத்தைப் பற்றிச் சொன்ன ஒவ்வொரு வார்த்தைக்கும்கூட
உடனடியாகக் குறுக்கிட்டு இருக்க முடியும் என்றாலும்கூட,
மரபு காத்து நாங்கள் ஏற்றுக்கொண்டிருந்தோம். ஆனால், நான்
பேச எழுந்தஉடனேயே, என்னுடைய முதல் வாக்கியத்திலேயே
ஆளுங்கட்சியினர் ரகளை செய்தார்கள். அப்பொழுதே நான்
உங்களிடம் சொன்னேன், எனக்கு நீங்கள் பாதுகாப்புக்
கொடுக்க வேண்டும். மத்திய சர்க்காரை இங்கே இருக்கிற
எதிர்க்கட்சிகள் தாக்குகிறார்கள். பதில் சொல்கின்ற உரிமை
எனக்கு இருக்கிறது, கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டேன்:
இங்கே எழுப்பிய பிரச்னையிலே இரண்டுவிதமான கருத்துக்கள்
வந்திருக்கின்றன. ஆளுகின்ற கட்சி உறுப்பினர் செருப்பைச்
காட்டினார், நாங்கள் பார்த்தோம் என்ற ஒரு கருத்து; இல்லை,
இல்லை, பேப்பர் வெயிட் காண்பித்தார் என்று ஒரு கருத்து





சொல்கிறார்கள். ஆகவே, அவர் இரண்டுமே தூக்கிக் காண்பித்
தார் என்றுதானே அர்த்தம். ஆகவே, செருப்பைத் தூக்கிக்
காட்டினார் என்று சொல்கிறார் ஒரு உறுப்பினர். அதைப்
போலவே, பேப்பர் வெயிட் காட்டினார் என்றும் சொல்கின்ற
காரணத்தினாலே, நாங்கள் சொல்வதெல்லாம் தயவுசெய்து
அந்த உறுப்பினர் சபை நடவடிக்கைகளிலே பங்கு கொள்வதிலே
யிருந்து தாங்கள் சஸ்பெண்ட் செய்ய வேண்டும். பின்னாலே
உரிமைக் குழுவுக்கு நீங்கள் அனுப்பவேண்டும். அலுவல் ஆய்வுக்
குழுவிலே நீங்கள் எடுத்த முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ள
வில்லை. இதுதான் எங்கள் முடிவு.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் (இ) கட்சி
களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மீண்டும் கூச்சலிட ஆரம்பித்து,
தொடர்ந்து கூச்சலிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவிலே
எல்லாத் தலைவர்களையும் கலந்து கொண்டு பேசியதை எல்லாம்
இங்கே கேட்டீர்கள். இன்று சபையை நடத்த வேண்டுமென்று
நான் விரும்புகிறேன். உரிமைக் குழுவுக்கு விட வேண்டுமென்று
நான் முடிவு எடுத்தேன். ஏனென்றால், நான் பார்க்கவில்லை.
நான் முதலேயிருந்து சொல்கிறேன், பல பேர்கள் பார்க்க
வில்லை. ஆகவே, அதை உரிமைக் குழுவுக்கு விட்டு ஒரு
மாதத்திற்குள்ளாக முடிவு தரவேண்டுமென்று நான் உத்தர
விட்டிருக்கிறேன். அதற்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று
நான் மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். எந்த சபா
நாயகரும் உடனடியாகத் தீர்ப்பு வழங்கியதாக உலக வரலாற்றிலே
இடம் கிடையாது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக்
சொல்லிக்கொள்கிறேன். இந்திரா காங்கிரசுக்கும் சொல்லிக்
கொள்கிறேன், நீங்கள் மத்தியிலே ஆளுகிற பெரிய ஆளுங்
கட்சியைச் சேர்ந்தவர்கள்; நீங்கள் பாண்டிச்சேரியிலே ஒரு
ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். இரண்டு பேர்களுக்கும்
சொல்லிக்கொள்கிறேன். ஆளுங்கட்சியாக இருந்தவர்கள், இருக்
கிறவர்கள் என்ற முறையிலே சொல்கிறேன், இது நல்லதல்ல,
சபையை நடத்த, நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் (இ)
சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்
தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அம்பிகாபதி அவர்
களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையை நடத்லாமா?
வேண்டாமா? இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்
என்ன சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

பத்தாண்டுகள் நான் பார்லிமெண்டிலே இருந்திருக்கிறேன் இதுமாதிரி பார்த்ததில்லை. சபையை நடத்த வேண்டுமென்றால் நடத்தலாம்.

THIRU K. S. G. HAJA SHAREEF: Whatever we wanted to say, myself and our Deputy Leader Thiru N. S. V, Chittan, have stated.

MR. SPEAKER : I am asking you only one question. can I continue the House or not?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தாங்கள் நடவடிக்கை எடுத்து விட்டு, பிறகு சபை நடவடிக்கையைத் தொடர்வதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இம்மாதிரி சம்பவங்கள் தொடர்வதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** இரண்டு கருத்துக்கள் வரும் பொழுது நான் ஒரு தீர்ப்பை எப்படிச் சொல்ல முடியும்? உரிமைக் குழுவிற்கு விடுகிறேன். அதன்மூலம் ஏதாவது நடத்துவது என்றால் நடத்துங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி;** ஒத்த கருத்து எப்பொழுது வரும் மாண்புமிகு பேரவைத் தலைவர் உறுப்பினரவர்கள் வழக்கறிஞராக இருக்கிறார்கள். ஒரு குழுவிற்கு விடுகிறேன். அதிலே சாட்சியம் சொல்லுங்கள், அது கூறுகின்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால் என்னை ப்ரஷரைஸ் செய்து இப்படித்தான் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற வரலாறு கிடையாது. அது முறையும் அல்ல. உரிமைக் குழுவிற்கு விடுவதன் காரணம் அது தான்.

(தி. மு. க, மற்றும் காங்கிரஸ் (இ) கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்;** மாண்புமிகு தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை ஏற்றுக் கொள்ளாமல் சட்டசபையிலே இப்படி நடந்து கொள்கிறார்களே, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் போகிறீர்களா இல்லையா? இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புங்கள். அதைப் போல மாண்புமிகு உறுப்பினர்கள், சுந்தரமூர்த்தி போன்றவர்கள் பேப்பர் வெயிட்டை இங்கே காட்டினார்கள், நாங்களும் பார்த்தோம். அவர்கள்மீதும் நடவடிக்கை எடுங்கள்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை ஒரு சிலர் ஏற்காத காரணத்தாலும் அவையை நடத்த முடியாமல் கோஷமிட்டுக் கொண்டிருப்பதாலும் அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைக்கிறேன்.





பேரவையில் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 10-2-1983 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

139. கிருஷ்ணகிரி-பெங்களூர் சாலையிலுள்ள லண்டன்பெட் செய்வது குறித்து, சுங்கச் சாவடியினை இடமாற்றம் வணிகவரிகள் சமய 19-11 1982-ஆம் தேதியிடப்பெற்ற 1279-ஆம் எண் அரசாணையில் அறக்கட்டளைகள் துறையின் 1959-ஆம் ஆண்டு பொது வெளியான அறிவிப் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு வைக்கப் பெற்றது]. பிரிவின் கீழ் பேரவை முன்

140. நுங்கம்பாக்கம் மத்தியப்பகுதி நகரமைப்புத் செய்வது குறித்து 17.2.1981 திட்டத்தில் சில மாற்றங்கள் வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் ஆம் தேதியிடப்பெற்ற அரசாணையில் வெளியான அறிவிப்பு துறையின் 106 ஆம் எண் நகர-நாட்டுப்புற அமைப்புத் [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு 35/1972) 123 (2) திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் வைக்கப்பெற்றது]. பிரிவின் கீழ் பேரவைமுன்

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை

## இணைப்பு

[119..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 192-க்கான விடையைக் காண்க].

தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசம் மீனவர் கூட்டுறவு சங்க நிர்வாகக் குழு கீழ்க்கண்ட காரணங்களுக் காக மீன்துறை இயக்குநரால் கலைக்கப்பட்டது:—

1அ. நிர்வாக அதிகாரிகளால் சட்டத்திற்குள்ளாக பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை சங்கத் தலைவர் வேண்டு மென்றே நிறைவேற்ற மறுத்தது.

தஞ்சையில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் (மண்டலம்) அவர்கள் 1976 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் நாளிட்ட சுற்றறிக்கை யிலும் (7454/ /76). 1976 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையிலும் சங்கத்திற்கு தவணை செலுத்துவதில் நிலுவையில் உள்ள சங்க அங்கத்தினர்களுக்கு மீன்பிடி உரிமம் வழங்கவேண்டாம் என்று அறிவுரை வழங்கி யுள்ளார். மேற்படி அறிவுரையினை சங்க நிர்வாகிகள் வேண்டு மென்றே நிராகரித்து விட்டனர். அத்துடன் நிலுவையில் உள்ள 5 பஞ்சாயத்தார் உள்பட 22 உறுப்பினர்களுக்கு, பசலி 1387 ஆம் ஆண்டு மீன்பிடி உரிமம் வழங்கியுள்ளனர். இதனால், காலம் தவறாமல் பணம் செலுத்தியுள்ள அங்கத்தினர்களுக்கு மீன்பிடி உரிமை கிடைக்கவில்லை.

1ஆ. 1978 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் நாளிட்ட சுற்றறிக்கையில், மீன்துறை உதவி இயக்குநர் தஞ்சை மறு குத்தகை எடுக்கும் எல்லா அங்கத்தினர்களிடத்திலும் கையொப்பம் வாங்கி, வேண்டிய ஒப்பந்தங்கள் நிறைவேற்றப் படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். அவ்வாறு அங்கத் தினர்களின் ஒப்பம் பெற்றால், சங்கத்திற்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படும் என்றால், அதில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்ற நிலை ஏற்படும். ஆனால், சங்க நிர்வாகம் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு சிறிதளவு கூட மதிப்பு தராமல், வேண்டிய ஒப்பந்தங்களை அங்கத்தினர்களின் கையொப்பத்தோடு நிறை வேற்றவில்லை.

1இ. கூட்டுறவுத் துறையில் பயிற்சி பெற்ற நபர்களே, கூட்டுறவு சங்கங்களில் எழுத்தாளர்களாக நியமிக்க வேண்டும் என்று நிலையான அறிவுரை உள்ளது. அதற்கு மாறாக முன்னாள் தலைவர், கூட்டுறவுப் பயிற்சி பெறாத திரு அயோத்தி என்பவரை சங்கத்தில் எழுத்தராக நியமித்துள்ளார்.

1ஈ. முன்னாள் தலைவரின் கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சங்க கூட்டத்தைப் பற்றி அறிவிப்பதில்லை. அதற்கு வேண்டிய நிகழ்ச்சி நிரல்களும் அனுப்புவதில்லை. தலைவரின் ஆதரவாளர்களுக்கு மட்டும் சங்கக் கூட்டத்தை அறிவித்து வேண்டிய கூட்டங்களை தலைவர் நடத்தியுள்ளார். இக்குறையை மீன்துறை உதவி







இயக்குநரிடம் அதிருப்தியாளர்கள் அறிவித்தனர், அதன்படி மீன்துறை உதவி இயக்குநர் 1976 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் 22 ஆம் நாளிட்ட தனது சுற்றறிக்கையில் சங்கத் தலைவருக்கு சங்கக் கூட்டத்தைப்பற்றிய அறிவிப்பும், நிகழ்ச்சி நிரலும், சான்றிதழ் பெற்ற அஞ்சல் மூலம் எல்லா அங்கத்தினர்களுக்கும் அனுப்பப் படவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். சங்கத் தலைவரும் மேற்படி அறிவுரையை பின்பற்றுவதாக உறுதியளித்துள்ளார். நடைமுறையில் உறுதி மொழிக்கு மாறாக சில நிர்வாகக் குழு அங்கத்திளர்களுக்கு தகவல்கள் அனுப்பாமல் குழுவைக் கூட்டி யுள்ளார். மேற்கண்ட குறை ஆய்வு அறிக்கையிலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

1உ. கும்பகோணத்தில் உள்ள வலங்கைமான் முன்சீப் நீதி மன்றத்தில், இச்சங்கத்தின் மீது தொடரப்பட்ட வழக்கில், சங்க நலனைக் காக்க, சங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கவில்லை.

2. சங்க நிர்வாகத்தில் உட்பிரிவுகளும், உட்பூசல்களும் அதிகமாக உள்ளது. அதன் காரணமாக ஒருவரைப் பற்றி ஒருவர் நிறைய புகார் மனுக்கள் மீன்துறை உதவி இயக்குநரிடம் கொடுத்துள்ளனர். இவ்வாறு நிர்வாகக்குழு உறுப்பினர் களிடையே நிறைய பூசல்கள் உள்ளதால், சங்க நிர்வாகம் சீர் குலைந்து விட்டது.

3அ. சங்க துணை விதி 48-ல் குறிப்பிட்டுள்ளப்படி, தணிக்கை அறிக்கையும், ஆய்வு அறிக்கையும் சங்கப் பொதுக் குழுவில், நிர்வாகக்குழு வைக்கவில்லை. தணிக்கை அறிக்கை யிலும், ஆய்வுக் குழு அறிக்கையிலும் உள்ள குறைகளை நீக்குவதற்கு சங்க நிர்வாகக் குழு எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை.

3ஆ. முன் தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறை பாடுகளை நிவர்த்தி செய்யவில்லை என்று 1977—78 ஆம் ஆண்டு இறுதி தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

3இ. சங்கத் துணை விதி 42 (B)-யில் மீன்பிடி உரிமம் எல்லா சங்க அங்கத்தினர்களுக்கும் சரிசமமாக கொடுக்க வேண்டும் என்று உள்ளது. ஆனால் விதிக்கு மாறாக சங்க நிர்வாகக் குழு, அவர்கள் விருப்பத்திற்கேற்ப, அவர்களுக்கு வேண்டிய அங்கத்தினர்களுக்கு மட்டும்தான் மீன்பிடி உரிமம் கொடுத்துள்ளது. அவ்வாறு மீன்பிடி உரிமம் கொடுத்ததினால், சங்கத்தில் உள்ள அதிகமான உண்மை உறுப்பினர்களின் நலன் பாதிக்கப்பட்டுள்ளது.

3ஈ. சங்கத் துணை விதி 25-ன் படி சங்கத்தின் வருடாந்திர கணக்கு அறிக்கையை சங்க நிர்வாகம் மீன்துறை இயக்குநருக்கு அனுப்பத் தவறியது.

3உ. 1977–78 ஆம் ஆண்டு முடிய சங்கத்திற்கு கிடைத்த நிகர லாபத்தை தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. அவைகள் துணை விதி 43–ல் குறிப்பிட்டுள்ளபடி அங்கத்தினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை.

3ஊ. சங்கத்தின் ஒதுக்க நிதியை சங்கத்தின் வியாபாரத்தை அபிவிருத்தி செய்ய சங்க நிர்வாகம் உபயோகித்துள்ளது. இதற்கு துணைவிதிகள் 44 (2) மற்றும் 48-ல் விதித்துள்ளபடி மீன்துறை இயக்குநர் மற்றும் கூட்டுறவுத்துறை பதிவாளர் அவர்களின் அனுமதி பெறவில்லை.

3எ. சங்கத்தின் துணை விதி 42 (பி) 2-ன் படி மீன்பிடிக்கும் உரிமை எல்லா அங்கத்தினர்களுக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப் படவேண்டும். ஆனால், துணை விதிக்கு புறம்பாக சங்க நிர்வாகிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மீன்பிடிக்கும் உரிமை, கொடுத்திருக்கிறார்கள். அதனால் ஒரு பெருவாரியான அங்கத்தினர்கள் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் தலைவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு (Writ Petition) தொடர்ந்தார். அந்த வழக்கு உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து அவர் டில்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) வழக்கு தொடர்ந்து பின்னால் அதை திருப்பிப் பெற்றுக் கொண்டார். திருப்பிப் பெற அனுமதி வழங்கும் பொழுது 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 1 முதல் 15 தினங் களுக்குள், உரிய முறையீட்டு அதிகாரியிடம் இது குறித்து முறையீடு செய்யும்படி முன்னாள் தலைவருக்கு இந்திய உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது.

நீதிமன்றத்தின் அறிவுரையின்படி அவர் 1980ஆம் ஆண்டு டிசம்பர் 13 அன்று அரசுக்கு மேல் முறையீடு செய்தார். அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு, கொடுக்கப்பட்ட மேல் முறையீட்டை நிராகரித்து, 1980ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று ஆணை வழங்கியுள்ளது.

135979
சென்னை-600 008.
D
Y2ı1.31 N83
N83-41..192

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,

### IN MADRAS CITY,

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company. Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tirchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Id Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10,
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1,
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1,
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1,

### IN OTHER STATES.

1 Jain Book Agency. New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry,
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 302 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS,